கலைஞானம்

# சினிமா சீக்ரெட்

பாகம் 2



# சினிமா சீக்ரெட்

*பாகம் - 2*

## **கலைஞானம்**

# சமர்ப்பணம்

 

எனக்கு ஏழு வயதாகியிருந்தபோது, நான் கட்டபொம்மன் நாடகம் பார்த்துவிட்டு வந்து "என்னடா... என்னடா... கட்டபொம்மா... எந்நேரம் பார்த்தாலும் கத்திச்சண்டை..." என்ற பாடலை ஒரு குச்சியைக் கையில் எடுத்து சுழட்டியவாறு பாடிக் கொண்டே ஒரு நாற்காலியிலிருந்து மற்றொரு நாற்காலிக்கு குதிக்க... கால் தடுமாறி நாற்காலியும் சாய்ந்து என் கீழ் உதட்டில் வெட்டிவிட்டது. உடனே என் தாய் பேச்சியம்மாள், அடுப்புக்கரித்துண்டை நொறுக்கி உப்புக்கல்லையும் நசுக்கி உதட்டுக்கு கட்டுப் போட்டார். அப்போது என் தந்தை முத்தையா வந்து விபரம் கேட்க, நடந்ததை என் தாய் சொல்ல... 'இவன்

வருங்காலத்தில் ஒரு புலவனாக வருவான்' என்றார். என் தாயும் 'அப்படியா' என்று மகிழ்ச்சியில் கட்டி அணைத்து முத்தமிட்டார்.
இன்று அவர்கள் லட்சியக்கனவு நிறைவேறியது. சினிமா உலகில் நானும் ஒரு கலைஞன் ஆனேன் என்பதை நினைத்து இந்நூலை என் பெற்றோர்களுக்கு அன்பு காணிக்கையாக்குகிறேன்.

-கலைஞானம்

# முன்னுரை

சினிமாவுக்கு கதைகள் எழுதுவதில் நான் தேர்ந்துவிட்டேன் என்றுதான் நினைக்கிறேன். அதனாலேயே சில நண்பர்கள் என்னை 'கதைத்தாத்தா', 'பீஷ்மர்', 'கதைஞானம்' என்றெல்லாம் பாராட்டு கிறார்கள்.

ஆனால் வரலாறு எழுதுவது... அதிலும் எழுதி புத்தகமாக வெளியிடுவதில் ஒரு பயம் இருந்துகொண்டே இருக்கிறது. காரணம்... முறையாகக் கற்ற எழுத்தாளர்கள் என்னைக் கறையாக எண்ணி எடுத்தெறிந்து விடுவார்களோ என்ற பயம்தான். இருந்தாலும் கோதைநாயகியம்மாள், கி.ராஜநாராயணன் போன்றோர் ஆரம்பத்தில் படிக்காதவர்கள்தான். பின்னாளில் மிகச்சிறந்த எழுத்தாளர்களானார்களே. அவர்களை வழிகாட்டியாக எண்ணி எழுதத் துணிந்துவிட்டேன். கொள்ளுவதும், தள்ளுவதும் அன்பு வாசகர்களின் உள்ளங்களே.

பார்த்ததை, கேட்டதை, சொன்னதை அனுபவமாக எடுத்துக்கொண்டேதான் இதுவரை சினிமாவுக்கு 30 கதைகளுக்கு மேல் எழுதிவிட்டேன். இதில் மிகப்பெரிய இயக்குநர்களுடன் திரைக்கதை ஒத்துழைப்பு சுமார் நூறைத் தாண்டும். தயாரிப்பு 16 படங்கள். பாடல்கள் எட்டு. இயக்கம் 2. மெயின் காமெடியனாக 'இது நம்ம ஆளு' ஒன்றுதான். சின்னச் சின்ன வேஷங்கள் சில... இதற்குமேல் என் தகுதிக்கு என்ன வேண்டும்? நான் எடுத்துக்கொண்ட இந்த புது முயற்சிக்கு உங்கள் ஆதரவுதான் வேண்டும்.

முக்கியமாக இங்கே சொல்லவேண்டியது ஒன்று உண்டு. என்னவென்றால் 1974-ல் ஒரே மாதத்தில் என்னிடம் ஆறு கதைகளை சினிமா தயாரிப்பாளர்கள் போட்டி போட்டுக்கொண்டு வாங்கினார்கள். எல்லாரும் 'உடனே ஷூட்டிங் போக வேண்டும்; எழுதிக் கொடுங்கள்' என்று அவசரப்படுத்தினார்கள். அப்போது நான் ஒரு யுக்தியைக் கையாண்டேன். தயாரிப்பாளர்கள் ஒவ்வொருவரையும் டேப்ரிக்கார்டர் வாங்கி வரச் சொல்லி அதிலே கதையைச் சொல்-விட்டேன். உதவியாளர்களை வைத்து

அதில் உள்ளதை எழுதிக் கொடுக்கச் சொல்லிவிட்டேன். அவர்கள்... பனசை மணியன், ஜெயபாலு சீனிவாசன், தஞ்சை கே.சுரேஷ் குமார், வி.எம்.ஏ. ஷாலப்பா... தினகரன் அப்பப்ப சிலரும் இப்படிப் பழக்கப்பட்டதால் இதுவரை அதையே கையாண்டு வருகிறேன்.

'சினிமா சீக்ரெட்' தொடரையும் ரெக்கார்டு பண்ணித்தர்றேன் என்றேன், நக்கீரன் துணையாசிரியர் இரா.த.சக்திவேலிடம். அப்போது அவர் சொன்னார்... ''ஐயா, நீங்கள் சொல்லிக்கொண்டே வாருங்கள், நான் எழுதுகிறேன். அது சரியில்லையென்றால் ரெக்கார்டு பண்ணலாம்'' என்றார். அதையும்தான் பார்ப்போமே என்று உளுந்தமூட்டையை கொத்திவிட்டது போல் பொலபொலவென்று கொட்டிக்கொண்டேயிருந்தேன். மூன்று வாரங்களுக்குச் சேர்ந்தார்போல்... என்ன ஆச்சரியம் ஒருவரிகூட தவறாமலும் கூடாமலும் எழுதியதோடு, அதனை அழகுபடுத்தியும் காட்டி என்னை அசத்திவருகிறார். அவருக்கு என் முதல் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'சினிமா சீக்ரெட்' தொடர் எழுத எனக்கு தொடர்ந்து ஆதரவு கொடுத்து வரும் நக்கீரன் ஆசிரியர் உயர்திரு நக்கீரன்கோபால் அவர்களுக்கும், நக்கீரன் காமராஜ், மற்றும் அவருடன் தொழில் செய்யும் அத்தனைபேருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரை நக்கீரன் பத்திரிகையில் தொடராக வந்த 'சினிமா சீக்ரெட்'டை பொறுமையாக படித்தும் பாராட்டியும், அன்பு காட்டியும் வரும் அனைத்து வாசகர்களுக்கும் தலைவணங்குகிறேன்... நன்றி!

-கலைஞானம்

சென்னை.

கைபேசி எண் : **96770 61186**

# நிறைகுடம்!

திரைப்படத்துறையில் சாண்டோ சின்னப்ப தேவர் அண்ணன் வரிசையில், நான் பாசமுடன் நேசிக்கும் அண்ணன், கலைஞானம் அவர்கள்... சினிமா துறையில் நுழைந்து விட்டால் சீக்கிரமே எல்லோரும் குபேரனாகிவிடலாம் என்று அன்று முதல் இன்றுவரை அறியாமையால் மக்கள் நினைக்கிறார் கள்.
நூறு பேரில் ஒருவன் குபேரனாக லாம். அதற்கு வாய்ப்பு உண்டுதான். ஆனால் இன்றைய குபேரன், நாளைய குசேலன் ஆகிவிடுவான் என்பதைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை.

சினிமா ஆசையால் 65 ஆண்டு களுக்கு முன்னர் சென்னைக்கு ஓடி வந்தவர் அண்ணன் கலைஞானம்.

2-ம் வகுப்பு மட்டுமே படிக்கும் பாக்கியம் பெற்றவர். 85 வயதிலும் ஓயாமல் படித்துக் கொண்டேயிருக்கிறார். படித்ததை அப்படியே நினைவிலும் வைத்துக் கொண்டிருக்கிறார்...

'அபிதான சிந்தாமணி' -என்று ஒரு நூல். கலைக் களஞ்சியம். சிங்காரவேலு முதலியார் என்ற பெரியவர் தொகுத்த அரிய புத்தகம். 2000 பக்கங்கள் கொண்ட அந்த நூலில் இந்திய புராண, இதிகாச கதாபாத்திரங்கள் அத்தனையைப் பற்றியும் விரிவான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. 60 ஆண்டுகளுக்கு முன்னரே தொகுக்கப்பட்ட அரிதான நூல் அது.

அந்தப் புத்தகத்தை 10 ஆண்டுகளுக்கு முன்னர் சிபாரிசு செய்தவர் அண்ணன் கலைஞானம்.



அவரது மூளைக்குள் ஆயிரம் கதைகள் புதைந்து கிடக்கின்றன. நான்கு வரியில் நீங்கள் ஒரு கதையை அவரிடம் சொல்லிவிட்டால், மீதி கதையை **40** வழிகளில் முடிக்க அவர் யோசனை சொல்வார்.

'கொஞ்சம் பணம் உன்னைக் காப்பாற்றும்

நிறைய பணத்தை நீ காப்பாற்ற முடியாது...'

அந்த கொஞ்ச பணம் கூட இல்லாமல் **-60** ஆண்டு களுக்கும் மேலான சென்னை வாழ்க்கை யில், குடியிருக்க ஒரு வீடு கூட வாங்க முடியாமல் வாடகை குடியிருப்பில், வாழ்க்கையை முடக்கிக் கொண்டிருக்கிறார்.

பெற்ற பிள்ளைகள், பெண்களுக்கு தகப்பன் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து முடித்துவிட்டாலும், விடிந்த பின் தினந்தோறும் வயிற்றுக்கு இரை தேடும் பறவைகள் போல அன்றாட வாழ்க்கைக்கு வாய்ப்புகளை எதிர் பார்த்து காலம் கடத்தும் ஓர் அதிசய மனிதர்.

'சுகம் மின்னலைப் போலும் துக்கம் யுகம் அளவு நீண்டதே வாழ்க்கை' என்று எனது ராஜபாட்டை நூ-ல் குறிப்பிட்டுள்ளேன்.

துக்கம் யுகம் அளவு நீண்ட வாழ்க்கையில், மின்னல் போல் அபூர்வமாய் தென்படும் சுக-சுப நிகழ்வுகளை மனதில் அசைபோட்டவாறே, என்றைக்கும் சிரித்துக்கொண்டே -வெள்ளை மனதுடன், கள்ளமில்லாத அந்தச் சிரிப்பைச் சிரித்துக்கொண்டே வாழ்கிறார்.

சிரிப்பு ஒன்றுதான் இறைவன் அவருக்குக் கொடுத்த வரம். 'நக்கீரன்' இதழில் அவர் எழுதும் 'சினிமா சீக்ரெட்' தொடரை தவறாமல் நானும் படித்துவருகிறேன்.

80 ஆண்டு கால தமிழ்த் திரையுலகின் ஆவணங்களில் ஒன்றாக இது வருங்காலத்தில் மதிக்கப்படும்.

இதில் அவர் கூறியுள்ள விஷயங்கள் அனைத்தும் அவரது வாழ்க்கை அனுபவங்கள் அல்லது நெருங்கிய நண்பர்கள் சொல்லக் கேட்டவை.

அலங்காரச் சொற்கள் இல்லாமல், தற்பெருமை பேசாமல், வள்ளுவன் குறளைப் போல, வார்த்தைச் சிக்கனத்தில், நறுக்குத் தெறித்தாற்போல விஷயங்களை வாசகன் நெஞ்சில் ஆழமாகப் பதித்துவிடுகிறார்.

மகாபாரத தருமனைப் போல, தன்னைச் சுற்றி அன்றும் இன்றும் வாழ்கிற, வாழ்ந்த மனிதர்களின் மேன்மையான குணங்களையும் செயல்களையும் மட்டுமே பதிவு செய்திருக்கிறார்.

தனக்கென வாழாமல், தன்னைச் சுற்றி யுள்ளோர் அல்லல்படும்போது துடிதுடித்து, ஓடிச்சென்று உதிரத்தையும் தானம் செய்யும் உயர்ந்த பண்பாளர்.

நெடிய அவரது வாழ்க்கையில் சராசரியாக 20 ஹீரோக்கள், 20 ஹீரோயின்கள் ஏற்றத்தையும் இறக்கத்தையும் கண்ணால் பார்த்த காட்சியாக விளங்குகிறார்.

அவருடைய திறமைக்கும், உழைப்புக்கும், நேர்மைக்கும் உரிய அங்கீகாரம் திரையுலகில் அவருக்கு கிடைக்க வில்லை என்று உறுதியாகச் சொல்வேன்.

யார் மீதும் குறைசொல்லும் சுபாவமற்றவர் அவர். நமக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கை இது என்று எளிதாக ஏற்றுக்கொள்பவர்.

1930 ஜூலை 15-ல் பிறந்த இவர், டைரக்டர் கே.பாலசந்தருக்கு 6 நாட்கள் இளையவர்.

மதுரை மாவட்டம் எழுமலை என்ற கிராமத்தில் ஏழை விவசாயி முத்தையா தேவர் -பேச்சியம்மாள் தம்பதிக்குப் பிறந்த இனிய பிள்ளை.

பள்ளிப் படிப்பு 2-ம் வகுப்போடு முடிந்துவிட... பாட்டும் ஆட்டமும் கேட்டு வாழ்க்கையைத் தொடர, சினிமா தியேட்டரில் முறுக்கு, டீ விற்க ஆரம்பித்தார். பெற்றோரால் வளர்க்க முடியாது என்று கைவிட்ட நிலையில், 40 வயது மச்சானுக்கு இரண்டாம் தாரமாய் வாழ்க்கைப்பட்ட 15 வயது அக்காள் வீட்டுக்குப் போகிறார்.

"உன்னைத்தாண்டி கட்டிக்கிட்டேன்... உன் தம்பியை இல்லை'ன்னு குடித்துவிட்டு வந்து சாத்தின மச்சான் அடி பொறுக்கமாட்டாமல், மதுரைக்கு ஓடி மீனாட்சி அம்மன் கோயில் முன்னால், யானைகள் குடிக்க கட்டி வைத்திருந்த தண்ணீர்த் தொட்டியில், நாலு டம்ளர் மொண்டு குடித்து, பசியில் பாதையிலேயே தூங்கிவிடுகிறார்.

விடிந்து கோயில் வாசலில், தீவட்டி பிடிக்க ஆள் வராதபோது இவர் கையில் தீவட்டி தரப்படுகிறது. கூலியாக, யானைகள் சாப்பிடச் செய்த புளியோதரைச் சாத உருண்டை தருகிறார்கள்.

மாலையில் அக்காவை அழைத்துக்கொண்டு மதுரையிலிருந்து சொந்த ஊர் போனால், பிளேக் நோய்க்கு அக்கா பலியாகிவிடுகிறார்.

ஓர் ஆடு, ரெண்டு குட்டிகள் வாங்கிக் கொடுத்து பெரியப்பா ஆடு மேய்க்க அனுப்புகிறார். மாலைவரை சோறு தண்ணி கிடையாது. வேறு வழியில்லாமல், தரையில் படுத்து ஆட்டு மடியிலிருந்து பால் பீச்சி வயிற்றை நிரப்பும் கொடுமை...

கிராம வாழ்க்கை இப்படிக் கொடூரமாக இருக்க, பட்டண வாழ்க்கையோ அதைவிடப் பரிதாபம்.

சென்னையில், இப்போது காந்தி சிலைக்கு மேற்கே அகில இந்திய வானொலி நிலையத்துக்குப் பின்னால் மாதம் 10 ரூபாய் வாடகையில் சிறு அறை எடுத்து மனைவி, பிள்ளைகளோடு வசிக்கிறார்.

ஒண்ணாந்தேதி வாடகை வசூல் செய்ய வீட்டுக்காரர் வந்தால், காந்தி சிலைக்குப் பின்னால் போய் ஒளிந்து கொள்வாராம். இப்படி 5 மாதங்களுக்கு வாடகைப் பாக்கி. ஊரிலிருந்து வந்த அண்ணன், 50 ரூபாய் மொத்தமாகக் கட்டி 'பெட்டிக்கடை வைத்துத் தருகிறேன். ஊருக்குப் புறப்படு' என்று பிள்ளை குட்டிகளோடு எழும்பூர் ரயில் நிலையம் அழைத்துப் போகிறார்.

"நீ கட்டிய பணத்திற்கு இன்னும் 10 நாள் அந்த வீட்டில் தங்கி, கமால் பிரதர்ஸ் தயாரிக்க, கிருஷ்ணன்-பஞ்சுவிடம் ஒரு கதை சொல்லியிருக்கிறேன். அது என்ன ஆகுதுன்னு பாத்திட்டு வந்திடறேன்' என்று அண்ணனிடம் சொல்ல எப்படியோ ஒழிஞ்சு போ என்று குழந்தைகளோடு அவர் ரயிலில் போய்விட்டார்.

வீட்டுக்கு வந்து கதவைத் திறந்தால் 'ராணிமுத்து' காலண்டரில் முருகன் சிரித்துக் கொண்டிருந்தான்.

"எந்நேரமும் உன் பேரைத்தாண்டா சொல்லுவேன் பாவி... இப்படி கை விட்டுட்டியேடா' -என்று அந்தப் படத்தை அடி அடி என்று அடித்து, அப்படியே பசி மயக்கத்தில் தூங்கிவிடுகிறார்.

விடிந்ததும் நண்பர், எழுத்தாளர் ஒருவர் டீ வாங்கிக் கொடுத்து சிட்டாடல் ஸ்டுடியோ அழைத்துச் சென்று, தயாரிப்பாளர்-இயக்குநர் ஜோசப் தளியத்திடம் கதை சொல்ல வைக்கிறார்.

அந்த வறுமையிலும் கம்பீரம் குறைய வில்லை. என் கதை நன்றாக இருந்தால் உடனே அட்வான்ஸ் தரணும் என்று கண்டிஷன் போடுகிறார்.

நெருப்புக்கோள கண்களுடன் பார்த்த ஜோசப் தளியத், இவர் கதையைக் கேட்டு குழந்தைபோல் சிரிக்க ஆரம்பித்துவிடுகிறார். காமெடி கதை சரி, சென்ட்டிமென்ட் கதை இருக்கா? என்று கேட்க... ஒருமணி நேரத்தில் அப்படி ஒரு கதை சொல்- அசத்தினார்.

இரண்டு கதைகளும் ஓ.கே. கதைக்கு 2500 ரூபாய் வீதம் 2 கதைகளுக்கு 5000 ரூபாய். அட்வான்ஸ் 500 ரூபாய் உடனே தந்தார்.

காலுக்கடியில் பூமி இடறியதுபோல அண்ணனுக்கு அதிர்ச்சி. நாம் ஏதாவது கனவு காண்கிறோமா? குழப்பம்!!

நூறு ரூபாயை மவுண்ட் ரோடு தபால் ஆபீஸ் சென்று ஊருக்கு மணியார்டர் செய்துவிட்டு, வீடு வந்து கதவைத் திறந்தால், முருகன் இப்போதும் சிரிக்கிறான்...

'என்னை நம்பியவரை நான் எப்போது கைவிட்டேன்' என்று அசரீரி கேட்பதுபோல் பிரமை... படத்தை எடுத்து நெஞ்சோடு அணைத்து ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

-இப்படி அனைத்து அத்தியாயங்களிலும் உணர்ச்சிக் குவியல்கள், அதிர வைக்கும் சோகங்கள், தேவர் அண்ணன், எம்.ஜி.ஆர். அவர்கள், திரு.

சிவாஜி, செல்வி ஜெயலலிதா அவர்கள், டைரக்டர் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன், பீம்சிங் என்று ஆரம்பித்து எண்ணற்ற நடிகர்கள், நடிகைகள், தயாரிப்பாளர்கள் பற்றி அளப்பரிய அபூர்வச் செய்திகள் இத்தொடர் மூலம் நமக்குக் கிடைக்கின்றன.

ஆழ்மனதில் கலைஞானம் அவர்களோடு புதைந்துபோக இருந்த இந்த வரலாற்றுப் பொக்கிஷத்தை வெளிக்கொணர்ந்த 'நக்கீரனு'க்கும், சகோதரர் நக்கீரன்கோபால் அவர்களுக்கும் நன்றியும் பாராட்டுகளும்.

வாசகர் கையில் எடுத்தால் கீழே வைக்க முடியாது, அப்படிப்பட்ட நூல் இது.

-சிவக்குமார்

# கதை இலாகாவின் கதாநாயகன்

என் இனிய தமிழ் மக்களே!

தமிழ் சினிமா கால் தடம் பதித்து நூறு ஆண்டுகள் கடந்துவிட்டது.

வெகுஜன மக்களாகிய உங்களால்தான் இது சாத்தியமானது. ஒரு திரைப்படத்தின் வெற்றியும், தோல்வியும் உங்கள் கைத்தட்டல்களால்தான் தீர்மானிக்கப்படுகிறது. உங்களுடைய ஒவ்வொரு கைத்தட்டலின் சத்தத்தில் எத்தனையோ விண்மீன்களுக்கு விலாசம் கொடுத்துள்ளீர்கள். ஆனால் அந்த விண்மீன்களுக்கும், வெள்ளி விழா கொண்டாடிய திரைப்படங்களுக்கும் பின்னணியில் உள்ள பிரபஞ்சத்தை நீங்கள் அடையாளம் காணத் தவறுவது வருத்தத்துக்குரியதாக இருக்கிறது. இது உங்களுடைய தவறு இல்லை, ஊடகங்களுக்குடைய தவறு. என்றைக்கு செய்தித்தாள்களிலும், வார இதழ்களிலும் முதல் பக்கத்தில் கதாநாயகன், கதாநாயகிகளுக்கு மாற்றாக கதையாசிரியர்கள், கவிஞர்கள், இலக்கியவாதிகள் மற்றும் படைப்பாளிகளின் முகம் பதிக்கப்படுகிறதோ, அன்றுதான் மாற்றம் வரும். இந்த விதத்தில் தமிழ் சினிமாவின் 'என்சைக்ளோபீடியா' என்றழைக்கப்படும் என் மண்ணின் விருட்சம் பாசத்துக்குரிய அண்ணன் திரு.கலைஞானம் அவர்களின் அனுபவங்களை 'சினிமா சீக்ரெட்' தொடராக வெளியிட்டதற்கு 'நக்கீரன்' ஆசிரியர் திரு.நக்கீரன்கோபால் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இளைஞர்களே! நாளைய திரைப்பட படைப்பாளிகளே! தமிழ் சினிமாவின் நதிமூலம், ரிஷிமூலம் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். எண்ணற்ற திரைப்படங்களும், கலைத்துறை சார்ந்த புத்தகங்களும் வாசிக்க வேண்டும். ஆனால் காவியமான சில திரைப்படத்தின் பிரதிகள் உங்கள் பார்வைக்கும் படாமல்போகும், புத்தகங்களின் சில பக்கங்கள் கிழிக்கப்பட்டிருக்கும் அல்லது உண்மைகள் மறைக்கப்பட்டிருக்கும். ஆனால் ஒட்டுமொத்த தமிழ் சினிமாவின் வரலாற்றை நீங்கள் அறியப்பட வேண்டுமென்றால் எங்களுக்குத் தெரிந்த களஞ்சியம் கலைஞானம்தான்.

திரு.கலைஞானம் அவர்கள் திரைப்படத்துறைக்கு வரும்போதே ஆயிரம் படங்களின் திரைக்கதைகளை நெஞ்சில் சுமந்து வந்தவர். 'பராசக்தி' திரைப்படத்தின் பத்தாவது காட்சி என்னவென்று கேட்டால் பட்டென்று சொல்லிவிடுவார். அவருடைய நினைவாற்றலை எண்ணும்போது வியப்பாக இருக்கிறது.

கதாநாயகன் கனவோடு சென்னைக்கு வந்தவர். காலச் சூழ்நிலையில் தன்னை கதாசிரியராக வடிவமைத்துக் கொண்டவர். நாற்பது படங்களுக்கு மேல் கதை-வசனம் எழுதியவர். இயக்குநர்கள் திரு. பீம்சிங், திரு.கே.எஸ்.கோபாலகிருஷ்ணன், தயாரிப்பாளர் திரு.'சாண்டோ' சின்னப்ப

தேவர் ஆகியோர்களின் கதை இலாகாவில் கதாநாயகன் இவர். தமிழ் சினிமாவில் இருநூறு வெற்றிப்படங்களின் திரைக்கதையின் பின்புலம் இவர். மேலும் பதினைந்து திரைப்படங்களைத் தயாரித்தவர். இத்தனைச் சிறப்புகள் பெற்ற இவர் பள்ளிக்கூட வாசனை அறியாதவர். இவர் அறிந்த பள்ளிக்கூடம் -உசிலம்பட்டி கௌடர் டூரிங் டாக்கீஸ் ஆகும்.

பள்ளிக்கூடம் போகாமலே ஒருவன் எப்படி பல்கலைக்கழகம் ஆகமுடியும்?

இது சாத்தியமா?

சாத்தியமே. இதற்கு ஒரே ஒரு உதாரணம்... எங்கள் மண் வாசனை நாயகன், திரையுலகின் கலைக்களஞ்சியம் கலைஞானம்.

எனக்கும் அண்ணன் கலைஞானம் அவர்களுக்கு நாற்பது வருட உறவு. நான் இயக்குநராவதற்கு முன்பே என்னை இயக்குநராக்கி அழகு பார்த்தவர். என்னுடைய திருமண விழாவில் 'வருங்கால இயக்குனரே' என்று வாழ்த்துமடல் கொடுத்து வாழ்த்திச் சென்றவர். என்னுடைய திரைப்படங்களின் வெற்றியிலும் வளர்ச்சியிலும் முக்கிய பங்கெடுத்துக்கொண்டவர். அவருடைய திரைப்பட பயண அனுபவங்களைப் படிக்கும்பொழுது என் பழைய நாட்களுக்கு அழைத்துச் சென்றது. அண்ணன் திரு.பஞ்சு அருணாச்சலம், நண்பர்கள் திரு.மகேந்திரன், திரு.ஆர்.செல்வராஜ், கலைமணி, பனசை மணி, கனகசண்முகம், என் மாணவர்கள் திரு.கே.பாக்யராஜ், திரு.மணிவண்ணன், திரு.சித்ராலட்சுமணன் இவர்களுடன் நான் கலந்துரை யாடிய நாட்கள் என் ஞாபக நதிக்கரையில் வந்து சென்றது. இவருடைய பொக்கிஷமான ஞாபகங்கள் நூறாவது தொடரை கடந்து செல்கிறது.

இந்தத் தொடர் பயணம் போல அவருடைய வாழ்க்கைப் பயணம் நூறை கடந்து வெல்ல வேண்டும். தமிழ் திரைப்படங்களுக்கு அண்ணன் திரு.கலைஞானம் அவர்களின் பணி தொடர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

அன்புடன்

31.12.2014

# ஒப்பனை இல்லா உண்மை!

அனுபவங்களைப் போன்ற திரைக்கதையை எந்த சினிமாவிலும் பார்க்க முடியாது. பார்க்கின்ற சினிமாக்களை விடவும் படிக்கின்ற அனுபவங்கள் சுவாரஸ்யமானவையாக இருக்கும். அதிலும் சினிமாத்துறையில் பழுத்த அனுபவம் பெற்ற ஒரு வித்தகர் தன் அனுபவங்களை வாசகர்களுக்கு வழங்கினால் படிக்கப்படிக்கத் திகட்டாது. ஜாம்பவான்களுடன் பழகிய ஜாம்பவனான திரைப்பட தயாரிப்பாளர்-இயக்குநர்-கதாசிரியர்-நடிகர் கலைஞானம் அவர்களின் திரைத்துறை சார்ந்த வாழ்க்கை அனுபவமும் நமக்குத் திகட்டாத இன்பமாக படிக்கக் கிடைத்திருக்கிறது. இதுவரை வெளிப்படாமல் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் உண்மைகள் அதனை நேரில் கண்டவரின் வார்த்தைகளில் வெளிப்படும் போது சுவாரஸ்யம் மட்டுமல்ல, ஆச்சரியமும் விறுவிறுப்பும் கூடுதலாகச் சேர்கின்றன. அப்படிச் சேர்ந்ததுதான் இந்த "சினிமா சீக்ரெட்.'

நக்கீரன் இதழில் இது தொடராகத் தொடர்கிறது. சினிமா போஸ்டர்கள் போல பிரம்மாண்ட போஸ்டர்களுடன் விளம்பரம் செய்யப்பட்ட நக்கீரனின் தொடர்கள் நிறைய உண்டு. ஆனால், ஒரு அவசரச் சூழலில் எவ்வித விளம்பரமும் இல்லாமல் சட்டெனத் தொடங்கப்பட்டு, வாசகர்களின் பேராதரவினால் வெற்றிகரமாகத் தொடர்ந்துகொண்டிருக்கும் தொடரான கலைஞானம் அவர்களின் சினிமா சீக்ரெட்டின் முதல்/ இரண்டாம் பாகம்தான் உங்கள் கைகளில் புத்தகமாகத் தவழ்கிறது. சினிமா மொழியிலேயே சொல்வதென்றால் ஆறிலிருந்து அறுபது வரை என்பார்களே, அதுபோல 20-லிருந்து 100 வரை அனைத்துத் தரப்பினரும் விரும்பிப்படிக்கும் வகையிலான நிகழ்வுகளை மேக்கப் போடாமல் வெளிப் படுத்துகிறார் கலைஞானம் அவர்கள். ஒப்பனை இல்லாத அந்த உண்மைகள்தான் வாசகர்களை வசீகரிக்கின்றன.

எம்.கே.தியாகராஜ பாகவதர் காலத்திலிருந்து டி.ஆர். மகாலிங்கம் போன்ற இசையரசர்கள் வரையிலான ஒரு காலகட்டம், சினிமா சாம்ராஜ்ஜியத்தை

கட்டி ஆட்சி செய்த எம்.ஜி.ஆர்-சிவாஜி காலகட்டம், அவர்களுக்கடுத்து சினிமாவில் நிலைத்த இடத்தைப் பெற்ற ரஜினி-கமல் யுகம் அதன்பின் இப்போதுள்ள கலைஞர்களின் காலம் என கலைஞானத்தின் திரைப்பயணம் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. ஒவ்வொரு ஜாம்பவானுடனும் இணைந்து பணியாற்றி அவர்களின் அன்பைப் பெற்ற ஜாம்பவனாக கலைஞானம் இருப்பதும், அவர்களின் நம்பிக்கைக்குரியவராகத் திகழ்ந்ததும் அவர் வெளிப்படுத்தும் அனுபவ வார்த்தைககளின் வாயிலாகத் தெரியவருகிறது. அதிலும் குறிப்பாக, சாண்டோ சின்னப்பா தேவர் பற்றிய கலைஞானத்தின் விவரிப்பு, படிக்கின்ற எவரையும் மெய்சிலிர்க்க வைத்துவிடும். பகைபோல வெளியே தெரிந்த சினிமா கலைஞர்கள் உள்ளே நட்புறவோடு ஒட்டி உறவாடியதையும், வெளிப்பார்வைக்கு நட்புபோலத் தெரிந்த பலரும் உள்ளுக்குள் மோசமான பகையைக் கொண்டி ருந்ததையும் இந்த சீக்ரெட் மூலம் அம்பலப்படுகிறது.

கலைஞானம் அவர்களை தம்பி இணையாசிரியர் காமராஜ் அவர்களின் ஆலோசனையின் பேரில் நக்கீரனுக்குள் கட்டி இழுத்து வந்தவர் தம்பி இரா.த.சக்திவேல். நக்கீரனின் சினிமா சக்கரவர்த்தி அவர்தான். நக்கீரன் சினிமாப்பகுதியில் வரும் எழுத்துகள் அனைத்தும் துணையாசிரியரான தம்பி சக்திவேலுடையவை. சினிக்கூத்து இதழின் அட்டை டூ அட்டை அனைத்தும் அவரது உழைப்பு. சிறப்பிதழ்களை சிறப்பாக வெளிக்கொண்டு வருவதும் அவர்தான். அயராத உழைப்பு, வசீகரிக்கும் எழுத்துநடை, எளிமையான வார்த்தைகள், கலகலப்புக்குப் பஞ்சமில்லாத செய்திகள் என தம்பி சக்திவேல் சினிமாதுறை சம்பந்தமான தகவல்களில் சிக்ஸர்களாக அடித்துக்கொண்டே இருப்பார். கலைஞானம் அவர்களை நக்கீரனில் தொடர் எழுத சம்மதிக்கச் செய்ததுடன், அவ ருடைய அனுபவங்களை அப்படியே வார்த்தைகளில் வடிப்பவரும் தம்பி சக்திவேல்தான். அருமையான கதையை ஒரு தேர்ந்த இயக்குநர் எப்படி நேர்த்தியான திரைக்கதையாக்கி சுவாரஸ்யமாகத் தருவாரோ அப்படித்தான் கலைஞானம் தரும் சீக்ரெட்டுகளை சிலுசிலு நடையில் எழுத்துவடிவமாக்கித் தருகிறார் தம்பி சக்திவேல்.

சினிமா கனவுகளுடன் புதிய புதிய இளைஞர்கள் புறப்பட்டு வந்துகொண்டே இருக்கிறார்கள். வெற்றி பெறுகிறவர்களும் உண்டு, வேதனையுடன் திரும்புகிறவர்களும் உண்டு. திரும்ப முடியாத இடத்திற்குச் செல்பவர்களும் உண்டு. திரைத்துறை என்பது எப்படிப்பட்டது என்பதையும் உழைப்பும் சாதுர்யமும் கொண்டவர்கள்

எத்தகைய சூழல்களை சந்தித்து வெற்றிபெற வேண்டும் என்பதை மிகச்சாதாரண விவசாய குடும்பத்திலிருந்து பிறந்து, எளிய மனிதராக திரையுலகில் அடிவைத்து மிகப்பெரும் நட்சத்திரங்களை வைத்து படம் தயாரிக்கவும் இயக்குவுமான நிலைக்கு உயர்ந்த ஐயா கலைஞானம் தன் வாழ்க்கை அனுபவங்கள் மூலம் இந்த சினிமா சீக்ரெட்டில் சொல்லித் தருகிறார். அனுபவங்களை விட சிறந்த பாடம் வேறெதுவும் உண்டா? மேலும் இந்த தொடரின் வெற்றிக்கு மெருகூட்டுவது அந்தக் கால, இந்த கால சினிமாக்களின் கருப்பு வெள்ளை + கலர் படங்கள். இதை கதைக்கேற்றவாறு கொடுத்து பெரிதும் உதவுவது தம்பி போட்டோ ஞானம். அவருக்கு நக்கீரனின் பாராட்டுக்கள்.

தன்னம்பிக்கையையும் வெற்றிக்கான வழியையும் நமக்கு அளிக்கும் ஐயா கலைஞானத்தின் சினிமா சீக்ரெட் புத்தகத்தை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறது உங்கள் நக்கீரன்.

-என்றென்றும் உங்கள்

நக்கீரன் கோபால்

# பாகம்-2ல் உள்ள சிறப்பம்சங்கள்!

'அன்று... எம்.ஜி.ஆருக்கு அரைப்படி அரிசி கொடுத்தேன். இன்று எம்.ஜி.ஆர்., என்னை கோடீஸ்வரனாக்கிவிட்டார்...' என சின்னப்ப தேவர் என்னிடம் சொன்ன விஷயங்கள்.
தேவரின் சிலிர்ப்பூட்டும் பிரம்மச்சரிய ரகசியம்!

எம்.ஜி.ஆர். - தேவர் நட்பின் மகிமை!

எம்.ஜி.ஆர். தொண்டையில் தங்கியிருந்த துப்பாக்கிக் குண்டு வெளியே வரவேண்டும் என்பதற்காக மருதமலை முருகனிடம் தேவர் போட்ட சண்டை!

நாதஸ்வர சக்கரவர்த்தி ராஜரத்தினம் பிள்ளை, தோடி ராகத்தை அடமானம் வைத்ததுபோல், நான் ஒரு கதையை அடமானம் வைத்த சுவாரஸ்யம்!

ரஜினி... ஹீரோவாக உருவான தருணம்!

'ரஜினியை ஹீரோவாகப் போடாதே!' என தேவர் என்னிடம் போட்ட சண்டை. எதிர்ப்பை மீறி நான் ரஜினியை ஹீரோவாக்கிய போராட்டம்!

'சூப்பர் ஸ்டார் பட்டம்' தேவையா? என பதறிய ரஜினி... இப்படி பலப் பல சுவாரஸ்யங்களும், நெகிழ்ச்சியான சம்பவங்களும், இதுவரை வெளியுலகிற்குத் தெரியாத பல நிகழ்வுகளும் இரண்டாம் பாகத்தில் உள்ளன.

இரண்டாம் பாகத்தின் தொடர்புச் சம்பவங்கள் மூன்றாம் பாகத்திலும் இடம் பெறும்!

வாசிக்கத் தொடங்குங்கள்... வரலாறை!

-அன்புடன்

கலைஞானம்

# என் கதைகளில், தயாரிப்புகளில்
## அறிமுகமானவர்கள் பட்டியல்

நட்சத்திரங்கள் :
ரஜினிகாந்த்

(கதாநாயகனாக - படம்: பைரவி)

கமல்ஹாசன்

(குழந்தை நட்சத்திரமாக இருந்த கமல் வா-பனாக ஆனதும் மறு அறிமுகம். படம் : குறத்தி மகன்)

கீதா (படம் : பைரவி)

ஜெய்சித்ரா (படம் : குறத்தி மகன்)

வாணிஸ்ரீ (படம் : காதல் படுத்தும் பாடு)

சுருளிராஜன் (படம் : காதல் படுத்தும் பாடு)

எஸ்.எஸ்.சந்திரன் (படம் : காதல் படுத்தும் பாடு)

மாதவி (படம் : புதிய தோரணங்கள்)

சொப்னா (படம் : நெல்லிக்கனி)

'ராஜபார்ட்' உடையப்பா

(படம் : தாய் வீட்டு சீதனம்)

கோவிந்தா (படம் : லவ் 86 - இந்தி)

கண்ணன் (எஸ்.எஸ்.ஆரின் மகன்- இரண்டாவது

நாயகன் படம் : காக்கைச் சிறகினிலே)

முத்துமாணிக்கம் (எஸ்.எஸ்.ஆரின் தங்கை மகன்- இரண்டாவது நாயகன் படம் : செல்லக்கிளி)

நாகராஜசோழன் (கேரக்டர் ஆர்ட்டிஸ்ட்,
படம் : எதிர்வீட்டு ஜன்னல்)

## இயக்குநர்கள்

எம்.பாஸ்கர் - (படம் : பைரவி)

எஸ்.எஸ். தேவதாஸ் - (நடிகை தேவிகாவின் கணவர், படம் : வெகுளிப்பெண்)

கே.எம்.பாலகிருஷ்ணன்- (நடிகர் குமரிமுத்துவின் அண்ணன். படம் : ஆறு புஷ்பங்கள்)

பனசை மணியன் - (படம் : நீதிக்கு ஒரு பெண்)

## பாடலாசிரியர்கள்

கவிஞர் சிதம்பரநாதன் - (படம் : பைரவி)

அருப்புக்கோட்டை தவசுமணி-
(படம் : இளஞ்ஜோடிகள்)

## பின்னணிப் பாடகர்கள்

சீர்காழி சிவசிதம்பரம் -
(படம் : மிருதங்க சக்கரவர்த்தி)

சந்திரபோஸ் - (படம் : ஆறு புஷ்பங்கள்)

## புகைப்படக் கலைஞர்கள்

'ஸ்டில்ஸ்' ரவி - (படம் : பைரவி)

வெள்ளைச்சாமி - (படம் : புதிய தோரணங்கள்)

நடராஜன் - (படம் : செல்லக்கிளி)

# படத் தொகுப்பாளர்கள்

கௌதமன் - (படம் : புதிய தோரணங்கள்)

வெள்ளைச்சாமி - (படம் : புதிய தோரணங்கள்)

# நான் அறிமுகம் செய்த தயாரிப்பாளர்கள்

என். சகுந்தலா

டி.என். வெங்கட்ராமன்

முருகன் கலைஞானம்

பி.மகாலட்சுமி

பி.கோப்பெருந்தெவி

என்.ஜான்ஸிராணி

# நான் அறிமுகம் செய்த மூலக்கதையாசிரியர்

புஷ்பவல்லி கலைஞானம் -

(படம் : புதுப்பட்டி பொன்னுத்தாயி)

# என் வாழ்க்கை மீது அக்கறை காட்டியவர்கள்

கவி. கே.பி.காமாட்சி சுந்தரம்

கவிஞர் சுரதா

எழுத்தாளர் ஏ.எஸ்.முத்து

நான் ஒரு கலைஞன் ஆவதற்கு அன்பும், அக்கறையும் காட்டிய, காட்டிவருபவர் என் அண்ணன் ஆர்.எம். கிருஷ்ணசாமி.

# நான் திரைக்கதைகளில் பங்கேற்ற இயக்குநர்கள்- தயாரிப்பாளர்கள்

சாண்டோ சின்னப்ப தேவர்

கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்

ஜோஸப் தளியத் (சிட்டாடல் ஸ்டுடியோ)

ஏ.பீம்சிங்

எஸ்.தியாகராஜன்

(சின்னப்ப தேவரின் மாப்பிள்ளை)

மதுரை திருமாறன்

முக்தா சீனிவாசன்

எம்.எஸ்.காசிவிஸ்வநாதன்

விசு (என்கிற) விஸ்வநாதன்

வி.சி. குகநாதன்

பாரதிராஜா

பாக்யராஜ்

ஆர்.வி.உதயகுமார்

பி.வாசு

கலைமணி

கே.ராஜேஷ்வர்

பார்த்திபன்

கோகுல கிருஷ்ணன்

மற்றும் பலர்...

# என் கதைகளில், படைப்பில் பங்குபெற்ற பிரபலங்கள், நட்சத்திரங்கள்

நடிகர் திலகம் சிவாஜிகணேசன்

ஜெமினிகணேசன்

எம்.என்.நம்பியார்

ஜெய்சங்கர்

சிவகுமார்

ரவிச்சந்திரன்

முத்துராமன்

ராதாரவி

நாகேஷ்

கராத்தே மணி

ஸ்ரீகாந்த்

வி.கே.ராமசாமி

தேங்காய் சீனிவாசன்

சோ ராமசாமி

பாலாஜி

மேஜர்சுந்தர்ராஜன்

சுதாகர்

கே.ஏ.தங்கவேல்

கார்த்திக்

சுரேஷ்

எஸ்.வீ.சேகர்

ஆர்.எஸ்.மனோகர்

சிலோன் மனோகர்

நிழல்கள் ரவி

வெண்ணிற ஆடைமூர்த்தி

விசு (எ) விஸ்வநாதன்

வி.எஸ்.ராகவன்

டைரக்டர் கே.விஸ்வநாத் (சங்கராபரணம்)

பார்த்திபன்

காகா ராதாகிருஷ்ணன்

எஸ்.ஏ.அசோகன்

கிருபானந்த வாரியார்

விஜயகுமார்

நெப்போலியன்

சங்கிலிமுருகன்

கிருஷ்ணம்ராஜ் (தெலுங்கு)

நாகபூஷணம் (தெலுங்கு)

ராஜநளா (தெலுங்கு)

கலைச்செல்வி ஜெயல-தா

கே.ஆர்.விஜயா

சுஜாதா

மனோரமா

ராதா

விஜயசாந்தி

தேவிகா

கனகா

ராஜசுலோசனா

எஸ்.வரலட்சுமி

சி.ஐ.டி. சகுந்தலா

ஸ்ரீப்ரியா

ஸ்ரீவித்யா

ஒய்.விஜயா

ஜெயந்தி

ஜெயா

சுலக்ஷணா

சுகுமாரி

சச்சு

சுந்தரிபாய்

அம்பிகா

லட்சுமி

ராதிகா

மேஜிக் ராதிகா

தீபா

வசந்தா

('இரவும் பகலும்' அறிமுகம்)

சூரியகலா

காந்திமதி

எஸ்.என்.லட்சுமி

வெண்ணிறஆடை நிர்மலா

மஞ்சுளா

ஜமுனா (தெலுங்கு)

ஜெயப்பிரதா (தெலுங்கு)

கிருஷ்ணகுமாரி (தெலுங்கு)

# இயக்குநர்கள்

ஜோசப் தளியத் (சிட்டாடல் ஸ்டுடியோ)

கே.எஸ். கோபாலகிருஷ்ணன்

ஏ.பீம்சிங்

கே.சங்கர்

பி.வாசு

முக்தா சீனிவாசன்

மதுரை திருமாறன்

எஸ்.எஸ். தேவதாஸ் (தேவிகா கணவர்)

எம்.பாஸ்கர் (பைரவி டைரக்டர்)

கர்ணன்

என்.கே.விஸ்வநாதன்

பி.ஆர்.சோமு

ஆர்.சி. சக்தி

கே.எஸ்.ரவிகுமார்

இராம.நாராயணன்

முரசொலி கே.சொர்ணம்

தாசரி நாராயணராவ் (தெலுங்கு)

# பாடலாசிரியர்கள்

கவிஞர் கண்ணதாசன்

கவிஞர் வா-

புலவர் புலமைப்பித்தன்

ஆலங்குடி சோமு

முத்துலிங்கம்

பிறைசூடன்

கங்கைஅமரன்

# இசை அரசர்கள்

எம்.எஸ்.விஸ்வநாதன்

கே.வி. மகாதேவன்

இளையராஜா

சங்கர்-கணேஷ்

வி.குமார்

டி.ஆர்.பாப்பா

# பாடியவர்கள்

டி.எம்.சௌந்தரராஜன்

கே.ஜே.யேசுதாஸ்

எஸ்.பி.பாலசுப்ரமணியம்

பாலமுரளிகிருஷ்ணா

மலேசிய வாசுதேவன்

மனோ

பி.சுசீலா

எஸ்.ஜானகி

எல்.ஆர்.ஈஸ்வரி

வாணிஜெயராம்

# வசனம் எழுதியவர்கள்

ஏ.எல்.நாராயணன்

'வியட்நாம்வீடு' சுந்தரம்

ஏ.எஸ்.பிரகாசம்

தூயவன்

பனசை மணியன்

# டான்ஸ் மாஸ்டர்கள்

தங்கப்பன்

கமலஹாசன் (உதவி டான்ஸ் மாஸ்டர்)

சுந்தரம் (பிரபுதேவா தந்தை)

விமலா (படம் : இளஞ்ஜோடிகள்)

# ஸ்டண்ட் மாஸ்டர்கள்

சங்கர்

மாதவன்

ஹயாத்

# என் நாடகங்களில் தலைமை தாங்கியவர்கள்

'கலைவாணர்' என்.எஸ்.கிருஷ்ணன்

டி.ஏ.மதுரம்

எம்.ஏ.வேணு ('சம்பூர்ண ராமாயணம்' படம் எடுத்த

தயாரிப்பாளர்)

எஸ்.ஏ.நடராஜன் ('மந்திரிகுமாரி' படப் புகழ்)

# நாடகங்களில் என்னுடன் நடித்தவர்கள்

'குலதெய்வம்' ராஜகோபால்

காகா ராதாகிருஷ்ணன்

கவி கே.பி.காமாட்சி சுந்தரம்

வி.எம். ஏழுமலை

எஸ்.ஏ.நடராஜன் (மிட்டாதாரர்)

கே.தவமணி தேவி (இலங்கைக் குயில், -ஆரவல்லி சூரவல்லி, வனமோகினி போன்ற படங்களில் நடித்துப் புகழ்பெற்ற தமிழ் சினிமாவின் முதல்கவர்ச்சிக்கன்னி)

'கண் திறந்தது' ராமநாதன் (மனோரமாவின் கணவர்)

# நான் நடித்த படங்கள்

## *துணை நடிகராக...*

கோகிலவாணி

தெனா-ராமன்

செல்லப்பிள்ளை

வெறும் பேச்சல்ல

## *முக்கிய கதாபாத்திரமாக...*

கே. பாக்யராஜின் 'இது நம்ம ஆளு'

பெரிய இடத்து மாப்பிள்ளை

# சிறப்புத் தோற்றத்தில்...

கோபுர வாசலிலே

பார்த்திபனின் 'கதை-திரைக்கதை-வசனம்-இயக்கம்'

# அரிசி தந்தேன்! கோடீஸ்வரனாக்கினார்!!

சின்னப்பத் தேவர் மற்றவர்களிடம் எம்.ஜி.ஆரைப் பற்றிக் குறிப்பிடும்போது 'தெய்வம்' என்றும், எம்.ஜி.ஆரை நேரில் பார்க்கும்போது 'முருகா' என்றும் சொல்வார். எம்.ஜி.ஆருடனான நட்பு பற்றி தேவரே ஒருமுறை எங்களிடம் சொல்லியிருக்கிறார்.

''கோவையில் ராமநாதபுரம் பகுதியில் 'மாருதி உடற்பயிற்சி நிலையம்'னு ஒண்ணு இருந்திச்சு. அங்கதான் உடற்பயிற்சி செய்யப்போவேன். எனக்கு இங்கிலீஷ் படம்... அதுவும் ஸ்டண்ட் படம் பார்க்கிறதுன்னா ரொம்பப் பிடிக்கும். ஸ்டண்ட் நடிகரா ஆயிடணும்ங்கிற ஆசையில் தீவிரமா உடற்பயிற்சி செய்வேன். அந்த உடற்பயிற்சிக்கூடத்துக்கு எம்.ஜி.ஆரும் வருவார். அங்கதான் எங்க நட்பு பலப்பட்டுச்சு. நான் பாடிய நல்லா பில்ட்-அப் பண்ணி ஜுபிடர் பிக்ஸர்ஸ்ல மாச சம்பளத்துல கம்பெனி ஆர்ட்டிஸ்ட்டா சேர்ந்திட்டேன். ஷூட்டிங் இருந்தாலும், இல்லேன்னாலும் மாச சம்பளம் வந்திடும். ஆனா படத்துல நடிச்சாத்தான் எம்.ஜி.ஆருக்கு சம்பளம். அதனால அவரு குடும்பத்து செலவுக்குப் பற்றாக்குறை இருந்துச்சு.

ஒருநாள் எம்.ஜி.ஆரின் வீட்டுப் பக்கமா போய்க்கிட்டி ருந்தேன். முண்டா பனியன், காக்கி அரைக்கால் டவுசர் போட்டுக்கிட்டு விறைப்பா சாண்டோ நடை நடக்குறது என்னோட பழக்கம்.



வீட்டு வாசலில் எம்.ஜி.ஆரை எதிர்பார்த்து காத்துக் கிட்டிருந்த எம்.ஜி.ஆரோட தாயார் சத்யபாமா அம்மா, என்னைப் பார்த்ததும் "டேய்... சின்னப்பா"னு கூப்பிட்டுச்சு.

கிட்டப்போயி "என்னம்மா?"னு கேட்டேன்.

" 'முதலாளிகிட்ட பணம் வாங்கிட்டு வர்றேன்'னு போன ராமச்சந்திரன் இன்னும் வரல. ஏற்கனவே லேட்டாயிடுச்சு. புள்ள தாமதமா வந்தான்னா அதுக்குப் பிறகு அரிசி வாங்கி சமைக்க நேரமாகும். புள்ள பசியோட வருவானே... ஒண்ணும் புரியலடா..."

" 'இரும்மா...! அஞ்சு நிமிஷத்துல வர்றேன்'னு சொல்-ட்டு நேரா எங்க வீட்டுக்குப் போனேன். வீட்டு வாசல்ல எங்கம்மா சில பொம்பளையாளுங்களோட பேசிக்கிட்டிருந்துச்சு. நான் வீட்டுக்குள்ள போயி தண்ணி குடிக்கிற மாதிரி பாவனைபண்ணி பனியன்லயும் கொஞ்சம் தண்ணிய விட்டு நனைச்சுக்கிட்டேன். சமையக்கட்டுல அடுக்குப் பானையில அரிசி இருந்துச்சு. என் காக்கி டவுசர்ல ரெண்டு பாக்கெட்டுமே பெரிசு பெருசா இருக்கும். பானைக்குள்ள கைய விட்டு அரிசிய அள்ளி ரெண்டு பாக்கெட்லயும் நிரப்பினேன். திரும்பவும் கொஞ்சம் தண்ணிக் குடிச்சிட்டு, 'ஏ...ஏ..வ்வ்...'னு ஏப்பம் விட்டபடி வெளியே வந்தேன். விறுவிறுனு எம்.ஜி.ஆரோட வீட்டுக்குப் போனேன்.

"அம்மா... முறத்த எடும்மா" என்றேன். எடுத்து வந்து நீட்டினார். அதில் இரண்டு பாக்கெட்டிலும் இருந்த அரிசியைக் கொட்டினேன்.

"ஏதுடா சின்னப்பா?"னு அம்மா கேட்டுச்சு.

"அதெல்லாம் விடும்மா. சட்டுனு சமையல ஆரம்பிங்க. தம்பி வந்துடப்போகுது" எனச் சொல்-விட்டு எம்.ஜி.ஆரை பார்த்துப் பேசிவிட்டுப் போவதற்காகக் காத்திருந்தேன்.



சிறிது நேரத்தில் எம்.ஜி.ஆர். வீட்டுக்குள் வந்தார். சோற்று வாசனை பிடித்த எம்.ஜி.ஆர். "ஏதும்மா, சோறு வடிக்கிற? எங்க கடன் வாங்கின?" எனக் கேட்க...

"சின்னப்பா கருணைதானப்பா" என அம்மா சொன்னதும்... எம்.ஜி.ஆர். என்கிட்ட வந்து என்னை கையைப் பிடிச்சுக்கிட்டார். நெகிழ்ச்சியான மனநிலை உண்டானதால் நான் கிளம்பிவிட்டேன்.

அன்னைக்கி அரைப்படி அரிசி தந்ததுக்கு... இன்னைக்கு என்னை கோடீஸ்வரனாக்கியிருக்கு அந்த தெய்வம்" என உணர்ச்சிமயமாகச் சொன்னார் தேவர்.

'தேவர் ஃபிலிம்ஸ்' என்கிற தயாரிப்பு நிறுவனத்தை தேவர் தொடங்கியதன் பின்னணியில் சில சுவாரஸ்யங்கள் உண்டு. அதையும் "ஒளிவு மறைவு' இல்லாமல் எங்களிடம் சொன்னார் தேவர்.

தேவருக்கு திருமணமாகி குழந்தைகள் பிறந்திருந்தன. குடும்பத்திற்கான வருமானத்திற்காக கோவையில் பால் கடை ஒன்றை நடத்திவந்தார் தேவர். அந்தச் சமயம் நடிகர் எஸ்.ஏ.நடராஜனும் 'பொன்முடி' படத்தின்

கேமராமேன் ஜே.ஜி. விஜயனும் தேவரை சந்தித்தார்கள். 'மூன்றுபேரும் ஆளுக்கு ஏழாயிரம் ரூபாய் வீதம் முதலீடு செய்து படம் தயாரிக்கலாம்' என்கிற யோசனையைச் சொன்னார்கள்.

பால்கடையில் லாபம் வந்ததால் சேமித்து வைத்திருந்த ரூபாயில் தேவர், ஏழாயிரம் கொடுத்தார்.

எஸ்.ஏ.நடராஜன், மாதுரிதேவி, ராஜசுலோச்சனா, நம்பியார் ஆகியோர் நடிக்க ஏ.பி.நாகராஜன் கதை, வசனம் எழுத, எஸ்.ஏ. நடராஜன் இயக்க ஏற்பாடானது. பிரபலமான நட்சத்திரங்கள் ஒப்பந்தமானதால் 'நல்ல தங்கை' என டைட்டில் வைத்து பூஜை போட்ட அன்றே எல்லா ஏரியாவும் விற்றுத் தீர்ந்தது. பத்தாயிரம் அடி படம் எடுக்கப்பட்ட நிலையில் பிரச்சினை ஏற்பட்டது.

ஒரு நடிகை, ஒரு கார், ஒரு முழம் மல்லிகைப்பூ. இதனால் உண்டானது கசமுசா.

அது என்ன?

# முருகக் கடவுலோடு சண்டை!

ஒரு நடிகை, ஒரு கார், ஒரு முழம் மல்லிகைப்பூ. இதனால் உண்டான கசமுசா என்ன?

தான் பங்குதாரராக இருந்து தயாரித்து வந்த 'நல்ல தங்கை' படக் கம்பெனிக்குப் போன தேவர்... படம் சம்பந்தமாகப் பேசிவிட்டு இரவு 11 மணிக்கு மேல் கம்பெனி காரில் வீடு வந்து சேர்ந்தார். அவரை இறக்கி விட்டுவிட்டுப் போன டிரைவர் விஸ்வநாதன் மறுநாள் காலை, தேவரை அழைத்துச் செல்ல மீண்டும் காருடன் வந்தார். காரில் ஏறப்போன தேவர், பின் ஸீட்டைப் பார்த்தார். ஒரு பெண் சூடியிருந்த ஒரு முழம் மல்-கைப்பூ வாடிய நிலையில் பின் ஸீட்டில் கிடந்தது. இதைப் பார்த்துவிட்ட தேவர், ''ஏம்ப்பா விஸ்வநாதா... ராத்திரி 11 மணிக்கு என்னை இறக்கிவிட்ட பின்னாடி இந்தக் கார்ல யாரை ஏத்திட்டுப்போன?'' எனக் கேட்டார்.

''உங்களை வீட்ல விட்ட பின்னாடி நேரா கம்பெனியில போய் காரை நிறுத்திட்டேன். மறுபடி இப்ப உங்களை ஏத்திக்கிட்டுப் போக வந்திருக்கேன்.''

''நிஜமாத்தான் சொல்றியா?''

''நிஜம்தாங்க.''

டிரைவர் ஸீட்டில் இருந்த விஸ்வநாதனை கீழே இறங்கச் சொன்ன தேவர், ஓங்கி ஒரு அறைவிட்டார்.

''தலையில வச்ச பூ ஸீட்ல கிடக்கு. என்னைய கேனப்பயனு நினைச்சியா?'' என கேட்டபடி பச்சை பச்சையாக தேவர் திட்ட... ''மன்னிச்சிடுங்க' என பதறிய விஸ்வநாதன், நடந்ததை முழுமையாக தேவரிடம் சொல்-விட்டார்.



"உங்களை நைட்டு 11 மணிக்கு விட்டுட்டு ஆபீஸ் போனேன். ஆபீஸ்ல ஒரு வாட்டசாட்டமான இளைஞர் உட்கார்ந்திருந்தார். புதுமுகமா நடிக்க வந்திருக்க அந்த நடிகையோட பேரைச் சொல்லி... 'அந்த நடிகையோட சொந்தக்காரர் இவர். நடிகையோட வீடு தெரியாதாம். நீ போய் நடிகையை கூட்டிட்டு வா'னு உங்க பார்ட்னர்ல ஒருத்தர் சொன்னாருங்க. நான் போய் கூட்டி வந்தேன். பிறகு அந்த இளைஞரும், நடிகையும் கார்ல ஏறிக்கிட்டாங்க. எங்கெங்கேயோ போகச் சொன்னாங்க. காலைலதான் என்னை விட்டாங்க. கடைசியா அந்த ஆளையும் கொண்டு போய் ஒரு லாட்ஜ்ல விட்டுடச் சொன்னாங்க."

டிரைவர் சொன்னதும் ஆத்திரமான தேவர், "வண்டிய ஆபீசுக்கு விடு" என்றார். அலுவலகத்துக்குள் போன தேவர் சூடாகிவிட்டார்.

"கோயம்புத்தூர்காரனுங்களுக்குப் பூரா இந்தக் கார் நம்ம சினிமா கம்பெனியோட கார்னு தெரியும். கம்பெனி கார்ல ஒரு நடிகை ஊரச் சுத்தீருக்கு. பாக்குறவன் என்ன நினைப்பான்? 'ஒரு நடிகையோட தேவர் ஊர் சுத்துறான்'னோ... இல்ல... "தேவரோட பார்ட்னர் நடிகையோட

சுத்துறான்'னோ கேவலமா பேசமாட்டாங்களா? இப்படிச் செஞ்சா கம்பெனிக்கு பேர் வருமா? ரிப்பேர் வருமா? அந்த நடிகைக்கு கார் தேவைப்பட்டா ஒரு டாக்ஸி புடுச்சுக் குடுத்துட்டு அவ சம்பளத்துல கழிச்சுக்கலாமே?'' என தேவர் காட்டமாக...

''வியாபாரம்... சினிமானு வந்துட்டா எல்லாத்தையும் அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுத்தான் போகணும்'' என பார்ட்னர் சொல்ல...

''எதையும் அனுமதிப்பேன். இதை மட்டும் அனுமதிக்க மாட்டேன்'' என தேவர் சொல்ல... இந்த வாக்குவாதம் முற்றியதும் நாற்காலியைத் தூக்கி பார்ட்னரைத் தேவர் தாக்க... ஒரே களேபரம்.

விஷயம் கேள்விப்பட்டு வந்த ஏ.பி.நாகராஜன் இரு தரப்பையும் சமாதானப்படுத்திவிட்டு ''தேவர் சொல்றதிலயும் நியாயம் இருக்கு. மூணுபேரும் இனியும் சேர்ந்து தொழில் பண்ண முடியாது. தேவர் போக்குப்படி உங்களால போக முடியாது. பார்ட்னர்ஷிப்லயிருந்து தேவர் விலகிக்கிறேன்கிறார். அவரோட முதலீட்டையும், லாபத்தில் பங்கையும் கொடுத்திடுங்க'' என ஒரு தீர்வைச் சொன்னார். அதன்படி தேவருக்கு 10 ஆயிரம் ரூபாய் செட்டில்பண்ணப்பட்டது.

தேவரை தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றார் ஏ.பி.நாகராஜன்.

''நீங்க தனியாவே தயாரிப்பு கம்பெனி ஆரம்பிங்க. முடிஞ்ச உதவிகளை நான் செய்றேன். உங்க பேர்லயே 'தேவர் ஃபிலிம்ஸ்'னு கம்பெனி தொடங்குங்க'' என ஏ.பி.நாகராஜன் சொல்ல... 'தேவர் ஃபிலிம்ஸ்' என்கிற கம்பெனி பெயர் தேவருக்குப் பிடித்துப் போனது.

சென்னை தி.நகரில் கிருஷ்ணவேணி தியேட்டர் பின்புறம் ஒரு கட்டிடத்தைப் பிடித்து மாடியில் ஆபீஸ் போட்டார் தேவர்.

சிறு சிறு வயதில் இருந்த மூன்று குழந்தைகளையும், மனைவியையும் அழைத்து வந்து ஆபீஸுக்கு எதிரில் இருந்த வீட்டின் மாடியில் குடிவைத்தார் தேவர்.

''இப்படித்தான்டா இந்தத் 'தேவர் ஃபிலிம்ஸ்' உருவாச்சு'' என தேவர் சொல்லி முடித்தார்.

பொதுவாக நாம் கடவுளை வணங்குவதற்கும், தேவர் வணங்குவதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. ஒருமுறை தேவருடன் நானும், தூயவனும் திருச்செந்தூர் கோயிலுக்குப் போயிருந்தோம். அங்கே முருகன் சன்னதிக்கு வலதுபுறம் வள்ளியம்மைக்கு சிறிய சன்னதி உண்டு.

வள்ளியம்மையை வழிபட்ட தேவர், "தாயே... வள்ளியம்மை. எப்படியும் அந்த திருட்டுப்பய முருகன் உன்னைப் பார்க்கிறதுக்கு வருவான். அப்படி வரும்போது இந்த நாயைப் பத்தி (தேவரைப் பத்தி) எடுத்துச் சொல்லும்மா. 'அவனை ஏன் ரொம்ப சோதிக்கிறீங்க'னு கேளும்மா" என்றபடி அழுதார் தேவர். நாங்களும் அழுதுவிட்டோம்.

"தேவரண்ணன் உணர்விலேயே இறைவன் கலந்துட்டான். இவரு சாதாரண மனுஷனா தெரியல. 64-வது நாயன்மார் மாதிரி இருக்கார்" என தூயவன் நெகிழ்ந்து சொன்னார்.

தேவருக்கு சர்க்கரை வியாதி இருந்தது. ஆசைப்பட்டதை யெல்லாம் அவரால் சாப்பிட முடியாது. அந்தக் கோபத்தில் தினமும் பூஜை அறையில் முருகனைத் திட்டுவார்.

"அன்னைக்கி என்னத்த சாப்பிட்டாலும் ஜீரணம் ஆயிடும் எனக்கு. ஆனா... சாப்பிடக்கூட காசில்லாம என்னைய சாகடிச்ச. இன்னைக்கி லட்ச லட்சமா பணத்தையும் செல்வாக்கையும் குடுத்திட்ட. ஆனா... 'கட்டுப்பாடா சாப்பிடலேன்னா செத்துப் போயிடுவ'னு டாக்டர் சொல்றான். டேய்... அயோக்கியப்பயலே... முருகா! இது என்னடா நியாயம்?" என பூஜையறையில் முருகனுடன் மல்லுக்கட்டுவது தேவரின் வாடிக்கை.

வாரத்தில் ஒருநாள் மட்டும் விரும்பியபடி உளுந்து வடை சாப்பிட்டுக்கொள்ள மருத்துவர்கள் அனுமதித்தனர். அதனால் பெரிய சைஸ் உளுந்துவடை ஹோட்டலிலிருந்து வந்துவிடும். நாங்களெல்லாம் இரண்டு வடை சாப்பிட்டு முடிப்பதற்குள் தேவர் 10 வடைகளைச் சாப்பிட்டுவிட்டு ஒரு ஜக் நிறைய மோர் குடித்துவிடுவார்.

கதை இலாகாவைச் சேர்ந்த தூயவன் ஒரு இஸ்லாமியர். இருப்பினும் பேதமில்லாமல் தூயவன் மீது பிரியம் காட்டுவார் தேவர். அவ்வப்போது குறும்பாக ஏதாவது கேட்டுவிடுவார் தூயவன்.

அன்றும் அப்படித்தான்... உளுந்துவடை சாப்பிட்டு முடித்ததும் தேவரைப் பார்த்து தூயவன் கேட்டார்...

"அண்ணே... நீங்க பிரம்மச்சர்ய வாழ்க்கை கடைப்பிடிக்கறதா சொல்றீங்க? உளுந்து வடை, ராகி ரொட்டி, ராகி களி, மோர்... இதெல்லாம் சாப்பிடுறீங்க. இதெல்லாம் ரொம்ப எனர்ஜியான உணவு. அப்புறம் எப்படிண்ணே இந்த நடுத்தர வயசில் பிரம்மச்சர்யமா இருக்க முடியும்?"

இந்தக் கேள்வி எங்களுக்கே அதிர்ச்சியாக இருந்தது.

'ஓ...'வென சத்தமாக சிரித்த தேவர், ''தூயவனும், கலைஞானமும் மட்டும் இருக்கட்டும். மத்தவனெல்லாம் கிளம்புங்கடா'' என்றார்.

தேவர், தூயவன், நான்... மூவர் மட்டுமே இருந்தோம்.

''என் வாழ்க்கையில ரொம்ப முக்கியமான விஷயமெல்லாம் உங்க ரெண்டு பேருகிட்டேயும் சொல்றேண்டா'' என தேவர் சொல்லத் தொடங்கினார். அவர் சொல்லச் சொல்ல... எங்கள் இதயமே நொறுங்க ஆரம்பித்தது.

அது...

# பிரம்மச்சரிய ரகசியம்!

"சத்தான உணவு சாப்பிடும் நீங்க... இந்த நடுத்தர வயதில் எப்படி பிரம்மச்சர்ய வாழ்க்கை கடைப்பிடிக்க முடியும்?" என தூயவன் கேட்க... அலுவலகத்திலிருந்த எல்லோரையும் அனுப்பிவிட்டு என்னையும், தூயவனையும் மட்டும் இருக்கச் சொல்-விட்டு தனது பிரம்மச்சர்ய ரகசியங்களைச் சொல்ல ஆரம்பித்தார் தேவர்.

"சென்னை வந்து ஆபீஸ் போட்டதுமே எம்.ஜி.ஆரை போய்ப் பார்த்தேன். 'அண்ணே! கதையை ரெடி பண்ணிட்டு வாங்கண்ணே... கண்டிப்பா உங்களுக்குப் படம் பண்ணித் தர்றேன்'னு எம்.ஜி.ஆர். சொன்னார். அய்யாப் பிள்ளையை வச்சு கதை-வசனம் எழுதி ரெடி பண்ணிட்டு மறுபடி எம்.ஜி.ஆரைப் பார்த்தேன். எம்.ஜி.ஆர். கால்ஷீட் கொடுத்ததோட... பானுமதியிடமும் எனக்காக ரெகமண்ட் பண்ணி கால்ஷீட் வாங்கித் தந்தார்.

"ரெண்டு மாசம் கழிச்சு ஷூட்டிங் ஆரம்பிச்சுக்கங்கண்ணே' என எம்.ஜி.ஆர். சொல்லிவிட்டார்.

புதுசா சினிமாக் கம்பெனி போட்டா நடிக்க சான்ஸ் கேட்டு பலரும் வரத்தான செய்வாங்க. நிறைய புதுமுகங்கள் நடிக்கவும், கதை எழுதவும் சான்ஸ் கேட்டு வந்து போனாங்க. அன்னைக்கி ஆபீஸ்ல நான் மட்டும்தான் உட்கார்ந்திருந்தேன். ஒரு இளம்பெண் நடிக்க சான்ஸ் கேட்டு வந்தா. அதுதாண்டா அம்புட்டுப் பிரச்சினைக்கும் காரணம்" எனச் சொல்லி நிறுத்தினார் தேவர்.



அதாவது... தேவரின் ஆபீஸ் மாடியிலிருந்து பார்த்தால் தேவரின் வீடு தெரியும். தேவரின் வீட்டு மாடியில் இருந்து பார்த்தால் தேவரின் ஆபீஸ் தெரியும். மாடி ஏறி ஒரு இளம்பெண் தன் கணவரான தேவரின் அறைக்குள் நுழைவதைப் பார்த்த தேவரின் மனைவி, மாடியிலேயே உட்கார்ந்து வாட்ச் பண்ணியிருக்கார்.

தேவரின் அலுவலகத்திற்குள் நுழைந்த இளம்பெண் "எனக்கு நடிக்க சான்ஸ் குடுங்க. சின்னதா கேரக்டர் ரோல் குடுத்தா போதும்" எனக்

கேட்க...

"கதாசிரியரும், டைரக்டரும் வெளிய போயிருக் காங்கம்மா. அவங்கதான் தீர்மானிக்க முடியும். அவங்க இருக்கிற நேரமாப் பார்த்து வாம்மா" என தேவர் சொல்ல...

"இப்படித்தான் எல்லா கம்பெனியிலயும் சொல்றாங்க. கடைசில ஏமாத்திடுறாங்க. என் குடும்பத்தையே நான்தான் சம்பாதிச்சுக் காப்பாத்தணும்" என அந்தப் பெண் சொல்ல...

அடுத்தவர் கஷ்டம் கேட்டால் உருகிப்போய்விடுவாரே தேவர்!

"உன் குடும்பப் பின்னணியச் சொல்லும்மா" என கேட்க ஆரம்பித்துவிட்டார்.

தன் முழுக்கதையையும் சொல்லி முடித்துவிட்டு அந்தப் பெண் வெளியேற... கிட்டத்தட்ட 45 நிமிடங்கள் ஆகிவிட்டன.

மதிய சாப்பாட்டிற்காக தேவர் வீட்டுக்குப் போய் கதவைத் தட்ட... கதவைத் திறந்த தேவரின் மனைவி தேவரின் கன்னத்தில் 'பளார்' என ஒரு அறை விட்டுவிட... பதறியபடி உள்ளே போனார் தேவர்.

தேவரின் மனைவி மாரிமுத்து வாத்தியாரம்மா படிப்பு படித்தவர். அவரின் சொந்த அத்தை மகன்தான் தேவர். அதனால்தான் படிக்காத தேவரை விருப்பப்பட்டு திருமணம் செய்துகொண்டார்.

"முட்டாப்பயலே... நான் படிச்சவ... என்னை ஏமாத்த முடியாது. ஒரு பொண்ணு முக்கால் மணி நேரமா உன் ரூம்ல இருந்திருக்கா? என்ன நடந்திச்சு சொல்லு?" என தேவரின் மனைவி கேட்க... திகைத்துப்போனார் தேவர்.

தன் கணவர் மீது மிகவும் அன்பு வைத்திருந்த திருமதியால்... ஒரு பெண்ணுடன் தன் கணவர் நீண்ட நேரம் இருந்ததை தாங்கிக் கொள்ள முடியாமல் கடுமையாக சண்டை போட்டார்.

"அந்தப் பெண் நடிக்க சான்ஸ் கேட்டு வந்தவள். தப்பாக எதுவும் நடக்கலை" என்கிற தேவரின் விளக்கம் எடுபடவில்லை.

"நான் மோசம் போயிட்டேனே..." என சுவற்றில் மோதி அழுது புலம்பிய தேவரின் மனைவி, பூஜையறையில் முருகனிடம் முறையிட்டுவிட்டு மயங்கிய நிலையில் உறங்கிவிட்டார்.

ஒரே வீட்டில் இருவரும் வசித்தாலும் இருவரும் பேசிக் கொள்ளாமல் இருந்தனர்.

ஒரு வருடம் தாண்டிய நிலையில் அன்று வாய்ப்புக் கேட்டு வந்து பிரச்சினைக்கு காரணமான பெண் மீண்டும் தேவரின் கண்ணில் பட... அந்தப் பெண்ணை மனைவி முன்பு நிறுத்தினார்.

'தேவர் தூய மனிதர்' என்பதை சத்தியம் செய்தாள் அவள்.

'தன் கணவனை தப்பாகப் புரிந்துகொண்டோமே' என வருந்தியபோதும் இயல்பு நிலையில் அதை ஏற்க முடியாத மனநிலை தேவரின் மனைவிக்கு.

"முருகா! எப்போ என் மனைவியோட மனசை நான் நோக வச்சேனோ... எப்போ... இப்படி ஒரு சூழ்நிலையை நீயும் உண்டாக்கிட்டியோ... இனிமே எனக்கு இல்லற இன்பம் வேணாம்டா முருகா. இதை நான் மீறமாட்டேன். இது உன்மேல சத்தியம்டா" என முருகனிடம் சத்தியம் செய்ததால் கடைசிவரை பிரம்மச்சர்யம் கடைப்பிடித்தார் தேவர்.

அறுபடை வீட்டில் குடியிருக்கும் முருகன் பழநியில் மட்டுமே பிரம்மச்சர்ய கோலத்தில் 'கோவணாண்டி' கோலத்தில் இருப்பான். அந்த விக்ரஹத்திற்கு பாலாபிஷேகம் செய்த பிறகு... முருகன் அணிந்திருக்கும் கோவணத்தை கழற்றிவிட்டு வேறு கோவணம் அணிவிப்பார்கள். அபிஷேகத்தில் நனைந்த அந்த கோவணத்துணிகள் சேகரிக்கப்பட்டு ஏலத்தில் விடும் கோயில் நிர் வாகம். அதை தேவரின் ஆட்கள் ஏலம் எடுத்து தேவருக்கு அனுப்பி வைப்பார்கள். சில சமயம் அந்த கோவணத் துணிகள் அவசரத் தேவையாக விமானம் மூலமாக தேவருக்கு அனுப்பப்படும்.

ஏன்?

"முருகா! நீ பரதேசி கோலத்துல பிரம்மச்சரியம் கடைப் பிடிக்கிற பழநியில, உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தத்தானே நீ கோவணம் கட்டியிருக்க. நானும் பிரம்மச்சர்யம் கடைப்பிடிக்கிறதா உன்மேல சத்தியம் பண்ணிட்டேன். அந்த சத்தியத்த காப்பாத்தணும்னுதான் உன் கோவணத்துணிய தண்ணில நனைச்சுப் பிழிஞ்சு குடிக்கிறேன். என்னோட உணர்ச்சிகளை அடக்குடா முருகா" என்றபடி பூஜையறையில் வைத்து தினமும் கோவணத்தை நனைத்துப் பிழிஞ்சுக் குடிப்பார் தேவர்.

தன் கணவருடன் பேச ஆரம்பித்தாலும் கூட... தேவரின் மனைவியும் இல்லற இன்பம் துறந்துவிட்டார்.

தேவருக்கும் அவரின் மனைவிக்கும் இடையே தோன்றிய பிரச்சினைகளுக்கு மத்தியில் எம்.ஜி.ஆர். -பானுமதி நடித்த 'தாய்க்குப் பின் தாரம்' படப்பிடிப்பை முடித்துவிட்டார் தேவர்.

எம்.ஜி.ஆருக்கும் தேவருக்கும் இடையே படத்தின் க்ளைமாக்ஸ் குறித்து மோதல் உண்டானது. அதனால் உண்டான சங்கடங்கள் என்ன?

# நட்டம் மேல் நட்டம்!

எம்.ஜி.ஆர்.-பானுமதி நடித்த 'தாய்க்குப் பின் தாரம்' படத்தை தன் முதல் தயாரிப்பாக தயாரித்து முடித்தார் தேவர். படத்தின் 'க்ளைமாக்ஸ்' விஷயத்தில் எம்.ஜி.ஆருக்கும் தேவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இருவருமே அவரவர் கருத்தில் பிடிவாதமாக இருந்தனர். இதனால் தேவரோடு கோபித்துக்கொண்டு போய்விட்டார் எம்.ஜி.ஆர். தேவரும், எம்.ஜி.ஆரைப் போய்ப் பார்க்கவில்லை.

'தாய்க்குப் பின் தாரம்' வெளியாகி மிகப்பெரும் வெற்றியைப் பெற்றது.

'தாய்க்குப் பின் தார'த்திற்கு கதை-வசனம் எழுதிய அய்யாப்பிள்ளையே 'நீலமலைத் திருடன்' கதை-வசனம் எழுதினார். ரஞ்சன் ஹீரோவாக நடிக்க, தேவர் தயாரித்த இந்தப் படமும் வெற்றிப்படமானது.

தேவர் ஃபிலிம்ஸின் புகழ் ஓங்கியது. அடுத்து 11-07-1958ல் பெங்களூரைச் சேர்ந்த உதயகுமாரை ஹீரோவாக வைத்து 'செங்கோட்டை சிங்கம்' படத்தை எடுத்தார். இது தோல்விப் படம். இதையடுத்து 28-08-1959ல் ஜெமினிகணேசனை வைத்து 'வாழ வைத்த தெய்வம்' படத்தை தயாரித்தார் தேவர். இது 'ஆவரேஜ்' படமாக அமைந்தது.

அடுத்து 19-10-1960ல் பெங்களூர் உதயகுமார் நடித்த 'யானைப்பாகன் படம்' எடுத்தார். இதுவும் தோல்விப் படம். இதையடுத்து 14-04-1961ல் 'கொங்கு நாட்டுத் தங்கம்' படத்தை எடுத்தார்.



தொடர்ந்து நான்கு தோல்விப் படங்களைத் தந்ததால்... ஃபைனான்ஸியர்கள் பணம் தர முன்வரவில்லை. இதனால் கம்பெனியை நடத்த ரொம்பவே சிரமப்பட்டார் தேவர்.

"ஏதோ ரெண்டு படம் அதிர்ஷ்டவசமா ஓடிப்போச்சு. மத்தபடி... இவருக்கு தயாரிப்புத் தொழிலை சரியா செய்யத் தெரியல" என தேவரின் உடன்பிறப்புகளே தேவரை விட்டு ஒதுங்கினார்கள். கம்பெனி ஊழியர்களும் வேறு கம்பெனிகளில் சேர்ந்துவிட்டனர்.

நூறுபேர்களுடன் 'கலகல'வென இருந்த கம்பெனியில் இப்போது டிரைவர் விஸ்வநாதன், புரொடக்ஷன் பாய், வாட்ச்மேன் மற்றும் சமையற்காரர்... ஆகிய நான்கு ஊழியர்கள் மட்டுமே இருந்தனர்.

கவலை சூழ தேவர் தனிமையில் அமர்ந்து சிந்தித்துக் கொண்டிருக்க... அந்த நான்கு ஊழியர்களும் அவர்முன் கைகட்டி நின்றனர்.

அவர்களை நிமிர்ந்து பார்த்த தேவர் 'என்னப்பா?'' எனக் கேட்க...

''அண்ணே... விடிஞ்சா தீபாவளிண்ணே'' என தயங்கித் தயங்கிச் சொன்னார்கள்.

''அடடா... என் கவலைல அத மறந்திட்டேனே. கொஞ்சம் இருங்கப்பா வர்றேன்'' என துண்டை உதறி தோளில் போட்டுக்கொண்டு கிளம்பினார் தேவர்.

அதே தெருவின் முனையில் இருந்த மார்வாடி கடைக்குப் போனார். இரவாகிவிட்டதால் மார்வாடிக் கடையை பூட்டிவிட்டு கடையை ஒட்டியிருந்த தன் வீட்டில் இருந்தார்.

தேவர் வருவதைப் பார்த்ததும் ''தேவர்ஜி... ஆயியே... ஆயியே...'' (வாங்க... வாங்க) என வரவேற்றார்.

''எனக்கு அவசரமா ஆயிரம் ரூபாய் வேணும். கொடுக்க முடியுமா?''

''என்னாஜி இப்படிக் கேட்டுட்டே?'' என ஆயிரம் ரூபாயை எடுத்து வந்து கொடுத்தார் மார்வாடி.

பணத்தைப் பெற்றுக்கொண்ட தேவர், ''நான் எதுல கையெழுத்துப் போடணும்?'' எனக் கேட்க...

''எதிலையும் வேணாம். உன்னைப் பத்தி தெரியாதா? ஆறு படம் எடுத்தவராச்சே'' என சொன்னார் மார்வாடி.

பணத்தைப் பெற்றுக்கொண்டு வந்த தேவர், ஊழியர்கள் நான்கு பேருக்கும் ஆளுக்கு 250 ரூபாய் வீதம் பிரித்துக் கொடுத்துவிட்டு வீட்டுக்குக் கிளம்பினார்.

''மாரிமுத்து... வேலைக்காரப் பசங்களுக்கு தீபாவளி செலவுக்கு ஏற்பாடு பண்ணிக் குடுத்திட்டேன். நமக்கெதுக்கு தீபாவளி. திரும்பப் படம் தயாரிக்கணும்னா பணம் வேணும். கம்பெனி இருக்க நிலைமைல யாரும் ஃபைனான்ஸ் தரமாட்டாங்க. மறுபடி நாம கோயம் புத்தூருக்கு போயிடலாமா?'' என மனைவியிடம் விவாதித்த தேவர்... ''சரி... அந்த முருகன் விட்ட வழிப்படி நடக்கட்டும்'' என முடிவு செய்தார்.

இரவெல்லாம் தூங்காத நிலையிலும் வழக்கம் போல் எழுந்து, குளித்து முருகனிடம் பூஜையறையில் பேசிவிட்டு, தேவர் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது... வாஹினி ஸ்டுடியோ அதிபர் நாகிரெட்டியாரிடமிருந்து அழைப்பு.

'அவர்கிட்ட வாங்கின கடனை குடுத்தாச்சே. எதுக்கு வரச்சொல்றார்?' என குழம்பியபடி வாஹினிக்குப் போய் நாகிரெட்டியைச் சந்தித்தார் தேவர்.

"என்ன சாப்பிடுறீங்க தேவரே?"

"ஒண்ணும் வேணாம். இந்த தண்ணி போதும்" என எடுத்துக் குடித்து ஆசுவாசப்படுத்திக்கொண்டார் தேவர்.

"தேவரே... ஒரு படத்தை ரிலீஸ் பண்ணின உடனேயே அடுத்த படத்துக்கு பூஜை போடுவீங்க. ஏன் இப்போ அந்த பரபரப்பு இல்ல?"

"தொடர்ந்து நாலு படம் லாஸ். ஃபைனான்ஸியர்கள்ட்ட கேட்கவும் சங்கடம். தொடர்ந்து படம் எடுக்கிறதா, வேணாமானு குழப்பமா இருக்கேன்."

"சரி... இதை அப்புறம் பேசிக்கலாம். உங்களுக்கு 'சாண்டோ'னு யாரு பட்டம் கொடுத்தா?"

நாகிரெட்டியிடம் தேவர் அந்த சம்பவத்தை விவரித் திருக்கிறார்.

1949-50ல் வெள்ளைக்காரர் ஒருவருக்குச் சொந்தமான பஞ்சுமில்லில் தேவர் கூலி வேலை பார்த்திருக்கிறார். ஒருநாள் வெள்ளைக்காரர் ரவுண்ட்ஸ் வரும்போது முரட்டுத் தேகமும், முண்டா பனியனுமாக வேலை செய்துகொண்டிருந்த தேவரிடம் வந்து ஓங்கி ஒரு குத்துவிட... தேவர் அசையாமல் ஸ்ட்ராங்காக நிற்க... வியந்துபோன வெள்ளைக்காரர், 'எப்படி பாடிய மெயின்டெய்ன் பண்ற?' எனக் கேட்க... 'நானா பயிற்சி பண்ணினேன் துரை' என தேவர் சொல்லவும்... 'இன்னும் நல்லா டெவலப் பண்ணு' என அவர் சொல்ல... 'எனக்கு அவ்வளவு வசதி இல்ல துரை' எனச் சொல்லியிருக்கிறார்.

உடனே தேவரின் முதுகில் தட்டிக் கொடுத்த வெள்ளைக்காரர் தன் பர்ஸி-ருந்து நூறு ரூபாயை தேவரிடம் எடுத்துக் கொடுத்துவிட்டு "இன்னைலருந்து நீ 'சாண்டோ'. உன் பேருக்கு முன்னால 'சாண்டோ'னு சேர்த்துக்க' எனச் சொல்-யிருக்கிறார்.

"தேவரே... நான் ஒரு பாக்ஸர் தெரியுமா?" என நாகிரெட்டி கேட்க... ஒல்லியான தேக அமைப்பு கொண்ட அவரைப் பார்த்து 'ஆச்சரியமா இருக்கே' என தேவர் சொல்ல...

தனது அனுபவத்தை தேவரிடம் சொல்லியிருக்கிறார் நாகிரெட்டி.

**1940**-களில் நாகிரெட்டி தயாரிச்ச 'சுமங்கலி' எனும் தெலுங்குப்படம் தமிழ்நாட்டிலும் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது. சென்னை பாரகன் தியேட்டரில் 'சுமங்கலி' படம் பார்க்க கூட்டம் அலைமோதியிருக்கிறது. ஆனால் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒரு ரௌடி மொத்த டிக்கெட்டையும் வாங்கி பிளாக்கில் விற்பதால் மக்கள் அதிருப்தியடைவதாக தகவல் வர... நாகிரெட்டி அங்கே போனார்.

அந்த ரௌடியை ரெண்டு கன்னத்திலும் பாக்ஸிங் பண்ண... சுருண்டு விழுந்த ரௌடி... 'அடிக்காதீங்கய்யா...' என கதறியிருக்கிறான். அவனை மன்னித்த நாகிரெட்டி, அவன் திருந்துவதற்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறார்.

"பிளாக்ல டிக்கெட் விற்கிறதால உனக்கு என்ன கிடைக்குது?"

"தினமும் அரை ரூவா!"

"படத்த பிரபலப்படுத்துற நோட்டீஸ் தர்றேன். தினமும் வீடு வீடா போய்க் குடுக்கணும். தினமும் உனக்கு ஒரு ரூபாய் தர்றேன்."

நாகி ரெட்டியார் சொன்னதன்படி அந்த வேலையைச் செய்திருக்கிறான் அந்த ரௌடி.

நாகிரெட்டி **12** வயது இருக்கும்போது அவரை ஆந்திராவிலுள்ள கிராமத்தில் தாத்தா-பாட்டி வீட்டில் விட்டுவிட்டு அவரின் அப்பா மட்டும் சென்னையில் பிசினஸ் செய்திருக்கிறார். காலை நான்கு மணிக் கெல்லாம் தாத்தா எழுப்பி விட்டுவிடுவாராம். மாடுகளை வேறு இடத்தில் கட்டிவிட்டு தொழுவத்து சாணிகளை அகற்றி சுத்தம்பண்ணி... மீண்டும் மாடுகளை தொழுவத்தில் கட்டுவது, மாட்டுக்குத் தீனி போடுவது, காட்டில் விவசாய வேலை... என கடுமையாக வேலை செய்வாராம் நாகிரெட்டி. ஒரு கட்டத்தில் 'கடுமையாக உழைப்பது' என்பது விருப்பமானதாக ஆகிவிட்டதாம். படிப்பிலும் நல்ல மாணவனாக இருந்திருக்கிறார். சின்ன வயசில் இருந்தே ஆன்மிக பிரசங்கங்கள் கேட்டதால் மனக்கட்டுப்பாடும், உழைப்பால் தேக உறுதியும் ஏற்பட்டதாம்.

அழகிய பருவப் பெண்.

மயங்காத நாகிரெட்டி!

# எம்.ஜி.ஆருக்கு கால் முறிவு!

''எனக்கு 19 வயசு இருக்கும்போது என் தந்தை என்னை வியாபார விஷயமாக ரங்கோனுக்கு அனுப்பினார். கப்பலில் வெங்காய மூடைகளை ஏற்றிக்கொண்டு போனேன்'' என தனது அனுபவங்களை தேவரிடம் தொடர்ந்து சொன்னார் நாகி ரெட்டியார்.

ரங்கோனில் ஒரு இஸ்லாமிய நண்பரின் வீட்டில் தங்கி வியாபாரம் செய்து வந்தார் நாகிரெட்டி. ஒருமுறை மெஸ் ஒன்றில் சாப்பிடச் சென்றவரிடம், 'ரெண்டு நாளா பட்டினி கிடக்கேன்' என பணம் கேட்டு ஒரு பர்மியர் அழ... 'பணம் தரமாட்டேன்... விரும்பியதைச் சாப்பிடு' என சாப்பிட வைத்திருக்கிறார். சாப்பிட்டு முடித்த அந்த ஆள், 'என் மனைவியும், மகளும் வீட்ல பட்டினியா கிடக்காங்க' என அழ... அவர்களுக்கும் பார்சல் வாங்கித் தந்த நாகிரெட்டி, அந்த ஆள் வேலை இல்லாமல் தினமும் இப்படி உணவுக்கு அல்லாடுவதைத் தெரிந்துகொண்டு... ஒருமாதத்திற்கு தேவையான மளிகைச் சாமான்களை வாங்கி அந்த ஆளையும், தன் காரில் ஏற்றிக்கொண்டு போய் அந்த நபரின் வீட்டில் இறக்கிவிட்டு மளிகை சாமான்களையும் தந்திருக்கிறார். அந்த ஆளும் அவரின் மனைவியும் தங்களுக்குள் ஏதோ பேசிவிட்டு தங்கள் மகளை அழைத்து ஏதோ சொல்ல... அவள் மறுக்க... மகளை ஓங்கி அடித்திருக்கிறார் அந்த ஆள். அந்தப் பெண் ஓடிவந்து நாகிரெட்டியாரின் காலில் விழ... அவளிடம் விசாரித்திருக்கிறார் நாகிரெட்டி.



''நான் பக்கத்து வீட்டு இளைஞனை கல்யாணம் செய்ய விரும்பினேன். வரதட்சணையாக ஐநூறு ரூபாயும், (இந்திய மதிப்பில்) கல்யாணச் செலவாக ஐநூறும் கேட்டதால் என் திருமணம் நின்னுப் போச்சு. 'எங்கிருந்தோ ஒரு புண்ணியவான்... அதுவும் சின்ன வயசு இளைஞன் வீட்டுக்கு வந்திருக்காரு. நீ அவர்கூட சேர்ந்து வாழு. அவர்கூட கிளம்பிப் போ'னு எங்கப்பா அடிக்கிறார்'' என அந்தப் பெண் விவரம் சொல்ல... மிக அழகிய அந்தப் பெண்ணைப் பார்த்தும் சபலப்படாத நாகிரெட்டி, அவளின் திருமணத்திற்காக பணத்தைக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறார்.



''தேவரே... அப்போ நான் வாலிபன். அந்தப் பெண்ணும் பேரழகு. ஆனா அந்தக் குடும்பத்தோட வறுமைதான் என் மனசுல நின்னுச்சு. காரணம்... என்னோட கட்டுப்பாடான வாழ்க்கைதான். இதையெல்லாம் ஏன் உங்ககிட்ட சொல்றேன் தெரியுமா தேவரே? உடல் உறுதி, மன உறுதி, ஆன்மிகம், ஒழுக்கம்... இப்படி எல்லா விஷயங்கள்லயும் என்னைப் போலவே நீங்க இருக்கீங்க. நேர்மையும், நீதியும் இருக்க நீங்க தொடர்ந்து சினிமா தொழில்ல இருக்கணும். நாளைக்கே பட வேலைய ஆரம்பிங்க. எவ்வளவு பணம் வேணாலும் தர்றேன். உங்களோட ஃபார்முலாப்படி நாளைக்கே ஸாங்ஸ் ரெக்கார்டிங் பண்ணிக்கங்க.'' (தேவர் ஒரு படத்தை முதலில் பாடல் பதிவு செய்து துவங்குவது வழக்கம்) எனச் சொன்னதுடன் நிற்காமல் ஸ்டுடியோ, டப்பிங், ரெக்கார்டிங் தியேட்டர் மேனேஜர்களை அழைத்து ''தேவர் நம்ம ஸ்டுடியோவுல பட வேலைகள் செய்துகொள்வார். அவர்கிட்ட பணம் கேட்காதீங்க'' எனவும் சொல்லிவிட்டார் நாகிரெட்டி.

உணர்ச்சிப்பெருக்கில் பேச்சுவராமல் நாகிரெட்டிக்கு நன்றி தெரிவித்துவிட்டு வந்திருக்கிறார் தேவர்.

இதே காலகட்டத்தில் எம்.ஜி.ஆருக்கு ஒரு இக்கட்டு நேர்ந்தது.

''இன்பக் கனவு' என்கிற நாடகத்தை பல்வேறு ஊர்களில் எம்.ஜி.ஆர். நடித்து வந்தார். இந்த நாடகத்தில் ஒரு காட்சி உண்டு. மிகவும் வெயிட்டான நடிகர் குண்டுமணி தன் உடல் முழுக்க எண்ணெய் தேய்த்திருப்பார். எம்.ஜி.ஆர். தன் கைகளால் குண்டுமணியை தன் தலைக்கு மேலே தூக்கிப் பிடிப்பார். எம்.ஜி.ஆரின் இந்த 'லைவ்' ஆக்ஷன் ரசிகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது.

சீர்காழி நகரில் இந்த நாடகம் நடைபெற்றபோது... வழக்கம்போல குண்டுமணியைத் தலைக்கு மேல் தூக்கினார் எம்.ஜி.ஆர். அன்று குண்டுமணி உடம்பில் எண்ணெய் அதிகமாக தேய்த்ததால் எம்.ஜி.ஆருக்கு கை வழுக்கியது. கீழே விட்டால் குண்டுமணியின் தலை உடைந்து உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதால் எம்.ஜி.ஆர். தன் காலை குறுக்கே நீட்ட... குண்டுமணி நழுவி எம்.ஜி.ஆரின் காலில் விழுந்து தப்பினார். ஆனால் எம்.ஜி.ஆரின் காலில் முறிவு ஏற்பட்டது.

எம்.ஜி.ஆருக்கு இப்படி ஆகிவிட்டதே... என ரசிகர்களுக்கு வருத்தம். 'எம்.ஜி.ஆர் ஆக்ஷன் ஹீரோ. அவருக்கு கால் முறிவு ஆயிடுச்சு. இந்த வயசில் கால் எலும்பு உடைஞ்சா மறுபடி ஒண்ணுகூடாது. இனிமே

எம்.ஜி.ஆர். நடிப்பாரா?' என விநியோகஸ்தர்கள், தயாரிப்பாளர்களுக்கு சந்தேகம். சில பத்திரிகைகளும் இஷ்டத்திற்கு எழுதிவிட... எம்.ஜி.ஆர். நடித்து வந்த படங்களும் தடைபட்டு நின்றன. புதிய பட ஒப்பந்தங்கள் ஏற்படவில்லை. ஆனால் மருத்துவர்களே வியக்கும்படி மிக விரைவில் குணமானார் எம்.ஜி.ஆர்.

நாகி ரெட்டியாரின் உதவியால் அவரை சந்தித்துவிட்டு வந்த ஓரிரு நாட்களிலேயே வாஹினி ஸ்டுடியோவில் வைத்து தனது அடுத்த தயாரிப்பிற்கான பாடல்களைப் பதிவு செய்துவிட்டு வெளியே வருகிறார் தேவர்.

ஸாங்ஸ் ரெக்கார்டிங் செய்யப்பட்ட தியேட்டருக்கு எதிரே... குண்டுமணியை தன் இரு கைகளாலும் தலைக்கு மேல் தூக்கியபடி எம்.ஜி.ஆர். போஸ் கொடுக்க பத்திரிகை புகைப்படக் கலைஞர்கள் அதை படமெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். தனக்கு மறுபடி பழைய பலம் வந்துவிட்டது என்பதை எம்.ஜி.ஆர் நிரூபித்துக்கொண்டிருக்கிறார்.

இக்கட்டிலிருந்து மீண்ட தேவரும், இக்கட்டி -ருந்து மீண்ட எம்.ஜி. ஆரும், அதாவது ஆருயிர் நண்பர்களான இவர்கள் இருவரும்... ('தாய்க்குப்பின் தாரம்' பட க்ளைமாக்ஸ் மனஸ்தாபத்தால் பிரிந்து) ஐந்து வருடங்களுக்குப் பிறகு நேருக்கு நேர் பார்த்துக் கொண்டார்கள். வார்த்தை களால் விவரிக்க முடியாத அந்த சந்திப்பின் உணர்ச்சி மயமான சூழலில்... 'அண்ணே' என எம்.ஜி.ஆர். அழைக்க... 'முருகா' என அரற்றியபடி தேவர் ஓடி வந்து எம்.ஜி.ஆரை கட்டிப் பிடிக்க... இரண்டு நிமிடங் கள் பேச்சே வராமல் இருவரும் தழுவிக்கொள்ள... பத்திரிகையாளர்கள் திகைத்து நிற்கிறார்கள். அதன்பிறகு பத்திரிகையாளர்களுக்கு விடை கொடுத்து அனுப்பிய எம்.ஜி.ஆர்., தேவரிடம் கேட்கிறார்.

"அண்ணே... இப்ப நீங்க என்ன செய்றீங்க?"

"நாகி ரெட்டியார் புண்ணியத்துல நாலு பாட்டு ரெக்கார்டிங் முடிச்சிட்டு இப்பதான் வர்றேன் முருகா."

"அந்தப் பாடல்களை நான் கேட்கலாமா?"

"உங்களுக்கு இல்லாததா? வாங்க முருகா" என எம்.ஜி.ஆரை தியேட்டருக்கு அழைத்துச் சென்று பாடல்களை ஒலிபரப்பச் செய்கிறார் தேவர்.

பாடல்களைக் கேட்டு ரசித்த எம்.ஜி.ஆர்., "அண்ணே! நாலு பாட்டுமே ரொம்ப அருமையா இருக்குண்ணே. ஹீரோ யாருண்ணே?" எனக் கேட்க...

"ஏற்கனவே என்னோட இரண்டு படங்கள்ல நடிச்ச பெங்களூர் உதயகுமார்தான்" என்கிறார் தேவர்.

"இந்த மாதிரி நல்ல பாடல்களுக்கு அவர் எப்படி பொருத்தமா இருப்பார்?"

"வேற யாரும் எனக்கு கால்ஷீட் தரமாட்டேங்கிறாங்களே?"

"நான் இல்லையா?" என எம்.ஜி.ஆர். கேட்டதும், எம்.ஜி.ஆரின் கையை தேவர் பற்ற... தேவர் கையை எம்.ஜி.ஆர். இறுகப் பற்றுகிறார்.

"அப்புறம் என்ன நடந்துச்சு?னு தெரியுமாடா கலைஞானம்?"

"சொல்லுங்கண்ணே..."

"எம்.ஜி.ஆர். என்னோட கையப் பிடிச்சு கூட்டிக்கிட்டுப் போய் அவரோட கார்ல ஏறச் சொன்னாரு. என்னோட காரை தன்னோட காருக்குப் பின்னாடியே வரச்சொன்னாரு.

கார் நேரா எம்.ஜி.ஆர். வீட்ல போய் நின்னுச்சு. என் கையைப் பிடிச்சு வீட்டுக்குள்ள கூட்டிப்போய் நேரா சத்யத் தாய் போட்டோ முன்னாடி நிறுத்தினாரு. (எம்.ஜி.ஆரின் தாயார் புகைப்படம்) தாயை வணங்கினாரு. நானும் கும்பிட்டேன். என்னோட உள்ளங்கையை நீட்டச் சொல்லி அதில் அவரோட உள்ளங்கையை வச்சு ஒரு சத்தியம் பண்ணினார்."

என்ன சத்தியம்?

# வந்தாளே மகராசி!

"தன்னோட தாயார் சத்யத்தாய் போட்டோ முன்னாடி நிறுத்தி எம்.ஜி. ஆர். எனக்கு சத்தியம் செய்து தந்தார்.
"அண்ணே... என் தாய்மேல ஆணை! நீங்க எப்போ கால்ஷீட் கேட்டாலும் குடுக்கிறேன்! என் தாய் மேல சத்தியம். நாளைக்கே கூட நீங்க ஷூட்டிங் வச்சுக்கலாம்" என எம்.ஜி.ஆர். சொல்லிட்டார்.

"எனக்கு பேச்சே வரலடா கலைஞானம்! 'எம்.ஜி.ஆர். சொல்லைத் தட்டாதே'னு என்னோட உள்ளுணர்வு சொல்லுச்சு. அதைக் குறிக்கிற மாதிரியே 'தாய் சொல்லைத் தட்டாதே'னு மறுநாளே படத்தை ஆரம்பிச் சிட்டேன். அதுக்குப் பின்னாடி எம்.ஜி.ஆரை வச்சு கண்டினியூவா படம் எடுத்தேன். என்னைக்கோ அரைப்படி அரிசி தந்த என்னய அந்த தெய்வம் கோடீசுவரனாக்கிடுச்சுடா" என மீண்டும் கண்கலங்கினார் தேவர்.

தொடர்ந்து தேவருக்கு 16 படங்கள் நடித்துக் கொடுத்தார் எம்.ஜி.ஆர். அதுவும் திட்டமிட்ட தேதிகளில் படத்தை முடித்துக் கொடுத்தார். அதனால் தேவரின் பேனர் இந்தியாவில் பெரிய கம்பெனியா கொடிகட்டிப் பறந்தது.

தேவர் ஃபிலிம்ஸில் கதை இலாகாவில் வேலைபார்த்துக் கொண்டே தேவரின் அனுமதியுடன் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன், முக்தா சீனிவாசன், மதுரை திருமாறன் ஆகியோரிடமும் கதை விவாதத்தில் பணிபுரிந்து வந்தேன்.





அப்பாவிப் பெண், தைரியமான பெண்... என இரட்டை வேடங்களில் ஜெயலலிதா நடித்த படம் 'வந்தாளே மகராசி'. ஜெயலலிதாவின் மாறுபட்ட இரு வேறு நடிப்பிற்காகவே இந்தப் படம் பெரும் வெற்றி பெற்றது. இந்தப் படம் எடுத்துக் கொண்டிருந்தபோது ஏராளமான சுவாரஸ்ய அனுபவங்கள் ஏற்பட்டன.

'வந்தாளே மகராசி' கதையை படமாக்க முடிவு செய்த கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் திரைக்கதை விவாதத்திற்கு என்னைக் கூப்பிட்டார். இதனால் கற்பகம் ஸ்டுடியோவில் அமர்ந்து பணி செய்துகொண்டிருந்தேன்.

அப்போது ஒருநாள்... இந்திய சினிமாவின் மூத்த ஜாம்பவான்களில் முக்கியமானவரான பிரசாத் ஸ்டுடியோ அதிபர் எல்.வி.பிரசாத் தரப்பிலிருந்து எனக்கு அழைப்பு.

எல்.வி.பிரசாத்தின் மூத்த மகன் ஆனந்தபாபு கற்பகம் ஸ்டுடியோவிற்கு வந்தார். 'குறத்தி மகன்' உள்ளிட்ட எனது கதைகளை புகழ்ந்தவர்... "என்

தந்தையார் தமிழ், தெலுங்கு, இந்தி என பலமொழி படவுலகில் சாதித்தவர். அவர்கூட சேர்ந்து நீங்க ஒரு கதை எழுதினா... ஆல் இண்டியா அளவுல நீங்க ஃபேமஸ் ஆயிடலாம்... விருப்பமா?" எனக் கேட்டார். எவ்வளவு பெரிய மனிதருடன் பணியாற்றும் வாய்ப்பு. உடனே சம்மதித்தேன்.

அன்று மாலையே எல்.வி.பிரசாத்திடம் நான் அறிமுகப் படுத்தப்பட்டேன். அவர் முன்பு உட்காருவதற்குக் கூட எனக்கு ரொம்பத் தயக்கமாக இருந்தது.

என் கதையில் உருவான திரைப்படங்களின் விபரங்களைக் கேட்டார். நான் சொன்னேன்.

"ரொம்ப சந்தோஷம். கைவசம் கதை இருக்கா?"

"இருக்குங்கய்யா. மனைவி மில் ஓனர். கணவன்... அதே மில்லின் தொழிலாளி மற்றும் தொழிற்சங்க லீடர். இவங்களோட கருத்து மோதல்தான் கதை."

"பேஷ்! ரொம்ப நல்லாருக்கு. தொடர்ந்து கதையைச் சொல்லுங்க."

பத்து ஸீன் வரை சொன்னேன். கதை கேட்டுக் கொண்டிருந்த எல்.வி.பிரசாத் தூங்கிவிட்டார். நான் கதை சொல்றதை நிறுத்திவிட்டேன்.

"ஏன் நிறுத்திட்டீங்க?"

"ஐயா... உங்களுக்கு ஓய்வு தேவைப்படும்போல் இருக்கு."

"ஓ... நான் தூங்கிட்டேன்னு நினைச்சீங்களா? நான் இப்போ ட்ரீட்மெண்ட்ல இருக்கேன். அதுக்காக சாப்பிடுற மாத்திரைகள் லேசா மயக்கமூட்டுது. நீங்க இப்போ சொன்னது வரைக்குமான கதையைத் திருப்பிச் சொல்லவா?".

'சொல்லுங்க' என்பது அநாகரிகம் என்பதால் மௌனமாக இருந்தேன். ஆனால் நான் சொன்ன பத்து ஸீன் சம்பவங்களையும் ஒன்றுவிடாமல்... நான் சொல்லியதைக் காட்டிலும் மேலும் அழகுபடுத்திச் சொன்னார்.

எனக்கு ஆர்வமாகிவிட்டது. "நான் கண்ணை மூடியபடி இருந்தாலும் நீங்க கதையை தொடர்ந்து சொல்லுங்க!" என்றார்.

அரைமணி நேரத்தில் முழுக் கதையையும் சொல்லி முடித்தேன்.

"பேஷ்! நல்லா இருக்கு! இந்தக் கதையை முதல்ல எந்த லாங்வேஜ்ல எடுக்கலாம்னு நான் முடிவு பண்றேன். என்னோட மெடிக்கல் ட்ரீட்மெண்ட் இன்னும் மூணு மாசத்தில முடிஞ்சிடும். அது முடிஞ்சதும் நான் உங்களை கூப்பிடுறேன். படத்தை ஆரம்பிச்சிடலாம். உங்க முகவரிய குடுத்திட்டுப் போங்க!" என்றார் எல்.வி.பிரசாத்.

அவரிடம் விடைபெற்றுக் கொண்டு கற்பகம் ஸ்டுடியோ திரும்பினேன். என்னை எதிர்பார்த்துக் காத்திருந்த கே.எஸ். கோபாலகிருஷ்ணன் என்னைப் பார்த்ததும் "என்னப்பா மாயமா மறைஞ்சிட்டே?" எனக் கேட்டார்.

"எல்.வி.பிரசாத்கிட்ட கதை சொல்லப் போனேன். அவருக்குப் பிடிச்சுப் போச்சு!".

"என்ன கதை?"

கதையை முழுமையாக நான் சொன்னதும்...

"நல்ல சந்தர்ப்பத்தில் இப்படி ஒரு கதையைச் சொன்ன. வாஹினி அதிபர் நாகிரெட்டியார் ரொம்ப நாளா என்கிட்ட ஒரு படம் பண்ணித் தரச் சொல்லிக் கேட்கிறார். இந்தக் கதையை நாளைக்கே அவர்கிட்டச் சொல்லி படம் பண்ணுவோம்!" என்றார் கோபாலகிருஷ்ணன்.

மறுநாள் நாகிரெட்டியிடம் என்னை அறிமுகம் செய்து வைத்தார்.

"உங்களைப் பத்தி கேள்விப்பட்டிருக்கேன் கலைஞானம். கதையைச் சொல்லுங்க!".

நான் சுருக்கமாக கதையைச் சொன்னதுமே சிரித்துவிட்டார்.

"மனைவி முதலாளி, கணவன் தொழிலாளி எனும் போதே சுவாரஸ்யம் வந்திடுச்சே. இந்தக் கதையை புரஸீட் பண்ணுங்க!" என்ற நாகிரெட்டி தன் மேனேஜரை அழைத்து எனக்கு 1001 ரூபாய்க்கு செக் போட்டுக் கொடுத்துவிட்டு "மத்தத அப்புறம் பேசிக்கலாம். நீங்க எங்க ஸ்டுடியோவில் இருந்து கதை எழுதுறதா இருந்தா அறை ஏற்பாடு செய்றேன். இல்லே... கற்பகம் ஸ்டுடியோ வசதின்னா அங்கேயே இருந்து கதையை எழுதி முடிங்க. நான் அவசர வேலையா பாம்பே போறேன். வந்ததும் இந்தக் கதைக்கு நட்சத்திரங்களை முடிவு பண்ணலாம்!" என்றார்.

நான் முதன்முதலில் நடிகனாகும் ஆசையில் 1949-ஆம் ஆண்டில் சென்னை வந்ததும், முதன்முதலாக வாஹினி ஸ்டுடியோவில் துணை நடிகராக நடிக்க டோக்கன் வாங்க கியூவில் நின்றதையும், என் முறை வந்தபோது டோக்கன் தீர்ந்து போய் எனக்கு ஏமாற்றம் ஏற்பட்டதையும் இப்போது அதே வாஹினி அதிபர் தயாரிப்பில் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் இயக்கத்தில் எனது கதை படமாகவிருப்பதையும் ஒப்பிட்டு என்னை நானே பிரமித்துக் கொண்டேன்.

நானும், கே.எஸ்.கோபாலகிருஷ்ணனும் நாகியாரிடம் விடைபெற்றுக் கொண்டு திரும்பினோம். வாஹினி நிறுவனத்திடமே அட்வான்ஸ் செக் வாங்கிய சந்தோஷத்தில் எனக்கு இரவெல்லாம் தூக்கம் வரவில்லை.

''இரட்டை வேடத்தில் ஜெயலலிதா நடிக்க நீங்க எடுத்துவரும் 'வந்தாளே மகராசி' படத்தை தெலுங்கில் வெளியிடக்கூடாது. தெலுங்கிற்கு கதை உரிமையும் விற்கக் கூடாது'' என்றார் நாகிரெட்டி.

ஏன்?

அதிர்ச்சியானார் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்.

அது ஏன்?

'நாகியார்ட்ட வாங்கின செக்கை ரிடர்ன் பண்ணிடு கலைஞானம்' என்றார் கோபாலகிருஷ்ணன்.

இது ஏன்?

# ஒரு கதை! டபுள் மார்க்கெட்!

பாம்பே சென்றுவிட்டு... சொன்னபடி இரண்டு நாளில் சென்னை திரும்பிய நாகிரெட்டியிடமிருந்து அழைப்பு வந்தது. கே.எஸ். கோபாலகிருஷ்ணனும் நானும் அவரை சந்தித்தோம்.

''நான் ஏன் அவசரமா பாம்பே போயிட்டு வந்தேன் தெரியுமா? எம்.ஜி.ஆர். இரட்டை வேஷங்கள்ல நடிச்ச எங்களோட 'எங்கவீட்டுப் பிள்ளை' படத்தின் கதையைத் திருடி இரட்டை வேஷ ஹீரோயின் கதையா மாத்தி 'சீதா அவுர் கீதா'னு இந்தியில படம் எடுத்து ரிலீஸ் பண்ணிட்டாங்க. படமும் நல்லா போய்க்கிட்டிருக்கு. அதனாலதான் பாம்பே போனேன். அந்தப் படத்தை எடுத்தவங்க என் கால்ல விழுந்து மன்னிப்புக் கேட்டதோட... 'எங்களை ஆசிர்வாதம் பண்ணுங்க'னு சொல்லிட்டாங்க.

'இரட்டை வேஷ ஹீரோயின் கதையை தென்னிந்திய சினிமாவா எடுக்கக்கூடாது. கதையையும் விற்கக்கூடாது'னு எழுதி வாங்கிக்கிட்டு வந்திட்டேன். அந்த இரட்டை ஹீரோயின் கதையை வச்சு 'வாணி ராணி'ங்கிற படத்தை தமிழ்-தெலுங்கில் தயாரிக்கப் போறேன்'' என்றார் நாகிரெட்டி.

கே.எஸ்.கோபாலகிருஷ்ணனுக்கு இந்தச் செய்தி பேரதிர்ச்சியாக இருந்தது. எனக்கும் அதிர்ச்சிதான்.

''அய்யா... நான் யதார்த்தமாக யோசிச்சி ஒரு கதை எழுதினேன். அப்பாவிப் பொண்ணு-முரட்டுப் பொண்ணு... இப்படி ரெண்டு வேஷத்துல ஜெயலலிதாவை வச்சு ''வந்தாளே மகராசி' படத்தை பாதி எடுத்திட்டேன். கலைஞானமும் இந்த ஸ்கிரிப்ட்டில் ஒர்க் பண்றார். சீக்கிரமே படத்தை முடிச்சு ரிலீஸ் பண்ணப்போறேன். படம் வியாபாரமும் ஆயிடிச்சி'' என கே.எஸ். கோபாலகிருஷ்ணன் சொல்ல... நாகிரெட்டியாருக்கு ஷாக். நாங்கள் இருந்த அறையில் சிறிது நேரம் கனத்த மௌனம் நிலவியது.



நாகிரெட்டியே அந்த மௌனத்தை உடைத்தார்.

''ஒரே மாதிரியா சிந்திக்கிறதை 'கோ-இன்ஸிடென்ட்'னு சொல்வாங்க. இருந்தாலும் ஒண்ணு செய்ங்க...'வந்தாளே மகராசி'யை தெலுங்கில் ரிலீஸ் பண்ணாதீங்க. தெலுங்கு ரீ-மேக் உரிமைக்கு கதையை விற்கவும் கூடாது'' என்றார்.

தெலுங்கில் ஒரு நல்ல தொகைக்கு விற்க பேச்சுவார்த்தையெல்லாம் முடித்திருந்தார் கோபாலகிருஷ்ணன். இருப்பினும் ''நீங்க சொல்ற மாதிரியே செய்றேன்'' எனச் சொன்னார்.



அவரிடம் விடை பெற்றுத் திரும்பினோம்.

கற்பகம் ஸ்டுடியோவுக்குள் நுழைந்ததும் கோபால கிருஷ்ணன் என்னிடம் கேட்டார்.

"கலைஞானம்... நாகிரெட்டி குடுத்த 1001 ரூபா செக்கை பேங்க்ல போட்டுட்டியா?"

"கைலதான் வச்சிருக்கேன்."

"நாம அவரோட கதையை காப்பியடிக்கல. இருந்தாலும் இப்படி ஒரு சூழல்ல அவருக்கு படம் பண்ணும்போது சங்கடமா இருக்கும். அதனால செக்கை ரிடர்ன் பண்ணிடு. உன்னோட கணவன்-மனைவி கதையை நானே தயாரிக்கிறேன்" என்றார்.

'ஒரு நல்ல வாய்ப்பு பறிபோகிறதே...' என்கிற வருத்தம் இருந்தாலும் கோபாலகிருஷ்ணனுக்கு மதிப்பளித்து வாஹினி ஸ்டுடியோ அலுவலகத்தில் 'செக்'கை ஒப்படைத்துவிட்டு வந்தேன்.

இரு வேடங்களில் ஜெயலலிதா மற்றும் ஜெய்சங்கர் ஹீரோவாக நடித்த 'வந்தாளே மகராசி'யை மிக விரைவாக படப்பிடிப்பு நடத்தி 1973-ல் வெளியிட்டார் கே.எஸ். கோபாலகிருஷ்ணன்.

நாகிரெட்டியும் அசரவில்லை. சிவாஜி ஹீரோ. குறும்புப் பெண்... அப்பாவிப் பெண்... என இரட்டை வேடங்களில் வாணிஸ்ரீயை வைத்து 'வாணி-ராணி' படத்தைத் தயாரித்து 1974-ல் ரிலீஸ் செய்தார்.

தஞ்சாவூர் மாவட்டம் மல்லியம் கிராமத்தில் கே.எஸ். கோபாலகிருஷ்ணனுக்கு தென்னந்தோப்பும், வீடும் இருந்தது. எனது 'கணவன்-மனைவி' கதையை மெருகேற்றுவதற்காக கே.எஸ்.ஜி. என்னை அங்கு அழைத்துச் சென்றார்.

நாங்கள் கதை விவாதம் செய்துகொண்டிருந்தபோது நள்ளிரவு நேரத்தில் குடிசைப் பகுதியிலிருந்து 'குய்யோ முறையோ' என கூச்சலும், கலாட்டாவுமாக ஒரே சத்தம். இருவரும் அங்கே போய்ப் பார்த்தோம்.

ஒரு அய்யர் வீட்டுப் பையன். தலித் பெண்ணை காதலித்து விட்டான். காதலியைப் பார்ப்பதற்காக வந்தவனை பிடித்து வைத்துக்கொண்டு பிரச்சினை செய்துகொண்டிருந்தார்கள்.

கே.எஸ்.ஜி.யைப் பார்த்ததும் "ஐயா... நீங்கதான் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கணும்" என முறையிட்டார்கள்.

பையன் குடும்பத்தாரையும், பெண் குடும்பத்தாரையும் தன் வீட்டுக்கு அழைத்து வந்தார் கே.எஸ்.ஜி. அவர்கள் பேசி முடித்த பிறகு "என்னை நாட்டாமை ஆக்கிட்டீங்க. நீங்க ஏத்துக்கிட்டாலும், இல்லேன்னாலும் நான் சொல்ற தீர்ப்பு என்னன்னா... மனசார விரும்பின அவங்க ரெண்டுபேரும் கல்யாணம் பண்ணிக்கட்டும்" என்றார்.

அவரின் வார்த்தைக்கு இரு தரப்பும் மதிப்பளித்தது.

மறுநாள்...

"கலைஞானம்... ஒரு அருமையான கதை கிடைச்சிருக்கு. இந்தக் கதையை படம் எடுத்திட்டு அதற்கப்புறம் உன்னோட 'கணவன்-மனைவி' கதையைப் படமாக்கலாம்" என்றார்.

நானும் சம்மதித்து "புதுக்கதை என்ன?" என்று கேட்டேன்.

முதல்நாள் இரவு நடந்த காதல் பஞ்சாயத்தையே கதையாகச் சொன்னார். அது நன்றாகவே இருந்தது. இரண்டே நாளில் முழு திரைக்கதையையும் தயார் செய்துகொண்டு சென்னை திரும்பினோம்.

(அந்தக் கதைதான் முத்துராமன்-கே.ஆர்.விஜயா நடிப்பில் கே.ஆர்.விஜயாவின் நூறாவது படமாக வெளிவந்த 'நத்தையில் முத்து.')

மல்-யம் கிராமத்திலிருந்து சென்னை திரும்பிய மறுநாள் தேவரிடமிருந்து அழைப்பு. போனேன்.

"என்னடா கலைஞானம் ஆள் தலைமறைவாயிட்ட?" என கேட்டார்.

எல்.வி.பிரசாத், நாகி ரெட்டி, கே.எஸ்.கோபால கிருஷ்ணன்... இப்படி மூவரிடமும் எனது 'கணவன்-மனைவி' கதை சுற்றி வந்ததையும், அதையொட்டிய சம்பவங்களையும் தேவரிடம் சொன்னேன்.

'கணவன்-மனைவி' கதை கடைசியில என்னதான்டா ஆச்சு?"

"இப்போ கே.எஸ்.ஜி.கிட்ட வெயிட்டிங்ல இருக்குதுண்ணே."

"கதையைச் சொல்றா."

சொன்னேன்.

என் கையைப் பிடித்து குலுக்கிப் பாராட்டிய தேவர் "ஏன்டா? குப்பக் கதைகளை என் தலையில் கட்டிட்டு நல்ல கதையை எங்கேயோ போய் விற்கிறியா? அயோக்கியப் பயலே! இந்தக் கதைக்கி வெளியில என்னடா தருவாங்க?" என கேட்டார்.

"15 ஆயிரம் வரை விலை போகும்ணே."

"மாரியப்பா... 15 ஆயிரம் எடுத்துட்டு வந்து இந்த நாய் மூஞ்சியில அடி" என சிரித்தார் தேவர். தேவரின் தம்பி மாரியப்பன் 15 ஆயிரத்தை என்னிடம் கொடுத்தார்.

அப்போது என்னுடன் இருந்த என் உதவியாளர் பனசை மணியன் அன்றிரவுவே டைரக்டர் மதுரை திருமாறனிடம் "தேவர்கிட்ட ஒரு அருமையான கதை சொல்லி 15 ஆயிரம் ரூபாய்க்கு வித்திருக்கார் கலைஞானம். இந்தக் கதையைப் படமெடுத்தா கண்டிப்பா படம் ஜெயிக்கும்" எனச் சொல்லி முழுக்கதையையும் சொல்லியிருக்கிறார்.

ஆனால் இந்த விஷயம் எதுவும் எனக்குத் தெரியாது.

"மறுநாள்... என் உதவியாளருடன் தேவரின் ஆபீஸிற்குப் போனேன். கதை விவாதம் தொடங்கவிருந்த நேரத்தில்...

ஒரு பெரிய தாம்பாளத் தட்டில் மூன்று வகை கனிகள், பெரிய மல்லிகைப்பூ பந்து, ஒரு கட்டு பணத்துடன் உள்ளே வந்த மதுரை திருமாறன் தாம்பாளத்தை தேவரிடம் நீட்டி... "அண்ணே... இதை வாங்கிக்கங்க" என்றார்.

"என்னப்பா விசேஷம்?" என்றபடி தேவர் வாங்கிக்கொள்ள... அவரின் காலைத் தொட்டு வணங்கிய திருமாறன், "அண்ணே... உங்ககிட்ட கலைஞானம் சொன்ன 'கணவன்-மனைவி' கதையை நான் சொந்தமா தயாரிச்சு டைரக்ஷன் பண்ணலாம்னு இருக்கேன். கைவசம் வேற கதை இல்லை. அதனால அந்தக் கதையை எனக்குக் குடுத்திடுங்க" என்றார்.

தேவர் ஃபிலிம்ஸ் தயாரித்த நான்கு படங்களுக்கு வசனம் எழுதியிருக்கிறார் திருமாறன். அந்த உரிமையில் கேட்டார்.

தேவருக்கு அதிர்ச்சி.

"நேத்து சாயந்தரம் என்கிட்ட கதையை வித்திட்டு இப்போ திருமாறனையும் தூண்டிவிட்டுட்டியே நியாயமா?" என்பது போல் தேவர் என்னைப் பார்த்தார்.

"அண்ணே... சத்தியமா நான் சொல்லல. எப்படி இவருக்கு தெரிஞ்சதுனு புதிரா இருக்குண்ணே" என்றேன்.

"கலைஞானம் உதவியாளர் பனசை மணியன்தான் சொன்னார். நான் உங்களுக்காக உழைச்சவன். இதுல 15 ஆயிரம் இருக்கு. வச்சுக்கிட்டு

கதையைக் குடுங்க'' என்றார் திருமாறன்.

"நீயே எடு. நல்லா இரு'' என ஆசிர்வதித்து அனுப்பினார் தேவர். திருமாறன் கொடுத்த 15 ஆயிரத்தையும் என்னிடமே "வச்சுக்கடா' என கொடுத்துவிட்டார் தேவர்.

ஒரே கதைக்கு இரட்டை வருமானம் என்பதால்... 'உன்னாலதானப்பா' எனச் சொல்- என் உதவியாளருக்கு ஐயாயிரம் கொடுத்தேன்.

தயாரிப்பாளரை செருப்பால் தாக்கிய விநியோகஸ்தர்.

# அடமானம் வைத்த கதை!

"கணவன் மனைவி' கதை இப்போது டைரக்டர் மதுரை திருமாறனின் கைக்கு மாறியது.

ஜெய்சங்கர்-ஜெயசித்ரா நடித்த 'சொந்தங்கள் வாழ்க' படத்தை இயக்கி முடித்திருந்தார் மதுரை திருமாறன். அதோடு தயாரிப்பாளர் நமசிவாயத்துடன் இணைந்து பார்ட்னராக இந்தப் படத்தின் தயாரிப்பிலும் பங்கெடுத்திருந்தார்.

'சொந்தங்கள் வாழ்க' படத்தை ரிலீஸ் செய்த பின் எனது 'கணவன் மனைவி' கதையை எடுக்கத் திட்டமிட்டார் திருமாறன்.

'சொந்தங்கள் வாழ்க' ரிலீஸ் அறிவிக்கப்பட்டு... முதல்நாளே படப்பெட்டி வாங்க விநியோகஸ்தர்கள் வந்துவிட்டனர். ஆனால் டெபிஸிட் காரணமாக பெட்டி டெலிவரி ஆவதில் சிக்கல். விஜயா லேப்பில் பஞ்சாயத்து நடந்தது. அந்தச் சமயம் திருமாறனுடன் நானும் அங்கே இருந்தேன்.

குறிப்பிட்ட ஒரு தொகையை லேபில் கட்டினால்தான் படப்பெட்டிகள் கிடைக்கும் என்கிற சூழ்நிலையைப் புரிந்து கொண்ட விநியோகஸ்தர்கள், தயாரிப்பாளர் நமசிவாயத்தின் வேண்டுகோளை ஏற்று தலா ஐயாயிரம் ரூபாய் கூடுதலாகத் தந்தார்கள். அப்படியும் பணம் போத வில்லை. 'இனிமேல் என்னிடம் எதுவுமில்லை. எதுவும் செய்ய முடியாது' என வெறும் கையை உயர்த்திக் காட்டினார் நமச்சிவாயம். உடனே திருமாறன் தன் வீட்டுக்கு வந்தது மனைவியின் தாலித்தங்கத்தைத் தவிர மற்ற நகைகளை எடுத்துக்கொண்டு வந்தார். லேப்பிலேயே ஒருவர் விலை பேசி வாங்கிக்கொள்ள... அந்தப் பணமும் லேப்பில் செலுத்தப்பட்டது.



"இன்னும் இருபதாயிரம் ரூபாய் கட்டினால் பெட்டி கிடைத்துவிடும். படம் ரிலீஸாகிவிடும்.

"வந்திருக்கும் விநியோகஸ்தர்கள் பெரிய மனசு பண்ணி இந்தத் தொகையைத் தரவேண்டும்" என நமச்சிவாயம் சொல்ல... கோபமான ஒரு விநியோகஸ்தர் "திரும்பத் திரும்பவாடா பணம் கேட்கிற?" என ஆவேசமாக, தான் அணிந்திருந்த செருப்பைக் கழற்றி நமச்சிவாயத்தின் தலையில் ஓங்கி அடித்துவிட்டு தான் வந்த டாக்ஸியில் ஏறிப் பறந்துவிட்டார்.

எங்களுக்கு அதிர்ச்சி. அதன்பிறகு சுதாரித்து அந்த நபரைப் பிடிக்கக் கிளம்பியபோது...

"தயவு செஞ்சு அந்த ஆளுமேல எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம். அவனை கடவுள் பார்த்துக்குவார். ரிலீசுக்கான விஷயத்தில் கவனம் செலுத்துவோம்" என நமச்சிவாயம் சொல்லிவிட்டார்.

"பணம் புரட்ட இனி வேற வழியே இல்லையே" என திருமாறன் பதற... நான் அவரைத் தனியாக அழைத்துச் சென்றேன்.

"நீங்க விலைக்கு வாங்கியிருக்கும் என்னோட 'கணவன் மனைவி' கதையை மறுபடி என்கிட்ட குடுத்தா... யார்கிட்டயாவது குடுத்து பணம் வாங்கிட்டு வர்றேன்" என்றேன்.

"உடனே நடக்கிற காரியமா இது?"

"ஒரு முயற்சிதான்."

சம்மதித்தார் திருமாறன்.

பிராட்வே ஏரியாவில் புண்ணாக்கு வியாபாரம் செய்து வந்த நந்தகோபால் செட்டியார் பெரிய டிஸ்ட்ரிபியூட்டர். பணக்காரர். நான் எழுதிய கதைக்கு திரைப்படங்களை வாங்கி வெளியிட்டவர். அந்த வகையில் அவர் எனக்கு நல்ல பரிட்சயம்.

அதனால்... மறுநாள் காலை அவரின் புண்ணாக்கு கடைக்குச் சென்று அவரை சந்தித்தேன்.

"வா கலைஞானம்..." என வரவேற்ற நந்தகோபால் செட்டியார் அங்கிருந்தவர்களிடம் என்னைப் பற்றி பெருமை யாகக் குறிப்பிட்டு "கலைஞானம் கதை எழுதி நான் வாங்கி வெளியிட்ட படங்கள் எல்லமே எனக்கு லாபம்தான்" என குறிப்பிட்டுவிட்டு "என்ன விஷயமா வந்திருக்கே கலைஞானம்?" எனக் கேட்டார்.

மதுரை திருமாறனின் படத்திற்கு கடைசி நேரத்தில் ஏற்பட்ட சிக்கலைச் சொன்னேன்.

"அதுக்கு நான் என்ன செய்ய முடியும்?"

" "கணவன் மனைவி'ன்னு ஒரு கதை வச்சிருக்கேன். அதை அடமானமா வச்சுக்கிட்டு 15 ஆயிரம் குடுத்தீங்கன்னா..."

"என்னாது? கதைய அடமானம் வைக்கிறியா?

"பழைய இரும்பு இருந்தா கொண்டு வா, பணம் தர்றேன். கதையை எப்படிய்யா அடமானமா வாங்க முடியும்? என்னைய பைத்தியக்காரன்னு நினைச்சியா?" என கேட்டார்.

சங்கடத்தில் என் முகம் சுருங்கிவிட்டது. இதைக் கவனித்த செட்டியார், குரலில் இருந்த கடுமையை மாற்றிக்கொண்டு தன்மையாகப் பேசினார்.

''மதியம் ரெண்டு மணியோட வியாபாரம் முடிஞ்சிடும். அதுக்குப் பிறகு லிபர்ட்டி தியேட்டர் பக்கத்துல நான் கட்டிக்கிட்டிருக்க வீட்டைப் பார்க்கப் போவேன். என்கூட காரிலேயே வந்து கதை சொல்லு. நல்லாயிருந்தா பரிசீலிப்பேன். நல்லால்லேன்னா பாதியிலேயே உன்னை இறக்கிவிட்டுடுவேன். அதுவரைக்கும் அந்த ரூம்லபோய் உட்காரு'' என்றார்.

அப்படியே செய்தேன்.

இரண்டு மணி ஆனது.

காரின் பின் சீட்டில் நந்தகோபால் செட்டியாரும், அவரின் நண்பர்கள் இருவரும் அமர்ந்துகொண்டனர். முன்சீட்டில் டிரைவருடன் செட்டியார் நண்பர் ஒருவரும் இருந்தனர். முன்ஸீட்டில் நெருக்கிப் பிடித்து ஒருக்களித்து அமர்ந்தபடி நான் உட்கார்ந்துகொண்டேன்.

கார் கிளம்பியது.

''கதையைச் சொல்...'' என்றார் செட்டியார்.

பிராட்வே ஏரியா ரொம்ப சத்தமான ஏரியா. அதிலும் ஓடும் கார் சத்தம். அதுபோக என் கதையைக் கேட்க வேண்டிய செட்டியார் என் முதுகுக்குப் பின்னால் இத்தனை அசௌகரியத்தில் எப்படி கதை சொல்வது?

அப்போது... ''பாகப்பிரிவினை' கதை மூலம் புகழ்பெற்ற கதாசிரியர் சோலைமலையின் நினைவு வந்தது. அவர் கதை சொல்லும்போது 'ஒரு ஊரில்...' என மிகச் சத்தமாகச் சொல்லி மற்றவர்களின் கவனத்தை தன்பக்கம் ஈர்ப்பார்... என கேள்விப்பட்டிருந்தேன். அதேபாணியில் சத்தமான குரலில் கதையை ஆரம்பித்தேன்.

நாலாவது ஸீன் சொல்லும்போது என் அருகி-ருந்த நபர் கதையை ரசித்தபடி எனக்கு வசதியாக இடம் கொடுத்துவிட்டு அவர் ஒருக்கழித்து உட்கார்ந்துகொண்டார். அடுத்து டிரைவரும் கதையை ரசிப்பதை உணர்ந்துகொண்டேன்.

கார் கோடம்பாக்கம் மேம்பாலத்தில் ஏறும்போது க்ளைமாக்ஸை சொல்லி முடித்தேன்.

பின்னால் அமர்ந்திருந்த செட்டியார் 'பிரமாதம்' என என் தோளில் தட்டினார். செட்டியார் கட்டிக்கொண்டிருந்த வீட்டின் முன் கார் வந்து நின்றது. எல்லோரும் இறங்கினோம்.

"கலைஞானம்! இந்தக் கதையை நானே எடுக்கிறேன். யார், யாரை நடிக்க வைக்கலாம்னு சொல்லு" என்றார் செட்டியார்.

எனக்கோ கவனமெல்லாம் திருமாறனின் பிரச்சினை மீதே இருந்தது. இருப்பினும் யோசனை செய்து "முத்துராமன்-ஜெயலலிதாவை வச்சு எடுக்கலாம்" என்றேன்.

"சரிப்பா... நீ இப்போ அடமானம் வைக்கிற கதையை எப்போ மீட்பே?"

"சொன்னபடி மீட்கத் தவறினா 31-வது நாள்லயிருந்து "கணவன் மனைவி' கதையோட உலக ரைட்ஸ் எனக்குத்தான்... சரியா?!"

"சரிங்கய்யா."

உடனே பெட்டியைத் திறந்து சில்லறை நோட்டுகளாக 15 ஆயிரம் எடுத்தார்.

"பணத்தை எதுல எடுத்துட்டுப் போவே?" என்றார். எனக்கோ அவசரம். இடுப்பு வேட்டியில் ஒரு பகுதியை விரித்து "இதிலே போடுங்க" என்றேன்.

பணத்தைக் கொட்டிய செட்டியார், "கதை எழுதிய ஃபைலைக் குடு" என்றார்.

"இனிமேதான் எழுதணும். இருந்தாலும் முழுக்கதை யையும் உங்ககிட்ட சொல்லிட்டேனே?" என்றேன்.

"அட... வாயாலேயே கதை சொல்லி, அதை அடமானம் வச்சு... பணமும் வாங்கிட்டியே" என வியந்தார் செட்டியார்.

பணத்தைக் கொண்டு வந்து திருமாறனிடம் கொடுத்தேன். லேப் செட்டில்மென்ட் முடிந்து படப்பெட்டி டெலிவரி செய்யப்பட்டது.

'சொந்தங்கள் வாழ்க' ரிலீஸ் ஆனது. ஆனால் தோல்விப் படமாக அமைந்தது. இதனால் எனது கதையை திருமாறன் படமாக்கவில்லை.

அதன்பிறகு ஒருநாள் தயாரிப்பாளர் நமச்சிவாயத்தைப் பார்த்தேன். அவர் பெட்ரோல் பங்க் வைத்து நன்றாகவே வாழ்ந்துகொண்டிருந்தார். அவரை செருப்பால் அடித்த விநியோகஸ்தர் 'விலாசம் இல்லாமல் போய்விட்டார்' என கேள்விப்பட்டேன்.

அடகு வைத்த கதையை மீட்க வேண்டுமே என்கிற பதட்டம் எனக்குள் அதிகரித்தபடி இருந்தது. அடமானம் வைத்த 27-வது நாள் தயாரிப்பாளர்

சிவசுப்பிரமணியம் என்னைச் சந்தித்தார். (எஸ்.ஏ. ராஜ்கண்ணுவின் அண்ணன் சிவசுப்ரமணியம். அந்தச் சமயம் ராஜ்கண்ணு தயாரிப்பாளராகவில்லை.)

"உடனே ஒரு கதை வேணும்'' என்றார் சிவசுப்பிரமணியம்.

"உடனே சொல்லவா?''

"என் பார்ட்னர் கே.ஆர்.ஜி.யிடமும் கதை சொல்லணும். அதனால் ஆபீஸ்ல வச்சு சொல்லுங்க'' என என்னை தன் காரில் கூட்டிக்கொண்டு போனார்.

அங்கே உண்டான சங்கடம் என்ன?

# ரஜினி மன்னனின் நிஜக்கதை!

நந்தகோபால் செட்டியாரிடம் நான் எனது ‘கணவன்-மனைவி’கதையை அட மானம் வைத்து 27 நாட்கள் ஆகிவிட்டன. 'பணத்திற்கு என்ன செய்யலாம்?' என நான் தவித்துக் கொண்டிருந்தபோதுதான் தயாரிப் பாளர் சிவசுப்பிரமணியம் 'அவசரமாக ஒரு கதை வேண்டும்’ எனக் கேட்டு வந்தார்.
"என் பார்ட்னர் கே.ஆர்.ஜி. முன்னிலையில் கதையைச் சொல்லுங்கள்" என என்னை அழைத்துச் சென்றார்.

கே.ஆர்.ஜி.யுடன் எனக்கு முன்பே பரிச்சயம் உண்டு. அவருக்கு நான் ஒரு கதை விற்றிருக்கிறேன். என்னைப் பார்த்ததும் உற்சாகமாக வரவேற்றார் கே.ஆர்.ஜி. அங்கே... கே.ஆர்.ஜி.க்கு பி.ஏ. போல இருந்த பாரதி ராஜாவை முதன் முதலாகப் பார்த்தேன். அப்போது பாரதிராஜா டைரக்டராகி யிருக்கவில்லை.

சிவசுப்ரமணியம் சேரில் உட்கார்ந்தார். அவருக்கு எதிரில் நான் உட்கார்ந்தேன். அவரின் முதுகுக்குப் பின்னால் கே.ஆர்.ஜி. நின்றுகொண்டிருந்தார். நான் கதையைச் சொல்ல ஆரம்பித்ததும் பாரதிராஜாவும் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார்.

நான் கதையைச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே... கே.ஆர்.ஜி., ஏதோ கை ஜாடை செய்தார். எனக்கு அது புரியவில்லை. தொடர்ந்து நான் கதையைச் சொல்லிக் கொண்டிருந்தேன். இந்தமுறை எனக்கு ஓரளவு புரிகிற மாதிரியே ஜாடை செய்தார் கே.ஆர்.ஜி. அதாவது... 'இதற்கு மேல் இந்தக் கதையை சிவசுப்பிரமணியத்திடம் சொல்லாதீங்க. நானே தனியா இந்தக் கதையை படமா தயாரிக்கிறேன்' என ஜாடையில் சொன்னார்.



கே.ஆர்.ஜி.யின் ஜாடையை நான் அடிக்கடி கவனிக்க நேர்ந்ததால் சிவசுப்பிரமணியத்திற்கு குழப்பமும், சந்தேகமும் வந்துவிட்டது. எனக்கோ தர்மசங்கடமாகிவிட்டது.

'என் வீட்டில் வச்சு கதை பேசிக்கலாம்' எனச் சொல்லி என்னை அழைத்துக்கொண்டு போனார்.

அவரின் வீட்டில் வைத்து முழுக்கதையையும் சொன்னேன். அவருக்கு ரொம்பவே பிடித்துவிட்டது. உடனே 'இந்தக் கதைக்கு எவ்வளவு வேணும்?' எனக் கேட்டார்.

"6 ஆயிரம்."

உடனே பணத்தைக் கொடுத்தார் சிவசுப்பிரமணியம்.



வெளியே வந்து ஒரு டாக்ஸி பிடித்து பிராட்வேயில் நந்தகோபால் செட்டியாரின் கடையில் போய் இறங்கினேன்.

'அய்யா... இந்தக் கதையை வேறொரு தயாரிப்பாளருக்கு இப்பத்தான் வித்திட்டு வர்றேன். பணத்தை வாங்கிக்கங்க' என கொடுத்தேன்.

'வாயால சொன்ன கதையை அடகு வச்சு, அதை இன்னொருத்தருக்கு வித்து... அடமானத்தையும் மீட்டுட்ட. நீ ரொம்ப திறமைசாலிப்பா' என நந்தகோபால் செட்டியார் என்னைப் பாராட்டினார்.

மில் தொழிலாளியான கணவன் பாத்திரத்திற்கு முத்து ராமனும், மில் முதலாளியான மனைவி பாத்திரத்திற்கு ஜெயலலிதாவும் ஒப்பந்தம் செய்யப்பட்டனர். பீம்சிங் இயக்குநர்.

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக கற்றுக் கொடுப்பது... கற்றுக்கொள்வதுதானே வாழ்க்கையின் சூத்திரம். இந்தமுறை 'எப்படி திரைக்கதை அமைக்க வேண்டும்?' என்பதை பீம்சிங்கிடம் கற்றுக்கொண்டேன்.

"முதலில் கதாநாயகனை மையமா வச்சு கதை சொல்லணும். அப்புறம் கதாநாயகியை மையமா வச்சு கதை சொல்லணும். அதன் பிறகு வில்லனை மையமா வச்சு கதை சொல்லணும். அப்புறம் நகைச்சுவை நடிகர்களை மையமா வச்சு கதை சொல்லணும். இப்படி பல கோணத்திலும் கதையைச் சொல்லிப் பார்த்தா... கதையில் இருக்கிற ஓட்டையை எளிதா கண்டுபிடிச்சிடலாம். கண்ணுக்குத் தெரியாத பாத்திரத்தின் ஓட்டையை தண்ணீரை நிரப்பி கண்டுபிடிக்கிற மாதிரித்தான் இந்த மெத்தேர்ட். இப்படி பலவிதமா சொல்லும்போது புதுப்புது ஸீன்களும் கிடைக்கும். பா.க.மணி, வலம்புரிசோமநாதன், இறைமுடிமணி, எம்.எஸ்.சோலைமலை உள்ளிட்ட பிரபல கதாசிரியர்களை இப்படி பல கோணங்கள்ல கதையைச் சொல்லச் சொல்லி... நல்ல ஸீன்களை எடுத்துக்குவேன்" என்றார் பீம்சிங்.

இப்படி கதை சொல்வது எனக்கு நல்ல பயிற்சியாக இருந்தது.

எல்.வி.பிரசாத், நாகிரெட்டி, கே.எஸ்.கோபால கிருஷ்ணன், தேவர், மதுரைதிருமாறன்... இப்படி பலரிடமும் ரவுண்டடித்த எனது 'கணவன்-மனைவி' கதை படமாகிக்கொண்டிருந்தது. தயாரிப்பாளர் சிவசுப்பிரமணியத்திற்கு ஃபைனான்ஸ் நெருக்கடி ஏற்பட்டது. அவரின் தம்பி எஸ்.ஏ.ராஜ்கண்ணு அப்போது பொள்ளாச்சியில் டூரிங் டாக்கீஸ் ஒன்றை நடத்திவந்தார். அங்கே வசூலாகும் சில்லறையை மூட்டைகட்டி

ஒரு ஆள் மூலம் சென்னைக்கு கொடுத்தனுப்புவார். இப்படி படம் வளர்ந்து கொண்டிருந்த நேரத்தில் ஹீரோ முத்துராமனுக்கு இரண்டு ஆபரேஷன்கள் நடந்தன. இதனால் அவரால் டூயட் காட்சிகளில் நடிக்க முடியவில்லை. இதனால் அந்த டூயட் காட்சிகளை படமாக்காமலேயே படம் தயாராகி வெளியானது.

நூறாவது நாளை படம் நெருங்கிக் கொண்டிருந்தபோது..... தெலுங்கிலும், இந்தியிலும் புகழ்பெற்ற டைரக்டர் தாசரிநாராயணராவ் என்னைத் தேடி வந்தார்.

தாசரியை எனக்கு முன்பே தெரியும். இப்போது அவர் என்னை பார்க்க வருவதன் காரணத்திற்குப் பின் அவரின் மிகப்பெரிய வைராக்கியம் இருக்கிறது.

அது என்ன?

எம்.ஆர்.ராதாவுக்கு புகழ் சேர்த்த 'ரத்தக் கண்ணீர்' ’நாடகத்தின் தெலுங்கு உரிமையை வாங்கி நடிகர் நாகபூஷணம் நடித்து வந்தார். இதனால் ஆந்திராவெங்கும் அவரின் வில்லத்தன நடிப்பு புகழ் பெற்றது. நாகபூஷணம் எனது 'பொம்பளை நிர்வாகம்’ என்கிற கதையை படமாக தயாரிக்க ஏற்பாடு செய்தார். இந்தப் படம் மூலம் தாசரிநாராயணராவ் இயக்குநராக அறிமுகமாக ஒப்பந்தம் செய்யப்பட்டது.

அப்பாவி ஒருவனும், கெட்ட குணம் கொண்ட ஒருவனும் தொழில் பார்ட்னர்கள். அந்த வில்லன் பார்ட்னர் எப்போதுமே பொய்யாக நஷ்டக்கணக்கை மட்டுமே காட்டுவான். இதையடுத்து அப்பாவியின் மனைவி வில்லனைச் சந்தித்து, "எப்போதும் நஷ்டக் கணக்கே காட்டுறீங்களே? நிர்வாகத்தை என்னிடம் கொடுங்கள். நான் லாபம் ஈட்டித் தர்றேன்"என்பாள். ‘பெண்கள் படுக்கையறைக்கும், அடுக்களைக்குமே லாயக்கு’என்கிற கொள்கை கொண்டவன் அவன். இதனால் ஏற்படும் வாக்குவாதத்தில் சவால் விட்டு நிர்வாகம் செய்து வெற்றி பெறுவாள் அந்தப் பெண். இதுதான் "பொம்பளை நிர்வாகம்"கதை.

படத்தை தயாரிக்கிற நாகபூஷணம், "இந்தக் கதையில் வரும் அப்பாவிக் கணவன் கேரக்டரில் நான் நடிக்கிறேன்" என்றார். ஆனால் தாசரியோ, "மக்களிடம் உங்களோட வில்லன் இமேஜ் ஆழமா பதிஞ்சிருச்சு. நீங்க அப்பாவியா நடிச்சா எடுபடாது" என பிடிவாதம் செய்தார்.

"உனக்கு முதன்முதலா டைரக்ஷன் வாய்ப்புத் தர்றது நான். வாயை மூடிக்கிட்டு நான் சொல்றபடி செய்" என நாகபூஷணம் சொல்ல...

“மனசாட்சிக்கு விரோதமா தொழில் செய்ய மாட்டேன்'' என டைரக்ஷன் வாய்ப்பை உதறிவிட்டு வெளியேறினார் தாசரி. அந்த சந்தர்ப்பத்தில் நான் 'கணவன்-மனைவி' கதையை அவரிடம் சொல்லி யிருந்தேன். அத மனதில் வைத்த தாசரி...”கலைஞானம் சார்! என்னைக்காவது நான் பெரிய டைரக்டரா ஆவேன். அப்போ உங்களை தேடிவந்து 'கணவன்-மனைவி’ கதையை வாங்கி படம் பண்ணுவேன்'' எனச் சொல்லிவிட்டுப் போனார். தாசரி இயக்க மறுத்த ‘பொம்பளை நிர்வாகம்’ கதையை பீம்சிங் இயக்கினார். அப்பாவி கணவனாக நாகபூஷணமும், மனைவியாக ஜெயந்தியும் நடித்து படம் வெற்றி பெற்றது.

இப்போது தமிழில் 'கணவன்-மனைவி’ ரிலீஸாகி வெற்றிபெற்ற நிலையில் தாசரி என்னைச் சந்தித்தார். ''நான் அன்று சொன்னபடி வந்திட்டேன். 'கணவன் மனைவி' கதையை தெலுங்கிலும், இந்தியிலும் எடுக்கப் போறேன். கதை உரிமையை எனக்கு வாங்கிக் கொடுங்க'' என்றார்.

தயாரிப்பாளர் சிவசுப்பிரமணியத்திடம் பேசினேன். நல்ல விலை கொடுத்து வாங்கிக் கொண்டார் தாசரி.

'சித்ரா-ராமுலு’ என்ற பெயரில் தெலுங்கில் எடுத்தார் தாசரி. பெரும் வெற்றி பெற்றது. அடுத்து இந்தியில் இயக்கினார் தாசரி. அங்கேயும் வெற்றி பெற்றது.

நான் எழுதிய 'கணவன் மனைவி’ கதைக்கு ஒரு பெருமை உண்டு. அது என்னவென்றால்... தமிழ், தெலுங்கு, இந்தியில் இந்தப் படம் எடுக்கப்பட்டு வெற்றிபெற்றது. அதேபோல பத்திலிருந்து பதினைந்து வருட இடைவெளியில் இந்த மொழிகளில் மீண்டும் இதே கதை தயாரிக்கப்பட்டு மாபெரும் வெற்றி பெற்றது.

முத்துராமனும், ஜெயலலிதாவும் நடித்த 'கணவன்- மனைவி'யை ரஜினியும், விஜயசாந்தியும் நடிக்க 'மன்னன்’ என்ற பெயரில் பி.வாசு இயக்கினார். இது மாபெரும் வெற்றிபெற்றது. எனது கதையான 'கணவன் மனைவி'யை வெறொருவரிடமிருந்து தெரியாத்தனமாக வாங்கி வந்துவிட்டார் பி.வாசு. என் கதை என்று தெரிந்ததும், நிறைவான ஒரு தொகையை எனக்குக் கொடுத்து கௌரவித்தார் பி.வாசு. இன்றளவும் எனக்கு வாய்ப்புகளை வழங்கி, நல்ல ஊதியமும் வழங்கி ஆதரிக்கிறார் பி.வாசு. 'கணவன் மனைவி'யை தழுவி எடுக்கப்பட்ட 'மன்னன்' கதையை தெலுங்குக்கு விற்றுவிட்டார் பி.வாசு. ஏற்கனவே பல வருடங்களுக்கு முன் தாசரி நாராயணராவ் 'சீதா ராமுடு' என்ற பெயரில்

கணவன் மனைவி கதையை எடுத்து வெற்றி பெற்றிருந்தார். இருந்தும் 'மன்னன்' கதையை 'கரணா முகடு' என்ற பெயரில் சிரஞ்சீவியை வைத்து எடுத்தார்கள். அந்தப் படம் மாபெரும் வசூலைப் பெற்றது. பணத்தை மூட்டை, மூட்டையாக சாக்குப்பையில்தான் அள்ளினார்களாம்.

நடிகை ஸ்ரீப்ரியாவின் அம்மா கிரிஜாவிடம் ஒரு படப்பிடிப்பின்போது 'கணவன்-மனைவி' கதையை அடமானம் வைத்த விஷயத்தைச் சொன்னேன்.

"உலகத்திலேயே கதையை அடமானம் வச்சவர் நீங்களாத்தான் இருக்கும். ராகத்தை அடமானம் வைத்த இசைமேதையைப் பத்தி உங்களுக்கு தெரியுமா?" எனக் கேட்டார்.

எனக்கு வியப்பாக இருந்தது.

ஸ்ரீப்ரியாவின் அம்மா சொல்லத்தொடங்கினார்.

# நேரு போட்ட லைட்!

"உலகத்திலயே கதையை அடமானம் வச்சு பணம் வாங்கினது நீங்களாத்தான் இருக்கும். ராகத்தை அடகு வைத்த இசை மேதையைப் பத்தி தெரியுமா?" என ஸ்ரீப்ரியாவின் அம்மா கிரிஜா என்னிடம் கேட்க... எனக்கு வியப்பாக இருந்தது.

"யாரும்மா அவரு?"

"இசை உலகில் 'நாதஸ்வர சக்கரவர்த்தி' என போற்றப்பட்ட ராஜரத்தினம் பிள்ளைதான் ராகத்தை அடகு வைத்தவர்" என அந்தம்மா சொல்ல... எனது வியப்பு மேலும் அதிகமாகியது.

இசைமேதை ராஜரத்தினம் பிள்ளை எங்கே கச்சேரி செய்தாலும் ரசிகர்கள் துண்டுச்சீட்டு அனுப்புவது வழக்கம். அதில் 'தோடி ராகம் வாசியுங்கள்' என வேண்டுகோள் விடப்பட்டிருக்கும். அவரின் தோடி ராகம் இசைரசிகர்களை மயக்கிவிடும். அந்தளவு தோடி ராகத்திற்காகவே கூடுதல் புகழ் பெற்றிருந்தார்.

ஒருமுறை... அன்றைய பிரதமர் நேருவின் விருப்பத் திற்காக டெல்லி சென்று, அவர் முன்பாக கச்சேரி செய்தார் ராஜரத்தினம் பிள்ளை. தோடி ராகத்தில் மனதைப் பறிகொடுத்த நேரு கைகுலுக்கி பாராட்டியதுடன் "உங்களுக்கு என்ன வேண்டும்?" என கேட்டார்.

"எங்க ஊரு இருட்டில் இருக்கு. மின்சார தெருவிளக்கு அமைச்சுக் கொடுங்க" எனக் கேட்டார்.

அன்றைய காலகட்டத்தில் நகர்ப்புறங்களிலேயே சரிவர மின் விளக்குகள் இல்லாத காலமாச்சே! ராஜரத்தினம் பிள்ளையின் கோரிக்கைக்கு பதில் எதுவும் சொல்லாமல் நேரு சென்று விட்டார்.



டெல்லியிலிருந்து இரண்டு நாட்கள் பயணம் செய்து தன் கிராமத்திற்கு திரும்பினார் ராஜரத்தினம் பிள்ளை. கிராமத்திற்குள் அவர் வந்த கார் நுழைந்தபோது... தெருவில் மின்விளக்குகள் பளிச்சிட்டன. அதைப்பார்த்து

திகைத்துப் போனார். அப்போது ஒரு கிராமவாசி “அய்யா, "பிரதமர் நேரு உத்தரவுனு சொல்லி நேத்தே லைட்டு போட்டுட்டாங்கய்யா" எனச் சொல்ல.... தன் இசையால் ஊருக்கு ஒரு நன்மை கிடைத்த திருப்தி உண்டானது.

இப்படிப்பட்ட இசைமேதைக்கு ஒருசமயம் பண நெருக்கடி. தன் நெருங்கிய நண்பரிடம் கடன் கேட்டார்.

"கடன் கொடுக்கிறதைப் பத்தி பிரச்சினை இல்லை ராஜரத்தினம். ஆனா, எவ்வளவு பணம் இருந்தாலும் இருபத்திநாலு மணி நேரத்துல குடிச்சே தீர்த்திடுவ. இருந்தாலும் உனக்கு கடன் தர்றேன். ஆனா... ஒரு கண்டிஷன்?" என நண்பர் சொல்ல...

"என்ன கண்டிஷன்?" என ராஜரத்தினம் கேட்டிருக்கிறார்.

"தோடி ராகத்தை அடமானமா கொடு. பணத்தைத் திருப்பித் தந்து மீட்கிற வரைக்கும் நீ தோடி ராகத்தை வாசிக்கக்கூடாது."

கண்டிஷன் கடுமையாக இருந்தாலும் அதை ஏற்றுக் கொண்டார்.

குடியை விட்டுவிட்டு நிறைய கச்சேரிகள் செய்து பணம் சேர்த்தார். ஆனால் வாக்களித்தபடி தோடி ராகத்தை அவர் வாசிக்கவேயில்லை. பணம் சேர்த்து தோடி ராகத்தை மீட்ட பிறகே கச்சேரிகளில் தோடி வாசித்தார் ராஜரத்தினம் பிள்ளை.

"அவரைப்போல நீங்க கதையை வாய்மொழியாகச் சொல்லி அடமானம் வைத்து, பிறகு மீட்டிருக்கிறீர்கள்" என ஸ்ரீப்ரியாவின் அம்மா சொன்னபோது, எனக்கு வியப்பு தாளவில்லை.

இப்படி பல சுவாரஸ்யங்கள் நிறைந்ததாக இருந்தது எனது 'கணவன்-மனைவி’கதையின் கதை.

**1972 காலகட்டத்தில்...**

கதை எழுதுவதில் நான் பிரபல்யமானாலும்கூட, வருமானம் மிகக்குறைவாகவே இருந்தது. ஆனால் பிள்ளைச்செல்வத்திற்கு குறைவில்லை. ஏற்கனவே மூன்று பெண்குழந்தைகளும், ஒரு ஆண்குழந்தையும் எங்களுக்கு இருந்தன. ஐந்தாவதாக ஒரு பெண் குழந்தையும் பிறந்தது. அதனால் மனைவிக்கு கர்ப்பத்தடை ஆபரேஷன் செய்ய முயற்சி மேற் கொண்டிருந்தேன்.

இந்தச் சமயம்... கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின் தம்பி கே.எஸ்.சபரிநாதன் சபரிமலைக்கு மாலைபோட ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தார். இருபது வருடங் களாக மலைக்குச் சென்றுவரும் அவர் குருசாமியாகவும் இருந்தார். எனக்கு ரொம்பநாட்களாக சபரிமலை செல்லும் ஆசை இருந்தது. ஆனால் தட்டிப் போய்க் கொண்டே இருந்தது. "சாமி இந்தமுறை நானும் மாலை போடுறேன்" என சபரிநாதனிடம் கேட்டேன்.

"தாராளமா..." எனச் சொன்னவர், விரதம் உள்ளிட்ட சட்டதிட்டங்களையும் எனக்குச் சொன்னார். வீட்டுக்கு வந்து மனைவியிடம், "ஐயப்பன் மனசு வச்சிட்டாரு. நான் மலைக்கு மாலை போடப்போறேன். செலவையெல்லாம் சபரிநாதன் பார்த்துக்குவார்" எனச் சொன்னேன்.

"ரொம்ப சந்தோஷங்க..." என்ற என் மனைவியின் முகத்தில் வாட்டம்.

"என்ன ஒருமாதிரி இருக்க?"

"காலைல வாமிட் வந்திச்சு. டாக்டரம்மாகிட்ட போனேன். செக்பண்ணிப் பார்த்திட்டு ‘குழந்தை உண்டாகியிருக்கு. இது மூணாவது மாசம்'னு சொன்னாங்க”

"இருக்கிற புள்ளைகள வளக்கவே பெரும்பாடா இருக்கே... கடவுளே என்னப்பா இது சோதனை?" என கடவுளை சலித்துக் கொண்ட நான், மனைவியை அழைத்துக்கொண்டு டாக்டரம்மா விடம் போனேன். 'அபார்ஷன் பண்ணிடுங்க' என்றேன்.

"கரு நல்லா வளந்திருச்சு, இனிமே கஷ்டம். இருந்தாலும் சில மாத்திரைகள் தர்றேன்" என மாத்திரைகள் தந்தார் டாக்டர்.

ரெண்டு நாட்களாகியும் மாத்திரையால் மாற்றம் ஏற்படவில்லை. அதனால் வேறொரு டாக்டரம்மாவிடம் அழைத்துச் சென்றேன். பரிசோதித்துப் பார்த்த டாக்டரம்மா "இந்தக் குழந்தையைப் பெத்துக்கங்க. இந்தக் குழந்தை டெலிவரி ஆன கையோட, நானே ‘பெர்த் கண்ட்ரோல்’ ஆபரேஷன் பண்ணிவிடுறேன்" எனச் சொல்லிவிட்டார்.

மிகுந்த கவலையுடன் வீட்டுக்கு வந்தோம்.

மறுநாள் எங்கவீட்டுக்கு கீரைக்காரம்மா வந்தார். எங்க வீட்டுக்காரம்மாவின் முகவாட்டத்தைப் பார்த்து விசாரித்தவர்... "இதுக்கா இவ்வளவு கவலைப்படுறீங்க? திருவல்லிக்கேணி மெயின் ரோட்டுக்குப் பின்னாடி ஒரு நர்ஸம்மா, டாக்டர் மாதிரி கருக்கலைப்பு செய்யுது. நூறு, இருநூறு கேட்கும்... உடனே கலைச்சிட்டு வந்திடலாம்" என விபரம்

சொல்ல... உடனடியாக டாக்ஸி பிடித்து மனைவியை கூட்டிக்கொண்டு கிளம்பினேன். கொஞ்சதூரம் போனதும் டாக்ஸி மக்கர் செய்தது. ''சார், வண்டியில டீஸல் அடைக்குது. இதுக்கு மேல நகராது. நீங்க வேற டாக்ஸி பிடிச்சிட்டுப் போங்க'' என டிரைவர் சொல்லிவிட்டார்.

வேறு டாக்ஸி பிடித்துப் போனோம். போகும் போதே ''இந்தக் குழந்தையை கலைக்க நினைச்சா தடைக்குமேல தடையா இருக்கே. இந்தம்மாவும் கைவிட்டுட்டா... குழந்தையை பெத்துக்க வேண்டியதுதான். ஆண்பிள்ளையா இருந்தா 'ஐயப்பன்', 'பெண் பிள்ளையா இருந்தா 'சபரி'னு பேர் வைக்கணும்'' என மனசுக்குள் நினைத்தபடியே திருவல்லிக்கேணி வந்து சேர்ந்தாச்சு. அந்த ஆஸ்பத்திரி மாடியில் இருந்தது.

மேலே ஏறிப்போனோம். ஆஸ்பத்திரி பூட்டப்பட்டு பெரிய்ய பூட்டு தொங்கியது.

'எங்க போனாலும் தடுதலா இருக்கே...' என நான் சலிப்புடன் நிற்க... பூட்டிய ஆஸ்பத்திரிக்குள்ளிருந்து லேசாக ஒரு ஜன்னல் திறந்தது. ஒரு இளம்பெண் முகம் அதில் தெரிந்தது.

''என்ன விஷயம்?'' என்று கேட்டாள் அந்தப் பெண்.

''டாக்டரம்மாவப் பாக்கணும். அபார்ஷன் பண்ணிக் கிறதுக்காக வந்திருக்கோம்'' என்றேன்.

அந்தப் பெண் பதட்டமாகச் சொன்னாள்.... ''ஒரு நிமிஷம்கூட இங்க நிக்காதீங்க. சீக்கிரம் ஓடிருங்க...''

''ஏம்மா?''

''ஒரு பொண்ணுக்கு அபார்ஷன் பண்ணும்போது அந்தப் பொண்ணு செத்துப்போச்சு. டாக்டரம்மா தலைமறைவாயிட் டாங்க. அடிக்கடி போலீஸ்காரங்க என்கொயரிக்காக இங்க வர்றாங்க. உங்களைப்பார்த்தா... உங்களையும் பிடிச்சு விசாரிப்பாங்க. எதுக்கு உங்களுக்கு வீண் சிரமம். உடனே போயிடுங்க'' என்றாள்.

நாங்கள் வீடு திரும்பினோம். தீர்க்கமாக ஒரு முடிவெடுத்தோம். ''இந்தக் குழந்தையை பெத்துக்குவோம்.''

அதன்பிறகு நான் திட்டமிட்டபடி மாலை போட்டு சபரி மலை சென்றுவந்தேன்.

மாதங்கள் ஓடின.

டெலிவரிக்கான நேரம் வந்தது. மைலாப்பூர் டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையில் இருக்கிற கல்யாணி மருத்துவ மனையில் மனைவியைச் சேர்த்தேன். துணைக்கு பக்கத்துவீட்டு ஆயாவும் வந்தார்.

"இந்த ஆஸ்பத்திரியில ஏழைபாழைகளுக்கு பிரசவம் பாக்கணும்னா 30 ரூவா கேட்பாங்க. வசதியான வங்கன்னா 300 ரூவா ஆகும். நீங்க சினிமாக்காரரா இருந்தாலும் கஷ்டப்படுற மாதிரி தெரியுது. அதனால் சினிமாக்காரர்னு சொல்லாதீங்க" என நர்ஸ் சொன்னார். நான் கார் டிரைவர் வேலையும் பார்த்திருப்பதால் 'டிரைவர்' என பதிவு செய்தேன்.

பிரசவ வேதனையில் என் மனைவி இருந்த போது... கற்பகம் ஸ்டுடியோ மேனேஜர் என்னைத் தேடி மருத்துவமனைக்கு வந்தார். கே.எஸ். கோபாலகிருஷ்ணன் அனுப்பியிருந்த ஒரு கவரைக் கொடுத்தார்.

கடிதத்தைப் பிரித்தேன்.

'நீ உடனடியாக கல்லணைக்குப் புறப்பட்டு வரவும்' என்கிற குறிப்புடன் பத்து ரூபாய் நோட்டுக்கள் ஐந்தும் அதில் இருந்தன. அப்போதெல்லாம் திருச்சிக்கு பத்து ரூபாய்தான் பஸ் கட்டணம்.

"காலைலயே உங்களை பஸ் ஏத்திவிடச் சொன்னார் டைரக்டர். உங்களைத் தேடிப் பிடிக்க லேட்டாயிருச்சு. உடனே கிளம்புங்க" என்றார் மேனேஜர்.

ஒரு இக்கட்டான சூழல் ஏற்பட்டது.

# சிரிப்பு சிங்கம்!

மருத்துவமனையில் மனைவியைச் சேர்த்திருக்கிறேன். இன்னும் சிறிது நேரத்தில் டெலிவரி ஆகவிருக்கிறது. கற்பகம் ஸ்டுடியோ மேனேஜரோ 'கல்லணைக்கு உடனே புறப்பட்டு வா' என்கிற கே.எஸ். கோபாலகிருஷ்ணனின் கடிதத்தைக் கொடுத்துவிட்டு 'சார் சீக்கிரம் கிளம்புங்க' என்கிறார்.

'குடும்பமா? தொழிலா?' என்கிற நெருக்கடியான நேரங்களில் குடும்பப் பிரச்சினையை பின்னால் வைத்துவிட்டு தொழிலுக்கே முன்னுரிமை கொடுப்பேன். என் மனைவிக்கு உதவியாக வந்திருந்த பக்கத்துவீட்டு ஆயாவிடம் பத்து ரூபாயைக் கொடுத்தேன்.

"நான் அவசரமா கல்லணை போறேன். குழந்தை பிறந்ததும் எனக்கு தந்தி கொடும்மா" எனச் சொல்லிவிட்டு மேனேஜருடன் கிளம்பினேன். அவர் காரில் அழைத்துச் சென்று திருச்சிக்கு பஸ் ஏற்றிவிட்டார்.

காலையில் அங்குபோய் இறங்கியதும் கம்பெனி கார் வந்து கல்லணைக்கு அழைத்துச் சென்றது. கல்லணை கெஸ்ட் ஹவுஸில் இருந்தார் கோபாலகிருஷ்ணன்.

"குறுகிய காலத்தில் படம் எடுக்குற மாதிரி ஒரு நகைச்சுவையான கதை இருந்தா சொல்லு கலைஞானம்" என்றார்.

'அண்ணே... என்னோட வெகுளிப்பெண்' கதையைப் படம் எடுக்க வந்த தயாரிப்பாளர் 'பொதகுடி'கபார் சினிமா கம்பெனியையும், சிட்ஃபண்ட் கம்பெனியையும் ஒரே நேரத்துல தொடங்கினார். மவுண்ட்ரோட்டில் நாலாவது மாடியில் இருந்த சிட்ஃபண்ட் கம்பெனிக்கு என்னை கூட்டிப்போன கபார், "உங்களுக்குத் தெரிஞ்சவங்களை நம்ம சிட் கம்பெனியில சீட்டு சேரச் சொல்லுங்க. பத்து பேரை சேர்த்துவிடுங்க"னு சொன்னார். இது எனக்கு சம்பந்தமில்லாத வேலைன்னாலும்கூட... என்னோட கதையை தயாரிக்கிறவராச்சேனு பத்துப் பேரைச்

சேர்த்துவிட்டேன். அந்த அனுபவத்தைச் சொல்றேன். அதைவச்சு கதை பண்ணலாம்''என்றேன்.



அனுபவத்தைச் சொல்லச் சொன்னார்.

மைலாப்பூரில் எனக்கு தெரிந்த நண்பர் பாலசுப்பிரமணியம் ஐயரின் வீட்டுக்குப் போனேன்.

"வாடா கலைஞானம்? எப்படிடா இருக்கே?" என மாமி என்னை விசாரித்தார்.

"நான் நல்லா இருக்கிறது இருக்கட்டும் மாமி. நீங்க ஏன் ரொம்ப களைப்பா இருக்கீங்க?"னு கேட்டேன்.

"என்னடா பண்ணச் சொல்றே? எப்பவுமே இந்த வீட்ல போராட்டம் நடந்துண்டே இருக்கு."

"உங்க கையைக் குடுங்க மாமி."

"ஏண்டா?"

''எனக்கு ரேகை சாஸ்திரம் தெரியும்.''

''அப்படியா? நல்லா பார்த்துச் சொல்லுடா'' என மாமி கையை நீட்டினார்.

''மாமி.. எப்பவுமே நீங்க இரக்க சிந்தனையோட இருக்கீங்க. ஆனா மத்தவங்க உங்களை ஏமாளியாக்குறாங்க.''

''படவா... கரெக்ட்டா சொல்லீட்டியே!''

''உங்க உள்மனசு ரொம்ப நல்ல மனசு. அதை யாருமே புரிஞ்சிக்கிறதில்லை மாமி.''

''நூறு பர்செண்ட் கரெக்ட்டுடா. ஏங்க... கலைஞானம் என்னைப் பத்தி ரொம்ப கரெக்ட்டா சொல்றான்'' என கணவரை அழைத்தார் மாமி.

''எல்லாம் கேட்டுட்டுத்தான் இருக்கேன். உனக்கு ஐஸ் வைக்கிறாண்டி. கெட்டவா கையைப் பார்த்து 'நீங்க ரொம்ப நல்லவா'னு சொன்னாக்கூட சரியாச் சொல்றதாத்தான்' சந்தோஷப்படுவா. அவன் ஏதோ நோக்கத்தோட வந்திருக்கான். வந்த நோக்கத்தை சொல்லுடா கலை'' என்றார் பாலசுப்பிரமணியம்.

'சிட்ஃபண்டில் சீட்டு சேரவேண்டும்' என்பதைச் சொன்னேன்.

''அதானே... சோழியன் குடுமி சும்மா ஆடுமா? என் பேர்ல ஒரு சீட்டு சேர்த்துக்கோ.''"

''எதுக்கு சாமி வீட்ல மறுபடி என்னால சண்டை வரணும். மாமி பேர்லயும் ஒரு சீட்டைப் போடுங்க'' என்றேன்.

இப்படி எனக்குத் தெரிந்தவர்களின் குணாதிசயங் களுக்கேற்ப பேசிப் பேசியே ஐந்து சீட்டு பிடித்துவிட்டேன். அந்த ஐந்து சீட்டுகளைப் பிடிப்பதற்கு நான் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும்.

அவர்களை அழைத்துக்கொண்டு சிட் கம்பெனிக்குப் போனேன். லிஃப்ட்டில் போகும் போது கரண்ட் கட்.

''நன்னாருக்குடா. ஆரம்பமே கரண்ட் கட்டா?'' என ஐயர் கேட்க... ஏற்றத்துலதான சாமி பவர் கட் போயிருக்கு'' என்றேன்.

''நல்லா சாதுர்யமா பேசுறேடா'' என்றார் ஐயர்.

சொன்னபடி சீட்டுக்கு ஆள் சேர்த்ததைப் பார்த்து வியந்த கபார்... 'இது உங்களுக்கு நான் வச்ச டெஸ்ட். எந்த வேலை குடுத்தாலும் வேட்டை

நாய் மாதிரி கச்சிதமா முடிச்சிடுறீங்க! ‘வெகுளிப் பெண்' படம் முடிஞ்சதும் ஏவி.எம். பக்கத்துல இருக்க கோல்டன் ஸ்டுடியோவை வாங்கப்போறேன். நீங்கதான் ஆல்-இன் ஆல் மாதிரி ஸ்டுடியோவை கவனிச்சுக்கணும்'' என்றார். சிங்கப்பூர் குடியுரிமை பெற்ற கபார், அந்நாட்டு அரசியல் பிரச்சினைகளால் ஜெயிலுக்குப் போனதால் ஸ்டுடியோ வாங்கும் திட்டம் நிறைவேறவில்லை.

எனது அனுபவங்களைக் கேட்ட கோபாலகிருஷ்ணன்... ''இதை வச்சு எப்படி சினிமா கதை பண்றது?'' எனக் கேட்டார்.

''ஒரு அழகான பொண்னு சிட் கம்பெனியில் வேலை கேட்டு வர்றா. ''முதல்ல பத்து சீட்டுக்கு ஆள் சேர்த்துட்டு வா'’ என மேனேஜர் சொல்லி அனுப்ப... அந்தப் பெண்ணின் அழகில் மயங்கிய சிட்கம்பெனி ஓனர் அவளுக்கு, தான் ஓனர் எனத் தெரியாதபடி அவளுடன் பழகி... அவளுக்காக பத்து சீட்டு சேர்த்துவிட... மேனேஜர் பாராட்டுறார். 'முதலாளிய போய் பாரும்மா’ என அனுப்புகிறார். முதலாளி அறையில் முதலாளியைப் பார்த்ததும் அவளுக்கு ஷாக்! ...இப்படி கதையைக் கொண்டுபோக வேண்டியதுதான்''’என்றேன்.

கோபாலகிருஷ்ணனுக்கு திருப்தி. 'இனி நான் டெவலப் பண்ணிக்கிறேன்’ என்றார்.

மறுநாள் முழுக்கதையையும் ரெடி செய்தபோது ‘ஆண் குழந்தை பிறந்திருப்பதாக எனக்கு தந்தி வந்தது.

''செண்டிமெண்ட்டா நல்ல செய்தி வந்திருக்கு. இந்தப் படம் சக்ஸஸ் ஆகும்'' என்றார்.

(இந்தக் கதைதான் முத்துராமனும், பிரமிளாவும் நடிக்க 'வாழையடி வாழை’ என்ற பெயரில் வெளியாகி வெற்றிபெற்றது.)

மூன்றாம்நாள் குழந்தையைப் பார்க்கும் ஆவலுடன் சென்னை கிளம்பினேன். வீட்டுக்கு வந்தேன். ஆனால் என் மனைவி வீடு திரும்பியிருக்கவில்லை.

'டெலிவரி முடிந்ததும், மூன்றாம்நாள் அனுப்பிவிடுவதாகச் சொன்னாங்களே?' என்கிற யோசனையுடன் ஆஸ்பத்திரிக்குப் போனேன்.

என்னைப் பார்த்ததும் ஆயா சொன்னார். ''தம்பி நீ சினிமாக்காரரா இருந்துக்கிட்டு ‘டிரைவர்னு பொய் சொன்னது எப்படியோ தெரிஞ்சிப்

போச்சு. அதனால முந்நூறு ரூபா கட்டினாத்தான் வீட்டுக்கு அனுப்புவம்னு ஆஸ்பத்திரியில சொல்லீட்டாங்க.''

''அடடா... என் பொண்டாட்டியையும், புள்ளையையும் முந்நூறு ரூபாய்க்கு பிணையா வச்சிருக்காங்களா?'' என நொந்துகொண்டு பணத்தை ஏற்பாடு செய்வதற்காக நேரே கோபாலகிருஷ்ணனின் வீட்டுக்குப் போனேன்.

அவர்கள் வீட்டில் ஏதோ பிரச்சினையும் வாக்குவாதமுமாக இருந்தது. என்னைப் பார்த்துவிட்டு 'என்ன?' என்பதுபோல கேட்டார்.

''அண்ணே... அவசரமா ஒரு ஐநூறு ரூபா தேவைபடுதுணே.''

''அட போப்பா. நானே பிரச்சினையில இருக்கேன்... இதுல நீவேற'''என்றார்.

அவரிடம் சொல்லிக்கொள்ளாமல் வீடு வந்தேன். வீட்டில் எஞ்சியிருந்த பித்தளைப் பாத்திரங்களை மார்வாடியிடம் கொண்டுபோனேன்.

''நீங்க கேட்கிற தொகைக்கு இதை வித்தாத்தான் தேறும்''என மார்வாடி சொல்ல... பாத்திரங்களை விற்று பணத்தை வாங்கிக் கொண்டுபோய் மருத்துவமனையில் கட்டிவிட்டு மனைவியையும், குழந்தையையும் வீட்டுக்கு அழைத்து வந்தேன்.

கே.எஸ்.கோபாலகிருஷ்ணனிடம் என் கஷ்டத்தை விரிவாக சொல்லியிருந்தால் பணம் கொடுத்து உதவியிருப்பார். ஆனால்... எனக்கு ஒரு பழக்கம் உண்டு. தொழில் செய்யும் இடங்களில் என் வீட்டுக் கஷ்டத்தை என்னோடு வைத்துக்கொண்டு மகிழ்ச்சியும், சிரிப்புமாக பணியாற்றுவேன். வேலை செய்கிற இடத்தில் கஷ்டத்தைச் சொல்லிக்கொண்டிருதால் 'தரித்திரம் பிடிச்ச பயனு ஒதுக்கி வச்சிடுவாங்க.

கருக்கலைப்புச் செய்ய முடிவு செய்து... நிறைய தடங்கலால் அது முடியாமல் போய்... ஆறாவதாகப் பிறந்த என் மகன் ஐயப்பன், இப்போ 41 வயதில் சிங்கம்போல இருக்கிறான்.

மாடு, யானை, பாம்பு என விலங்குகளை வைத்துப் படமெடுத்த தேவர், அடுத்த படம் முழுக்க சிங்கத்தை நடிக்கவைத்து எடுக்க ஆசைப்பட்டார்.

''ஏண்டா கலைஞானம்... 'லயன்'னு ஒரு இங்கிலீஷ் படம் வந்துச்சு பாத்தியா?''

''ஆமாண்ணே.''

"அதை மைண்ட்ல வச்சு தமிழ்நாட்டுக் ஏத்த மாதிரி மாத்தி 'சிங்கமும் சிறுவனும்'னு படம் எடுக்க முடிவு பண்ணீருக்கேன்'' என்றார் தேவர்.

முறைப்படி அனுமதி பெற்று ஒரு சிங்கக்குட்டியை வாங்கி வந்த தேவர், அதற்கு மாமிசங்கள் அள்ளிப் போட்டு வளர்த்து வந்தார். பலலட்சம் செலவில் தேவர் வளர்த்த அந்தச் சிங்கம் சிரிப்புச் சிங்கமாய் மாறி தேவரை பயங்கர டென்ஷனாக்கியது.

அந்த சுவாரஸ்யங்கள்...?

# ஆட்டுக்கார அலமேலு!

தேவர் குறிப்பிட்ட 'லயன்' இங்கிலீஷ் படத்தின் கதை சுவாரஸ்யமானது.

குழந்தையில்லா தம்பதி ஒரு சிங்கக் குட்டியை எடுத்து வளர்ப்பார்கள். குழந்தையாகவே வளரும் அந்தப் பெண்சிங்கம், வளர்ந்து பெரிய உருவமாக ஆனபிறகும் படுக்கையில் தம்பதிகளுக்கு இடையிலேதான் படுத்து உறங்கும். மனித வளர்ப்பால் சிங்கம் தனக்குரிய குணத்தை மறந்து அப்பாவியாக இருக்கும். ஆனால் அந்த வீட்டுக்கு வருபவர்கள், சிங்கத்தைப் பார்த்து அலறி ஓடுவார்கள். சிலசமயம் அலறி ஓடுபவர்கள் விபத்தில் சிக்குவார்கள். இதனால் போலீஸில் பொதுமக்கள் புகார் செய்ய... ஒரு போலீஸ்காரர் வந்து 'இன்னும் ஒருவாரத்தில் இந்த சிங்கத்தை காட்டுப் பகுதியில் கொண்டுபோய் விடணும்... இல்லேன்னா கமிஷனர் ஷூட்டிங் ஆர்டர் கொடுப்பார்' என எச்சரித்துவிட்டுப் போவார்.

அது சிங்கமாக இருந்தாலும் அப்பாவி என்கிற தம்பதியின் வாதம் எடுபடாது.

சிங்கத்தைக் காப்பாற்றும்விதமாக தம்பதிகளின் எதிர்ப்பையும் மீறி ஒரு வேனில் சிங்கத்தை ஏற்றிக்கொண்டு போய் சிங்கங்கள் வாழும் பகுதியில் விட்டுவிட்டு வருவார்கள்.

சில வருடங்களுக்குப் பிறகு ஒருநாள் சிங்கத்தின் உறுமல் சத்தம் கேட்கும்.

"என்னங்க... நம்ம பேபி சத்தம் மாதிரி கேட்குதுங்க" என மனைவி சொல்லிக் கொண்டிருக்கும்போதே... அந்தச் சிங்கம் இரண்டு குட்டிகளுடன் வீட்டுக்குள் வந்துவிடும்.



"அடடே பேபி. நீயும் ரெண்டு பேபிகளைப் பெத் திட்டியா?" என மகிழும் அந்தத் தம்பதி ஏதோ திருமணமாகிப் போன மகள் குழந்தைகளைப் பெற்று தாய் வீட்டுக்கு வந்திருப்பதைப்போல கொண்டாடுவார்கள். சிறிது நேரத்தில் வெளியில் ஒரு சிங்கத்தின் மிரட்டலான உறுமல் சத்தம் கேட்கும். தம்பதிகள் வெளியே போய்ப் பார்ப்பார்கள். ஒரு மேட்டில் ஆண்சிங்கம் ஒன்று கம்பீரமாக நின்றுகொண்டிருக்கும்.

"ஹேய் பேபி... அது உன் புருஷனா?'"என அவள் கேட்க... ஆமோதிப்பதுபோல பெண்சிங்கம் தலையாட்டும்.

"சரி பேபி. உன் புருஷன் கூப்பிடுது. நீ இப்போ போகலேன்னா அது வீட்டுக்குள்ள வந்திடும்" எனச் சொல்ல... குட்டிகளுடன் அந்த பெண்சிங்கம் வெளியேறும்.

"அப்பப்போ வந்துட்டுப் போ'"என வழியனுப்புவார்கள்.

சிறிதுதூரம் சென்றதும் அந்தச் சிங்கக் குடும்பம் இவர்களைத் திரும்பிப் பார்த்துவிட்டு காட்டை நோக்கி போய்க்கொண்டிருக்கும். இதுதான் 'லயன்' படக்கதை.

இதன் அடிப்படையில் ஒரு சிங்கத்தையும், ஒரு சிறுவனையும் நண்பர்களாக்கி கதை செய்யச் சொன்னார் தேவர்.

கதை ரெடி! குட்டியாக வாங்கி வந்து ஒரு பயிற்சி யாளரையும் நியமித்து, தேவர் வளர்த்த சிங்கம் பெரிதாக வளர்ந்தது.

சிறுவனிடம் கோபித்துக்கொண்டு போகும் சிங்கம் நேரே பீச்சுக்குப் போகும். மக்கள் கூட்டம் சிங்கத்தைப் பார்த்து அலறியடித்து ஓடுவார்கள். இந்த காட்சிக்காக முறைப்படி அனுமதி பெற்று பீச்சில் படப்பிடிப்பு ஏற்பாடானது. கூண்டைத் திறந்ததும் சிங்கம் வெளியேறும். துணை நடிகர், நடிகைகள் இருபது பேர்கள் 'அய்யோ சிங்கம்...' என அலறுவார்கள். இதைப் பார்த்த பீச்சுக்கு வந்த பொதுமக்களும் ஓட்டம் பிடிப்பார்கள். பொதுமக்களின் ஓட்டத்தை தத்ரூபமாக படம் பிடிக்க வேண்டும் என்பது தேவரின் திட்டம்.

சிங்கத்தை கூண்டிலிருந்து திறந்துவிட்டார் பயிற்சியாளர். சிங்கம் வெளியே வந்தது. துணை நடிகர்கள் திட்டமிட்டபடி 'அய்யோ சிங்கம்... அய்யய்யோ சிங்கம்' என அலற... பீச்சில் இருந்த ஜனத்திரளைப் பார்த்த சிங்கம் ஓடிப்போய் கூண்டில் படுத்துக்கொண்டது.

பயிற்சியாளர் உத்தரவை பொருட்படுத்தாமல் கூண்டுக்குள் பதுங்கியது.

"இவ்வளவு ஜனத்தைப் பார்த்ததும் சிங்கம் பயந்து போச்சு" என பயிற்சியாளர் சொல்ல... "பாவி! கதையே கூட்டத்தை ஓடவைக்கிறது தானடா. என்னடா சொல்லிக் குடுத்த அதுக்கு?" என பயிற்சி யாளரைத் திட்டி அடிக்கப் பாய்ந்தார். மேலும் கோப மான தேவர் கூண்டுக்கு அருகே நின்று, கண்டபடி சிங்கத்தை திட்ட ஆரம் பித்தார். "தினமும் ஒரு ஆட்டுக்குட்டிய தின்னியே. சொல்றதை செய்றதுக்கு என்ன?" என தேவர் கத்த... சிங்கம் மேலும் அரண்டுபோனது.

அதன்பின் கோபத்தைக் குறைத்துக்கொண்டு சிங்கத்திடம் ஏதேதோ பேசியபடி கெஞ்ச ஆரம்பித்தார். அதற்குள் மக்கள் கூட்டம் சிங்கம் இருக்கும் இடத்தில் கூடிவிட்டது.

"தேவரய்யா... சிங்கத்துகிட்ட ஏதோ பேசுறீங்களே? பதிலுக்கு அது என்ன சொல்லுது?" என மக்கள் கேட்கவும் தேவருக்கு வெட்கமாகிவிட்டது.

சிங்கத்தை அழைத்துக்கொண்டு கிளம்பினோம்.

"அஞ்சுலட்சம் செலவு பண்ணி சிங்கத்தை வளர்த்தும், அதை வச்சு படம் எடுக்கமுடியல. ஒரு போட்டோவாவது எடுத்துக்கிறேன்" எனச் சொல்லி சிங்கத்தின் மீது அமர்ந்தபடி ஒரு புகைப்படம் மட்டும் எடுத்துக் கொண்டார் தேவர்.

"என்னடா கலைஞானம், இப்படி ஆகிப்போச்சு. யானை, குதிரை, பசு, பாம்பு, நாய்.... இதெல்லாம் வச்சு படம் எடுத்திட்டோம். சிங்கம் சரிப்பட்டு வரலை. வேற எந்த மிருகத்தை வச்சு எடுக்குறது?" எனக் கேட்டார் தேவர்.

அப்போது நான் சொன்னேன்... "அண்ணே... தேனி, ஆண்டிபட்டி பக்கத்துல கன்னியப்பபிள்ளைப்பட்டி கிராமத்தில் என்னோட தாய்வழி தாத்தா வெள்ளையன் சேர்வை இருந்தார். ஜல்லிக்கட்டு காளை வளர்த்து பல போட்டிகள்ல ஜெயிச்சு வந்தார். வல்லூறு வளர்த்து காடை பிடிக்க பயன்படுத்தினார். சண்டைச் சேவலும் வளர்த்தார். வேட்டை நாயும் வளர்த்தார். இதுல முக்கியமானது அவர் வளர்த்த முட்டுக்கிடா ஆடு. அவரோட ஆடு பல ஊர்கள்ல நடந்த ஆட்டுக்கிடா முட்டுச் சண்டையில பரிசுகளை அள்ளுச்சு. அதுமட்டுமில்ல... தாத்தாவுக்கு ஒரு விசுவாசமான வேலையாளாவும் இருந்திச்சு அந்த ஆடு. அவரோட தோட்டத்துல மிளகாப்பழம் போட்டிருந்தாங்க. நைட்ல காவலுக்கு போகும்போது, அந்த ஆடு அரிக்கேன் லைட்டை வாய்ல கவ்விக்கிட்டு போகும். அந்த

வெளிச்சத்துலயே தாத்தா பின்னாடியே போவார். அந்த ஊர்ல பாம்புகள் நிறைய இருந்துச்சு. அரிக்கேன் லைட்டோட முன்ன போகும் ஆடு... பாம்பைப் பார்த்திட்டா நின்னுடும். அதை வச்சு தாத்தா சுதாரிச்சுக்குவார். நெருப்பைத் தாண்டுற பயிற்சி, கிணத்துல குதிக்கிற பயிற்சினு கொடுத்து அந்த ஆட்டை ரொம்ப புத்திசாலியா வளர்த்தார்.

ஒருமுறை முட்டுக்கிடா போட்டியில ஆடோட தலையில் பலமா அடிபட்டது. அதுக்குப் பிறகு போட்டிகளுக்குப் போகல. வீட்லயே இருந்து வயோதிகத்தால ஆடு செத்துப்போச்சு. அந்த ஆட்டுக்காக ஊரே துக்கப்பட்டுச்சு. தன்னோட தோட்டத்துல அந்த ஆட்டுக்கு தாத்தா சமாதி எழுப்பினார். அப்படி ஒரு ஆட்டை பிடிச்சு கதை பண்ணலாம்ணே.''

''நல்லாருக்குடா கலைஞானம். எங்க ஊர்பக்கம் ''பருத்தி எடுக்கயில பலநாளும் பார்த்த மச்சான்... ஒருத்தி எடுக்கையில ஓடி வரலாகாதோ''னு கிராமியபாட்டு இருக்குடா. அந்த பாட்டையும் இந்த ஆட்டையும் வச்சு கதை பண்ணிட லாம்'' என்றார் தேவர்.

'ஆட்டுக்கார அலமேலு' படம் உருவான சுவாரஸ்ய பின்னணியைச் சொல்கிறேன்.

ஆட்டுக்கிடாயை வைத்து கதை பண்ண முடிவானது. அன்று மாலையில் ஆபீஸில் டிபன் சாப்பிடுவதற்காக அமர்ந்திருந்தோம். அப்போது டைரக்டரும், தேவரின் மருமகனுமான தியாகராஜன் ரொம்பவே கோபப்பட்டார்.

''அண்ணே... நாட்ல எப்படி, எப்படியோ கதை பண்றாங்க. நீங்க மிருகங்களை விட்டுவிட்டு வர மாட்டீங்களா? மிருகங்களை வச்சு கதைபண்ணி கொலை பண்றீங்களே...'' என்றார் என்னிடம்.

''உங்க மாமா விருப்பப்படிதான் நாங்க கதை பண்ண முடியும் மாப்ளே. வேணும்னா ''மிருகங்களை வச்சு படம் எடுக்குறது பிடிக்கலை'னு உங்க மாமாகிட்டயே சொல்லீடுங்க'' என்றேன்.

''என்னண்ணே என்னைய வம்புல மாட்டிவிடப் பாக்குறீங்களா?'' என சிரித்துக்கொண்டே போய்விட்டார் மாமாவை தலைநிமிர்ந்து பார்க்காத மரியாதையான இந்த மாப்பிள்ளை.

''என்னாது ஆட்டுக்கிடாவ வச்சு கதை பண்ணணுமா?'' என அதிருப்தியான கதை இலாகாவினர் பலரும் ஏதேதோ காரணம் சொல்லி டிஸ்கஷனுக்கு வர மறுத்துவிட்டார்கள்.

தேவர், நான், தூயவன், பனசை மணியன் மற்றும் ஒரு புதியவர்... எங்களோடு டிரைவர் விஸ்வநாதன் ஆகியோர் டிஸ்கஷனுக்காக குற்றாலம் வந்து சேர்ந்தோம். தேவர் வெளியூர் ஷெட்யூலின்போது தன் மனைவியையும் அழைத்து வருவார். மனைவியையும், மனைவிக்கு துணையாக ஒரு வேலைக்காரப் பெண்ணையும் அழைத்து வந்தார். குற்றாலத்தில் உள்ள கொச்சின் பங்களாவை 40 நாட்களுக்கு காண்ட்ராக்ட் பேசி எடுத்துவிட்டார். சமையலுக்கும் ஆட்கள் ரெடி செய்துவிட்டார்.

கதை விவாதத்திற்காக குற்றாலம் வந்துவிட்டால் தினமும் காலையிலும், மாலையிலும் ஆயில் மசாஜ் செய்துகொண்டு ஐந்தருவியில் குளிப்பார். அதேபோல் எங்களையும் எண்ணெய் தேய்த்து குளிக்கச் சொல்லுவார். குளிக்காவிட்டால் திட்டுவார். இதற்குப் பயந்தே நாங்களும் ரெண்டு நேரம் எண்ணெய் குளியல் போடுவோம். குளிக்கும்போதுகூட... ‘"கதையைச் சொல்லிக் கிட்டே குளிங்கடா"’என்பார்.

அவர் வாயிலிருந்து அதிகமாக வரும் வார்த்தைகள்... 'முருகா... முருகா', 'கதையைச் சொல்லுங்கடா’என்பதுதான்.

"குளிக்க விடுங்கண்ணே. இங்க வந்தும் கதையைச் சொல்லு, கதையைச் சொல்லுங்கிறீங்களே"’என தூயவன் சலிப்பாக... "ஏலே நமக்கு பொழப்பே அதுதான. ம்... கதையைச் சொல்லு" என எண்ணெய் தேய்த்துக்கொண்டு வந்து தேவர் சொன்னார். அன்று தேவரின் கண்களில் அதிகமாக எண்ணெய் பட்டுவிட்டதால் கண்ணைக் கசக்கிக் கொண்டிருந்தார் தேவர்.

"இந்தக் கிழவனை வச்சு ஒரு சில்மிஷம் பண்ணப் போறேன்" என என்னிடம் சொன்ன தூயவன்..... அதன்படியே செய்தும்விட்டார்.

என்ன சில்மிஷம்?

# திருப்பம் தந்த ராணியம்மா!

குற்றாலம் ஐந்தருவியில் குளிக்கவந்த இடத்திலும் 'கதையைச் சொல்லுங்கடா' என தேவர் சொல்ல...

"இந்தக் கிழவனை, (தேவரை) வச்சு சில்மிஷம் பண்ணப் போறேன் கலை ஞானம்" என என்னிடம் சொன்ன தூயவன்... சொன்னபடியே அந்த காரியத்தைச் செய்தார்.

ஆயில் மசாஜ் செய்துகொண்ட தேவர் கண்ணுக்குள் எண்ணெய் போய் விட்டதால் கைகளால் துழாவியபடியே அருவியை நோக்கி மிகச்சரியாக போய்க்கொண்டிருந்தார்.

"அண்ணே... அங்கிட்டுப் போகாதீங்க... அப்படியே லெப்ட்ல போங்க!" என தூயவன் டைரக்ஷனை மாற்றிவிட்டுச் சிரிக்க... தூயவன் சொன்னபடி போன தேவர்... பெண்கள் குளிக்கும் பக்கம் போய் அருவி நீரில் தலையை விட்டார். தலையை நன்றாக அலம்பிக்கொண்டு கண்ணைத் திறந்து பார்த்த தேவர், அதிர்ச்சி யாகிப் போனார். அங்கே ஒரு இளம்பெண் தலையைக் குனிந்து கூந்தலை அலசிக்கொண்டிருந்தார். பதட்டமான தேவர் வேகவேகமாக வெளியே வந்தார். தூயவன் நமட்டுச் சிரிப்பு சிரிக்க...

"ஏண்டா அயோக்கியப் பயலே. என்னய மாட்டிவிடப் பாக்குறியா? மேனகையை அனுப்பி விசுவாமித்திரனைக் கெடுத்தானாம் இந்திரன். அந்தப் புத்தி உனக்கு வந்திடுச்சா?" என தேவர் சொல்ல... "ஏண்ணே... இத உங்க முருகனோட விளையாட்டா எடுத்துக்கலாமே?" என தூயவன் சொல்ல...

"ஏன்?"



"முருகனுக்கு ரெண்டு பொண்டாட்டி. அதனால் பக்தனான உங்களுக்கு இன்னொரு பொண்டாட்டி கிடைக்க கருணை காட்டியிருப்பார்."

"டே... ராஸ்கல்" என ஒரு கல்லைத் தூக்கிக்கொண்டு தூயவனை அடிக்க வர... தூயவன் ஓட... தேவர் துரத்தி ஓட.... அருவிக்கரையிலிருந்து சிறிதுதூரம் ஓடிய பிறகுதான் தேவருக்கு 'அய்யய்யோ ஜட்டியோட ஓடி வர்றமே?' என்கிற சிந்தனை வந்தது. டிரைவர் விஸ்வநாதனை அழைத்து துண்டு வாங்கி கட்டிக்கொண்ட தேவர், குற்றாலமே அதிரும்படி வாய்விட்டுச் சிரித்தார்.

மறுநாள்...

கதை விவாதத்திற்காக அமர்ந்தோம். ஆனால் கதைக்கான அடிப்படைச் சம்பவம் எதுவுமே சிக்கவில்லை.

"அண்ணே... ஆடு அசைய மாட்டேங்குது. பூனையை வச்சு பண்ணலாமா?" என தூயவன் கேட்க... நான் பார்த்த ஒரு குறும்படம் எனக்கு நினைவுக்கு வந்தது. அதை தேவரிடம் சொன்னேன்.

ஒரு தம்பதி. அவர்களுக்கு பத்து வயது மகன். வீட்டில் அழகுக்காக ஒரு தொட்டியில் ஒற்றை மீன் வளர்ப்பார்கள். மீன் தொட்டிக்கு மேலே ஒரு

கூண்டில் கிளி வளர்ப்பார்கள். மீன், தொட்டியிலிருந்து துள்ளி விளையாட... குஷியான கிளி கூச்சலிட்டு மகிழும். அவை இரண்டுக்கும் இடையே நல்ல நட்பு ஏற்படும். ஒருநாள் வீட்டிலுள்ள அனைவரும் வெளியே போன நேரம்... கிளியைக் குஷிப்படுத்த மீன் ரொம்ப உயரமாக எம்பிக் குதிக்கையில் தொட்டிக்கு வெளியே மேஜை மீது விழுந்துவிடும். இதைப் பார்த்து கிளி பதறும். அந்த நேரம்.. கருப்புநிறத்தில் பார்க்கவே அச்சமூட்டும் தோற்றத்தில் ஒரு பூனை மாடிப்படியிலிருந்து இறங்கி மேஜை அருகே வரும். 'பூனையால் மீன் உயிருக்கு ஆபத்து ஏற்படும்' என எண்ணி அச்சத்தில் உறைந்துபோகும் கிளி. மேஜை மீது ஏறிய பூனை துடிக்கும் மீனை வாயால் கவ்வும். ஆனால் மீன் சிக்காமல் நழுவும். இப்படிப் பலமுறை நழுவும் மீனை ஒருவழியாக வாயில் கவ்வும் பூனை... அப்படியே கிளியைப் பார்க்கும். கிளி அதிர்ச்சியுடன் பூனையைப் பார்க்கும். தொட்டி அருகே வந்த பூனை தன் வாயிலிருந்த மீனை தொட்டிக்குள் போட்டுவிட்டுப் போகும். மறுபடி மீனும், கிளியும் மகிழ்ச்சியுடன் குதியாட்டம் போடும். இதுதான் அந்தக் குறும்படக் கதை!

"பூனைக் கதையும் நல்லாத்தான் இருக்கு. நாளைக்கு முடிவெடுப்போம்" என்றார் தேவர்.

மறுநாள்...

"பூனைக் கதையை அடுத்து யோசிப்போம். இப்போ ஆட்டுக்கிடா கதையை பேசிப் பார்க்கலாம்" என்றார் தேவர்.

என்ன பேசிப் பார்த்தும் ஸீன் அமையவில்லை. சாயங்காலம் ஆகிவிட்டது. அப்போது தேவரின் தூரத்து உறவினர் ஒருவர் தேவரைப் பார்க்க வந்தார்.

"வணக்கம் தேவரய்யா! காலைலயே உங்களை பார்த்துட்டுப் போகலாம்னு இருந்தேன். ஆனா, கோர்ட்ல ஒரு வேலையாகிப் போச்சு... அதான் இப்ப வந்தேன்" என்றார்.

"கோர்ட்ல ஓங்கேஸ் என்னப்பா?" என தேவர் கேட்டார்.

"எனக்கு ஏதும் வம்புவழக்கு இல்ல. எங்க ஊரு ராணி, தன்னோட ஜமீந்தார் கணவன் மேல கேஸ் போட்டாங்க. அது ராணிக்கு சாதகமா தீர்ப்பாகியிருக்கு. நீதிபதியே அசந்து போயிட்டாரு. அப்படி ஒரு புதுமையான வழக்கு!"

"அப்படி என்ன புதுமை?" என தேவர் கேட்க... நாங்களும் வந்தவரின் பேச்சை கவனிக்க ஆரம்பித்தோம்.

"எங்க ராணியம்மா ரொம்ப அழகா இருப்பாங்க. இருந்தாலும் ஜமீனுக்கு என்னவோ ஊரறிஞ்ச ஒரு மோசமான நடத்தைகொண்ட பொண்ணோட தொடர்பாகிப் போச்சு. ராணியம்மா எம்புட்டோ கெஞ்சியும் ஜமீன் திருந்தல. நகை, பணங்களை அந்தப் பொம்பளைக்கி அள்ளிக் குடுத்துக்கிட்டு இருந்தாரு. உடனே தன் ஜமீன்தார் கணவர் மேல ராணியம்மா கேஸ் போட்டாங்க. "எங்க கல்யாணத்தின்போது நான் எங்க வீட்ல இருந்து சீதனமா கொண்டுவந்த பொருட்களைத் திரும்பத் தரணும். அவர் பேர்ல இருக்க சொத்துலயும் சரி பாதியை எனக்கு குடுக்கணும்''னு ராணியம்மா கேட்டாங்க.

ஜட்ஜய்யா சிரிச்சுட்டு 'இதென்ன புதுசா இருக்கு? இப்படி கேட்கிறீங்களேம்மா?'னு கேட்டாரு. அதுக்கு ராணியம்மா விளக்கம் கொடுத்தாங்க."

"என்ன விளக்கம் கொடுத்தாங்க?"என தேவர் ஆர்வமானார்.

" 'அய்யா... தப்பான பொண்ணோட சகவாசம் வச்சிருக்க என்னோட கணவர் நிச்சயம் ஒரு நாள் தெருவுக்கு வந்தே ஆவார். அப்படி ஒரு இக்கட்டு அவருக்கு வரும்போது அவரை நான்தானே காப்பாத்தணும்? அதுக்காகத்தான் அவரோட சொத்துல பாதி கேட்கிறேன்" என ராணி சொன்னாங்க.

ராணியம்மாவின் புத்திசாலித்தனமான நியாயத்தை உணர்ந்த ஜட்ஜய்யா, எங்க ராணியம்மாவுக்கு சாதகமான தீர்ப்பைத் தந்தார். தீர்ப்பு என்னானு தெரிஞ்சுக்கத்தான் ஊரே ஆர்வமா இருந்திச்சு"என்றார். தொடர்ந்து தேவரும், அவரும் வேறு விஷயங்களைப் பேசினார்கள். சிறிது நேரத்திற்குப் பின் அவர் கிளம்பிப் போய்விட்டார்.

தேவர் என்னைப் பார்த்து, "டேய்... கதை கிடைச் சிடுச்சாடா?" என்றார்.

"அருமையான கதை. படத்தோட க்ளைமாக்ஸ்... கோர்ட் ஸீன்தான்" என்றேன்.

"அப்புறமென்னடா? மிச்சத்த ஊர்ல வச்சு பேசி... ஷூட்டிங்கை ஆரம்பிச்சுக்கலாம். கிளம்புங்கடா சென்னைக்கு" என்றார். அப்போது கலைவாணர் என்.எஸ்.கே சொன்னது என் நினைவுக்கு வந்தது.

எனது 'ரத்தசக்தி' நாடகத்தின்போது பேசிய கலைவாணர் "ஒரு கதைக்கு முடிவு எனப்படுகிற க்ளைமாக்ஸ் வந்திட்டா... அதுக்குள்ளவே ஆரம்பமும் இருக்கு'"எனச் சொன்னார். அதன்படி இந்த க்ளைமாக்ஸ் கிடைத்துவிட்டது. அப்போ கதையின் ஆரம்பமும் இதற்குள்தானே இருக்கும். யாரோ ஒருவர் சொன்ன ஒரு விஷயம், ஒரு நல்ல கதைக்கு காரணமாக இருந்தது. யாரிடமிருந்தும் ஒரு நல்ல விஷயம் கிடைக்கலாம்... என்கிற அனுபவப் பாடமும் எங்களுக்கு கிடைத்தது.

சென்னை வந்ததும் போட்டி போட்டுக் கொண்டு ஸீன் பிடித்து 'ஆட்டுக்கார அலமேலு' முழுக்கதையையும் எழுதி முடித்தோம்.

சங்கர்-கணேஷ் இசையில் பாடல் கம்போஸிங் தொடங்கியது. பாடல்களை எழுதுவதாக இருந்த கண்ணதாசன் உடல்நிலை சரியில்லாததால் வர இயலவில்லை.

ட்யூனை ரெடி செய்த சங்கர்-கணேஷ் "அண்ணே ட்யூன் நல்லா இருக்கா?" எனக் கேட்க... "நல்லாவே இல்லப்பா. ஒரு பாட்டக் கேட்டா என்னை மறந்து நான் ஆடணும்... அப்பத்தான் ஆடியன்ஸும் ஆடுவாங்க. அந்த மாதிரிப் போடுங்க" என்றார் தேவர்.

அடுத்து ஒரு ட்யூனைப் போட்டுக் காட்ட... தேவருக்குப் பிடித்துப்போனது.

'பருத்தி எடுக்கயில... என்ன பலநாளா பார்த்த மச்சான்

ஒருத்தி இருக்கையில ஓடிவந்தால் ஆகாதோ'

-என தேவர் பாடியபடியே ஆட ஆரம்பித்துவிட்டார்.

"அட ரசனைகெட்டவனுங்களா... பாட்டு ரொம்ப நல்லா இருக்கு. எந்திருச்சு ஆடுங்கடா" எனச் சொல்ல... தூயவன் எழுந்து தேவருடன் ஆடினார். இந்தப் பாடலை தேவரும், படத்தின் மற்ற பாடல்களை மா.ரா.வும் எழுதினார்கள்.

சிவகுமார், ஸ்ரீப்ரியா நடிக்க... முக்கிய வேடத்தில் முட்டுக்கிடா நடிக்க... "ஆட்டை வச்சு கதையா?"என முதலில் அதிருப்தி தெரிவித்த டைரக்டரும், தேவரின் மருமகனுமான தியாகராஜனும் கதையில் ஆர்வமாகி படத்தை இயக்கினார்.

'ஆட்டுக்கார அலமேலு' படம் மிகப்பெரிய வெற்றி பெற்றதுடன் வெள்ளிவிழா கண்டது. தேவர் எடுத்த தமிழ்ப் படங்களில் வெள்ளிவிழா

கொண்டாடியது 'ஆட்டுக்கார அல மேலு' படம்தான். அப்போது அண்ணன் எம்.ஜி.ஆர் முதலமைச்சராக இருந்தார். 'ஆட்டுக்கார அலமேலு' வெற்றி விழாவில் எம்.ஜி. ஆர். கலந்து கொண்டு கலைஞர்களுக்கு கேடயம் பரிசளித்தார்.

இந்த விழாவில் கண்ணதாசனும் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

விழாவில் கண்ணதாசனை நெகிழ வைத்துவிட்டார் தேவர்.

"என்னோட படங்களுக்கு கண்ணதாசன் பாடல்களை எழுதுவது வழக்கம். ஆனா... தவிர்க்க முடியாத காரணத்தால் இந்தப் படத்திற்கு கண்ண தாசன் பாட்டெழுத வர முடியாமப் போச்சு. இருந்தாலும், அவருக்கான சன்மானத்தை கொடுக்க விரும்புறேன்" எனச் சொல்லி ஒரு தொகையை கண்ணதாசனிடம் கொடுத்தார் தேவர். கண்ணதாசனும் அதை மகிழ்வுடன் பெற்றுக் கொண்டார்.

தேவர் வீடு கிரஹபிரவேசத்தில் நடந்த அவமானம்!

# முருகனுக்கு டோஸ்!

தேவர் புதிதாக ஒரு பெரிய வீடு கட்டி கிரஹப்பிரவேசம் நடத்தினார். இதையொட்டி விருந்துக்கும் ஏற்பாடு செய்திருந்தார். கதை இலாகாவைச் சேர்ந்த எங்களை கௌரவிக்கும் விதமாக புதுவீட்டின் மாடியறையில் எங்களை அமரவைத்து இலைவிரித்து, தேவரே பரிமாறினார். ஸ்வீட் தட்டு கீழே இருந்ததால் "கொஞ்சம் பொறுங்கடா... ஸ்வீட்ட எடுத்திட்டு வந்திடுறேன்''என தேவர் ஓடினார். அந்தச் சமயம் தேவரின் தம்பிகளுள் ஒருவர் நாங்கள் அமர்ந்திருந்த இடத்திற்கு வந்தார். "என்னடா... தூயவா? எங்க அண்ணனை ஏமாத்தி ஏமாத்தி அவ ரோட....... (மிக மோசமான கெட்ட வார்த்தை) மூத்திரத்தைக் குடிச்சு... அவர்கிட்டே இருந்து பணத்தை அடிச்சிட்டுப் போறீங்களாடா?'''எனக் கேட்டுவிட்டு போய்விட்டார்.

எதிர்பாராத இந்த தாக்குதலில் நிலைகுலைந்துபோன நாங்கள் பெரும் அதிர்ச்சியடைந்தோம். கதை இலாகாவினர் பத்துப்பேர்களுமே சொல்லிவைத்தார் போல இலையிலிருந்து கண்ணீர் மல்க எழுந்தோம். தேவர் வருவதற்குள் கிளம்பிவிட வேண்டும் என்பதால் அவசர அவசரமாக வெளியேறி அவரவர் வீடுகளுக்குத் திரும்பினோம்.

ஸ்வீட்டுடன் வந்த தேவர் எங்களைக் காணாமல் விசாரிக்க... தயங்கித் தயங்கி ஒருவர் நடந்த விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்.

மறுநாள்... வழக்கம் போல கதை விவாதம் நடத்த அலுவலகம் வந்தோம். ஆனால் வழக்கத்திற்கு மாறான இறுக்கமான சூழல் நிலவியது. மௌனமாக இருந்த தேவர், ஒரு ஊழியரை அனுப்பி எங்களைத் திட்டிய அந்தத் தம்பியை அழைத்துவரச் சொன்னார்.

தம்பியும் வந்து சேர்ந்தார்.

"என்னப்பா... கதாசிரியர்கள்லாம் சாப்பிடும்போது ஏதோ சொன்னியாமே? ஏண்டா... (கோபத்தில் கெட்டவார்த்தைகளால் திட்டி) அவங்க என்னோட மூத்திரத்த குடிக்கிறாங்களா? நான்தாண்டா அவங்க மூத்திரத்தைக்

குடிச்சி... அவங்களைத் தாங்கித் தாங்கி சம்பாதிச்சு ஒங்களுக்குப் போடுறேன். மரியாதையா அவங்ககிட்ட மன்னிப்புக் கேள்றா'' என தேவர் காட்டமாக கத்தினார்.

அந்தத் தம்பியோ எந்த உறுத்தலும் இல்லாமல் ''டேய்... மன்னிச்சிடுங்கடா'''என சொல்லிவிட்டுப் போனார். தேவர் தன் மனதில் கதாசிரியர்களுக்கு தனி மதிப்பும், இடமும் இருப்பதை முழுவதுமாக உணரமுடிந்தது.

இருப்பினும் அந்த மனநிலையில் கதை விவாதம் செய்வது அவ்வளவு நன்றாக வராது என்பதால் விவாதத்தை கேன்ஸல் செய்தார் தேவர்.

அன்று பம்பாயிலிருந்து தேவருக்கு போன் வந்தது!

''ஐஆம் தேவர்... டெல்மீ...''

''........ ......... .......... ..........''

''காட் பிளஸ் முருகா. தேங்க்யூ'' என போனை வைத்துவிட்டார் தேவர்.



" 'வெள்ளிக்கிழமை விரதம்' படத்தை இந்தியில் எடுத்தம்ல. இந்தியில அந்தப்படம் ஏன் ஓடலை? பாம்பேகாரன் கேட்கிறான். இவன் என்கிட்ட கேட்கக்கூடாது. அந்த முருகன்கிட்டதான் கேட்கணும். படத்துல லாபம் வந்தா நான் முருகனுக்குத்தான் பங்கு தர்றேன். படம் ஓடலைன்னா நான் ஏன் கவலைப்படணும்? வேல வச்சுக்கிட்டு மூலையில உட்காந்திருக்கட்டும் அந்த முருகப்பய! வள்ளி கூட மயில்ல ஏறி ஊருசுத்துறதே அவன் வேலையாப் போச்சு. இருக்கட்டும்... ஒரு நாளைக்கு நான் அவன் மண்டைய ஒடைக்கத்தான் போறேன்" என்றார்.

"ஏண்ணே காளமேகப் புலவர் மாதிரி பேசுறீங்க?"'என நான் கேட்டேன்.

"அது யாரப்பா?"

"ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோயிலில் சாமிக்கான நெய்வேத்தியங்கள் சமைக்கிற சமையல்காரார் வரதன். பக்கத்தில் உள்ள அகிலாண்டேஸ்வரி கோயிலில் மோகனாங்கி என்கிற தாசி இருந்தா. அவமேல வரதனுக்கு காதல் வந்திருச்சு. அவளுக்கும் வரதன் மேல காதல்.

"நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கணும்னா நீ வைணவ சித்தாந்தத்தில் இருந்து, சைவ சித்தாந்தத்திற்கு மாறணும்னு சொன்னா. அவள்மேல் உள்ள காதலால் சைவத்திற்கு மாறினார் வரதன். அகிலாண்டேஸ்வரி கோயில்லயே தங்கி வேலை செய்துக்கிட்டிருந்தார். ஒருநாள்... வைணவத்திலிருந்து, சைவத்திற்கு மாறியதை நினைத்து மன உளைச்சல்ல கோயில் கருவறைக்குள் அசந்து தூங்கிட்டார் வரதன். அப்போ ஈஸ்வரி கனவில் தோன்றி தன்னோட வாயில் இருந்த தாம்பூலத்தை வரதன் வாயில் திணித்துவிட்டு 'இன்று முதல் உன்பேர் காளமேகம். எல்லா சிவ ஷேத்திரங்களுக்கும் போய் நீ பாடல்பாடி பெருமை பெற அருள்பாலிக்கிறேன்'னு சொல்-ட்டு ஈஸ்வரி மறைந்தாள்.

அதன்பிறகு அவரோட வாயிலிருந்து கவிதை மழை பொழிய ஆரம்பிச்சது. ஊர்தோறும் போய் சிவன் பெருமை பாடிய காளமேகம் ஒருமுறை முருகன் கோயில் பக்கம் போனார். அங்கே... வைரம் பதித்த தங்கக்கிரீடம், பத்துவிரலில் வைர மோதிரம், மார்பில் நவரத்ன மாலை, உடம்பு முழுக்க தங்கக் கவசம் அணிந்து முருகன் தங்கத்தேரில் வீதிஉலா வந்தார். அதைப்பார்த்த காளமேகம்..."அடே முருகா! உங்கப்பன் சிவன் பிச்சையெடுப்பவன். உன் ஆத்தா ஈஸ்வரி மலையில் பிறந்த நீலி. உன் மாமன் கிருஷ்ணன் வெண்ணெய் திருடி. உன் அண்ணன் கணேசனோ முக்குக்கு முக்கு உட்கார்ந்திருக்கும் சப்பாணி. இப்படி ஒரு கேவலமான

குடும்பத்தில் பிறந்தவன் நீ. உனக்கு ஏன் வீண்ஜம்பம், ஆடம்பரம். உனக்கு வெட்கமா இல்லையா? கீழே இறங்கி நடந்து போடா''என கவிதை பாடினார்.

இந்த கவிதைக்குப் பெயர் நிந்தாஸ்துதி. அதாவது புகழ்ந்து இகழும் வஞ்சப்புகழ்ச்சி அணி. இந்தக் கதை 1940-ல் எல்லீஸ் ஆர்.டங்கன் இயக்கத்தில் பாரதிதாசனின் வசனம், பாடல்களில் நாதஸ்வர சக்கரவர்த்தி ராஜரத்தினம் பிள்ளை நடிக்க, காளமேகம் என்ற பெயரில் படமாக வந்தது. அந்த காளமேகப்புலவர் போல நீங்க முருகனை திட்டிக்கிட்டே இருக்கீங்களேண்ணே.''

''ஏண்டா? நான் அவர மாதிரி மோசமாவா திட்டுறேன்?''

''அதைவிட மோசமா திட்டுறீங்கண்ணே...''

''அடப்போடா கேணப்பயலே. எனக்கு முருகனைவிட்டா வேற கதி இல்லடா. அப்படியிருந்தும் என்னோட சர்க்கரை வியாதியைக்கூட தீர்க்கமாட்டேங்கிறான்'' என தேவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே தேவரின் தம்பி மாரியப்பன் வந்தார்.

''அண்ணே... உங்க அறுபதாம் கல்யாணத்துக்கு தேவையான எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பா பண்ணியாச்சு'''என்றார்.

''என்னமோப்பா... நீங்க விருப்பப்படுறதுனாலதான் சம்மதிக்கிறேன். கதைக்காரங்களுக்கு போய்வர, தங்க எல்லா ஏற்பாடுகளையும் பண்ணீட்டீங்களாப்பா?''

''உங்களுக்கு என்ன வசதி ஏற்பாடு பண்ணீருக்கோ... அதேபோலவே அவங்களுக்கும் செஞ்சிருக்குண்ணே'' என கையெடுத்து கும்பிட்டார் மாரியப்பன்.

தம்பியை அனுப்பிவிட்டு ''அடேய் பசங்களா! எல்லாப் பயலும் என்னோட அறுபதாங் கல்யாணத்துக்கு வந்திடணும். இல்லேன்னா... வீடு தேடிவந்து உதைப்பேன் ஆமா...''

''கவலைய விடுங்கண்ணே. இப்பவே கல்யாணம் நடக்கப்போற மருதமலையை நோக்கி நடக்க ஆரம்பிச் சிடுறோம்'' என நாங்கள் குறும்பாகச் சொன்னோம்.

''சரி... சரி... கதையைச் சொல்லுங்கடா'' என்றார்.

உடனே தூயவன் "சின்னப்பா தேவர் சின்னப்பா தேவர்னு ஒரு முருக பக்தர். அவருக்கு மருதமலைல அறுபதாங் கல்யாணம் ஏற்பாடு நடக்குது. அங்க ஒரு பாட்டுப் போடுறோம். 'குன்றத்திலே குமரனுக்கு கொண்டாட்டம். இங்கே கதைக்காரங்களுக்கெல்லாம் திண்டாட்டம் திண்டாட்டம்" எனப் பாடியபடி ஆட ஆரம்பிக்க... தேவர் சிரித்துவிட்டார்.

தேவருக்கு தூயவன் செல்லப்பிள்ளை மாதிரி. மா.ரா.வோ பி.ஏ.மாதிரி. ஆனா நான் அவர் கேட்கிறப்பவெல்லாம் ஒரு கதையைச் சொல்லணும். தேவருடன் நான் இருந்த காலகட்டத்தில் இப்படித்தான் இருந்தது. அத்துடன் குடும்ப விஷயங்களையும் என்னிடம் தேவர் பேசுவார். தேவரின் இரண்டாவது மகள் ஜெகதீஸ்வரிக்கு மாப்பிள்ளை பார்க்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார் தேவர். என் தங்கைக்கு ஜோதிசொரூபன், நடராஜன் என பி.ஏ.பி.எல். படித்த இரண்டு மகன்கள் உண்டு. ஊரில் அவர்கள் பண்ணையார் வீட்டுப் பிள்ளைகள். அதனால் என் தங்கை வீட்டோடு சம்பந்தம் வைத்துக் கொள்ள சம்மதித்தார் தேவர். ஆனால் சூழ்நிலை காரணமாக அது தட்டிப்போனது.

மருதமலையில் தேவரின் அறுபதாம் கல்யாணம் மிகச் சிறப்பாக நடந்தது. நானும், தூயவனும் தேவருக்கு என்ன பரிசு கொடுக்கலாம்... என பலவாறு யோசித்து முடிவில் வெள்ளியில் ஆன வெத்திலைப்பெட்டி வாங்கி வரிசையில் நின்று பரிசைக் கொடுத்து ஆசி வாங்கினோம்.

"அண்ணே இந்த இடத்திலயும் 'கதையைச் சொல்லுங் கடானு சொல்லீராதிங்கண்ணே" என நாங்கள் சொல்ல... சிரித்தபடியே ஆசிர்வாதம் செய்தார் தேவர்.

அறுபதாம் கல்யாணம் முடிந்து, அன்று மாலையில் தேவர் தங்கியிருந்த அறைக்குப் போனோம். வெற்றிலையில் சுண்ணாம்பு தடவியபடியே... ஜன்னல் வழியாக மருதமலையெங்கும் ஜொலிக்கும் மின் அலங்காரங்களைப் பார்த்தபடி யோசித்துக் கொண்டிருந்தார்.

"என்னண்ணே யோசனை பலமா இருக்கு?"என நாங்கள் கேட்டோம்.

"அடே.. 1960 காலகட்டம். மருதமலை கோயிலுக்குப் போக சரியான பாதை கிடையாது. மக்கள்லாம் சிரமப்பட்டாங்க. அதனால என்னோட செலவில் முதல்ல ரோடு போட்டுவிட்டேன். ஆனா மின்விளக்கு இல்லாததால் இருட்டுறதுக்கு முன்ன மக்கள் மலையைவிட்டு இறங்கிடுவாங்க. கோயிலும் இருண்டு கிடந்திச்சு. மலைக்கு மின்விளக்கு

போடுறது சம்பந்தமா அரசு அதிகாரிகளைப் பார்த்துப் பேசினேன். "பக்கத்து ஊர்ல இருந்து மலைக்கு மின் சப்ளை குடுக்கலாம். ஆனா லைன் கொண்டு போறதுக்கு மலை முழுக்க பெரிய பெரிய தூண்களை அமைக்கணும். அதுக்கு பல லட்சம் செலவாகும். அந்தத் தொகையையும் நீங்க டெப்பாஸிட் பண்ணினா கரெண்ட் குடுக்கலாம்'னு" சொன்னாங்க.

உடனே பணம்கட்டி அனுமதி வாங்கிட்டேன்.

1962-ல் மருதமலைக்கு கரெண்ட் லைன் குடுத்தாச்சு. மின்சாரவிளக்க யாரோட கையால் முதலில் போடவைக்கிறதுனு யோசிச்சேன். இதுக்கு முழு தகுதியுடையவர் எம்.ஜி.ஆர்.தான்னு என் மனசு சொல்லிச்சு.

நேரா எம்.ஜி.ஆர். வீட்டுக்குப் போனேன். விஷயத்தைச் சொன்னேன். ஆனா.. எம்.ஜி.ஆர். வர மறுத்திட்டார்.

"ஏன் மறுத்தார் எம்.ஜிஆர்."

எம்.ஆர்.ராதாவால் எம்.ஜி.ஆர். சுடப்பட்ட பிறகு நடந்த ஒரு ரகசியத்தையும் தேவர் எங்களிடம் சொல்லத் தொடங்கினார்.

# எம்.ஜி.ஆரின் தொண்டையில் சிக்கிய குண்டு! வெளியே வந்த ரகசியம்!

மருதமலை முருகன் கோயிலுக்கு தன் முயற்சியில் மின்இணைப்பும், மின்விளக்குகளும் ஏற்பாடு செய்த தேவர், மின்விளக்குகளை எம்.ஜி.ஆரின் கரங்களால் இயக்கிவைக்க விரும்பி, எம்.ஜி.ஆரைச் சந்தித்து விபரம் சொன்னார்.
''முருகா ஒங்க கையால அந்த மருதமலை முருகனுக்கு மின்விளக்கு ஏத்தணும்.''

எம்.ஜி.ஆர். மறுத்துவிட்டார். காரணம்... எம்.ஜி.ஆர். தி.மு.க.வில் முக்கியமானவராக இருந்ததால்தான் மறுத்தார். திராவிடக் கட்சி பிரமுகர்கள் கோயிலுக்குச் செல்வதில்லை. அப்படியே சென்றாலும் அது சர்ச்சையாகிவிடும்.

ஆனால் தேவர் விடவில்லை.

பனித்த கண்களுடன் எம்.ஜி.ஆரை நோக்கி கைகளைக் கூப்ப... எம்.ஜி.ஆர் நெகிழ்ந்து விட்டார். தேவரின் கூப்பிய கைகளை பற்றிக் கொண்டபடி... ''அண்ணே... என்ன விமர்சனம் வந்தாலும் சரி. கண்டிப்பா நான் வர்றேன்ணே'' எனச் சொல்லிவிட்டார்.

''சொன்ன மாதிரியே எம்.ஜி.ஆர் வந்துட்டார்ரா கலைஞானம். அவரு வர்றாருனு தெரிஞ்சதும் மருதமலைல மக்கள் கூட்டம். கரண்ட் லைட்டை இயக்குற இடத்துக்கு எம்.ஜி.ஆர். போயிட்டார். நான் கோயிலில் கர்ப்பகிரகத்துக்குள் போய் நின்னுக்கிட்டேன்.

எம்.ஜிஆர். லைட்டைப் போட்டதும் கோயிலே பிரகாசமாயிருச்சு.

'இருட்டுல இருந்த எனக்கு வெளிச்சம் தந்தியே... நீ நல்லாருப்ப'னு முருகன் என்னைப் பார்த்து சிரிக்கிற மாதிரி இருந்தது. சட்டுனு உட்கார்ந்து மனமுருகி அழ ஆரம் பிச்சிட்டேன். எவ்வளவு நேரம்

அழுதேன்னு எனக்குத் தெரியல. ரொம்ப நேரம் ஆகவும் எம்.ஜி.ஆர். என்னைத் தேடி வந்து கூட்டிட்டுப்போய் ஆசுவாசப்படுத்தினார்'' எனச்சொல்லி நிறுத்திய தேவர்... இன்னொரு முக்கியமான தகவலையும் எங்களிடம் பகிர்ந்துகொண்டார்.

1967 பொதுத்தேர்தல் சமயம். எம்.ஜி.ஆரை, எம்.ஆர்.ராதா துப்பாக்கியால சுட்டுட்டாரு. மருத்துவமனையில் இருந்தபடியே எம்.ஜி.ஆர். பரங்கிமலை தொகுதியில் எம்.எல்.ஏ.வா ஜெயிச்சிட் டாரு. அண்ணா தலைமையில் தி.மு.க. ஆட்சியைப் பிடிச்சது. எம்.ஜி.ஆர். சிகிச்சை முடிஞ்சு வீட்டுக்குத் திரும்பிட்டாரு. ஆனாலும் அவரோட தொண்டயில் பாய்ஞ்ச தோட்டாவை டாக்டர்கள் எடுக்கல. எடுத்தா எம்.ஜி.ஆர் உயிருக்கு ஆபத்து வரும்னு சொல்லீட்டாங்க. அடேய் மருதமலை முருகா! உன் கோயிலுக்கு வெளிச்சம் போட்ட எம்.ஜி.ஆரோட வாழ்க்கை வெளிச்சமில்லாம இருக்கேடா... இது நியாயமா?னு மனம் குமுறிக் கேட்டேன்.

நேரா எம்.ஜி.ஆர். வீட்டுக்குப் போனேன். கழுத்துப்பட்டை அணிஞ்சபடி ரெஸ்ட்ல இருந்தாரு.



"முருகா மறுக்காம நீங்க என்கூட மருதமலை கோயிலுக்கு வரணும்?"னு சொன்னேன். எம்.ஜி.ஆரோ பிடிவாதமா மறுத்தார். நான் விடலை. "என்னோட மன திருப்திக்காக நீங்க வரணும். அந்த மருதமலை முருகனைப் பார்த்து ரெண்டுல ஒண்ணு கேட்கணும்"னு சொன்னேன். எம்.ஜி.ஆர் ரொம்பத் தயங்கினார். அவரை வலுக்கட்டாயமாக காரில் ஏற்றினேன்.

நாங்க மருதமலை போறது ரொம்ப ரகசியமா இருந்தது.

கோயிலில் முருகன் முன்னாடி எம்.ஜி.ஆரை நிறுத்தினேன்.

"டேய் முருகா... உனக்கு நன்றி விசுவாசம்கிறது இல்லையா? உங்கள மாதிரி கடவுளுக்கெல்லாம் நல்லவங்க, கெட்டவங்க தெரியாதாடா? இதுகூட தெரியாத அளவுக்கு அப்படி என்ன மப்பான வாழ்க்கை வாழ்றீங்க? ஒண்ணு, ரெண்டு மாசத்துக்குள்ள இந்த முருகனை நீ பூரணகுணப்படுத்தலேனா உன்னையும், உன் கோயிலையும் ரெண்டுல ஒண்ணு பார்த்திடுவேன்"னு' சொல்லீட்டு எம்.ஜி.ஆரைக் கூட்டிக்கிட்டு வந்தேன்.

ரெண்டு, மூணு மாசம் இருக்கும். ஒருநாள்... எம்.ஜி.ஆருக்கு தும்மல் வந்து ரொம்பப் பலமா மூணு முறை தும்மினார். குண்டு வெளிய வந்து விழுந்திருச்சு. "எப்படிடா அந்த முருகப் பெருமானோட கருணை. என் பிரார்த்தனை பலிச்சுப் போச்சுடா" என எங்களிடம் சொல்லிச் சிலாகித்தார்.

நான் தேவரையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தேன் வியப்பு மிகுதியால். என்னைப் பார்த்த தேவர், என் கையிலிருந்த ஒரு போட்டோவைப் பார்த்துவிட்டு "என்னடா அது?" என கேட்டார்.

"அண்ணே! இந்த மருதமலை பூராவும் அலைஞ்சு ஒரு அருமையான முருகன் படம் வாங்கியிருக்கேன்."

"கொண்டாடா பாக்கலாம்."

கொடுத்தேன். வாங்கிப் பார்த்தவர் "அடப்போடா... நல்லால்லடா" என்றார்.

"தேவரா நல்லால்லே என்கிறார். அதுவும் முருகன் படத்தை?" என குழம்பிப்போனேன். அப்போது தேவர்வீட்டு வேலையாள் என் காதைக் கடித்தார். "தேவரய்யா ஏகபத்தினி விரதன். நீங்க வள்ளி, தெய்வானைனு

ரெண்டு பெண்டாட்டியோட முருகன் இருக்கிற படத்தைக் காண்பிச்சா அவருக்கு எப்படி பிடிக்கும்?''

அப்புறம்தான் யோசித்துப் பார்த்தேன். தேவரின் வீடு, அலுவலகம் என அவர் சம்பந்தப்பட்ட இடங்களில் மயில்வாகனத்துடன் கூடிய பாலமுருகன் புகைப்படம்தான் இருக்கும். தேவரின் மூச்சு, பேச்சுவாகவே முருகன் இருந்தாலும் அவனுடைய இருதார கொள்கையை தேவர் ஏற்றுக்கொள்ள மறுத்தேவிட்டார்.

அறுபதாம் கல்யாண மாப்பிள்ளையான தேவர் அந்த விழா குதூகலத்திலும் தொழிலை மறக்கவில்லை.

''அட நாய்களா... பேச்சுவாக்குல மறந்துருவேன்னு பாத்தீங்களா? கதையைச் சொல்லுங்கடா'' என்றார்.

திடீர்னு கதை சொல்லச் சொன்னதால் திகைத்துப்போன நான், யோசித்தபோது... எனது பதிமூன்று வயதில் பலமுறை பார்த்து ரசித்த 'சிவகவி' படம் நினைவுக்கு வந்தது.

**1943**-ல் வெளியான 'சிவகவி' படத்தில் பொய்யாமொழிப் புலவராக தியாகராஜ பாகவதரும், இன்னொரு புலவராக டி.ஆர்.ராஜகுமாரியும், கதாநாயகியாக வீணை எஸ்.பாலசந்தரின் சகோதரி எஸ்.ஜெயலட்சுமியும் மற்றும் என்.எஸ்.கே, மதுரம் ஆகியோரும் நடித்திருந்தனர். பக்திக் கதையும், பாட்டுமாக அமர்க்களமாக ஓடிய படம் இது.

காளிவரம் பெற்ற பொய்யாமொழிப் புலவருக்கு 'சிவகவி' என்ற சிறப்புப் பெயரையும் தந்தாள் சக்தி. அதனால் ''அம்மையப்பனான சிவனையும், சக்தியையும் பாடும் வாயால் வேறு யாரையும் பாடமாட்டேன்''என வாழ்ந்துவந்தார். ஒருமுறை முருக பக்தன் ஒருவன், புலவரைப்பார்த்து ''முருகப்பெருமானைப் பாடுங்க புலவரே''எனக் கேட்க... ''அம்மையப்பனைப் பாடும் வாயால் எந்த சுப்பனையும் பாடமாட்டேன்''எனச் சொல்லிவிடுவார் புலவர். இதனால் ஆத்திரமான பக்தன் ''உன் வாயால் முருகனை பாட வைக்கிறேன்''என சவால்விடுவான். இங்கே பக்தன் வேஷத்தில் வந்து சவால்விட்டவன் சாட்சாத் முருகனே! புலவரை, முருகன் ஆட்கொள்கிற கதைக் காட்சிகள் மிக உணர்ச்சிமயமானதாக இருக்கும்.

சுருக்கமாக நான் இந்தக் கதையைச் சொன்னதும், ''சிவாஜிகணேசனை வச்சு படம் பண்ணணும்னு எனக்கு ரொம்பநாள் ஆசை. புலவர் வேஷம் அவருக்குப் பொருத்தமா இருக்கும். நான் சிவாஜிகிட்ட கலந்து

பேசிக்கிட்ட பின்னாடி... எனக்கு இந்த முழுக்கதையையும் சொல்லுடா. நல்ல நாள்ல நல்ல சேதி சொல்லீருக்க. இப்ப நாம சந்தோஷமா மெட்ராஸூக்கு கிளம்புவோம்'' என்றார்.

தேவரண்ணனின் அறுபதாம் கல்யாணம் சிறப்புடன் நடந்ததற்காக மருதமலை முருகனுக்கு நன்றி சொல்லிவிட்டு மெட்ராஸ் கிளம்பினோம்.

சீர்காழிக்குப் பக்கத்தில் ஒரு கிராமம். அங்கே ஏகபோக செல்வாக்குடன் வாழ்ந்த ஒரு மிராசுதாரர் தனது 90 வயது முதுமை காரணமாக இறந்துவிட்டார். மிராசுதாரரின் உறவினர்களுக்கும், அவர்மேல் மதிப்புகொண்ட சுற்றுப்புற கிராம மக்களுக்கும் ஒரு குறை. மிராசுதாரரின் போட்டோ இல்லையே என்கிற குறைதான். அந்தக் காலத்திலெல்லாம் ஒரு மனிதன் தன்னை போட்டோ எடுத்துக்கொண்டால் ஆயுள் குறையும், இறந்துவிடுவார்கள்... என்கிற மூடநம்பிக்கை இருந்த காலம். அதனால்தான் மிராசுதாரர் புகைப்படம் எடுத்துக் கொள்ளவில்லை.

செத்துப்போன மிராசுதாரரை படம் பிடித்து வைத்துக்கொள்ள ஆசைப்பட்டார்கள். இதனால் கிராமத்தினர் சிலர் போட்டோகிராபரைத் தேடி சிதம்பரம் வந்தார்கள்.

அப்போதுதான் புதிதாக போட்டோ ஸ்டுடியோ ஆரம்பித்திருந்த ஒரு போட்டோகிராபரை சந்தித்து விபரம் சொன்னார்கள். கிராமத்தினரின் ஏக்கத்தையும், எதிர்பார்ப்பையும் புரிந்துகொண்ட அந்த போட்டோகிராபர் சம்மதித்துக் கிளம்பினார்.

இப்போதுபோல் பெரிய அளவில் வாகன வசதி கிடையாதே. இவர்கள் ஊர் போய்ச் சேர்ந்தபோது... பிணம் சுடுகாட்டுக்கு கொண்டுபோகப்பட்டுவிட்டது

'போட்டா எடுக்கிறவர் வந்திட்டாரு' என ஊரே திரண்டு அவரை அழைத்துக் கொண்டு சுடுகாட்டிற்குப் போனார்கள்.

தகன மேடையில் மிராசின் உடலை வைத்து எருவாட்டியால் மூடி தீமூட்டத் தயாராகியிருந்த நிலையில்.... போட்டோகிராபரைப் பார்த்ததும் எருவாட்டிகளை எடுத்துவிட்டு தகன மேடையிலே மிராசின் உடலை தூக்கி உட்கார வைத்தார்கள்.

இறந்தவரை புகைப்படம் எடுப்பதில் பிரச்சினை இல்லை. ஆனால் சுடுகாட்டில் வைத்து படம் எடுக்க வேண்டும் என்பதால் மனரீதியாக போட்டோகிராபருக்கு நடுக்கம் வந்துவிட்டது போல.

எப்படியோ... பதட்டத்துடன் புகைப்படம் எடுத்துவிட்டுத் திரும்பினார்.

அதன்பிறகு... ஊரைவிட்டே சென்னைக்கு ஓடிவந்து விட்டார் அந்த போட்டோகிராபர்.

ஏன்?

அந்த போட்டோகிராபர் பின்னாளில்... ரஜினி, ஜெயலலிதா, விஜயகாந்த் என பல பிரபலங்களை வைத்து படம் தயாரித்து புகழ் பெற்றவர்.

அவர் யார்?

# ஊரை விட்டே துரத்திய முண்டம்!

சிதம்பரத்துக்காரரான வேணு கோபால் செட்டியார் எனது நீண்டகால நண்பர். அவர் சுருக்கமாக வேணு செட்டியார் என அழைக்கப்பட்டார். முத்துராமன், ஜெயலலிதாம்மா நடித்த '"சூரியகாந்தி', முத்துராமன், சுஜாதா நடித்த "பலப்பரீட்சை', இதே ஜோடி நடித்த 'பேரும் புகழும்', ரஜினி, ஷோபா, "படாபட்'ஜெயலட்சுமி நடித்த 'முள்ளும் மலரும்', விஜயகாந்த்தின் 'சின்னக் கவுண்டர்' என பல வெற்றிப்படங்களைத் தயாரித்தவர்.
ஒருநாள் என்னைத் தேடி வீட்டுக்கு வந்தார் வேணு செட்டியார்.

"முக்தா சீனிவாசன் டைரக்ஷன்ல படம் பண்ணப்போறேன். ஆர்டிஸ்ட் பிக்ஸ் பண்ணியாச்சு. அவசரமா கதை வேணும்" எனச் சொல்லி முக்தாவிடம் அழைத்துப்போய் விட்டுவிட்டுப் போய் விட்டார். முக்தா எனக்கு ஏற்கனவே பழக்கமானவர். சிவாஜியை வைத்து முக்தா இயக்கித் தயாரித்த 'அன்பைத் தேடி' படத்திற்கு நான் கதை எழுதி யிருந்தேன்.

"வா கலைஞானம். முத்துராமன், சுஜாதாவுக்கு தகுந்த மாதிரி ஒரு கதை சொல்லு."

"கணவன் முத்துராமன், மனைவி சுஜாதா. இவர்களுக்கு ஆறுவயதில் ஒரு மகன், நாலு வயதில் ஒரு மகள். பட்ஜெட் போட்டு வாழுகிற குடும்பம். மாசக்கடைசியில் வீட்டில் போர் நடக்கும். "நான் குடுக்கிற பணத்துக்குள், ஏன் உனக்கு குடும்பம் நடத்தத் தெரியல?"என்பான் கணவன். "என்ன பொல்லாத பணம் குடுக்கிறீங்க. ரெண்டு குழந்தையை வச்சிக்கிட்டு இந்தப் பணத்தில் வாழ முடியுமா?"என்பாள் மனைவி. "பணம் சம்பாதிப்பதில் உள்ள கஷ்டம் உனக்குத் தெரியல" என்பான் பதிலுக்கு. "குடுக்கிற பணத்தை வச்சு குடும்பம் நடத்துறதில் உள்ள கஷ்டம் உங்களுக்குத் தெரியல"என இவளும் பதிலடி தருவாள். "என்ன பெரிய குடும்பம்... பணம் இருந்தா ஒருத்தன் பத்து குடும்பத்தை நடத்தலாம்"என தர்க்கம் பண்ணுவான். "என்னதான் பணம் இருந்தாலும் பெண்டாட்டி

திறமையானவளா இல்லேன்னா அந்தக் குடும்பம் நடுத்தெருவுக்கு வந்திடும்'' என இவளும் பதிலுக்கு தர்க்கம் செய்வாள். இந்த போராட்டத்தில் குழந்தைகளை கவனிப்பதிலிருந்து கவனம் சிதறும். இதனால் மகன் ஒரு இக்கட்டில் சிக்கி மருத்துவமனையில் சீரியஸான நிலையில் சேர்க்கப்படுவான். 'வர்ற வருமானத்திற்குள் கணவன்-மனைவி இருவரும் கலந்துபேசி, ஒற்றுமையா குடும்பம் நடத்தணும், போராடிக்கிட்டிருக்கக் கூடாது. ஒற்றுமையா இருந்தாத்தான் குடும்பம் கரை சேரும்' என டாக்டர் அட்வைஸால் கணவனும், மனைவியும் மனம் மாறுவார்கள். குழந்தையும் பிழைத்துக்கொள்ளும். அந்தக் குடும்பம் சந்தோசம் அடையும். இதுதான் கதை'' என்றேன்.

''கதை ஓகே. செட்டியார் இந்தப் படத்தை சின்ன பட்ஜெட்டில்தான் எடுக்கிறார். 'பட்ஜெட்டை தாண்டக் கூடாது'னு சொல்லீட்டார். இந்தக் கதைக்கு என்ன சம்பளம் எதிர்பார்க்கிறே?''

''வெளியில கதைக்கு பதினஞ்சாயிரம் வாங்குறேன். செட்டியாருக்காக குறைச்சிக்கிறேன். பன்னிரெண்டாயிரம் குடுங்க.''



"ஐயய்யோ... செட்டியாரோட பட்ஜெட்டுக்கு இது கட்டுப்படியாகாதே. ஐயாயிரம் வாங்கித் தர்றேன்."

"எனக்குத் தர்ற சம்பளத்துல நான் என்னோட அஸிஸ்டெண்ட்டுக்கும் தரணும். ஐயாயிரம் கட்டாது. கொஞ்சம் டைம் குடுங்க. நான் யோசிச்சிட்டு சொல்றேன்" எனச் சொல்லிவிட்டு மாடியில் இருந்து கீழே இறங்கிவந்தேன்.

கீழே செட்டியார் காருடன் காத்திருந்தார்.

"என்ன கலைஞானம்?"

"சார்... டைரக்டர் சொல்ற சம்பளம் எனக்கு கட்டுப்படியாகாது சார்" என்றேன்.

"அதவிடு. உனக்காக எங்க வீட்ல சுறாமீன் புட்டுல இருந்து விதவிதமா சமையல் ஏற்பாடாகியிருக்கு. வந்து சாப்பிட்டுப் போ" என்றார்.

நான் மறுத்தேன்.

"உனக்காகத்தான் இந்த விருந்து... வாப்பா" என்றார். அவரின் அன்பை மறுக்க முடியாமல் அவருடன் காரில் கிளம்பினேன்.

வீட்டுக்குப் போனதும் உட்காரவைத்து பெரிய்ய வாழை இலையை விரித்துப் போட்டு முதலில் சுறாப்புட்டை அள்ளி வைத்தார். மட்டனில் என்னென்ன வகைகள் செய்ய முடியுமோ... அம்புட்டு வகைகளும் இருந்தது. அள்ளி... அள்ளி வைத்தார்.

"நான் இதெல்லாம் விரும்பி சாப்பிடமாட்டேன்."

"அதுனாலதான் நீ ஒல்லியா இருக்க. நல்லா சாப்பிடு" எனச் சொல்லிவிட்டு, 'ஏம்மா அந்த ஈரலை எடுத்திட்டு வந்து வை' என தன் மனைவிக்கு உத்தரவு மேல் உத்தரவு போட்டார். செட்டியாரைப் போலவே செட்டியாரின் மனைவியும் தங்கமான தாய்.

ருசியான அந்த விருந்தை சாப்பிட்டு முடித்துவிட்டு சேரில் உட்கார்ந்தேன். ஒரு தட்டு நிறைய திராட்சை, வாழை என பலவகைப் பழங்களாக டீப்பாயில் வைத்தார். அதையும் சாப்பிடச் சொன்னார். கொஞ்சம் சாப்பிட்டேன். தாம்பூலம் தந்தார். 'பழக்கமில்லை' என்றேன்.

"வெறும் வெத்திலை ஒண்ணை வாயில் ஒதுக்கிக்கோ. வீட்டுக்கு லட்சுமி வருவா" என்றார். அப்படியே செய்தேன்.

"கலைஞானம்... நீ டைரக்டர்கிட்ட சொன்ன கதையை நானும் வெளியில நின்னு கேட்டேன். அந்தக் கதைக்கு டைரக்டர் தர்றதா சொன்ன சம்பளத்தையும் கேட்டேன். உன்னைப்போல நானும் கஷ்டப்பட்டு வந்தவன்தான். ஊர்ல போட்டோ ஸ்டுடியோ வச்சிருந்தேன். மிராசுதாரரோட பிணத்தை படம் எடுக்குறதுக்காக எனக்கு கை நிறைய காசு குடுத்தாங்க. நாங்க போறதுக்குள்ள பிணத்தை சுடுகாட்டுல தகனமேடைக்கு கொண்டுபோயிட்டாங்க. பிணத்தை தூக்கி உட்காரவச்சு போட்டோ எடுக்கச் சொன்னாங்க. பிணம், சுடுகாடுன்னாலே மனசுல ஒரு பயம் இருக்கும். பிணத்தை தூக்கி வச்சதும், லேசா பிணம் கண்ணத் திறக்கிற மாதிரி இருந்துச்சு. எனக்கு உதறல் எடுத்துருச்சு. அந்தப் பதட்டத்துலயே படம் பிடிச்சேன். கடைசியில பாத்தா போட்டோவுல முகம் பதிவாகல. தலையில்லாம முண்டம் மட்டும்தான் விழுந்திருந்துச்சு. மிராசு முகத்தைப் பார்க்கத்தானே ஊரே சேர்ந்து போட்டோ எடுக்க என்னை வண்டி கட்டி கூட்டிக்கிட்டுப் போனாங்க. இப்ப தலையே போட்டோவுல தெரியல. என் தலை என்னாகிறது? கைநிறைய பணம் குடுத்தவங்க சும்மாவிடுவாங்களா? மிராசு ஆளுங்க... ஆத்திரத்துல

அடிச்சே கொன்னுபுடுவாங்க. அதனாலதான் ஊரைவிட்டு மெட்ராஸுக்கு ஓடிவந்தேன். இங்க வந்து பலப் பல தொழில் செஞ்சு கஷ்டப்பட்டு முன்னேறினேன். முக்தா சீனிவாசனோட பார்ட்னரா சேர்ந்து படம் தயாரிச்சேன். அந்தப் புண்ணியவான் தயவால இன்னைக்கு நான் நல்லா வாழ்ந்துக்கிட்டிருக்கேன். நீ மனசு வச்சாத்தாம்ப்பா உடனே நான் ஷூட்டிங் போகமுடியும். இல்லேன்னா முக்தா தன்னோட சொந்தப் படத்தை எடுக்கப்போயிடுவார்.

நீ கேட்ட 12 ஆயிரம் எனக்கு கட்டுப்படியாகாது. டைரக்டர் சொன்ன 5 ஆயிரம் உனக்கு கட்டுப்படியாகாது. 7ஆயிரம் தர்றேன்... வாங்கிக்க. இந்தப் படம் வெளியாகி மத்த மொழிகள்ல ரைட்ஸ் கேட்டு வந்தா, அதுல உனக்கு உரிய பங்கைக் கொடுத்துடுறேன்''என்றார் வேணு செட்டியார்.

கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்த எனக்கு, அவரின் கஷ்டத்தைச் சொல்லவும்... வேறெதுவும் பேசவில்லை நான். செட்டியார் தன் கஷ்டங்களைச் சொன்னதும், அட்வான்ஸ் கொடுத்ததும் 1977-ன் ஆரம்பம்.

வேணு செட்டியார் குணாதிசயத்திலேயே கடும் உழைப்பாளி. தூய்மையான உள்ளம் கொண்டவர். பழக இனிமையானவர். இதை மனதில் வைத்தே சம்மதித்தேன்.

முத்துராமன், சுஜாதா நடிப்பில் ''பலப்பரீட்சை''படம் வெளியாகி வெற்றி பெற்றது. படத்திற்கு வசனம் எழுதிய தூயவனுக்கு 'சிறந்த வசனகர்த்தாவுக்கான தமிழக அரசின் விருது கிடைத்தது.

தெலுங்கு மற்றும் இந்தியில் இப்படத்தின் ரீ-மேக் ரைட்ஸ் விற்பனையானது. அதில் எனக்கு உரிய பங்கை வீடுதேடி வந்து கொடுத்த நியாயஸ்தன் வேணு செட்டியார்.

இந்த பலப்பரீட்சைக்கு முன்பாக முக்தா சீனிவாசன் என்னை அழைத்தார்.

''சிவாஜியை வச்சு அடுத்த படம் எடுக்கப்போறேன். ஒரு நல்ல கதையாச் சொல்லு'' என்றார்.

அந்தச் சமயம் என் மனதில் ஒரு புதுமாதிரியான கதை உருவாகியிருந்தது. ஆனால் அது கதாநாயகியை மையமாகக் கொண்ட கதை. அதை முக்தாவிடம் சொல்லத் தொடங்கினேன்.

நான் சொல்லச் சொல்ல... அந்தக் கதையில் ரொம்பவே இன்வால்வ் ஆகி கேட்டார்.

கதையைச் சொல்லி முடித்தபோது... முக்தா என்னை பலமுறை பாராட்டினார். முதுகில் தட்டிக்கொடுத்தார்.

"சிவாஜிக்கு இந்தக் கதை சரியா வராது. இதை வேணு செட்டியாருக்கு குறைந்த பட்ஜெட்டில் படமாக்குவோம்" என்றார் முக்தா. அப்படியே இந்தக் கதை படமாகி வந்தபோது சினிமா உலகிலும், பத்திரிகை வட்டத்திலும் எனக்கு பாராட்டு கிடைத்தது.

இப்போதுகூட எனது அனுமதியுடன் இந்தக் கதையின் சுருக்கத்தை மேடைகளில் குட்டிக் கதையாகச் சொல்லிவருகிறார் டைரக்டர் ஆர்.வி.உதயகுமார்.

அந்தக் கதை?

"மகாத்மா காந்தியும், நடிகை காந்தாமணியும்!"

# காந்தியும் காந்தாமணியும்!

வசதியான வீட்டுப்பெண் அவள். ஏதாவது சமூக சேவை செய்து தினசரி தன் படமும், செய்தியும் பேப்பரில் வரும்படி பார்த்துக்கொள்வாள். ஒருநாள் தன்னைப்பற்றி செய்தி வராவிட்டாலும் அப்செட் ஆகிவிடுவாள். அன்று அவளுக்கு சமூக சேவை செய்ய வாய்ப்பே கிடைக்கவில்லை. என்ன செய்யலாம்' என யோசித்தாள். காரை எடுத்துக் கொண்டு கிளம்பினாள். அதிவேகமாக ஓட்டிச் சென்று ஒரு மரத்தில் மோதினாள். பிரஸ்ஸுக்கு நியூஸ் கொடுத்தாள்.

"கார் விபத்தில் பிரபல சமூக சேவகி மயிரிழையில் உயிர் தப்பினார்" என செய்தி வந்தது. திருப்தியானாள்.

அவளை மணக்கப்போகும் முறைமாப்பிள்ளை அவளைக் கண்டிப்பான். 'விளம்பரத்திற்காக நீ ஆசைப்பட்டு செய்த காரியத்தில் உன் உயிர்போயிருந்தால் என்னாவது?'எனக் கண்டிப்பான்.

'உனக்காக மாப்பிள்ளை எவ்வளவு நாள்தான் காத்திருப் பார்? கல்யாணம் வேண்டாம்னு மறுத்துக்கிட்டே இருக்க. எங்களுக்கும் வயசாகுது. நீ உடனடியா அவரை கல்யாணம் பண்ணிக்கிட்டு குடும்பம் நடத்துற வழியைப் பாரும்மா'என அவளின் பெற்றோர்களும் கண்டிப்பார்கள்.

அதை அலட்சியப்படுத்திவிட்டு ஹாலில் சோபாவில் உட்கார்ந்து 'அடுத்து என்ன செய்து பேப்பரில் பேர் வரவைக்கலாம்?' என யோசித்துக்கொண்டிருப்பாள்.



அப்போது ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணி தனது கணவனின் கையைப் பிடித்துக்கொண்டு வந்து 'அம்மா... என்பேரு காந்தா. என் கணவருக்கு கண் தெரியாது. அவருக்கு பார்வை கிடைக்க உதவுங்கம்மா'எனக் கேட்பாள். உடனே துள்ளி எழுந்த சமூகசேவகி தனது பி.ஆர்.ஓ.விற்கு போன் போடுவாள்.



"ஒரு ஏழைக்கு பார்வை கிடைக்க உதவப்போறேன். ஆபரேஷனுக்கு தேவையான ஏற்பாடுகளைச் செய்ங்க. அதோட... பிரஸ்ஸூக்கும் நியூஸ் சொல்லிடுங்க"எனச் சொல்லிவிட்டு உதவி கேட்டு வந்தவர்களிடம் விசாரிப்பாள். 'எங்கிருந்து வர்றீங்க? நீங்க யாரும்மா?'

அந்தப் பெண்மணி பலமாகச் சிரிப்பாள்.

'நீங்க யார்?னு கேட்டது தப்பா?'என சமூகசேவகி கேட்பாள்.

"யார்?னு கேட்டதும் பழைய நினைவு வந்திடிச்சும்மா. 30 வருஷங்களுக்கு முன்னாடி நான் புகழ்பெற்ற நடிகை. என் பெயர் காந்தாமணி. ஒருசமயம் ரயிலில் போய்க்கொண்டிருந்தேன். ஒரு ஸ்டேஷனில் ரயில் நின்றது. 'எந்த ஸ்டேஷன்?'என தெரிஞ்சிக் கிறதுக்காக தலையை நீட்டி வெளியே எட்டிப்பார்த்தேன். அப்போ பிளாட்பாரத்தில் மாலைகளுடன் தொண்டர்கள் கூட்டமா நின்னுக்கிட்டிருந்தாங்க. அப்போ ஒருவர் 'அதோ... நடிகை காந்தாமணி'னு என்னைப்பார்த்து கத்த... அந்தக் கூட்டம் என்னை நோக்கி ஓடிவந்து எனக்கு மாலைகளைச் சூட்டி, என்னிடம் கையெழுத்தும் வாங்கினார்கள். எனக்கு என் புகழை நினைத்து பெருமையாக இருந்தது. ரயில் கிளம்பியது. நான் எனக்கு அணிவிக்கப்பட்ட மாலைகளை பார்த்தபோது அதில் சில கதர் நூலால் ஆன மாலைகளும் இருந்தன.

'கதர் மாலையெல்லாம் போட்டிருக்காங்களே' என நான் வியந்துபோய் கேட்க... அப்போது பக்கத்து இருக்கையில் இருந்த ஒருத்தர் சொன்னார்... 'நாம பயணம் செய்ற ரயில்பெட்டிக்குப் பின்னால இருக்க பெட்டியில மகாத்மா காந்தியும் பயணம் செய்துக்கிட்டிருக்கார். அவருக்கு அணிவிக்கக் கொண்டுவந்த மாலைகளை உங்களைப் பார்த்த பரவசத்தில் காந்தியை மறந்து உங்களுக்கு போட்டுட்டாங்க' என்றார். 'அன்று... காந்தியை விட்டுட்டு இந்த காந்தாமணியைப் பாராட்டினாங்க. இன்று... இந்த காந்தாமணியை உனக்குத் தெரியல. அதை நினைச்சுத் தாம்மா சிரிச்சேன். காந்தியோட புகழ் உலகம் உள்ளவரைக்கும் நிலைக்கும். அது தியாகத்திற்கு கிடைத்த உண்மையான புகழ். ஆனா.. என்னைப் போன்றவர்களோட புகழ் என்பது தற்காலிகமானது. விலை கொடுத்து வாங்கும் போ-யான புகழ் நிலைக்காதம்மா' எனச் சொல்ல... அந்த சேவகிக்கு தலையில் இடி விழுந்த மாதிரி இருக்கும். 'தேவையறிந்து செய்வதுதான் சேவை' என்கிற யதார்த்தமும் புரியும். ஓடிப்போய் தனக்காக காத்திருக்கும் முறைமாப்பிள்ளையின் காலில் விழுந்து அழுவாள்.

இதுதான் முக்தா சீனிவாசனிடம் நான் சொன்ன கதை.

காந்தியை யும், ஒரு நடிகையும் இணைத்து நான் எழுதிய கதை எனக்கு பெரும் பாராட்டைப் பெற்றுத் தந்தது.

முக்தா சீனி வாசன் இயக்கத்தில் முறைமாப் பிள்ளையாக முத்துராமனும், சமூகசேவகியாக சுஜாதாவும் நடிக்க வேணு செட்டியார் தயா ரிப்பில்

'பேரும் புகழும்' என்ற பெயரில் இந்தப் படம் வெளியா னது.

டைரக்டர் எஸ்.பி. முத்துராமனை எனக்கு 'மயங்குகிறாள் ஒரு மாது'' பட சமயத்திலிருந்தே தெரியும். எஸ்.பி.முத்துராமன் இயக்கத்தில் பாண்டியன் என்கிற தயாரிப்பாளருக்கு 'தாய்வீட்டு சீதனம்' என்கிற கதையை விற்றேன். பாண்டியன் எனக்கு ஆயிரத்தி ஒரு ரூபாய் மட்டும் அட்வான்ஸாக கொடுத்திருந்தார். கதை கொடுத்து மூன்று மாசமாகியும், ஃபைனான்ஸ் ஏற்பாடாகாததால் படப்பிடிப்பு தொடங்காமல் இருந்தது. இதனால் சென்னை பாண்டிபஜாரில் இருந்த எனது அலுவலகத்திற்கு தினமும் வந்துவிடுவார் எஸ்.பி.முத்துராமன். அண்ணன், தம்பியாக பழகிவிட்டோம் நாங்கள். ''தாய்வீட்டு சீதனம்' கதையை வேறு தயாரிப்பாளரிடம் விற்று விட முடிவு செய்தேன். ஆனால் எஸ்.பி.முத்துராமனுக்கு கைவசம் இந்தப்படம் மட்டுமே இருந்தது. அதனால் எஸ்.பி.முத்துராமன் என் கைகளைப் பிடித்துக்கொண்டு ''இன்னும் ஒருமாசம் பொறுங்கள். அதன்பிறகு தயாரிப்பாளர் ஷூட்டிங் தொடங்காவிட்டால் விருப்பம்போல செய்துகொள்ளுங்கள்''என்றார்.

''உங்களுக்காக ரெண்டுமாசம்கூட வெய்ட் பண்றேன்'' என்றேன்.

இரண்டுமாதமும் ஆகிவிட்டது. பாண்டியனுக்கு ஃபைனான்ஸ் கிடைக்கவில்லை.

இந்தச் சமயத்தில் ஒரே மாதத்தில் ஐந்து கதைகளை உருவாக்கி விற்றுவிட்டேன். கைவசம் கதை இல்லாத நேரம் பார்த்து தயாரிப்பாளர் எம்.எஸ்.காசிவிஸ்வநாதனிடமிருந்து கதைகேட்டு எனக்கு அழைப்பு வந்தது.

தமிழ் சினிமாவின் தூண்களில் ஒன்றாக இருந்த நிறுவனம் ஜூபிடர் பிக்ஸர்ஸ். இதன் உரிமையாளர்கள் எம்.சோமசுந்தரமும், எஸ்.கே.மொய்தீனும் உடன்பிறவா சகோதரர்களாக வாழ்ந்த வர்கள். எம்.ஜி.ஆர்., எம்.எஸ்.விஸ்வநாதன், சின்னப்பா தேவர் ஆகியோரை உருவாக்கியவர்கள். 'ஜூபிடர் சோமு' என அழைக்கப்பட்ட சோமசுந்தரத்தின் மகன்தான் எம்.எஸ்.காசி. இவருடைய தயாரிப்பில் ஏற்கனவே 'வாயாடி' படத்திற்கு நான் கதை எழுதியுள்ளேன். காசியும், டைரக்டர் மதுரை திருமாறனும் இணைந்து கதை தேடிக் கொண்டிருந்தார்கள். அதற்காகத்தான் என்னை அழைத்திருந்தார் காசி.

அவரைப் பார்த்து ‘தாய் வீட்டு சீதனம்’ கதையைச் சொன்னேன்.

நகரத்தில் ஒரு நகைக்கடன் வங்கியில் வேலை பார்க்கும் இளைஞன் 30 பவுன் நகைகளைக் களவாடி குதிரைப்பந்தயத்தில் சூதாடி தோற்றுவிடுவான். திருமணம் செய்து 30 பவுன் நகையை வரதட்சணையாக வாங்கி வங்கியில் வைத்துவிட திட்டமிடுவான். கிராமத்தில் பெண்பார்த்து திருமணம் நடக்கும். முதலிரவின் போதுதான் 6 பவுன் நகையை பெண்வீட்டார் குறைத்துப் போட்டிருப்பது தெரியவரும் அவனுக்கு. இதனால் முதலிரவு நடக்காது. மறுநாளே கிராமத்து பஞ்சாயத்தில் முறையிட்டு விவாகரத்து பெற்றுவிடுவான்.

'இதோட உனக்கும், அவருக்குமான கணக்கு தீர்ந்துபோச்சு' என பஞ்சாயத்து சொல்லும். "எனக்கும், அவருக்குமான கணக்கு இன்னும் முடியல''எனப் போராடி அவனையே கணவனாக அடைவாள் அந்தப் பெண்.

கதையைக் கேட்ட காசி உடனே எனக்கு அட்வான்ஸ் கொடுத்தார். அந்தப் பணத்தில் ஆயிரத்துஒரு ரூபாயை எடுத்துக் கொண்டுபோய் பாண்டியனிடம், அவர் இந்தக் கதைக்காக எனக்கு கொடுத்திருந்த அட்வான்ஸை திருப்பிக் கொடுத்தேன்.

என் அலுவலகம் வந்த எஸ்.பி.முத்துராமனிடம் 'சார்... கதையை காசி சாருக்கு வித்துட்டேன். என்ன சார் பண்றது. எனக்கு கதை எழுதி வித்தாத்தானே பிழைப்பு ஓடும். வேறொரு கதையில் நாம சேர்ந்து பணிபுரியலாம்’ என தெரிவித்தேன்.

வில்லத்தன ஹீரோவாக ரவிச்சந்திரனும், போராடி ஜெயிக்கும் நாயகியாக கே.ஆர்.விஜயாவும், கே.ஆர். விஜயாவை வெற்றிபெற வைப்பவராக ஜெய்சங்கரும் நடித்தனர் ‘தாய் வீட்டு சீதனம்’ படத்தில். இந்தக் கதையில் மட்டுமல்ல... சொந்த வாழ்க்கையிலும் பல தயாரிப்பாளர்களுக்கு பேருதவி செய்தவர் ஜெய்சங்கர் என்பதை நான் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்.

தீபாவளிக்கு 'தாய் வீட்டு சீதனம்’ ரிலீஸ். ஆனால் படம் டெபிசிட்டில் பல சிக்கலுடன் நிற்கிறது. ஏற்கனவே 'வாயாடி’ படக் கதைக்கே எனக்கு ஏழாயிரம் ரூபாய் தரவேண்டும் காசி. இந்தப் படத்தின் கதைக்கும் ஏழாயிரம் பாக்கி. இருப்பினும் அவரின் கஷ்டத்தைப் பார்த்து நான் பணம் கேட்கவில்லை.

தீபாவளி கொண்டாட என்னிடம் பணமில்லை. மனைவி மற்றும் ஆறு குழந்தைகளுக்கும் ஒரு பிட்டுத்துணிகூட எடுக்கவில்லை.

"என்னங்க... விடிஞ்சா தீபாவளி. இப்படி பேசாம கையைக் கட்டிக்கிட்டு உட்கார்ந்திருந்தா எப்படி? பிள்ளைங்க உங்க முகத்தையே பாக்குதுக. கவனிச்சீங்களா? அக்கம் பக்கத்துல வேட்டு வெடிச்சிக்கிட்டு குதூகலமா இருக்காங்க. நம்ம வீடு களையில்லாம இருக்கு. காசி சார்கிட்டப் போய் நீங்க பணம் கேட்டா இல்லேன்னா சொல்லீடுவாரு? உங்களுக்கு அவர் தரவேண்டியது இருக்கே. வாய்விட்டு கேளுங்க. பணம் குடுப்பாரு" என்றாள் என் மனைவி.

எழுந்தேன். சட்டையை மாட்டினேன். "எப்படியும் அவர்கிட்ட பணம் வாங்கிட்டு வர்றேன்" என ஜபர்தஸ்தாக டாக்ஸி பிடித்துக்கொண்டு காசியின் அலுவலகத்திற்குப் போனேன்.

அங்கே... காசியை அவமானப்படுத்துகிற மாதிரியான சம்பவம் ஒன்று அலுவலக வாசலிலேயே நடந்துகொண்டிருந்தது.

# கற்பனையை மிஞ்சிய நிஜம்!

தீபாவளிச் செலவுக்காக... எனக்கு வரவேண்டிய பணத்தில் கொஞ்சம் கேட்கலாம் என டாக்ஸி பிடித்து எம்.எஸ்.காசியின் ஆபீஸுக்குப் போனேன்.

ஆபீஸ் வாசலில் ஐந்தாறு பேர்கள் ஒரு காஸ்ட்யூமரின் தலைமையில் கூடி தயாரிப்பாளர் காசியை விமர்சனம் செய்துகொண்டிருந்தார்கள்.

"நீங்கள்லாம் பணக்காரங்க. ஒங்களுக்கெல்லாம் தினந்தோறும் தீபாவளிதான். ஆனா... நாங்க ஏழைங்க. வருஷத்துக்கு ஒரே தீபாவளிதான். சம்பளத்தை பாக்கி வச்சா எப்படி கொண்டாடுறது?" என தகாத வார்த்தைகளால் திட்டிக் கொண்டிருந்தார்கள். அங்கே கூடியிருந்தவர்கள் எல்லோருமே எனக்கு பரிச்சயமானவர்கள்தான்.

"பணப்பாக்கிக்காக ஒரு மனுஷனை தப்பா பேசக்கூடாது. இதுக்கு முன்ன அவரு அஞ்சு படங்களை எடுத்துருக்காரு. அதுக்காக சம்பளம் குடுத்திருக்கார்ல. அவரு போட்ட சோத்தை இவ்வளவு நாளா தின்னுருக்கீங்கள்ல. இது இன்னைக்கோட போற விஷயமா? நாளைக்கே அடுத்த படம் ஆரம்பிச்சார்னா வேலை பார்க்கமாட்டீங்களா?" என அவர்களிடம் சொல்லிவிட்டு அலுவலகத்திற்குள் போனேன்.

காசி தயாரித்த படங்கள் எல்லாமே வெற்றிப்படங்கள்தான். அப்புறம் எப்படி அவருக்கு நஷ்டம் வந்தது? விடிந்தால் தீபாவளி. சொன்னபடி 'தாய்வீட்டு சீதனம்' படம் ரிலீஸாக முடியாதபடி எப்படி வந்தது டெபிசிட்?



'பாமா விஜயம்', 'நெஞ்சம் மறப்பதில்லை', 'சூதாட்டம்', 'வாயாடி', 'திருடி' ஆகிய எம்.எஸ்.காசி தயாரித்த முந்தைய படங்களின் சின்னச் சின்ன டெபிசிட், இந்தப் படத்தில் மொத்தமாக போட்டு அமுக்கியது. இதற்குக் காரணம்.... எம்.எஸ்.காசி நல்ல கதை அறிவு உள்ளவர். படம் வெற்றிபெற கடுமையாக பாடுபடுபவர். கதையை மெருகேத்த கணக்கில்லாமல் செலவு செய்வார். சிலசமயம் ஆறு மாசங்கள்கூட கதையை டிஸ்கஷன் செய்வார். குவாலிட்டிக்காக செலவு செய்தபடியே இருப்பார். இதனால் அவரின் படம் வெற்றிப்படமாக அமைந்தாலும் அவருக்கு கையைக் கடிக்கும்.

இப்போது 'தாய்வீட்டு சீதனம்' படத்தில் மொத்தமாக வந்து இறுக்கிப் பிடித்தது டெபிசிட்.

இதையெல்லாம் அசை போட்டுக்கொண்டே அலுவலகத் திற்குள் போனேன்.



ஒரு மூலையில் மிகச் சோகமாக அமர்ந்திருந்தார் காசி. என்னைப் பார்த்ததும் “கலைஞானம்... உங்களைத்தான் நினைச்சுக்கிட்டிருந்தேன். நல்லவேளை நீங்களே வந்துட்டீங்க'' என்றார்.

''என்ன சார்?''

''என்கிட்ட பணம் இருந்தா குடுக்கமாட்டனா? நான் அப்படிப்பட்டவனா? நான் ஒரு முக்கியமான ஃபைனான்ஸி யரைப் பார்த்து பணம் வாங்கப் போகணும். அப்பதான் படத்தை ரிலீஸ் பண்ணமுடியும். ஆனா வெளியே போக முடியாதபடி வழிய மறைச்சு திட்டிக்கிட்டிருக்காங்க. நீங்க ஒரு உதவி செய்ய முடியுமா?''”

''சொல்லுங்க சார்.''

“''யார்கிட்டயாவது ஒரு ஐயாயிரமோ, பத்தாயிரமோ... கடன் வாங்கிட்டு வந்து குடுங்க. இவங்களுக்கு கொடுத்திட்டு அப்புறமா நான் ஃபைனான்ஸியரைப் பார்க்கப் போகணும்.''

''கவலைப்படாதீங்க சார். நான் ரெடி பண்ணீட்டு வர்றேன்'' எனச் சொல்லிவிட்டு நான் வந்த டாக்ஸியிலேயே கிளம்பினேன்.

மைலாப்பூர் ஆடம் தெருவில் வெங்கட்ராம அய்யர் என்கிற என் ஆருயிர் நண்பர் வீட்டுக்குப் போனேன். நடந்த விஷயங்களை அவரிடம் சொல்லி... ''எப்படியாவது பத்தாயிரம் ரூபாய் உடனே வேணும்'' என்றேன்.

எனக்கு பல இக்கட்டான நேரங்களில் உதவியவர் அவர். அந்த நம்பிக்கையில் கேட்டேன்.

''இருந்ததையெல்லாம் தீபாவளிக்கு செலவு பண்ணீட்டேன் கலைஞானம். கைல பணமில்லையே?''

''உங்களை நம்பி வந்திட்டேன். எப்படியாவது ஏற்பாடு பண்ணுங்க.''

ஏதோ யோசித்தவர்... ''சரி... வா'' என, நான் வந்த டாக்ஸியிலேயே ஏறினார். அவருடைய நண்பர்களின் ஒவ்வொரு வீட்டுக்கா போனார். இப்படி பல இடங்களில் சுத்தியடித்து இரவு 12.30மணிக்கு மீண்டும் வெங்கட்ராம அய்யரின் வீட்டுக்கு வந்தோம்.

''தீபாவளி என்பதால் எல்லோரும் பணத்தை செலவு பண்ணிவிட்டார்கள். அதனால்தான் அவரின் நண்பர்களிடம் பணம்பெற முடியவில்லை...' என நான் நினைத்துக் கொண்டிருந்தபோது... ''இந்தா கலைஞானம். இதுல பத்தாயிரம் இருக்கு'' என என்னிடம் கொடுத்தார் வெங்கட்ராம அய்யர்.

'பல வீடுகளுக்கு அலைஞ்சாரே... பணத்தை எங்க ரெடி பண்ணுனார்...' என நான் அவரைப் பார்க்க... “

''யாருகிட்டயும் மொத்தமா அவ்வளவு பணமில்லை. அவங்க கைல இருந்த ஐநூறு ஆயிரங்களை வாங்கி நீ கேட்ட தொகையை ரெடி பண்ணி னேன்'' என்றார்.

அவருக்கு நன்றி சொல்லிவிட்டு பணத்துடன் அதிகாலை ஒரு மணிக்கு எம்.எஸ்.காசியின் அலுவலகத்திற்கு வந்தேன். இப்போதும் அந்த தொழிலாளார்கள் ஆபீஸ் வாசலில் கூட்டமாக நின்றிருந்தனர். உள்ளே சென்று பணத்தைக் கொடுத்தேன். பணத்தை வாங்கிய காசி, அந்த தொழிலாளர்களை கூப்பிட்டு பிரித்துக் கொடுத்தார்.

''கலைஞானம் நீங்க செய்த இந்த உதவியை நான் எப்பவும் மறக்கமாட்டேன். இப்போ நான் ஃபைனான்ஸியரைப் பார்க்கப் போறேன். அப்பதான் படத்தை ரிலீஸ் பண்ணமுடியும். நான் கிளம்புறேன். நீங்களும் வீட்டுக்கு கிளம்புங்க'' என்றார்.

உழைத்ததற்கான ஊதியத்தை போராடி வாங்குவது தொழிலாளியின் உரிமை. அதேசமயம் ஒரு நல்ல முதலாளிக்கு கஷ்டம் நேர்ந்தால் தோள் கொடுத்து காக்க வேண்டியது ஒவ்வொரு தொழிலாளியின் கடமை. இயல்பிலேயே எனக்கு இந்த குணாதிசயம் உண்டு. இந்த நிமிஷம் வரை நான் அப்படித்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன்.

எப்படியாவது தீபாவளி செலவுக்கு காசியிடம் பணம் வாங்கிக்கொண்டு வருவதாக என் மனைவியிடம் சொல்லிவிட்டு கிளம்பிய நான் இப்போது

வெறும் கையோடு வீடு வந்தேன்.

மற்றவர்களின் கஷ்டத்தைப் போக்க யாரிடமும் உதவி கேட்பேன். ஆனால் எனக்கென உதவி கேட்க எனக்கு கூச்சமாக இருக்கும். அதனால் ஆறு குழந்தைகள் கொண்ட என் பெரிய்ய குடும்பம் இந்த வருஷம் தீபாவளியைக் கொண்டாடவில்லை.

எம்.எஸ்.காசி மீது எனக்கு மிகப்பெரிய மதிப்பு உண்டு. அதற்குக் காரணம்... அவரின் திறமை. அதையும் மீறி அவருடைய வீட்டில் நடந்த ஒரு நிகழ்வு இப்போதும் என் இதயத்தை உலுக்கியபடியே இருக்கிறது.

1960 காலகட்டத்தில் நான் ஒவ்வொரு சினிமா கம்பெனியாக 'கதை வேணுமா?' என ஏறி இறங்கிக் கொண்டிருந்தேன். அதேபோல பிரபல தயாரிப்பாளர்களின் வீடுகளுக்கும் போய் கதை சொல்ல முயற்சி செய்து வந்தேன். அப்படித்தான்... தமிழ் சினிமாவின் முக்கிய தயாரிப்பு நிறுவனமான ஜூபிடர் பிக்ஸர்ஸின் முதலாளிகளுள் ஒருவரான சோமசுந்தரம் என்கிற சோமு சார் வீட்டுக்கும் கதை விற்பதற்காகப் போனேன்.

நான் போனநேரம் வீட்டு முன்பு ஒரே கூட்டம். வீட்டுக்குள்ளிருந்து அழுகைக் குரலும் கேட்டது.

அங்கே... ஜூபிடர் பிக்ஸர்ஸின் ஊழியரான எனது நண்பர் நின்றுகொண்டிருந்தார். அவரிடம் விசாரித்தேன்.

"கடன், வட்டி தலைக்குமேல போயி சோமு சாரும் உடல்நலம் பாதிக்கப்பட்டு படுத்தபடுக்கையாகிட்டார். பதினெட்டு வயதுகூட நிரம்பாத சாந்தாதான் தன் அப்பாவை கவனிச்சிக்கிட்டது. அப்பா, பக்கத்திலயே தூங்காம உட்காந்திருந்து அவருக்குத் தேவையான மருந்து, மாத்திரைகளை நேரம் தவறாம தரும். பெற்ற தகப்பனை, பெற்ற தாய் மாதிரி கவனிச்சுக்கிச்சு அந்தப் பொண்ணு. இன்னைக்கி மருந்து குடுக்கப் போயிருக்கு. "சாகப்போறவனுக்கு எதுக்குமா மருந்து, மாத்திரை?'னு மறுத்திருக்காரு. 'நீங்க நல்லா இருந்தாத்தானப்பா நாங்களும் நல்லாருக்க முடியும்?'னு'சாந்தா அழவும், கண்ணீரை துடைச்சு விட்டுட்டு மருந்த வாங்கிச் சாப்பிட்டுட்டு 'மகளே கொஞ்சம் காபி குடுக்க முடியுமா?'னு கேட்டிருக்காரு. நிமிஷத்துல காபி ரெடி பண்ணீட்டு வந்து 'அப்பா... அப்பா...'னு எழுப்புது. அசைவில்லை. 'அப்பா செத்துட்டாரே'ங்கிற அதிர்ச்சியில அப்படியே மயங்கிச் சரிந்த சாந்தாவும் செத்துப்போச்சு" என நண்பர் சொல்ல... எனக்கு இதயமே வெடித்துவிடும் போல இருந்தது.

ஒரே வீட்ல ஒரே நேரத்துல ரெண்டு சாவு. அதுவும் வாழவேண்டிய இளங்குருத்து சாந்தா செத்தது கேள்விப்பட்ட எல்லார் மனசும் நொறுங்கித்தான் போச்சு.

தகவல் தெரிஞ்சு, சினிமா புள்ளிகள் வர ஆரம்பிச்சாங்க. அந்த பிரபலங்கள்னால வாய்விட்டு அழ முடியல. உள்ளுக்குள்ள குமுறி அழுதாங்க. கதையில்கூட நினைக்க முடியாத அந்த நிஜத்தை நேரில் பார்த்து நானும் துக்கப்பட்டேன். அன்று முழுக்க அங்கேயே இருந்துவிட்டு வந்தேன்.

ஜூபிடர் சோமுவின் மகன் காசி என்பதைவிட, தயாரிப்பாளர் காசி என்பதைவிட... அந்தப் பாசமகள் சாந்தாவின் அண்ணன் காசி என்கிற வகையில், நான் காசி மீது ரொம்ப மதிப்பும், பிரியமும் கொண்டிருந்தேன்.

'தாய்வீட்டு சீதனம்' படம் வெற்றி பெற்றாலும் அவரின் முந்தைய படங்களின் கூடுதல் செலவு சுமை மொத்தமாக இந்தப் படத்தில் ஏறியதால்... பற்றாக்குறையில் ரிலீஸான படம் என்பதால் நஷ்டம் உண்டானது. அதனால் தொடர்ந்து அவர் படம் எடுக்கவில்லை. உடல்நலக்குறைவும் ஏற்பட்டது. அதன்பிறகு அவர் எங்கே இருக்கிறார் என்றும் எனக்குத் தெரியவில்லை.

நான் பெரிய தயாரிப்பாளராகி, பரபரப்பாக செயல்பட்டு... நானும் பரபரப்பு குறைந்து வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தேன்.

காசி சாரை நான் பார்த்து சுமார் 23 ஆண்டுகளுக்குப் பிறகு.... 2000-ஆம் ஆண்டில் என் வீட்டுக்கு திடீரென வந்தார் காசி. அப்போது அவர் செய்த காரியம் என்னை உலுக்கிவிட்டது!

# நாணயமானவர்கள்!

'தாய்வீட்டு சீதனம்' படத்திற்குப் பின் எம்.எஸ்.காசி, படம் தயாரிக்கவில்லை. சர்க்கரை வியாதியால் பாதிக்கப்பட்டார். அப்போது தலையாட்டிச் சித்தர் ஒரு அல்வாத் துண்டு மூலம் காசியின் நோயை குணப்படுத்த... சித்தரின் மகிமையில் மயங்கி, சித்தருடனேயே சிலகாலம் இருந்தார் காசி. ஒரு இக்கட்டான நேரத்தில் பத்தாயிரம் ரூபாய் பணம் கொடுத்து உதவிய என் நண்பர் வெங்கட்ராம ஐயரை நான் என்னுடனே ஒர்க்கிங் பார்ட்னராக வைத்துக் கொண்டேன். அவர் பெயரிலேயே 'எதிர்வீட்டு ஜன்னல்' படத்தையும் தயாரித்தேன்.
23 வருடங்களுக்குப் பிறகு...

2000-மாவது ஆண்டில் ஒருநாள் தயாரிப்பாளர் எம்.எஸ்.காசி என் வீட்டுக்கு வந்தார். தான் கொண்டுவந்திருந்த பையைப் பிரித்தார். அதிலிருந்து ஒரு தட்டை எடுத்து பழங்களை வைத்தார். அதன் மீது கட்டுக்கட்டாக பணத்தை வைத்து 'வாங்கிக்கங்க கலைஞானம்' என்றார். நான் அவருக்கு விற்ற கதைக்காக அவர் எனக்குத் தரவேண்டிய தொகையை வட்டியும் சேர்த்து கொடுத்தார். அவரின் இந்தச் செயல் 'இப்படியும் ஒரு மனுஷனா?' என வியப்பில் என்னை உலுக்கிவிட்டது. பேச்சே வரவில்லை.

"சொத்து ஒண்ணு விற்க முடியாம இழுத்துக்கிட்டிருந்துச்சு. எதிர்பாராதவிதமா இப்போ வித்து பணம் கைக்கு வந்திச்சு. யார், யாருக்கு நான் பணம் தரவேண்டியிருந்ததோ... அவங்களை யெல்லாம் தேடிப்பிடிச்சு வீட்ல போய் கொடுத்திட்டு வந்தேன். 'தாய்வீட்டு சீதனம்' பட ரிலீஸப்போ... தீபாவளிக்கு முதல்நாள் பத்தாயிரம் பணம் கொடுத்த உங்க நண்பர் வெங்கட்ராம அய்யருக்குத்தான் முதல்ல குடுத்தேன். கடைசியா ஒங்களுக்கு கொடுக்கிறேன்" என்றார்.

நான் காசியின் கைகளைப் பிடித்துக்கொண்டேன். நன்றி சொல்ல வார்த்தைகள் வரவில்லை.



"இப்ப என்ன பண்றீங்க கலைஞானம்?"

"ஓய்விலதான் இருக்கேன்."

"என்கிட்ட பணம் இருக்கு. ஃபைனான்ஸும் தர ஆள் இருக்கு. ஆபீஸுக்கு இடம் பாருங்க. உங்க பேர்லயே நான் படம் தயாரிக்கிறேன்" என்றார்.

வளசரவாக்கத்தில் வேம்புலிஅம்மன் கோவில் தெருவில் இடம் பார்த்தோம். ஆபீஸ் செட்-அப்பிற்கு இரண்டு லட்ச ரூபாய் செலவு செய்தார். என் பெயரிலேயே கம்பெனி துவங்கினார்.



"யாரை டைரக்டரா போடலாம் கலைஞானம்?"

"விசு..."

மறுநாள் விசுவைச் சந்தித்துப் பேசி ஒரு லட்ச ரூபாய் அட்வான்ஸும் கொடுத்தார்.

தன் கையிலிருந்த சில லட்சங்களை வைத்து இந்த முன்னேற்பாடுகளைச் செய்துவிட்டு, பெங்களூரில் ஒருகோடி ரூபாய்க்கு ஒரு ஃபைனான்ஸியரிடமும் பேசி ஓ.கே. செய்துவிட்டார்.

விசுவின் கதை, வசனம், இயக்கத்தில் படத்திற்கு பூஜைபோட தேதியும் குறித்தாகிவிட்டது.

பூஜைக்கு முதல்நாள் பணத்துடன் கிளம்பி சென்னை வருவதாக ஃபைனான்ஸியரும் தெரிவித்திருந்தார். நாங்கள் அவரின் வருகைக்காக காத்திருந்தோம்.

ஃபைனான்ஸியரிடமிருந்து போன் வந்தது.

"உங்களுக்காக வச்சிருந்த பணத்தை என் மகன் ஒரு தெலுங்குப் படத்திற்கு ஃபைனான்ஸ் பண்ணிவிட்டான். இதனால் எனக்கும், அவனுக்கும் வீட்டில் பிரச்சனையாக இருக்கு. ஸாரி..." எனச் சொல்லிவிட்டார்.

இதனால் பூஜை நடைபெறவில்லை. வேறொரு ஃபைனான்ஸியரிடம் பேசிவந்தார் காசி. இதுவும் தாமதப்பட... ''நீங்க எப்போ படம் ஆரம்பிச்சாலும் நிச்சயம் நான் பண்ணித் தர்றேன். அதுவரை நீங்க எனக்கு கொடுத்த அட்வான்ஸ் உங்களிடமே இருக்கட்டும்'' என ஒருலட்ச ரூபாயை திருப்பிக் கொடுத்துவிட்டார் விசு.

இந்த நிமிஷம்வரை அந்த அலுவலகம் எனது பெயரிலேயே இருக்கிறது. அதற்கான வாடகையைக் கொடுத்து வருகிறார் காசி. என் பெயரில் படம் தயாரிக்கும் முயற்சியையும் அவர் இன்னும் கைவிடவில்லை.

இப்படி சகோதரனைப்போல அன்புகாட்டி நெகிழ வைக்கும் ஒரு மனிதரை நான் பார்த்ததேயில்லை.

எல்லாம்வல்ல இறைவனின் ஆசியுடன் அவர் நலமுடன் வாழ அந்த இறைவனை கேட்டுக் கொள்கிறேன்.

**1962** காலகட்டத்தில்...

'கதாசிரியர் என்கிற பாதையில் பயணிப்பதா? பாடலாசிரியர் என்கிற பாதையில் பயணிப்பதா?' என்கிற தடுமாற்றம் எனக்கு இருந்தது. அந்தச் சமயம்... நடிகர் குமரிமுத்துவின் அண்ணனும், முக்தா சீனிவாசனிடம் உதவி இயக்குநராக இருந்தவருமான எனது நெருங்கிய நண்பர் கே.எம்.பாலகிருஷ்ணனிடம் நான் உருவாக்கிய கதைகளைச் சொல்லிப் பார்ப்பேன். பாடல்களைப் பாடிக் காட்டுவேன்.

'ஒரு கதை உருவானதும் அதை நெருங்கிய நண்பர்களிடம் சொல்லிப் பார்க்கவேண்டும். அதன் மூலம் நமது சிந்தனை எப்படியிருக்கிறது என்பதை தெரிந்துகொள்ள முடியும்' என எழுத்தாளர் புதுமைப்பித்தன் சொல்லியிருக்கிறார். அதன்படிதான் நான் பாலகிருஷ்ணனிடம் செய்துவந்தேன். என் கதைகள் மற்றும் பாடல்களைப் பெருமைப்படுத்தி பேசுவதோடு, தான் போகும் இடங்களிலெல்லாம் எனது திறமையை புகழ்ந்து தள்ளுவார்.

பாலகிருஷ்ணனிடம் இரண்டு புதிய பாடல்கள் எழுதி பாடிக் காண்பித்தேன். 'மிக அருமையாக இருப்பதாக அவர் சொல்லவே... கோடம்பாக்கத்தில் இருந்த 'அண்ணா ஃபிலிம்ஸ்' என்கிற படக்கம்பெனிக்கு பாட்டு சான்ஸ் கேட்டுப் போனேன். தேவிகா, அசோகன் நடிக்க 'தாய்க்குலம் 'என்கிற படத்தைத் தொடங்கியிருந்தது அண்ணா ஃபிலிம்ஸ். இதன் உரிமையாளர் லிங்கம். (கங்கை அமரனின் மாமனார்). 'மாய மனிதன்', 'பாக்தாத் திருடன்' படங்களின் கதை-வசனகர்த்தாவான

ஏ.எஸ்.முத்துவை வொர்க்கிங் பார்ட்னராக சேர்த்திருந்தார் லிங்கம். முத்துவுடன் எனக்கு ஏற்கனவே பழக்கம் உண்டு. நான் அலுவலகத்திற்குப் போன நேரம் கதை விவாதம் நடத்திக்கொண்டிருந்தார்கள். நான் வெளியே அமர்ந்தபடியே கதையைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அரைமணி நேரக் கதையைக் கேட்ட நான், 'இந்தக் கதையை வேறுமாதிரி மாத்தியமைக்க லாமே' என என்னை மறந்து குரல் கொடுத்துவிட் டேன்.

இதைக் கவனித்த முத்து, 'அட நம்ம கலை ஞானம்... வாங்க... வாங்க' என அழைத்து லிங்கத்திடம் அறிமுகம் செய்து வைத்தார். என்னை விவாதக்குழு முன் உட்காரவைத்த லிங்கம், 'இந்தக் கதை யை எப்படி மாத்திச் செய்யலாம், சொல்லுங்க?' என்றார்.

அரைமணிநேரக் கதையை என் கற்பனையையும் கலந்து டெவலப் பண்ணி ஒருமணி நேரக் கதையாகச் சொன்னேன். அந்த கதையின் சூழ்நிலைக்கேற்ப ஒரு பாட்டையும் உடனே கட்டிப் பாடினேன்.

'உருவங்கள் மாறும் பருவங்கள் மாறும்

பெற்ற பாசம் மாறுமா? ரத்த பாசம் போகுமா'

-என நான் உருகிப் பாட... எல்லோரும் கைதட்டினார்கள்.

"ஒங்க பேர் என்ன சொன்னீங்க?" என லிங்கம் கேட்டார்.

"கலைஞானம்".

"நீங்க கலைஞானம் இல்ல... 'கதைஞானம்'னு பேரை மாத்திக்கங்க" எனச் சொல்லிச் சிரித்தவர்... "நாளைலருந்து நீங்க இந்த கதை இலாகாவில் சேர்ந்துகொள்ளலாம். இப்ப எதுக்காக நீங்க எங்க ஆபீஸுக்கு வந்தீங்க?" எனக் கேட்டார்.

"பாட்டெழுத சான்ஸ் கேட்டு வந்தேன்."

"கைவசம் பாட்டு வச்சிருக்கீங்களா?"

உடனே நான் பாட ஆரமிச்சிட்டேன்...

"பிறப்பதற்கும் இறப்பதற்கும் நடுவிலே -மனிதன்

பெரிய பெரிய கனவு கண்டான் முடியலே

வாழ்வதற்கும் தாழ்வதற்கும் இடையிலே -விதி

வருவதெந்த உருவத்திலோ தெரியலே''

....நான் பாடியதும், "சோகப்பாட்டு இது. காதல் பாட்டு இருக்கா?" எனக் கேட்டார்.

'வெண்ணிலா முகம் பாடுது

அது கண்ணிலே சுகம் தேடுது

வண்ணமயிலும் வானவில்லும் பெண்ணுருவில்

வந்து ஆடுது'

இந்தப் பல்லவியை நான் பாடிக்காட்டியதும் உடனே என் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு பக்கத்து அறைக்குப் போனார் லிங்கம்.

அங்கே இசையமைப்பாளர் தட்சிணாமூர்த்தி (இளைய ராஜாவின் குருநாதர்) ஸாங் கம்போஸிங் செய்து கொண்டிருந்தார். அவரிடம் 'இவர் பேர் கலைஞானம். பாடலாசிரியர்' என அறிமுகம் செய்துவைத்தார்.

இரு பாடல்களையும் பாடிக் காண்பித்தேன். உடனே தனது பாணியில் இசையமைத்து அசத்திவிட்டார் தட்சிணாமூர்த்தி.

'யாரை வச்சு பாட்டெழுதலாம்' என அவர்கள் யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில் நான் போய்விட்டேன் போல. என்னையே பாடலாசிரியராக்கிவிட்டார்கள். எனக்கு சாப்பாடு போட்டு, கைச்செலவுக்கு சிறிது பணமும் கொடுத்தார்கள்.

இந்த நிகழ்வு சனிக்கிழமை நடக்கிறது.

"திங்கட்கிழமை மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் ஸாங் ரெகார்டிங் பண்றோம். காலைலயே ஸ்டுடியோவுக்கு வந்திடுங்க" என்றார்கள்.

நான் வானத்தில் பறப்பதுபோல பறந்து வந்து கே.எம்.பாலகிருஷ்ணனிடம் விஷயத்தைச் சொன்னேன்.

"கலைஞானம் அண்ணே... இனி நீங்க 'கவிஞர் கலைஞானம்'. அதனால கெட்-அப்பை மாத்துங்க. கவிஞர் சுரதா போல் சால்வை போட்டுக்கங்க" என்றார்.

சால்வை உண்டாக்கிய சங்கடம்!

# சால்வை படுத்திய பாடு!

"உங்களுக்கு நல்லநேரம் வரும்னு எனக்கு நல்லாத் தெரியும். கவிஞராகிட்டீங்க. அதனால இப்ப நீங்க ஒரு வேலை செய்யணும். வியாபாரி மாதிரி சட்டை வேஷ்டி அணியாம... கவிஞர் சுரதா மாதிரி பெரிய சால்வை வாங்கி மேல போட்டுக்கங்க. அப்பத்தான் மரியாதை கிடைக்கும். ரெக்கார்டிங்கிற்கு போறதுக்கு முன்னாடி (கச்சேரி சாலையில் உள்ள) செங்கழனி பிள்ளையாருக்கு தேங்காய் உடைச்சிட்டுப் போங்க" என ஆலோசனை சொன்னார்.

நானும், உவமைக்கவிஞர் சுரதாவும் மந்தைவெளி அடஞ்சான் முதலி தெருவில் பக்கத்துப்பக்கத்து வீட்டில் குடியிருப்பதும், இருவரும் நட்பாக இருப்பதும் பால கிருஷ்ணனுக்குத் தெரியும். அதோடு சில பாடல்களை நான் எழுதிக்காட்டும் போது சுரதா அதை திருத்தமும் செய்வார். அவசர தேவைகளின்போது "கலைஞானம்... டூ ரூபீஸ் இருக்குமா?" என கைமாத்தும் வாங்குவார் சுரதா. இதுவும் பாலகிருஷ்ணனுக்குத் தெரியும். அதனால்தான் சுரதாவைப் போல சால்வை போட்டுக்கொள்ளும்படி பாலகிருஷ்ணன் சொன்னார்.

சுரதா எழுதிய "அமுதும் தேனும் எதற்கு? நீ... அருகினில் இருக்கையிலே... எனக்கு" என்கிற பாடல் திரும்பினதிசையெல்லாம் ஒலித்துக் கொண்டிருந்த நேரம் அது. எனக்கோ சுரதாவைப் போல சால்வை அணிய தயக்கமாக இருந்தது.



பாரதியார் மீது ஏற்பட்ட ஈடுபாடு காரணமாக சுப்புரத்தினம் தனது பெயரை '''பாரதிதாசன்'' என மாற்றிக்கொண்டார். பாரதிதாசனின் மீது ஏற்பட்ட ஈடுபாடு காரணமாக ''சுப்பு-ரத்ன-தாசன்' என பொருள் வரும்படி 'சுரதா' எனப் பெயர் மாறியவர் இந்த சிஷ்யர். சுரதாவைப் பொறுத்தவரை 'குரு என்றாலும் தவறு தவறுதான். ஒருமுறை தனது 'குயில்' 'பத்திரிகையில் பாரதிதாசன் எழுதிய ஒரு கட்டுரையை கடுமையாக விமர்சித்த சுரதா, 'குரல் கெட்ட குயிலே' எனத் தொடங்கி படுகாட்டமாக பதிலடி கொடுத்தார்.

அதனால் சுரதாபோல சால்வை அணிய எனக்கு அச்சமாக இருந்தது.

இருப்பினும் நான் சுரதாவிடம் 'எனக்கு பாட்டெழுத வாய்ப்பு கிடைத்ததிலிருந்து, திங்கட்கிழமை பாடல் ரெக்கார்டிங் இருப்பதுவரை' அவரிடம் சொன்னேன்.

''பலே... பலே... அடி தூள் பண்ணுங்க'' என உற்சாகப் படுத்தினார்.

''சார்... நான் வந்த விஷயம் வேற...''

''என்ன?''

"உங்களை மாதிரியே சால்வை போட்டுக்கச் சொல்றார் பாலகிருஷ்ணன்."

"அவர் சொன்னதில் தப்பே இல்லை. இந்தக் காலத்தில் பந்தா ரொம்ப முக்கியம். சினிமாவில் பாட்டெழுத யார் வேண்டுமானாலும் வரலாம். அப்படித்தான் வர்றாங்க. நீங்க வர்றதுக்கு என்ன?. கவி.கே.பி.காமாட்சியோட தம்பியாச்சே நீங்க."

"அப்ப... நானும் உங்களை மாதிரி சால்வை போட்டுட்டுப் போகணுமா?"

"கட்டாயம் போடணும். மைலாப்பூர் கபாலீசுவரர் கோயில் சன்னதியில் சாரதி டெக்ஸ்டைல்ஸ்ல சால்வை விக்குது. வாங்கிப் போட்டுட்டுப் போங்க" என்றார்.

அந்தக் கடைக்குப் போனேன். விதவிதமாக சால்வை இருந்தது. எனக்குப் பிடித்தமாதிரி இருந்த சால்வையின் விலையைக் கேட்டேன். ஆனால் வாங்குகிற வசதி அப்போது இல்லை. அந்த நேரத்தில் அந்தப் பணம் இருந்தால் ஒருவாரம் குடும்பம் நடத்திவிடலாம். ஆனாலும் 'கட்டாயம் சால்வை போட்டே ஆகணும். யார்கிட்ட கடன் வாங்கலாம்?' என யோசித்தேன்.

நொச்சிக்குப்பத்தில் எனக்கு மீனவர்கள் பலர் நண்பர்களாக இருந்தனர். மீன் விற்கும் குப்புசாமி எனக்கு ரொம்பவே பழக்கம். ஞாயிற்றுக்கிழமை குப்புசாமியைப் பார்த்து என் நிலைமையைச் சொன்னேன்.

"திங்கட்கிழமை ரெக்கார்டிங் முடிஞ்சதும் பணம் தருவாங்க. உடனே திருப்பிக் குடுத்துடுறேன். எனக்கு 20 ரூபா குடு."

"நிச்சயமா பணம் வருமா?"

"நிச்சயமா."

"மீன் விக்கிற பணத்துல இருந்து எடுத்துக் குடுக்கிறேன். மறந்துராம திருப்பிக் குடுத்துரு. இல்லேன்னா ஏம் பொழப்பு கெட்டுப்போயிடும்" என்றபடி பணம் கொடுத்தார்.

சால்வை வாங்கிக் கொண்டு செங்கழனி பிள்ளையார் கோயிலில் தேங்காய் உடைத்துவிட்டு டாக்ஸியில் போய் மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் இறங்கினேன். சால்வையை கம்பீரமாக இழுத்துப் போட்டுக் கொண்டு கவிஞர்களுக்கே உரிய நடை நடந்து ரெக்கார்டிங் தியேட்டருக்குப் போனேன். தூக்கிவாரிப் போட்டது. தியேட்டர் பூட்டிக் கிடந்தது. அங்கே

சவுண்ட் இஞ்சினியர் ரங்கசாமி மட்டும் இருந்தார். அவரிடம் 'என்ன சார் பூட்டிக் கிடக்கு?'எனக் கேட்டேன்.

"நீங்க யாரு? எதுக்காக வந்திருக்கீங்க?" எனக் கேட்டார் ரங்கசாமி.

"அண்ணா ஃபிலிம்ஸ்ஸோட 'தாய்க்குலம்' பட ஸாங் ரெக்கார்டிங். என்னோட பாட்டைத்தான் இன்னைக்கி திங்கட்கிழமை ரெக்கார்டிங் பண்றதா சொன்னாங்க."

"என்னைக்குச் சொன்னாங்க?"

"சனிக்கிழமை சொன்னாங்க."

"அப்ப... நீங்க ஞாயிற்றுக்கிழமை ஆபீஸ் பக்கம் போகலையா?"

"சால்வை வாங்குற போராட்டமே சரியா இருந்துச்சே...' என மனசுக்குள் நினைத்தபடி "இல்லை" என தலையாட்டினேன்.

"முதலாளிகளுக்குள்ள தகராறு வந்து நேத்தே ஆபீஸை மூடீட்டாங்க" என்றார்.

என் தலையில் சாதாரண இடியல்ல... மிகப்பெரிய இடியே விழுந்ததுபோல இருந்தது. தோல்வி எனக்குப் பழகிப்போன ஒன்றுதான். ஆனால், 'பிழைப்பு நடத்த வைத்திருந்த குப்புசாமியின் இருபது ரூபாயை எப்படிக் கொடுப்பது?' என்கிற கவலைதான் என்னை அதிகமாக ஆட்டிப் படைத்தது.

நேராக பாலகிருஷ்ணனைப் பார்த்து அழாத குறையாகச் சொன்னேன்.

"என்ன பண்ணமுடியும்? அடுத்த மாசம் ரெக்கார்டிங். அப்பத்தான் பணம் கிடைக்கும்னு பொய் சொல்லுங்க" எனச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

'பொய் சொல்றது பெரிய விஷயமில்லை. ஆனா அந்த மீனவனோட பிழைப்பு போயிடுமே' என கவலைப்பட்டாலும் எனக்கு வேறு வழியில்லை. வீட்டுக்குப் போய்விட்டேன்.

வழக்கமாக வீட்டிலிருந்து நான் வருவதும், போவதும் குப்புசாமி மீன் விற்கும் தெரு வழியாகத்தான். இப்போது பாதையை மாற்றி வேறு தெருவழியாக போனேன்.

'பாட்டெழுதப் போனாலும் போனேன். என் பாதையையே மாத்தீட்டியே முருகா' என மனம் நொந்தபடி போனபோது... எதிரே சம்சுதீன் என்கிற என் நண்பர் வந்தார். நடந்த விஷயத்தை அவரிடம் சொன்னேன்.

'நண்பன் அவமானப்படக் கூடாதே' என்பதால் அங்குமிங்கும் அலைந்து இருபது ரூபாய் புரட்டிக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு "இந்தா கடனை அடச்சிடு. இந்த இருபது ரூபாயை நீ திருப்பித் தரவேணாம். வாங்கினவங்ககிட்ட நான் குடுத்துக்கிறேன்" எனச் சொன்னார்.

மீனவரின் கடனை அடைத்தேன். சங்கடத்தை உண்டாக்கிய அந்த சால்வையை மடித்து வீட்டிலேயே வைத்துவிட்டேன்.

தயாரிப்பாளர் லிங்கம் (பின்னாளில் கங்கைஅமரனின் மாமனார்) தயாரித்து, தேவிகா-அசோகன் நடித்துவந்த 'தாய்க்குலம்' படம் பாதியிலேயே நின்றுவிட்டது. மாபெரும் இசையமைப்பாளரான தட்சிணாமூர்த்தியால் (இளையராஜாவின் குரு) பாராட்டப்பட்ட நான் எழுதிய 'பிறப்பதற்கும் இறப்பதற்கும் நடுவிலே' என்கிற பாடலையும், 'வெண்ணிலா முகம் பாடுது' என்கிற பாடலையும் 1986-ஆம் ஆண்டு நான் தயாரித்த 'ஜோதிமலர்' படத்தில் காட்சியின் சூழலுக்கேற்ப சேர்த்துக் கொண்டேன். அந்த இரண்டு பாடல்களையும் ஜேசுதாஸ் பாடினார். ஜெய்சங்கரும், கே.ஆர்.விஜயாவும் பெற்றோர் களாகவும், 'மண்வாசனை' பாண்டியன், 'பன்னீர் புஷ்பங்கள்' சுரேஷ், 'உயிருள்ளவரை உஷா' கங்கா ஆகியோர் மகன்களாகவும் நடித்தனர்.

ஒரு படைப்பு படைக்கப்பட்ட காலத்தில் வெளியாகாமல் போனாலும் அது சிறந்த படைப்பாக இருந்தால் காலந் தாழ்ந்து வெளியாகிற போதும் பெரும் வரவேற்பைப் பெறும் என்பதற்கு எனது பாடல்களே சாட்சி. ஆமாம்...!

1962-ல் நான் எழுதிய

'வெண்ணிலா முகம் பாடுது'

அது கண்ணிலே சுகம் தேடுது

வண்ண மயிலும் வானவில்லும்- பெண்ணுருவில்

வந்து ஆடுது'

பாடல் கால் நூற்றாண்டு கடந்து வெளியாகி ரசிகர்களை மயக்கித்தான்விட்டது. அந்தப் பாடல் இன்றளவும் ரொம்பவே பிரபலமானது.

நான் எழுதிய மிக நீளமான வசனம்.

அதை ஒரே மூச்சில் பேசுவதற்கு சிரமப்பட்ட ரஜினி.

# ரஜினி பேசிய டயலாக்!

என்னை சுரதாவைப் போல சால்வை போட்டுக்கொள்ளச் சொன்ன கே.எம். பாலகிருஷ்ணனும், நானும் 1962-ஆம் ஆண்டிற்குப் பிறகு அவ்வப்போதுதான் சந்திக்க முடிந்தது. முக்தா சீனிவாசன், டி.யோகானந்த் ஆகிய இயக்குநர்களிடம் உதவி இயக்குநராக பிஸியாக இருந்தார். நானும் சினிமாவுக்கு கதை எழுதி பிரபலமாகி பிஸியாகி விட்டேன். அதன் பின் 1976-ஆம் ஆண்டில் பாலகிருஷ்ணன் தன் நண்பர் திருஞானம் என்பவருடன் என்னைத் தேடிவந்தார். பழைய விஷயங்களை அசைபோட்டு சிரித்தோம். குறிப்பாக அந்த சால்வை சங்கடம்.

"என்ன விஷயமாக வந்தீங்க?"

"அண்ணே... கோயம்புத்தூர்ல இருந்து என்.எஸ்.திருமால் என்பவர் படம் தயாரிக்க வந்திருக்கார். என்னை டைரக்ட ராக ஒப்பந்தம் செய்து அட்வான்ஸும் கொடுத்திட்டார். வாழ்க்கையில எனக்குக் கிடைச்சிருக்க மிக நல்ல சான்ஸ். அதுவும் முதல் சான்ஸ். அதனால நீங்க எனக்காக ஒரு கதை சொல்லி புரொடியூஸரை திருப்திப்படுத்தீட்டீங்கன்னா... என்னை வாழவச்ச புண்ணியம் ஒங்களுக்கு கிடைக்கும்" எனச் சொல்லி என் இரு கைகளையும் பற்றிக்கொண்டார் பாலகிருஷ்ணன்.

"நீ டைரக்டராகுறதுக்காக நான் எந்த தியாகத்தையும் செய்வேன்'"என்றேன்.



தயாரிப்பாளரிடம் என்னை அழைத்துச் சென்றார்.

'ஆறு புஷ்பங்கள்' என்கிற கதையைச் சொன்னேன்.

கதையைக் கேட்டு முடித்ததும் 'கலைஞானம் அண்ணே... நான் உங்க படங்களையெல்லாம் பாத்திருக்கேன். இப்ப நீங்க சொன்ன கதையும் பிரமாதமா இருக்கு. இதையே தயாரிக்கிறேன். வேற கதை வேணாம். ஆனா ஒரு கண்டிஷன்...' என இழுத்தார் திருமால்.

"என்ன ஆனா...?"



"உங்க நண்பர் கே.எம்.பாலகிருஷ்ணன் டைரக்ஷனுக்குப் புதுசு. நான் தயாரிப்புக்கு புதுசு. ஒரு ஆர்வத்துல படம் எடுக்க வந்திட்டேன். வந்த பின்னாடிதான் இதுல ஏகப்பட்ட பொறுப்பு இருப்பது தெரியுது. அனுபவங்களும் தேவைப்படுது. அப்பத்தான் படத்தை முடிக்க முடியும்னு தோணுது. நீங்க நிறைய அனுபவப்பட்டவர். அதனால இந்தக் கதையை நான் எடுக்கணும்னா... நீங்க படம் முடியுறவரை இருந்து நிர்வாகம் செய்யணும். அதுல உங்களுக்குச் சிரமம்னா நான் இப்பவே கோயம்புத்தூருக்கு ரயில் ஏறிடுவேன்" என்றார்.

நான் கதை சொல்ற இடத்திலெல்லாம் இப்படியான கோரிக்கையை என்னிடம் வைப்பது வாடிக்கைதான். சிலசமயம் நான் மறுத்தால் "அண்ணே நீங்க சொன்ன கதையை அர்த்தம் மாறாம அப்படியே எடுக்கணும்னா நீங்க கூட இருக்கணும்ணே" என்பார்கள். அதனால் திருமால் கேட்டுக் கொண்டதற்கு சம்மதித்தேன்.

நீண்ட விவாதம் நடத்தி நட்சத்திரங்களை தேர்வு செய்தோம். அதன்படி ஹீரோ விஜயகுமார். ஹீரோயின் ஸ்ரீவித்யா, செகண்ட் ஹீரோ ரஜினி, செகண்ட் ஹீரோயின் ஒய்.விஜயா என முடிவு செய்தோம். ஆறு பெண் பிள்ளைகள் பெற்ற தம்பதிகளையும், அந்தப் பெண் பிள்ளைகளையும் பற்றிய கதை என்பதால் 'ஆறு புஷ்பங்கள்' என படத்திற்கு டைட்டில் வைத்தோம்.

'ஆறு புஷ்பங்கள்' படப்பிடிப்பு தொடங்கியது.

கதைப்படி விஜயகுமாரும், ரஜினியும் தலைமறைவாக வாழவேண்டிய சூழல். அதனால் இருவரும் ஜோஸியர்கள் போல வேஷமிட்டுக்கொள்வார்கள்.

'காசு பணம் சேர... காதல் நிறைவேற... கைரேகை பாருங்கள்' என ஒரு பெரிய போர்டில் எழுதிவைத்துக் கொண்டு ஒரு தெருவில் நிற்பார்கள். ரஜினி நிற்கும் பக்கத்தில் 'கடந்த காலம்' எனவும், விஜயகுமார் நிற்கும் பக்கத்தில் 'எதிர்காலம்' என்றும் இருக்கும். இருவரும் பூதக்கண்ணாடியை வைத்துக் கொண்டு நிற்பார்கள்.

ரஜினியிடம் ஒருவன் வந்து 'என்னோட வரலாறைச் சொல்லுங்க' என கையை நீட்டுவான்.

"உன் பேர் என்ன?"

"கந்தசாமி."

"ஆஹா... 'கா...'னா' காவன்னாவுல தொடங்குற மாதிரி பேரு வச்சாலே ஓஹோனு வருவாங்க. உதாரணத்திற்கு சொல்லணும்னா... காந்தி, காமராஜர், கருணாநிதி, கண்ணதாசன், கட்டபொம்மன். சரி... இதவிடு. நம்ம நாட்ல ஓடுற நதிகளை எடுத்துக்கோ... கங்கை, காவேரி, கோதாவரி, கிருஷ்ணா... இதெல்லாம் 'கா'னா'இனம்தான். கருடன், காக்கை, குயில், கிளி, குருவி... இதுவும் கானா இனம்தான். இதையும் விடு. முக்கியமான தெய்வங்களை எடுத்துக்கோ... காசிவிஸ்வநாதர், கண்ணபிரான், கணேசன், கணேசனோட தம்பி கந்தசாமி... ஆமா ஒம்பேரு என்ன?"

"கந்தசாமி..."

"அடடா... இதைவிட வேறென்ன அதிர்ஷ்டம் வேணும்..."

ரஜினி இந்த நீண்ட வசனங்களை ஒரே மூச்சில் பேசி நடிக்கணும். இதுதான் காட்சி. ஆனால் ஒரே மூச்சில் பேசுவதில் சிரமம் இருந்தது ரஜினிக்கு.

இதைக் கவனித்த நான் ரஜினியின் அருகே சென்றேன்.

"ரஜினி சார்... உங்களுக்குச் சிரமமா இருந்தா டயலாக்கை குறைக்கிறேன். இல்லேன்னா டைரக்டர்கிட்டச் சொல்லி 'கட்' பண்ணி 'கட்' பண்ணி எடுக்கச் சொல்றேன். உங்களுக்கு எது வசதினு சொல்லுங்க" எனக் கேட்டேன்.

"கொஞ்சம் வெய்ட் பண்ணுங்க" எனச் சொல்லிவிட்டு ஷூட்டிங் ஸ்பாட்டைவிட்டு சிறிது தூரம் தள்ளிப்போனார் ரஜினி.

வசனத்தை தனக்குத்தானே சொல்லிச் சொல்லிப்பார்த்தார். இரண்டே நிமிஷத்தில் "சார் நான் ரெடி" என்றார்.

ஷாட் ரெடியானது.

ஒரே மூச்சில் வசனங்களைப் பேசி நடித்து எல்லோரின் கைதட்டலையும் வாங்கினார் ரஜினி.

நான் ஓடிப்போய் அவரின் கையைக் குலுக்கி வாழ்த்துச் சொன்னேன்.

"ரொம்ப தேங்க்ஸ்" என்றார்.

அன்றுமுதல் நானும், ரஜினியும் நெருங்கிய நண்பர்களாகி விட்டோம்.

காரில் ரஜினியை அழைத்துக்கொண்டு வருவதும், ஷூட்டிங் முடிந்ததும் அவரைக் கொண்டுபோய் விடுவதும் என் பொறுப்பு. அப்போது பல

விஷயங்களைப் பேசி, கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வோம்.

எம்.எஸ்.விஸ்வநாதன் இசையில் கண்ணதாசன் பாடல்கள் எழுத 'ஆறு புஷ்பங்கள்' பட ஸாங் ரெக்கார்டிங் வேலைகள் தொடங்கின.

குலதெய்வம் கோயிலுக்கு சாமிகும்பிட ஹீரோ மற்றும் ஹீரோயின் குடும்பத்தினர் மாட்டு வண்டியில் காட்டுப் பகுதியில் போகும்போது மாடுமேய்க்கும் ஒருவன் ஒரு பாடலைப் பாடும் காட்சி.

எம்.எஸ்.விஸ்வநாதன் அருமையான ட்யூனைப் போட்டார். கண்ணதாசன் அழகிய வரிகளில் பாட்டு எழுதித்தந்தார்.

வித்தியாசமான ட்யூன். அதனால் வித்தியாசமான குரல் தேவைப்பட்டது. 'யாரை வைத்து பாட வைப்பது?' என்ற கேள்வி வந்தது.

"நான் கல்லூரி விழா ஒன்றுக்குப் போயிருந்தபோது உச்சஸ்தாயியில் ஒரு மாணவன் இந்திப் பாடலைப் பாடினான். நான் அசந்துவிட்டேன். அவனைப் பாடவைக்கலாமா?" என விஸ்வநாதன் கேட்டார்.

"புதியவர்களை வரவேற்பதற்கு நான் எப்போதுமே தயாராக இருப்பேன். அந்தப் பாட்டுக்கு அவர் தகுதியானவர்னு நீங்க நினைச்சா உடனே கூட்டிவரச் செய்யுங்க" என்றேன் நான்.

அடுத்த ஒருமணி நேரத்தில் அந்த இளைஞன் வந்து சேர்ந்துவிட்டார். அவருக்கு விஸ்வநாதன் பாட்டை கற்றுக் கொடுத்தார்.

அந்த இளைஞன் பாடிய பாட்டின் குரலில்... பாடல் பதிவு நடந்த வாஹினி ஸ்டுடியோவே மயங்கிப்போய்விட்டது. 'இந்த ஆளை எங்கிருந்து கொண்டுவந்தீங்க?' என இசைக் கலைஞர்களெல்லாம் பாராட்டினர்.

குரலால் வசீகரித்த அந்த இளைஞன் சந்திரபோஸ்.

'ஏண்டி முத்தம்மா ஏது புன்னகை

என்னென்ன எண்ணங்கள்

உள்ளத்தில் பின்னுதோ

வெட்கத்தினால் அதை மறைத்தாயோ'

இந்தப் பாடலிலும், குரலிலும் மயக்காதவர் யார்?

பாடலைப் பாடி முடித்ததும் விஸ்வநாதன் காலிலும், என் காலிலும் விழுந்து ஆசிபெற்றார் சந்திர போஸ்.

"தமிழ்நாட்டுல உன்னை அடிச்சுக்க ஆளே இல்லை. நீ பெரிய பாடகரா வருவே" என்றேன்.

ஆனால்... சந்திரபோஸ் சொன்ன பதில் எனக்கு 'ஷாக்' கொடுத்தது.

# ஆறு புஷ்பங்கள்!

'ஏண்டி முத்தம்மா
ஏது புன்னகை'

பாடலைப் பாடி தன் குரலால் மயக்கிய சந்திரபோஸ் பெரிய பாடகராக வரவேண்டும் என ஆசிர்வதித்தேன். ஆனால் சந்திரபோஸ் சொன்ன பதில் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''உங்க ஆசிர்வாதத்திற்கு என்னைக்கும் கடமைப்பட்டவன் நான். ஆனா... வி.சி.குகநாத னோட 'மதுரகீதம்' படத்திற்கு நான் மியூஸிக் டைரக்டராகிட்டேன். கம்போஸிங் நடந்துக்கிட்டிருந்தது. அப்பத்தான் பாடுறதுக்காக கூப்பிட்டு வந்தாங்க. நான் தொடர்ந்து மியூசிக் டைரக்டராகவே கவனம் செலுத்தவிருக்கிறேன்'' என்றார் சந்திரபோஸ்."

சந்திரபோஸ் மியூஸிக் டைரக்டர் ஆனதில் ஒருபுறம் சந்தோஷம். மறுபுறம்... 'இவ்வளவு கம்பீரமான குரலை வச்சிக்கிட்டு பாடகரா கவனம் செலுத்தப் போறதில்லையே...' என்கிற ஷாக் எனக்கு.

''சரிப்பா... இசையில் மட்டுமில்லாம பாடுறதிலயும் கவனம் செலுத்தி பெரிய ஆளா வா'' என்றேன்.

ஆனால் சந்திரபோஸ் இசையமைப்பிலேயே கவனம் செலுத்தினார். இருப்பினும் காலப்போக்கில் அவர் இசையமைத்த படங்களும் சரியாக வராமல்... துயரத்திற்கு ஆளானார்.

பல வருடங்களுக்குப் பின் ஏவி.எம். எடுத்த டி.வி. சீரியல் ஒன்றில் அப்பா வேஷத்தில் நடித்துக் கொண்டிருந்தார். நான் தற்செயலாக ஏவி.எம்.மில் அவரைப் பார்த்தபோது ஓடிவந்து என் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்கலங்கினார். 'அண்ணே முதன்முதலா எனக்கு பாடுற வாய்ப்புக் கொடுத்தீங்க. பெரிய ஹிட் ஸாங் அது. உங்க பேச்சைக் கேட்காம மியூஸிக் டைரக்டரா போய் தலையில மண்ணப்

போட்டுக்கிட்டேன். என் அம்மாகூட 'நீ பாடகரா ஆயிருந்தா இன்னும் பெரிய ஆளா வந்திருப்படா'னு அப்பப்போ சொல்வாங்க'' என்றார்.



''அடுத்து எனக்கொரு சான்ஸ் கிடைச்சா கண்டிப்பா உன்னைப் பாட வைப்பேன்'' எனச் சொல்லிவிட்டு வந்தேன்.

ஆனால் அடுத்த இரண்டு மாதத்தில் சந்திரபோஸ் காலமாகிவிட்டார்.



ஆனால் அவர் பாடியபாட்டு... காலமாகாது ஒலித்துக்கொண்டேயிருக்கும்

'ஐந்து பெண்பிள்ளைகளைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்...' என்பது நெடுங்காலமாகச் சொல்லப்பட்டு வரும் வழக்கு. அதை முறியடிப்பதுபோல் அமைந்ததுதான் ‘ஆறு புஷ்பங்கள்’ படத்தின் கதை.

அழகர்சாமி நாயுடு தம்பதிக்கு (சகஸ்ரநாமம்-பண்டரிபாய்) ஆறு மகள்கள். அவர் குடும்பத்துடன் ஏதாவது விசேஷ வீடுகளுக்குப் போனால் 'என்ன நாயுடு சௌக்யமா?’ என விசாரிப்பார்கள்.

'எத்தனை பிள்ளைகள்?’ எனக் கேட்பார்கள். 'ஆறு’ என்பார். 'ஆண் எத்தனை? பெண் எத்தனை?’ sஎனக் கேட்பார்கள். சற்று தயங்கி 'ஆறும் பெண்தான்’ என்பார். 'அஞ்சப் பெத்தவனே ஆண்டியாவான். நீ ஆறு பெத்த பாவியா? சரிவிடு... மரம் வச்சவன் தண்ணி ஊத்துவான்’ என்பார்கள். இப்படி விசாரிக்கிற ஒவ்வொரு முறையும் அந்த குடும்பத் தலைவர் தலை குனிவார். அப்பா தலைகுனிந்து நிற்பதைப் பார்த்து மூத்த மகள் ஸ்ரீவித்யாவுக்குள் மனப்போராட்டம் நடக்கும். இவர்கள் வீட்டுக்கெதிரே பஸ் முதலாளி வீ.கே.ராமசாமி வீடு இருக்கும். அவரின் மகன் சுருளிராஜன். எதிர் எதிர் வீடு என்பதால் அவ்வப்போது சில சச்சரவுகள் வரும். அப்போது... 'நாயுடு... ஆறு பெண்களைப் பெத்துருக்க. மனசுல வச்சு நடந்துக்க. என்கிட்ட திமிர காட்டாத. எனக்கு ஒரு பிள்ளைதான். சாணைப் பெத்தாலும் ஆணைப் பெத்துருக்கேன்’என அடிக்கடி ஜம்பமடிப்பார் வீ.கே.ஆர். அப்போதும் உள்ளுக்குள் குமுறுவார் ஸ்ரீவித்யா.



ஒருமுறை குலசாமி கும்பிடப் போன இடத்தில் உறவுக்காரரே 'ஆறும் பெண்ணா?' எனக் கேட்க... உறவுகள் முன்பு தலைகுனிந்து நிற்பார். உடனே ஆவேசமாகிவிடுவார் ஸ்ரீவித்யா.

"என்னய்யா யாரைப் பார்த்தாலும் எங்கப்பா ஏதோ பாவம் பண்ணின மாதிரி 'ஆறும் பொண்ணா?'னு கேட்குறீங்க? பொண்ணப் பெத்தவனெல்லாம் பாவியா? ஆணைப் பெத்தவனெல்லாம் புண்ணியம் செஞ்சவனா? நான் தெரியாமத்தான் கேட்கிறேன்... உன்னைப் பெத்துக்க ஒரு தாய் வேணும். உனக்கு சுகம் குடுக்க ஒரு பொண்டாட்டி வேணும். நீமட்டும் ஒரு பொண்ணைப் பெத்துக்கமாட்ட? என்னய்யா நியாயம்? யோவ்... இப்பச் சொல்றேன் கேட்டுக்கோ... "ஆறு பெண்ணப் பெத்த நாயுடுதான் இந்த ஊர்லயே புண்ணியவான்'னு இந்த ஊரே பாராட்ற அளவுக்கு நிரூபிச்சுக் காட்றோம்"'என சவால் விடுவார். ஆறு பெண்களும் அரும்பாடுபட்டு உழைத்து பெரிய வீடு ஒன்றைக் கட்டுவார்கள். கிரஹப்பிரவேசம் நடக்கும். இதனால் ஊரே அங்கு கூடியிருக்கும்.

எதிர்வீட்டுப் பையன் சுருளிராஜன் ஒரு பொருளைத் திருடிக்கொண்டுவந்து வீட்டுக்குள் வைத்துவிடுவார். போலீஸ் தேடிவரும்போது 'எங்க அப்பாதான் திருடினார்' என சுருளி மாட்டிவிடுவார். வீ.கே.ஆரை விலங்கிட்டு ஜீப்பில் ஏற்றுவார்கள். அப்போது 'நாயுடு' என வீ.கே.ஆர். அழைக்க ஓடி வருவார் சகஸ்ரநாமம். 'நாயுடு... ஆறு பெண்ணப் பெத்த

நீ அனாதையாப் போயிருவனு சொல்வேன். சாணைப் பெத்தாலும் ஆணைப் பெத்திருக்கேன்னு நான்னு ஜம்பம் அடிப்பேன். இப்ப என் மகன் எனக்கு விலங்கு மாட்டி என்னை ஜெயிலுக்கு அனுப்புறான். ஆனா உன் பொண்ணுங்க உன்னை உயர்ந்த அந்தஸ்துக்கு கொண்டுவந்திருச்சுக. இப்பச் சொல்றேன்... ஒரு குடும்பத்துல பொண்ணு பிறந்தா என்ன? ஆண் பிறந்தா என்ன? எது பிறந்தாலும் பொறுப்புள்ள புள்ளையா இருந்தா அந்தக் குடும்பம் சிறப்பா இருக்கும். அதை உன் புள்ளைக நிரூபிச்சிட்டாங்க. அவ்வளவு ஏன்... இதுக்கு மேலயும் ஒண்ணு சொல்றேன் நாயுடு. காந்திக்கு பிறந்ததெல்லாம் ஆண்கள்தான். நேருவுக்கு பிறந்தது ஒரே பொண்ணு இந்திரா. இன்னிக்கி உலக அரங்கில் பிரகாசமா நிக்குது'' எனச் சொல்லிவிட்டு ஜீப்பில் ஏறி ஜெயிலுக்குப் போவார் வீ.கே.ஆர்.

பொறுப்புள்ள பிள்ளைகளா இருந்துவிட்டால், ஆறு பெண்களைப் பெற்றவனும் ஆண்டியாகமாட்டான் என முதன்முதலில் எழுதினது நானாகத்தான் இருக்கும் என நினைக்கிறேன்.

'ஆறு புஷ்பங்கள்' படம் வெற்றிகரமாக ஓடியது. பெரும்பாலும் எனது படங்களில் புதியவர்களை அறிமுகம் செய்வது வழக்கம். இந்தப் படத்தில் இயக்குநராக கே.எம். பாலகிருஷ்ணனும், பாடகராக சந்திரபோஸும் அறிமுக மானார்கள். இதற்காகப் பெருமைப்படுகிறேன்.

எங்கள் தெருவில் வயசுப் பையன்கள் இருவர் தெருவில் போகிற வருகிற பெண்களையெல்லாம் கேலி, கிண்டல் பண்ணிக்கொண்டிருந்திருக்கிறார்கள். வயதுக்கு வந்த எனது இரு பெண்களையும் கிண் டல் பண்ணியிருக்கிறார் கள். அப்போது நான் வீட்டுக்குள் சாப்பிட் டுக்கொண்டிருந்தேன். அவர்களின் கேலியை அறிந்த என் மனைவி... மதுரைக்காரம்மாவாச்சே... கோபத்தில் வெடித்து விளக்கு மாற்றுடன் போய் அவர்களை அடிக்காத குறையாக மிகக் கடுமையாகத் திட்டினார். நான் வந்து மனைவியைத் தடுத்தேன்.

''நீங்க பேசாம இருங்க. இந்தமாதிரி பசங்களை அடிமேல் அடி கொடுக்கலேன்னா சரியா வராது'' என்றாள். அவளைச் சமாதானப்படுத்தி வீட்டுக்கு அனுப்பினேன்.

அப்போது எனக்கு ஒரு பொறுப்புணர்ச்சி ஏற்பட்டது. கதை பேசுவதற்காக நம்மை ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, கோயம்புத்தூர்னு கூட்டிட்டுப் போறாங்க. குடும்பத்தைப் பார்த்துக் கொள்கிற அளவுக்கு பெரிய

ஆண்பிள்ளைகள் இல்லை. எனவே என் மூத்த மகளுக்கு திருமணம் செய்து வைத்துவிடலாம்'னு'முடிவு செய்தேன்

இந்தப் பிரச்சினையால் அன்று வழக்கத்தைவிட மிகத்தாமதமாக தேவரின் அலுவலகத்திற்குச் சென்றேன். 'ஏண்டா லேட்டு?' எனக் கேட்டார். விஷயத்தைச் சொன்னேன். அதோடு என் பெரிய மகளுக்கு திருமணம் செய்துவைக்க முடிவு செய்திருப்பதையும் சொன்னேன். 'கல்யாணம் செய்து வைக்கலாம்னாலும் எப்படிப்பட்ட மாப்பிள்ளை வருவானோ? என்ன செலவாகுமோ?னு தெரியலண்ணே'' என்பதையும் சொன்னேன்.

''அடப்போடா நாயி... செலவப்பத்தி கவலப்படாத... நான் இருக்கேன். அதுக்கு முன்னால உனக்கொரு யோசனை சொல்லணும்னு ரொம்பநாளா ஆசடா.''

''என்னாண்ணே?''

''இத்தனை கதை எழுதீட்ட. ஆனா நீ எதுவும் சம்பாதிச்சு வச்சமாதிரி தெரியல. நான் உனக்கு ஒரு ஐடியா சொல்றேன். நீ ஒரு படம் ஆரம்பி. தயாரிக்கத் தேவையான ஃபுல் ஃபைனான்ஸை நான் பண்றேன். நானே கூட இருந்து அந்தப் படத்தை முடிச்சி ஒரு லாபத்தை ஏற்படுத்தி உன் கைல தர்றேன்'' என்றார்.

ஏற்கனவே என் மனதில் படம் தயாரிக்கும் ஐடியா இருந்தது. தேவர் இப்படிச் சொன்னதுமே... 'பருத்தி புடவையாக காய்த்தது மாதிரி' மகிழ்ச்சி ஏற்பட்டது.

'சம்மதம்' என்பதுபோல் சந்தோஷமாக தலையை ஆட்டினேன்.

''நீ சொந்தப் படம் எடுக்க கதை ரெடியா வச்சிருக்கியா?'

''ம்...'' என்றேன்.

பொதுவாக 'கதையைச் சொல்லுங்கடா'எனச் சொல்லும் தேவர் இன்று ''அப்ப உன் படத்தோட கதையைச் சொல்லுடா'' என்றார்.

''டைட்டில் ''விஸ்வரூபம்'ணே'' என ஆரம்பித்து முழுக் கதையையும் சொன்னேன்.

''கதைல சகல அம்சமும் இருக்கு. ரொம்ப சந்தோஷம்டா. முதல்ல ஒரு நல்ல டைரக்டரா புடிச்சி ஏற்பாடு பண்ணீட்டு வா''என்றார் தேவர்.

நான் ரசிகனாக இருக்கும் ஒரு பெரிய டைரக்டரிடம் என் படத்தை இயக்க சம்மதம் வாங்கிக்கொண்டு வந்து தேவரிடம் சொன்னேன்.

'அய்யய்யோ.... அந்த டைரக்டர் வேணாம்டா' என்றார் தேவர்.

நான் அதிர்ச்சியில் உறைந்துபோனேன்.

# பெரிய மனிதர்களின் தர்ம மனது!

பாணியில் படங்களை இயக்கி புகழ்பெற்ற அந்த பெரிய டைரக்டரின் தீவிர ரசிகன் நான். அதனால்தான் தேவரின் ஃபைனான்ஸில் நான் முதன்முதலாக தயாரிக்கப்போகும் படத்திற்கு அந்த டைரக்டரையே இயக்குநராக்க விரும்பி அவரை வீட்டில் போய் சந்தித்தேன். அவருடன் எனக்கு முன்பே பழக்கமுண்டு.

''உட்காருங்க கலைஞானம். என்ன விஷயமா வந்திருக்கீங்க?''

''சார்... உங்க டைரக்ஷன்ல படம் எடுக்க விரும்புறேன்.''

''பண்ணலாமே. கதை என்ன சொல் லுங்க?''

நான் சுருக்கமாக கதையைச் சொன்னேன்.

''நல்லா இருக்கு. கண்டிப்பா நான் டைரக்ஷன் பண்ணித்தர்றேன்''என்றார்.

எனக்கு சந்தோஷம் தாங்கவில்லை. ஓட்டமும் நடையுமாக வந்து தேவரிடம் சொன்னேன்...

''அண்ணே என் படத்தை ஸ்ரீதர் டைரக்ட் பண்றதுக்கு சம்மதிச்சிட்டார்ணே.''

''அய்யய்யோ... ஸ்ரீதர் வேணாம்டா'' என்றார் தேவர்.

நான் அதிர்ச்சியில் உறைந்துபோனேன்.

''ஏன் ஸ்ரீதர் வேண்டாம்னு சொல்றேன் தெரியுமாடா?''”

'தெரியாது’ என்பதுபோல நான் தலையாட்டினேன் அதிர்ச்சி விலகாமல்.



"ஸ்ரீதரோட படம் ஒண்ணுவிடாம பார்க்கிற அவரோட பெரிய ரசிகன் நான். நம்ம 'தமிழ்நாட்டுக்கு ஸ்ரீதர் மாதிரி ஒரு டைரக்டர் கிடைச்சிருப்பது பெருமை'னு நான் பார்க்கிறவங்ககிட்டயெல்லாம் சொல்லுவேன். அது உனக்கும் தெரியும். அவர் படம் எல்லாமே நல்ல தரமான படம். தேவிகா, கல்யாண்குமார், முத்துராமன் மூணு பேரையும் வச்சுக்கிட்டு ஒரு ஆஸ்பத்திரி செட்லயே இருபதே நாள்ல 'நெஞ்சில் ஓர் ஆலயம்' படத்தை எடுத்தார்டா. அந்தப்படத்த நான் எத்தன தடவை பார்த்திருப்பேன்னு கணக்கே இல்லடா. அடடா... அந்த மனுஷன் எங்கடா கத்துக்கிட்டாரு. கேமராவை எங்கெங்கயோ தூக்கிவச்சு ஆங்கிள் வைக்கிறாரு. அவர மாதிரி ஒரு டைரக்டர் இனிமே பிறக்க முடியாது. அந்த மாதிரி படமும் எடுக்க முடியாது. அவரு ரொம்ப கிளாஸா படம் எடுக்குற டைரக்டர். ஆனா நான்... கமர்ஷியலா படம் எடுக்குறவன்.

இந்தப்படம் எடுக்குறதே உன் குடும்பத்துக்கு நல்லது செய்யணும்னுதான். என்னோட சென்ட்டிமெண்ட்படி உன் கதையில ஒரு ஸீன்ல நாய விடுவேன். குதிரைய விடுவேன். அம்புட்டு ஏன்... கழுதயக்கூட விடுவேன். அது சக்ஸஸ் ஆகிரும். அவரு டைரக்டர்ன்னா நான் அப்படி செய்ய முடியுமா? அவரு பேரு கெட்டுப் போகும்டா. அந்த சிறந்த கலைஞன் ரொம்ப நாளைக்கு நிறைஞ்ச ஆயுளோட வாழட்டும். அவருக்கு என்ன உதவி தேவைப்பட்டாலும் நான் செய்வேன். நம்ம படத்துக்கு அவரை டைரக்டரா போட வேணாம் கலைஞானம். நான் ஒரு சமாச்சாரம் சொல்றேன் மனசுலயே வச்சுக்குறியா?"

"ம்..."

"இப்பத்தான் பத்துநாளைக்கி முன்னாடி... எனக்கு ஒரு போன் வந்துச்சு."

"அலோ... யார் பேசுறது?"

"நான் ஸ்ரீதர் பேசுறேன்."

"எந்த ஸ்ரீதர்?"

"டைரக்டர் ஸ்ரீதர்."

எனக்குத் தூக்கிவாரிப் போட்டிருச்சு. 'என்ன முருகா?' ன்னு'கேட்டேன்.

"தேவரய்யா... நான் உங்கள பார்க்க வர்றேன்."



"அய்யய்யோ... நீங்க வரவேணாம். நானே உங்களைப் பார்க்க வர்றேன்."

'இல்லங்க தேவரய்யா... எனக்கு காரியம் ஆகணும்னா நான்தானே வரணும்'னு சொல்லிட்டு கிளம்பி வந்தார்.

(தேவர் வீட்டுத் தெருவுக்கு பக்கத்து தெருவில்தான் ஸ்ரீதரின் வீடு இருந்தது. அதனால் ஸ்ரீதர் நடந்தே தேவரின் வீட்டுக்கு வர... வாசலில் நின்று வரவேற்று அழைத்துச் சென்றார் தேவர்.)

"என்ன முருகா... என்ன விஷயம்?"

"தேவரய்யா, எனக்கு அர்ஜெண்ட்டா ஒரு தொகை தேவைப்படுது. அதை நாளைக்கு காலைல குடுக்கலேன்னா பெரிய பிரச்சனையாயிடும். நீங்க கைமாத்தா கொடுத்து உதவினா... ஒருவாரம், பத்துநாள்ல திருப்பிக் கொடுத்துடுறேன்."

உடனே தேவர் உள்ளே சென்று ஸ்ரீதர் கேட்டதைவிட ஒரு பங்கு அதிகமாகவே பணத்தை எடுத்திருக்கிறார். பணத்தை வைக்க பை

எதுவும் சிக்காததால் கையில் சிக்கிய ஒரு துணியில் பணத்தை சுற்றியிருக்கிறார். அந்தத் துணி.... தேவர் தனது பிரம்மச்சர்யத்தை கடைப்பிடிப்பதற்காக பழநி மலை முருகனின் கோவணத்தை வாங்கிவந்து தண்ணீரில் நனைத்து பிழிந்து குடிப்பார்... என ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேனல்லவா.... அந்தத்துணி.

துணியில் சுற்றிய பணத்தை ஸ்ரீதரிடம் கொடுத்த தேவர்... "இது முருகனோட பிரசாதம். இதை நீங்க எந்தக்காலத்திலயும் எனக்கு திருப்பித்தர வேணாம். முதல்ல உங்க பிரச்சனையைத் தீருங்க. உங்களுக்கு பணம் தேவைப்படும் போது தயங்காம என்கிட்ட கேளுங்க. நீங்க மேலும் மேலும் நிறைய படங்களை டைரக்ட் பண்ணணும்கிறது என் னோட ஆச. காட் பிளஸ் முருகா"'எனச் சொல்லியனுப்பியிருக்கிறார் தேவர்.

"இப்படி நான் மதிக்கிற மனுஷனை என்கிட்ட கொண்டுவந்து டைரக்டரா வேலை பார்க்கச் சொன்னா வெளங்குமாடா?" எனக் கேட்டார் தேவர். தேவர் சொன்னதில் இருந்த நியாயத்தை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

"சரிப்பா அதவிடு. உனக்குத்தான் எல்லா டைரக்டர்களையும், நடிகர், நடிகைகளையும் நல்லா தெரியுமே. வேற ஒரு டைரக்டரைப் பிடி. ஒரு ஹீரோவைப் பிடி. பொன்னு வைக்கிற இடத்துல பூவ வைக்கிற மாதிரி உன்னால முடிஞ்சத குடுத்து புக் பண்ணிட்டுவா. அதுக்கப்புறம் எவ்வளவு பணம் தேவையோ நான் பாத்துக்கிறேன்..." எனச் சொல்லி என்னை அனுப்பி வைத்தார் தேவர்.

மாடியிலிருந்து கீழே இறங்கி நடந்தேன். என் மனசெல்லாம் தேவரின் தர்மசிந்தனை ஆக்கிரமித்தது.

தன்னிடம் பணிபுரிகிறவர்களுக்கு தேவர் அள்ளித் தருவார். ஆனால் தனக்கு நேரடித் தொடர்பு இல்லாத... தான் ரசிக்கும் கலைஞன் என்பதற்காக ஸ்ரீதர் கேட்டதைவிட ஒருமடங்கு சேர்த்து தந்த அந்தக் காரியம் என்னை சிலிர்க்க வைத்தது.

அப்போது டைரக்டர் கே.எஸ்.கோபாலகிருஷ்ணனுக்கு ஏற்பட்ட ஒரு அனுபவம் என் நினைவுக்கு வந்தது.

நான் கதாசிரியனான ஆரம்ப காலகட்டங்களில் கற்பகம் ஸ்டுடியோவில் அமர்ந்து நானும், கே.எஸ்.கோபாலகிருஷ்ணனும் கதை விவாதம் செய்துகொண்டிருந்தோம். அப்போது அவருக்கு ஒரு போன் வந்தது.

"கலைஞானம்... பெரிய்ய இடத்திலிருந்து போன் வந்திருக்கு. நல்ல கதை இருந்தா சொல்லச் சொல்வாங்கனு நினைக்கிறேன். நான் போய்ட்டு வந்திடுறேன். நீ இங்கேயே இரு" எனச் சொல்லிவிட்டுப் போன கோபாலகிருஷ்ணன், அடுத்த ஒரு மணிநேரத்தில் கட்டுக்கட்டாக பணத்துடன் திரும்பிவந்தார்.

"என்னண்ணே... பெரிய அட்வான்ஸா வாங்கிட்டு வந்திருக்கீங்க போல" எனக் கேட்டேன்.

"கதைக்கான அட்வான்ஸ் இல்லை. நடந்த சம்பவமே வேற.'நான் இப்போ எடுத்துக்கிட்டிருக்க படத்துக்கு பல இடங்கள்ல ஃபைனான்ஸ் தேடி அலைஞ்சேன். அவங்க சொல்ற வட்டி எனக்கு கட்டுப்படியாகாது. நியாயமான வட்டிக்கி பணம் கிடைக்காததால் ரெண்டுமாசமா ஷூட்டிங்கை நிறுத்திட்டு போராடிக்கிட்டிருக்கேன்ல. இந்த விஷயம் எப்படியோ ஜெமினி அதிபர் எஸ்.எஸ்.வாசன் கவனத்துக்கு போயிருக்கு. அவர்தான் அழைச்சிருந்தார். போய்ப் பார்த்தேன்.

"உங்க பிரச்சனையை கேள்விப்பட்டதுமே உங்களுக்குனு ஒரு அமௌண்ட்டை ஒதுக்கீட்டேன். மேலும் தேவைப்பட்டாலும் என்கிட்ட கேளுங்க. தர்றேன். உங்களோட எல்லா கதைகளையும் ரசிக்கிறவன் நான். நல்ல சிந்தனையாளர் நீங்க. ஒரு சிந்தனையாளனோட மண்டையில் பிரச்சனைகள் ஏறிக்கிச்சுன்னா... அவனோட சிந்தனை வெளியே போயிடும். இது நான் கண்ட அனுபவம். இந்தப் பணத்தை வச்சு படத்தை முடிங்க. உங்களுக்கு எப்போ வசதிப்படுதோ... அப்போ திருப்பிக் குடுங்க போதும்'னு சொன்னார் வாசன்.

'ரொம்ப நன்றிங்கய்யா'னு சொல்லிட்டு பணத்தை வாங்கிக்கிட்டு கிளம்பினேன்.

மறுபடியும் 'கே.எஸ்.ஜி.'னு கூப்பிட்டார்.

"நீங்க என்கிட்ட கேட்காமலே... உங்களுக்கு உதவணும்கிற ஞானம் எனக்கு எப்படி வந்துச்சுனு தெரியுமா?"

"சொல்லுங்கய்யா."

"நான் பெரிய பட்ஜெட்டில் படம் எடுத்துக் கொண்டிருந்தபோது, பண நெருக்கடியால் படப்பிடிப்பு தள்ளித் தள்ளிப் போனது. இதைக் கேள்விப்பட்ட 'இந்து' பத்திரிகையின் உரிமையாளர் சீனிவாசன் 'வடநாடு வரை கொடிகட்டிப் பறக்கிற நீங்க தயங்கி நின்னுறக்கூடாது'ன்னு

சொல்லிட்டு ஒரு பாக்ஸில் பணத்தை வைத்து 'உங்களுக்குத் தேவையானது இதுல இருக்குன்னு' சொல்லிட்டுக் கொடுத்தார். அதோட, 'இந்து' சீனிவாசன், ஒரு முக்கியமான விஷயத்தையும் எங்கிட்டச் சொன்னார். 'தொழில்ல நேர்மையானவங்க, ஒழுக்கமானவங்க, திறமையானவங்க கஷ்டப்படும்போது நம்மகிட்ட கேட்டுத்தான் உதவணும்ங்கிறதில்ல. நம்ம கைல பணம் இருந்தா கண்டிப்பா உதவணும். அதனாலதான் உங்களுக்கு இதைச் செய்றேன். நீங்களும் நல்ல கலைஞர்கள் கஷ்டப்படுறதை கேள்விப்பட்டா, உங்களிடம் பணம் இருந்தா கேட்காமலே உதவி செய்யுங்க'ன்னு சொல்லி அனுப்பினார். அதனாலதான் கே.எஸ்.ஜி. இப்போ, நான் உங்களுக்கு இந்த உதவியை செய்றேன்'' என தனக்கு வாசன் செய்த உதவியை என்னிடம் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார் கே.எஸ். கோபாலகிருஷ்ணன். பெரிய மனிதர்கள் எப்படியெல்லாம் பெரிய மனதுடன் வாழ்ந்திருக்கிறார்கள், வாழ்கிறார்கள் என மனதில் அசைபோட்டபடியே வீடு வந்து சேர்ந்தேன்.

நான் முதல் முதலாக தயாரிக்கும் படத்தில் ரஜினியை ஹீரோவாக ஆக்குவது என முடிவு செய்தேன். அப்போது உண்டான சிக்கல்கள்...?

# ரஜினியின் அன்றைய சம்பளம்!

நான் முதன்முதலாக தயாரிக்கவிருக்கும் 'விஸ்வரூபம்' படத்திற்கு ரஜினியை ஹீரோவாக்க மனதிற்குள் முடிவு செய்தேன். கேரக்டர் ஆர்ட்டிஸ்ட்டாகவும், செகண்ட் ஹீரோவாகவும் நடித்துவரும் ரஜினிக்கு நல்ல எதிர்காலம் உண்டு, அவர் நல்லா வருவார்' என என் அறிவுக்குப் பட்டது. எனது கதையான 'ஆறு புஷ்பங்கள்' படத்தில் நடித்ததன் மூலம் எனக்கும், ரஜினிக்கும் இடையே நல்ல நட்பு ஏற்பட்டி ருந்ததால் ரஜினியை ஹீரோவாக்குவது என தீர்மானித்துக் கொண்டேன்.
படத்தயாரிப்புக்கு தேவையான ஃபைனான்ஸை தேவர் ஏற்பாடு பண்ணித் தருவதாகச் சொல்லிவிட்டார். என்றாலும் 'உனக்குத்தான் எல்லா நடிகர்களோடவும் பழக்கம் இருக்கே. உன் கைல இருக்கிறத கொடுத்து புக் பண்ணீட்டுவா. பொன் வைக்கிற இடத்தில் பூ வை'னு சொல்லீட்டார். என்னதான் நாம நடிகர்களா பழகி வச்சிருந்தாலும் அவுக கேட்கிற அட்வான்ஸை கொடுத்துத்தானே ஆகணும். அந்த பணத்தை நம்மால கொடுக்க முடியுமா? இந்தக் காலத்துல பூவ வச்சா யாரு ஏத்துக்குவா? திரும்ப நம்ம காதுல அந்தப் பூவ வச்சு விட்றுவாங்களே...?

இப்படி பணக்குழப்பத்திலேயே இரவெல்லாம் தூக்கம் வரவில்லை.

மறுநாள் காலையில்....

ராயப்பேட்டையில் ரஜினி தங்கியிருந்த வீட்டிற்குப் போனேன்.

ரஜினியின் அறைக்குள் நுழைந்தேன். என்னைப் பார்த்ததும் வரவேற்று உட்கார வைத்தார். அந்த நேரத்தில் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருதாய் ஒரு பிளேட்டில் பிரட் ஆம்லெட் எடுத்து வந்து ரஜினியிடம் கொடுத்துவிட்டுப் போனார்கள்.



"உங்களுக்கு?" எனக் கேட்டார் ரஜினி.

"நான் டிபன் சாப்பிட்டுட்டுத்தான் வந்தேன். ஆமா... அவங்க யாரு ஒங்க அம்மாவா?"

"அம்மாவேதான். அம்மாவைவிட அதிகமா என்னை நேசிக்கிறவங்க" எனச் சொன்ன ரஜினி அறைக்கு வெளியே நின்றிருந்த இருவரைச் சுட்டிக்காட்டி, "அவங்க என்னோட நண்பர்கள் விட்டல், முரளி. அவங்க ரெண்டு பேரோட தாயார். என்னையும் சொந்தப்பிள்ளை போல கவனிச்சுக்கு வாங்க. சென்னைக்கு வரும்போதே நானும், என் நண்பர்களும் சினிமாவில் ஜெயிச்சே ஆகணும்னு திட்டம் போட்டு வந்தோம்" எனச் சொல்லிச் சிரித்துவிட்டு, டிபனையும் சாப்பிட்டு முடித்தார்.



(தோசைக்கல்லில் ஆம்லெட் போட்டு நடுவில் பிரட்டை வைத்து ஆம்லெட்டால் மூடி சுட்டெடுக்கப்படும் இந்த பிரட் ஆம்லெட்தான் பல வருடங்களாக ரஜினியின் காலை உணவு. மதியத்தில் காய்கறித் துண்டுகள் மற்றும் பழத்துண்டுகள் மட்டுமே சாப்பிடுவார். இரவில் மட்டும் மிக அதிகமாக இரை எடுப்பார். எனக்குத் தெரிந்து ரஜினியின் பலகால உணவுப்பழக்கம் இதுதான்.)

"என்ன விஷயம் கலைஞானம் சார்?"

''நான் உங்ககிட்ட ஒரு கதை சொல்லப்போறேன். நானே படம் தயாரிக்கப் போறேன். நீங்க ஹீரோவா நடிக்கணும்.''

ஆச்சர்யமான ரஜினி ''இஸ் இட்?'' எனக் கேட்டார்.

'ஆமாம்' என்பதுபோல தலையாட்டினேன்.

உடனே சேரைவிட்டு எழுந்துபோய் ஹாலில் இருந்த ஸ்ரீராகவேந்திரர் படத்தைத் தொட்டு வணங்கிவிட்டு வந்து உட்கார்ந்தார்.

நான் ரஜினியையே பார்த்தேன்.

''அவர்தான் (ராகவேந்திரர்) என்னோட குரு, தெய்வம்... எனக்கு எல்லாமே அவர்தான்'' என்ற ரஜினி 'கதை எப்படி?' எனக் கேட்டார்.

நான் கதையைச் சொன்னேன். என்னுடைய இயல்புப்படி ஒவ்வொரு ஸீனையும் நடித்துக் காட்டியபடியே கதையைச் சொல்லி முடித்தேன்.

மகிழ்ச்சியில் என் கையைப்பிடித்து தன் கையால் இறுக்கினார்.

கதையில் செகண்ட் ஹீரோ கேரக்டரும் இருந்ததால் ரஜினிக்கு ஒரு சந்தேகம். 'நான்தானே ஹீரோ' எனக் கேட்டார்.

''அதுல என்ன சந்தேகம்? நீங்கதான் ஹீரோ. அதனாலதான் முழுக்கதையையும் உங்ககிட்ட சொல்றேன்'' என்றேன்.

ஸ்டைலாக சிரித்த ரஜினி 'எப்போ இருந்து ஷூட்டிங்' எனக் கேட்டார்.

''எப்போ கால்ஷீட் கொடுத்தாலும் அப்பவே ஷூட்டிங்கை ஆரம்பிச்சிடுவேன்.''

''எப்போ?'னு நீங்களே சொல்லுங்க.''

''வர்ற ஜனவரி 14-ந் தேதி தைப் பொங்கல் நாளில் படத்துக்கு பூஜை போட்டு ஷூட்டிங் ஆரம்பிச்சிடலாம்'' என்றேன். (ரஜினியிடம் நான் கதை சொல்லும் இந்தத் தருணம் என்பது 1977 டிசம்பர் மாத இறுதியில்)

''ஓ.கே.'' என மீண்டும் எனக்கு கைகொடுத்த ரஜினி, ''என்னோட சம்பள விஷயமா நட்ராஜ்கிட்ட பேசிக்கங்க'' என்றார்.

நான் அறையைவிட்டு வெளியே வந்தேன். நட்ராஜிடம் பேசினேன். (இந்த நட்ராஜ் பின்னாளில் 'அன்புள்ள ரஜினிகாந்த்', ''வள்ளி 'படங்களை இயக்கியவர்.)

''ரஜினிக்கு என்ன சம்பளம் கொடுக்கணும்?''"

''அதை நீங்களே முடிவு பண்ணுங்க கலைஞானம் சார். அதே நேரத்தில்... ரஜினிக்கு இப்போ ஒரு டிமாண்ட் இருக்கு. அதை மனசில் வச்சு ஒரு நல்ல சம்பளத்தில் ஃபிக்ஸ் பண்ணி, ஒரு நல்ல அட்வான்ஸூம் கொடுத்தீங்கன்னா, உடனே உங்க புராஜெக்ட்டை ரஜினி ஓ.கே. பண்ணிடுவார். நாளைக் கடத்தாம ரெண்டுநாள்ல நல்ல முடிவு பண்ணுங்க'' என்றார் நட்ராஜ்.

'ஆறு புஷ்பங்கள்' படத்தை நானே முன்னின்று தயாரித்துக் கொடுத்த வகையில் அந்தப் படத்திற்கு ரஜினிக்கு சம்பளமாக 7ஆயிரம் ரூபாய் கொடுத்திருந்தது எனக்குத் தெரியும். அதில் செகண்ட் ஹீரோ. இந்தப்படத்தில் ஹீரோவாக புரமோஷன் ஆகிறாரே.... அதனால் "50ஆயிரம் சம்பளம். 5ஆயிரம் அட் வான்ஸ். ரெண்டு நாளுக்குள்ள அட்வான்ஸ் கொடுத்திடுறேன்'' என்றேன்.

உடனே சிரித்தபடி ரஜினியின் அறைக்கு ஓடினார் நட்ராஜ்.

சில நிமிடங்களில் சிரித்தபடி வந்த நட்ராஜ் 'டபுள் ஓ.கே.' என்றார். ரஜினியும் அறையைவிட்டு வெளியே வந்தார். இருவரிடமும் விடை பெற்றுக்கொண்டு வீடு வந்தேன்.

வீட்டின் மாடியில் எனது தயாரிப்பு அலுவலகம் இருந்தது. அங்கே சென்று அமர்ந்தேன்.

அன்றைய ஐயாயிரம் ரூபாய் என்பது இன்றைய ஐந்து லட்சத்திற்கும் மேலான தொகை. ஒரு சாதாரண எழுத்தாளன் நான். 'உணர்ச்சிவசப்பட்டு ரெண்டுநாள்ல ஐயாயிரம் அட்வான்ஸ் கொடுத்து விடுவதாக சொல்லிவிட்டோமோ?'என சிந்தித்துக் கொண்டிருந்தபோது என் நண்பர் வெங்கட்ராம அய்யர் அங்கே வந்தார்.

என் சூழ்நிலையைப் புரிந்து கொண்ட அவர் 'என் கைல இப்போ ஒரு இருநூறுரூபா இருக்கு' என்றார்.

அவர் சொல்லிக்கொண்டிருக்கும் போதே டைரக்டர் ஸ்ரீதரின் உதவி இயக்குநரான எம்.பாஸ்கர் வந்தார். ரஜினியை வைத்து நான் எடுக்கப்போகும் இந்தக் கதையின் விவாதத்தில் கலந்து கொண்டவர் பாஸ்கர்.

''வருஷப் பொறப்பன்னைக்கு (ஜனவரி-1) தவறாம திருப்பதியில் இருப்பது என்னோட பழக்கம். இந்த வருஷமும் திருப்பதி போகணும். இருநூறு ரூபா கொடுத்து உதவ முடியுமா?'' எனக் கேட்டார் பாஸ்கர்.

"வெங்கட்ராமன்... உங்கக்கிட்ட இருக்க இருநூறு ரூபா ஒரு நல்ல காரியத்துக்கு உதவட்டும். அதை பாஸ்கரிடம் கொடுங்க" என்றேன். அவரும் கொடுத்தார். பணத்தை வாங்கிக்கொண்டு பாஸ்கர் கிளம்பிவிட்டார்.

நானும், வெங்கட்ராமனும் பல முயற்சிகள் எடுத்தும் பணம் புரளவில்லை.

எம்.எஸ்.காசியின் 'தாய்வீட்டு சீதனம்' பட வெளியீட்டுக்காக நான் வெங்கட்ராம அய்யரிடம் பத்தாயிரம் ரூபாய் கேட்டபோது பல நண்பர்களிடம் வசூலித்து தந்தாரே... அதே பாணியில் முயன்றும் கைகூடவில்லை.

பணம் கிடைக்காவிட்டாலும்கூட நான் படம் தயாரிக்கப் போவது தெரிந்து பல புதிய முகங்கள் வாய்ப்புக் கேட்டு வந்தார்கள். அப்படி வேஷம் கேட்டு வந்த ஒரு இளைஞர் 'குளுகுளு' என அம்சமாக இருந்தார். வசதியான ஆளாகவும் தெரிந்தார். 'அவருக்கு ஒரு நல்ல வேஷம் கொடுத்துவிடலாம்' என மனதிற்குள் நினைத்துக்கொண்டு... "தம்பி, ஒரு ஆயிரம் ரூபாய் புரட்டிக் கொடுத்து உதவினா நல்லா இருக்கும். ஒருவாரத்துல திருப்பிக் கொடுத்திடுறேன்" எனக் கேட்டேன்.

என்னை ஏற இறங்கப் பார்த்த அந்த இளைஞர் பதில் எதுவும் சொல்லாமல் மாடியிலிருந்து இறங்கிப் போய்விட்டார்.

அந்த இளைஞர் போனபிறகு... 'வேஷம் கேட்டு வந்த மனுஷன்கிட்ட பணம்கேட்டா அவரு நம்மள எவ்வளவு கேவலமா நினைப்பாருனு அறிவுக்கு எட்டாமப் போச்சே'என நொந்துகொண்டேன்.

அந்த இளைஞர் யார் தெரியுமா?

# ரஜினியை ஹீரோவாகப் போடாதே!

நடிக்க வாய்ப்புக் கேட்டுவந்த இளைஞ னிடம் ஆயிரம் ரூபாய் கடன் கேட்டதும், அந்த இளைஞர் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டுப் போனார். அவர் போனபிறகு 'அவரிடம் பணம் கேட்டது தவறாச்சே...' என என்னை நானே நொந்துகொண்டேன்.
அந்த இளைஞர்... மோகன் நடராஜன். (பின்னாளில் 'ராஜகாளியம்மன் எண்டர் பிரைசஸ்' என்கிற தயாரிப்பு நிறுவனம் துவங்கி விஜய் நடித்த "கண்ணுக்குள் நிலவு',' அஜீத் நடித்த 'ஆழ்வார்', 'சூர்யா' நடித்த 'வேல்', 'விக்ரம் நடித்த 'தெய்வத் திருமகள்''உட்பட பல வெற்றிப் படங்களைத் தயாரித்து புகழ்பெற்ற தயாரிப் பாளராக இருக்கிறார். பல படங்களில் முக்கிய பாத்திரங்களிலும் நடித்து புகழ் பெற்றார், ஒரு தம்பியைப்போல இன்றும் என்னிடம் பழகிவருகிறார் மோகன் நடராஜன்.

"போங்கண்ணே... உங்க உழைப்புக்குத் தகுந்தபடி சம்பாதிக்காம விட்டுட்டீங்களேண்ணே" என என்னை பார்க்கிறபோதெல்லாம் சொல்லுவார்.

திட்டமிட்டபடி ரஜினிக்கு அட்வான்ஸ் கொடுத்தே ஆகவேண்டும் என்பதால் 'சடன்'னு ஒரு முடிவெடுத்தேன். மாடியிலிருந்து இறங்கி வீட்டுக்குள் போனேன். என் மனைவியின் மாங்கல்யத்தில் இருந்த குண்டுமணிகளையும், காசுகளையும் கழற்றச் சொல்லி வாங்கிக்கொண்டு போனேன். விற்றேன். சில நண்பர்களை துரத்திப் பிடித்து பணம் வாங்கினேன்.



இப்போது என் கையில் 4700 ரூபாய் இருந்தது. 300 ரூபாய் பற்றாக்குறை. வெங்கட்ராம அய்யரிடம் சொன்னேன். அவர் புரட்டிக்கொண்டு வந்து கொடுத்தார். சொன்னபடி இரண்டே நாளில் ரஜினிக்கு அட்வான்ஸ் கொடுக்க ஐயாயிரம் ரூபாய் தயார் செய்துவிட்டேன்.

(இப்படி நான் கஷ்டப்பட்டு பணம் சேகரித்தது நேரில் பார்த்த என் நண்பர்களுக்கும், என் மனைவிக்கும் மட்டும்தான் தெரியும். நான் யாரிடமும் இதை இதுவரையிலும் சொல்லவில்லை. வயதான காலத்தில் இப்போது வாய்தவறி எல்லா உண்மைகளையும் இங்கே சொல்லிவிட்டேன்)

மறுநாள் காலை....

ரஜினியைச் சந்தித்து அட்வான்ஸ் பணத்தை அவர் கையில் கொடுத்தேன். தன் இரும்புக் கைகளால் என் கையை அழுத்திக் குலுக்கி மகிழ்ச்சி தெரிவித்தார். நட்ராஜைக் கூப்பிட்டு "கலைஞானம் சாருக்குத் தேவையான கால்ஷீட்டை கொடுத்திடுங்க" எனச் சொன்னார்.

"ஜனவரி 14-ல் கற்பகம் ஸ்டுடியோவில் 'விஸ்வரூபம்' பட பூஜை' என ரஜினியிடம் நினைவு படுத்திவிட்டு கிளம்பினேன்.

கதை தயார். ஹீரோவுக்கும் அட்வான்ஸ் கொடுத்தாகி விட்டது. ஆனாலும் படத்தைத் தயாரிக்க எனக்கு ஃபைனான்ஸ் ஆதாரம் தேவர்தானே. அதனால் ரஜினிக்கு அட்வான்ஸ் கொடுத்த கையோடு தேவரின் அலுவலகத்திற்குப் போனேன். அவரைப் பார்த்ததுமே சொன்னேன்...

"அண்ணே... ஒரு சந்தோஷ சேதி."

"என்னடா அந்த சேதி? சொல்லுடா?" ஆர்வமாகக் கேட்டார் தேவர்.

"ஹீரோவா ரஜினிகாந்த்தை புக் பண்ணீட்டேன்."

வியப்பான காரியமாகவோ அல்லது தனக்குப் பிடிக்காத காரியமாகவோ இருந்தால் தன் மூக்கின்மேல் கைகளால் பொத்திக்கொண்டு பார்ப்பது தேவரின் மேனரிஸம். இப்போதும் அந்த மேனரிஸத்தைச் செய்தபடி எதுவும் பேசாமல் என்னையே பார்த்தார்.

சிறிது நேரம் கழிந்ததும்... "ஏண்டா, எது செஞ்சாலும் ஏறுக்குமாறா செய்றியே ஒனக்கு புத்தி இல்லையா?" என கடிந்துகொண்ட தேவர் 'ரஜினியை ஹீரோவா போடாதே' என்றார்.

நான் ஒன்றும் புரியாமல் திகைத்துப் போய், குழம்பிப்போய் அவரையே பார்த்தேன். பிறகு சுதாரித்துக்கொண்டு சொன்னேன்.

"அண்ணே... நான் ரஜினிக்கு ஐயாயிரம் அட்வான்ஸ் குடுத்திட்டேன்ணே."

"அதனால என்ன? ரஜினியை நீ புக் பண்ணினதுல தப்பே இல்லடா. படம் பூரா வர்ற வில்லன் வேஷத்தை ரஜினிக்கு கொடு. அவரோட ஸ்டைலுக்கு அது புதுமையா இருக்கும். அவர ஹீரோவாப் போட்டா அது வியாபாரத்துக்கு எந்த வகையிலும் ஹெல்ப்பா இருக்காது. உடனே போய் ரஜினியைப் பார்த்து 'தேவரு சொன்னாரு'னு சொல்லி 'வில்லன் வேஷத்துல நடிங்க'னு சொல்லிப்புட்டு வந்துரு. ஹீரோ வேஷத்துக்கு ஜெய்சங்கரையோ, ரவிச்சந்திரனையோ போடு. அப்படிப் போட்டேனா எனக்கு வியாபாரம் பண்றதுக்கு ரொம்ப ஹெல்ப்பா இருக்கும். எப்புடியும் லாபம் பார்த்திடுவேன். அப்பத்தான் உனக்கு உதவியா இருக்கும்டா பைத்தியக்காரா. நான் எந்த புதுமுகத்தையும் ஹீரோவா போட்டதில்ல. காரணம்... வியாபாரம். அதுதான் என்னோட ஃபார்முலா. ஏன் அப்படிச் சொல்றேன்னா... வட்டிக்கி வாங்கித்தான் உன் படத்துக்கு பணம் தரப்போறேன். அத நான் திருப்பிக் கொடுக்கணும்ல. புதுஹீரோ படம்னா டிஸ்ட்ரிபூட்டரு மேலயும், கீழயும் பார்ப்பான். அதனால வியாபார ரீதியில ஏற்கனவே ஜெயிச்ச ஹீரோவைப் போடு"'என விலாவாரியாக தனது வியாபார நியாயத்தைச் சொன்னார் தேவர்.

"அண்ணே..."

"என்னாப்பா?"

" 'நீங்கதான் ஹீரோ'னு ரஜினிக்கு நான் வாக்குக் குடுத்திட்டேன்ணே."

"அதுக்கு?"

"கொடுத்த வாக்கை மாத்துனா நல்லாவா இருக்கும்?"என தயங்கித் தயங்கிச் சொன்னேன்.

"அது ஒன்னோட விருப்பம்பா. என் விருப்பத்துக்கு படம் எடுத்தா ஃபைனான்ஸ் வாங்கித் தர்றேன். உன் விருப்பத்துக்கு படம் எடுத்தா உன் தலையெழுத்து எப்படியோ, அப்படியே பாத்துக்க' என ஆர்ப்பாட்டம் இல்லாத, அதேசமயம் அழுத்தமான கோபத்துடன் சொல்லிவிட்டு தன்னுடைய தனியறைக்குப் போய்விட்டார் தேவர்.

நானும் எழுந்து மாடியிறங்கி ரோட்டுக்கு வந்தேன்.

குழப்பமான மனநிலையில் தேவரின் தி.நகர் அலுவல கத்திலிருந்து கால்போன போக்கில் மவுண்ட் ரோட்டில் நடக்க ஆரம்பித்தேன்.

'நீ படம் எடுடா'னு தேவரே சொன்னது எனது அதிர்ஷ்டம். 'படம் தயாரிக்க ஃபுல் ஃபைனான்ஸ் வாங்கித் தர்றேன்'னு சொன்னது அதைவிட அதிர்ஷ்டம். இப்போ 'வியாபாரம்... அது... இதுனு தேவரண்ணன் குழப்புறாரே... இது என் துரதிர்ஷ்டமா?

...இப்படி சிந்தித்துக்கொண்டே மவுண்ட் ரோடு சித்ரா தியேட்டர் வாசலுக்கு வந்துவிட்டேன்.

அந்த தியேட்டரில் நான் கதை எழுதி ரஜினி செகண்ட் ஹீரோவாக நடித்த "ஆறு புஷ்பங்கள்"படம் ரிலீஸ் செய்யப்பட்டு ஓடிக்கொண்டிருந்தது. டிக்கெட் எடுத்துக்கொண்டு தியேட்டருக்குள் போனேன். கவலையை மறந்து படத்தை ரசித்தேன். விஜயகுமார், ரஜினி, ஸ்ரீவித்யா ஆகியோரின் நடிப்பைப் பார்த்து என் மனம் சுமை குறைந்தது. 'ஏண்டி முத்தம்மா' பாடலின் சுகம் என் குழப்பத்தையும் போக்கியது. படம் முடிந்து வெளியே வந்தேன்.

அப்போது...

'கலைஞானம்' என ஒரு குரல். திரும்பிப் பார்த்தேன். சினிமா விநியோகஸ்தரும், வியாபாரம் பேசித்தரும் மீடியேட்டருமான உடந்தை மணாளன் என்னை நோக்கி ஓடிவந்தார். 'ஆறு புஷ்பங்கள்' படத்தையும் வாங்கி விநியோகம் செய்திருந்தார்.

ஓடிவந்து என் கைகளைப் பிடித்துக்கொண்டு 'நீங்க கதை எழுதின எல்லா படங்களையுமே வாங்கி விநியோகம் செஞ்சிருக்கேன். எல்லாமே எனக்கு லாபம்தான். 'ஆறு புஷ்பங்கள்' நூறு சதவிகிதம் சக்ஸஸ். எனக்கு இதில் பெரிய லாபம் கிடைக்கும். அடுத்த கதை என்ன?" எனக் கேட்டார்.

"அடுத்த கதை மட்டுமில்ல... அதை தயாரிக்கிறதிலயும் இறங்கிட்டேன்."

"யாரு ஹீரோ?"

"ரஜினிகாந்த்."

'ரஜினி' என நான் சொன்னதுமே, என்னை தனது மீரான்சாஹிப் தெருவுக்கு அழைத்துச் சென்றார். அப்போது இரவு ஏழு மணி. அங்கே அவரின் மாடி அலுவலகத்தில் உட்கார்ந்தோம்.

''கலைஞானம்... ரஜினி நடிச்ச படங்களைப் பார்க்கிற போதெல்லாம் ஒரு விநியோகஸ்தர்ங்கிற முறையில 'ரஜினி ஹீரோவா வருவார்னு நினைச்சுக்கிட்டிருப்பேன். கரெக்ட்டா நீங்க ஹீரோவா புக் பண்ணீட்டீங்க. கையைக் குடுங்க' எனச் சொல்லி என் கைகளைப் பிடித்துக் குலுக்கிய உடந்தை மணாளன் ''என்ன மாதிரி கதை?''என்று கேட்டார். 'விஸ்வரூபம்'கதையைச் சொன்னேன். அவருக்கு பிடித்துவிட்டது. எனக்கு டிபன் வாங்கிக் கொடுத்து சாப்பிடச் சொல்லிவிட்டு அவரின் விநியோகஸ்த நண்பர்கள் காதர் மற்றும் இன்னொருவருக்கு போன் செய்து உடனே தன் அலுவலகத்திற்கு வரச்சொன்னார்.

சிறிது நேரத்தில் இருவரும் அங்கே வந்துவிட்டனர்.

''ரஜினிய ஹீரோவா வச்சு 'விஸ்வரூபம்ங்கிற படத்தை கலைஞானம் எடுக்கப்போறார். அந்தக் கதையைக் கேளுங்க'' எனச் சொன்ன உடந்தை மணாளன், என்பக்கம் திரும்பி 'என்கிட்ட சொன்னதைவிட இன்னும் அழுத்தமா அந்தக் கதையை இவங்க ரெண்டுபேர் கிட்டயும் சொல்லுங்க' என்றார் உடந்தை மணாளன்.

நான் மிக உணர்ச்சிமயமாக, விலாவாரியாக நடித்துக் காட்டியபடி கதையைச் சொல்ல ஆரம்பித்தேன்.

கதையில் உருகிய உடந்தை மணாளன், காதர் உள்ளிட்ட மூன்று விநியோகஸ்தர்களும் கண்கலங்கிப் போனார்கள்.

அதிலும் காதர் அழுதேவிட்டார்.

இன்று மிகப்பெரிய நடிகராக இருக்கும் ராஜ்கிரண்தான் அன்று விநியோகஸ்தர் காதர்.

ராஜ்கிரண் ஏன் அழுதார்?

# பைரவி உருவான பின்னணி!

பெரிய நடிகராக இருக்கும் ராஜ்கிரண் அன்று விநியோகஸ்தர் காதர். ரஜினியை ஹீரோவாக வைத்து நான் எடுக்கப்போகும் விஸ்வரூபம்'கதையை நான் ராஜ்கிரண், உடந்தை மணாளன் உள்ளிட்ட மூவரிடமும் உணர்ச்சிமயமாக சொல்லிக் கொண்டிருக்க...

மூவருமே கண்கலங்கினாலும் ராஜ்கிரண் ரொம்பவே அழுகைக்கு ஆளானார்.

ஏன்?

சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த மூக்கையன் சூழ்நிலையால் தன் ஐந்து வயது தங்கை பைரவியையும் பிரிந்து ஒரு கோயிலில் படுத்துக்கிடக்க... ஒரு மிராசுதாரின் மனைவி மூக்கையனை தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று பெற்ற மகனைப்போல வளர்க்கிறார்கள். மிராசுவின் சொந்த மகனும், மூக்கையனும் உற்ற நண்பர்களாக பழகிவருகிறார்கள். வாலிப வயதில்... தனது தவறான செயல்களுக்கு மூக்கையனை வேலை ஏவுகிறான் மிராசு மகன். அது தவறென தெரிந்தாலும் கூட, நன்றிக் கடனுக்காக அந்த வேலைகளைச் செய்கிறார் மூக்கையன். ஒரு முறை ஒரு இளம்பெண்ணை குறிவைத்து அவளை தூக்கிவரச் சொல்கிறான் மிராசு மகன். அதன்படி அவளை தூக்கிவந்து ஒரு அறையில் அடைத்துவிடுகிறான். மிராசு மகனால் அந்தப் பெண் கற்பழிக்கப்பட்ட பிறகுதான் அவள் தனது பாசத்திற்குரிய தங்கை பைரவி என்பது மூக்கையனுக்கு தெரிகிறது.



"இவ்வளவு நாளா நான் யாரைத் தேடி அலைஞ்சேனோ... யாருக்காக நான் வாழ்றேனோ... அந்த அன்புத் தங்கையை பாழாக்கீட்ட. அவளை நீ திருமணம் செஞ்சுக்க''என மூக்கையன் கெஞ்சுவான். ஆனால் '"நன்றிக்கடனுக்காக நான் சொன்னதை யெல்லாம் இவ்வளவு நாளா செஞ்ச. உன் தங்கச்சின்னதும் நன்றிக்கடன் மறந்துபோச்சா?''எனக் கேட்டு பைரவியை திருமணம் செய்ய மறுத்துவிடுவான் மிராசு மகன். இதனால் அவனின் துப்பாக்கியைப் பறித்தே அவனை கொல்ல முயற்சிக்க, போலீஸ் மூக்கையனை கைது செய்து சிறையில் அடைக்கிறது. அங்கிருந்து தப்பிவரும் மூக்கையன் விஸ்வரூப ஆவேசம் அடைந்து, மிராசு மகனை கொன்று தன் தங்கையின் சமாதி அருகே அவனையும் புதைத்துவிட்டு ஜெயிலுக்கு போய்க்கொண்டிருக்கிறான் மூக்கையன்...'என கதையைச் சொன்ன நான் அண்ணன் மூக்கையன், தங்கை பைரவி இடையேயான செண்ட்டிமெண்ட்டை ரொம்ப டச்சிங்காகச் சொன்னேன்.

சிறுவயதில் பசியால் துடிக்கும் தங்கையை சமாதானப்படுத்த ‘நண்டூறுது... நரியூறுது...’ எனச் சொல்லியபடி கிச்சுகிச்சு மூட்டி சிரிக்கவைப்பான். இந்த நண்டூறுது நரியூறுதுவுக்கு கதையில் ஜீவன் கொடுத்திருந்தேன். மிராசு மகனால் காலை இழந்த மூக்கையன், அவனால் தங்கையையும் இழந்து... துயரம் தாளாமல் தங்கையின் சமாதி முன்பு நின்று பாடுவான். இந்தக் காட்சியை நான் விவரித்தபோது ஒரு பாடலின் பல்லவியையும் எழுதிச் சேர்த்து பாடிக் காட்டினேன்.

"நண்டூறுது நரியூறுது நண்டூறுது நரியூறுது

நான் வளர்த்த செல்லக்கிளி கண்ணில் ஆடுது''

-என நான் உருகிப்பாடி அழ... ராஜ்கிரண் அழுதுவிட்டார்.

"இந்தக் கதையில அண்ணனோட தங்கைப்பாசம் ரொம்ப பவர்ஃபுல்லா இருக்கு. மூக்கையன் வாழ்றதே தங்கச்சி பைரவிக்காகத்தான். அதனால 'விஸ்வரூபம்'கிற டைட்டிலுக்குப் பதிலா ‘"பைரவி'னு வைங்களேன்" என்றார் உடந்தை மணாளன்.

எனக்கும் அது பொருத்தமாகப் பட்டதால் 'பைரவி''என்றே முடிவு செய்தேன்.

" "பைரவி’ படத்தோட என்.எஸ்.சி. (வடஆற்காடு, தென்னாற்காடு மற்றும் செங்கற்பட்டு) ஏரியாவை எனக்குக் குடுத்திடுங்க. இந்தாங்க பத்தாயிரம் ரூபாய் அட்வான்ஸ்" என என் கையில் பணத்தைக் கொடுத்த உடந்தை மணாளன், அப்படியே ராஜ்கிரணின் காதைக்கடித்தார்.



ராஜ்கிரண் வெளியே எழுந்துபோய்விட்டு சிறிது நேரத்தில் திரும்பி வந்தார். திருச்சி மற்றும் பெங்களூரு ஏரியா உரிமையை தனக்குத் தரச்சொல்லி பத்தாயிரம் ரூபாய் அட்வான்ஸை என்னிடம் கொடுத்தார். கூட இருந்த இன்னொருவர், சென்னை சிட்டி ரைட்ஸ் கேட்டு ஐயாயிரம் ரூபாய் அட்வான்ஸ் கொடுத்தார்.

மொத்தம் **25** ஆயிரத்தையும் ஒரு பேப்பரில் சுருட்டி என்னிடம் கொடுத்த உடந்தை மணாளன், "குறித்த தேதியில் பூஜை போட்டு ஷூட்டிங் ஆரம்பிங்க. தேவைப்படும் போதெல்லாம் கேளுங்க, பணம்

கொடுக்குறோம். இப்போ பணத்தை பத்திரமா வீட்டுக்கு கொண்டுபோங்க'' எனச் சொல்லி ஒரு டாக்ஸி பிடித்து என்னை அனுப்பி வைத்தார்.

நான் முருக பக்தன். முருகனுக்குள் ஐக்கியமா இருக்கிற தேவரண்ணன் ஆரம்பிச்ச படம் நின்னா போயிடும்' என மனசார தேவரை வாழ்த்தினேன். (இப்போது இங்கே ஒன்றை நினைவுபடுத்திக் கொள்கிறேன். 'பைரவி' படம் மிகப்பெரிய வெற்றிபெற்றது. ரஜினி சூப்பர்ஸ்டார் ஆனார். இதற்கு தேவரின் தூண்டுதலே காரணம்)

மறுநாளே... தம்பி 'கலைப்புலி' எஸ்.தாணுவிடம் 'பைரவி' கதையை உடந்தை மணாளன் சொல்லியிருக்கிறார். உடனே என்னிடம் சென்னை நகர உரிமையை 80 ஆயிரம் ரூபாய் விலைபேசி ஐயாயிரம் அட்வான்ஸ் கொடுத்திருந்த விநியோகஸ்தரைப் பிடித்து அதன் உரிமையை தாணு வாங்கிக்கொண்டார். அந்த நபர் கொடுத்திருந்த ஐயாயிரத்திற்கு பத்தாயிரமாக அந்த நபருக்கு கொடுத்து வாங்கியிருக்கிறார் தாணு.

நானும் நண்பர் வெங்கட்ராம அய்யரும் அலுவலகத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். நான் கதையைச் சொன்னதுமே விநியோகஸ்தர்கள் அட்வான்ஸாகக் கொடுத்த 25 ஆயிரம் ரூபாய் என்பது அந்தக் காலகட்டத்தில் பெரிய தொகைதான். அதை வைத்து 10 நாள் ஷூட்டிங்கை நடத்திவிடலாம். அதனால் பட வேலைகளை துரிதப்படுத்த ஆலோசித்துக்கொண்டிருந்தோம்.

'இந்தப் படத்துக்கு டைரக்டரா ஸ்ரீதர் வேண்டாம்'னு தேவர் சொன்னதால் அடுத்து ஸ்ரீதரை நான் சந்திக்கவேயில்ல. இப்போ டைரக்டரா யாரைப் போடுறது'எனக்கேட்டு யோசனை பண்ணிக்கொண்டிருந்தேன். அப்போது... எங்களிடம் இருநூறு ரூபாய் வாங்கிக்கொண்டு திருப்பதி போயிருந்த எம்.பாஸ்கர், மொட்டை போட்டுவிட்டு பிரசாதத்துடன் ஆபீஸுக்குள் புகுந்தார். அப்போது என்மனதில் பளிச்சென்று பட்டது... ''ஸ்ரீதர்கிட்ட அஸிஸ்டெண்ட்டா இருந்தவரு பாஸ்கர். இந்த 'பைரவி' கதை டிஸ்கஷனில் என்னோடு பலநாள் கலந்து கொண்டவர். கதையின் ஒவ்வொரு ஸீனும் பாஸ்கருக்கு அத்துபடி. ஏன் இவரையே டைரக்டரா போடக்கூடாது?''என நினைத்துக்கொண்டிருந்தபோதே, என்னையும் அறியாமல் எதிரே இருந்த விபூதி-குங்குமத்தை எடுத்து அவரின் தலையில் போட்டு நெற்றியில் பூசியபடியே 'நீங்கதான் என் படத்துக்கு டைரக்டர்' என்றேன்.

"திருப்பதி போயிட்டு வரவும் உனக்கு திருப்பம் கிடைச்சிருச்சு" என பாஸ்கரை உற்சாகப்படுத்தி கைதட்டினார் வெங்கட்ராம அய்யர்.

ஸ்ரீதர் நம்மைப்பத்தி தப்பாக நினைக்கக்கூடாதே' என்கிற கவலை எனக்கு. பாஸ்கரை அழைத்துக் கொண்டு ஸ்ரீதரின் வீட்டுக்குப் போனேன். இதுவரை நடந்த அத்தனை விஷயங்களையும் மனதில் நினைத்துக் கொண்டு... 'சார்... உங்க அஸிஸ் டெண்ட் பாஸ்கரையே என் படத் துக்கு டைரக்டரா போட்டுட்டேன்' என்றேன்.

பாஸ்கரும் சாஷ்டாங்கமாக ஸ்ரீதரின் காலில் விழுந்து 'என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க சார்' என்றார்.

உடனே ஸ்ரீதர் "நல்ல ஐடியா பண்ணுனீங்க கலைஞானம். பாஸ்கர் ரொம்ப புத்திசாலி"'எனச் சொல்லிவிட்டு ஆசிர்வாதம் செய்தார்.

'பணம் கிடைச்சிருச்சு. பூஜைக்கு நீங்க வரணும்' என தேவரை அழைப்பதற்காக தேவர் ஃபிலிம்ஸுக்கு சென்றேன். அப்போது தேவரும், தேவர் ஃபிலிம்ஸ் மேனேஜர் ராமசாமியும் என்னுடைய தயாரிப்பைப்பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். அதை காதில் வாங்கியபடியே உள்ளே நுழைந்தேன்.

"என்னடா கலைஞானம்... என்ன செய்ற?" எனக் கேட்டார் தேவர்.

"அண்ணே... பணம் கிடைச்சிருச்சு. ஜனவரி 14 பொங்கலன்னைக்கு பூஜை வச்சிருக்கேன். நீங்கவந்து விளக் கேத்தணும்ணே."

வெற்றிலையில் சுண்ணாம்பு தடவிக்கொண்டே "யார், யாரை புக் பண்ணீருக்கே" என்று கேட்டார் தேவர்.

“ 'ரஜினிகாந்த்தை ஹீரோவா போடுறதுக்கு சில டிஸ்ட்ரிபூட்டர்ஸ் சம்மதிச்சிட்டாங்கண்ணே"'என ரஜினிக்கு ஆதரவாக ஒருதூக்கு தூக்கினேன்.

"அடுத்து?"

"ஹீரோயினுக்கு நம்ம ஆட்டுக்கார அலமேலு (ஸ்ரீப்ரியா)கிட்ட பேசீருக்கு. அவங்க ஸைடில ஓ.கே.வாயிடும்."

"அடுத்து?"

"எம்.பாஸ்கர் என்பவரை டைரக்டரா போட்டுட்டேன்."

"புது டைரக்டரா?"

"ஆமாண்ணே. தங்கச்சி கேரக்டருக்கு கீதானு ஒரு பொண்ண செலக்ட் பண்ணீருக்கேன்."

தேவர் மௌனமாக இருந்தார். மேனேஜர் ராமசாமி வாய்விட்டு சிரித்தார்.

"என்ன கலைஞானம் நீ, அண்ணன் பேச்சை மீறி படம் எடுக்கிறியா? ஹீரோ ரஜினிதான் புதுசுன்னா, டைரக்டருக்கும் யாரோ பாஸ்கர்னு புதுசா போடுறியா? கீதா யாரு?" என ராமசாமி கேட்க...

"புதுப்பொண்ணுதான்"என்றேன்.

"உனக்கு நேரம் சரியில்லைனு நினைக்கிறேன். நீயென்னவோ ஏவி.எம்.செட்டியாரு, நாகிரெட்டியாருனு ஒம்மனசில நினைச்சுக்கிட்டு புதுமுகங்களப் போட்டு படமெடுக்குறியா? உன்னால இந்த படத்தை எடுக்க முடியாது"என ராமசாமி சாபமிடுவதுபோல் சொல்ல... நான் தேவர் முன்பாகவே ராமசாமியிடம் சவால்விடுவதுபோல் பேசினேன்.

# கண் கலங்கிய ரஜினி!

தேவர் முன்பாகவே தேவர் ஃபிலிம்ஸின் மேனேஜர் ராமசாமி எனக்கு சாபமிடுவதுபோல பேசினார்.

"ஹீரோ வேஷத்துக்கு ரஜினி புதுசு, டைரக்டரும், புதுசு, தங்கச்சி கேரக்டருக்கும் புதுப் பொண்ணா? நீயென்னவோ பெரிய ஏவி.எம். செட்டியாரு, நாகிரெட்டியாருனு மனசுல நினைச்சுக்கிட்டு புதுமுகங்கள போட்டு படம் எடுக்குற. உன்னால இந்தப் படத்தை முழுசா எடுத்து முடிக்க முடியுமா? முடியவே முடியாது. இப்பவே எழுதி வச்சுக்க... அப்படியே நீ படத்தை முடிச்சாலும் ஏகப்பட்ட கடனுக்கு ஆளாகி தேவரண்ணன்கிட்டதான் ஓடிவருவ. இங்க இருக்க கதாசிரியர் மா.ரா. சங்கதி உனக்குத் தெரியும்தானே? தேவரண்ணனோட பேச்சை மீறி "அக்கா'னு ஒரு படம் எடுத்தாரு. "அக்கா'ன்னா "மூதேவி'னு ஒரு அர்த்தம் இருக்கு. அக்கா மூதேவி. தங்கச்சி லட்சுமினு சொல்லுவாங்க. "அக்கா"படத்தை முடிக்க முடியாம அதை பாதியில நிறுத்திட்டு ஒண்ணேமுக்கால் லட்சரூபாய் நஷ்டத்துல அண்ணனோட கால்ல வந்து விழுந்தாரு மா.ரா. அந்தக் கடனையெல்லாம் அண்ணந்தான் அடைச்சாரு. இப்போ... காலகாலத்துக்கும் 'இங்கயே இருடானு வச்சிருக்காரு" என ராமசாமி சொல்ல...

"இன்னும் நல்லாச் சொல்றா ராமசாமி" என்றார் தேவர்.

'சடார்' என எழுந்து நின்றேன். "ராமசாமி... தேவரண்ணனோட ஆசிர்வாதம் இருக்கிற வரைக்கும் நான் தோத்துப்போகமாட்டேன்" என உரத்த குரலில் சொல்லிவிட்டுத் தேவர் பக்கம் திரும்பி "அண்ணே... ஜனவரி 14-ந் தேதி 'பைரவி' படத்துக்கு பூஜை போடுறேன். வந்து விளக்கேத்துங்க" எனச் சொன்னேன்.



தேவர் தன் மூக்கின் மீது கைவிரல்களை வைத்து மூடியபடி என்னைப் பார்த்தார். 'உன் திமிரு அடங்கலையாடா' என்பது போல் இருந்தது தேவரின் அந்தப் பார்வை. நான் அலுவலகத்தைவிட்டு வெளியேறினேன்.

நான் கதை எழுதிய 'தங்கத்திலே வைரம்' மற்றும் கதை இலாகாவில் பணியாற்றிய 'ஆட்டுக்கார அலமேலு' படங்களில் கதாநாயகியாக ஸ்ரீப்ரியா நடித்திருந்தார். அந்தவகையில் ஸ்ரீப்ரியா குடும்பத்துடன் எனக்கு நல்ல பழக்கம் உண்டு. ('கணவன் மனைவி' என்கிற எனது கதையை அடகுவைத்து நான் பணம் வாங்கியதை ஸ்ரீப்ரியாவின் அம்மா கிரிஜாவிடம் சொன்னபோது 'நாதஸ்வர சக்ரவர்த்தி' ராஜரத்தினம்பிள்ளை தோடி ராகத்தை அடமானம் வைத்ததை கிரிஜா சொன்னார் என்பதை ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன்) அந்த நட்புரிமையுடன் ஸ்ரீப்ரியாவின் வீட்டுக்குப் போனேன்.



''நான் 'பைரவி'னு ஒரு படம் எடுக்கப்போறேன்'' என்றதும் ''பிரியாதானே ஹீரோயின்?'' என கேட்டார் கிரிஜா.

''ஆமா''

''ஹீரோ யாரு?''

''ரஜினிகாந்த்''

'ஓ.கே.'என்ற கிரிஜா, ஸ்ரீப்ரியாவின் கால்ஷீட் டைரியை எடுத்துப் புரட்டினார். 'ஆட்டுக்கார அலமேலு'வின் அபார வெற்றியால் ஏகப்பட்ட புதுப்படங்களுக்கு புக் ஆகியிருந்தார் ஸ்ரீப்ரியா.

நாங்கள் பேசிக்கொண்டிருந்ததை தனது தனித்துவமான புன்னகையுடன் கவனித்துக் கொண்டிருந்தார் ஸ்ரீப்ரியா.

''எந்தெந்த தேதியில் கால்ஷீட் வேணும்?''

"ஜனவரியிலருந்து ஏப்ரலுக்குள்... உங்களுக்கு வசதிப்பட்ட தேதியில் 30 நாட்கள் கொடுங்க."

வேறு கம்பெனிகளுக்கு கொடுத்திருந்த கால்ஷீட்டிலிருந்து ஆங்காங்கே தேதிகளை உருவி அந்தத் தேதிகளை ஒரு பேப்பரில் எழுதி ஸ்ரீப்ரியாவிடம் கொடுத்த கிரிஜா... "உன் கையாலயே கலைஞானம் சார்கிட்ட குடு"என்றார்.

அதை வாங்கிக்கொண்ட நான்... "அட்வான்ஸ் நாளைக்கு தரட்டுமா?"என்றேன்.

"உங்ககிட்ட யார் அட்வான்ஸ் கேட்டது?"என புன்னகை மாறாமல் சொன்னார் ஸ்ரீப்ரியா.

"முதல்ல படத்தை எடுங்க சார். மத்ததை அப்புறம் பார்த்துக்கலாம்"என்றார் கிரிஜா.

அவர்கள் இருவருக்கும் என் மனதிற்குள் உணர்ச்சிப்பூர்வ மான நன்றியை செலுத்திவிட்டு வந்தேன்.

வில்லன் வேஷத்திற்கு ஸ்ரீகாந்த்தை நடிக்க வைக்கலாம்' எனத் தோன்றியது. அவரை அவரின் வீட்டில் சந்தித்தேன்.

ஜெயகாந்தனின் 'சில நேரங்களில் சில மனிதர்கள்'படத்தில் நடித்து புகழின் உச்சத்தில் ஹீரோ அந்தஸ்துடன் ஸ்ரீகாந்த் இருந்தார்.

"ரஜினிகாந்த் ஹீரோவா நடிக்கிறார். நீங்க வில்லனா நடிக்கணும்" என்றேன்.

என்னையே உற்றுப்பார்த்தார் ஸ்ரீகாந்த்.

'மறுக்கப் போகிறாரோ' என பதைபதைத்தேன். ஆனால் எழுந்து வந்து என் கைகளைக்குலுக்கி, முதுகில் தட்டிக் கொடுத்து, 'ஓ.கே. கலைஞானம்' என்றார். அவருக்கு சம்பளம் பேசி செக் கொடுத்துவிட்டு வந்தேன்.

இசைக்கு... இளையராஜாவை எனக்கு அறிமுகம் செய்து வைத்து ஒப்பந்தம் செய்து கொடுத்தார் உதவி இயக்குநர் பீட்டர் செல்வகுமார்.

தங்கையின் சமாதிமீது சபதமெடுத்து மூக்கையன் பாடும் பாடலுக்கான ட்யூன் பண்ணிக்கொண்டிருந்தார் இளையராஜா. 'நண்டூறுது... நரியூறுது' வசனத்தை ட்யூனில் சேர்க்க வேண்டும். அது சரியாக வராமல் இருந்தது. அப்போது என் முகத்தையும், இளையராஜா முகத்தையும் மாறி மாறி பார்த்துக்கொண்டி ருந்தார் பீட்டர் செல்வக்குமார். இதை கவனித்த

இளையராஜா 'என்ன பீட்டர்? அண்ணனையும், என்னையும் மாறி மாறி பார்க்குற?'என கேட்டார்.

'நண்டூறுது வசனத்தை வைத்து கலைஞானம் அண்ணன் பாட்டாவே பாடுவாரு. அதைப் பாடச் சொல்லிக் கேளுங்க' என பீட்டர் சொல்ல...

'பாடுங்க'என்றார் இளையராஜா.

ராஜா முன்பாக எனக்கு காத்துதான் வந்தது. என்னால் பாட முடியவில்லை.

'நீங்க பாடித்தான் ஆகணும்' என்றார்.

தடுமாறி ஒருவழியாக பாடிக் காட்டினேன்.

போட்டாரே இளையராஜா... இன்றளவும் சாகா வரம்பெற்ற ட்யூனை.

பாடல் எழுதுவதற்கு கண்ணதாசன் வந்தார்.

''கதையில் 'நண்டூறு வசனம் முக்கியமா வர்றதால் அதை வச்சு கலைஞானம் அண்ணன் பல்லவியா எழுதீட்டார்'' என பல்லவியை கண்ணதாசனிடம் காட்டினார் பீட்டர்.

அதை வாங்கிப் பார்த்தார் கண்ணதாசன்.

'நண்டூறுது நரியூறுது

நண்டூறுது நரியூறுது

நண்டூறுது...

நான் வளர்த்த செல்லக்கிளி

கண்ணில் ஆடுது - என்

கண்ணில் ஆடுது

நண்டூறுது நரியூறுது

நண்டூறுது...'

நான் கவி.கே.பி.காமாட்சி சுந்தரத்தின் ஒன்றுவிட்ட சகோதரன் என்பது கண்ணதாசனுக்கு ஏற்கனவே தெரியும். பல்லவியை படித்துவிட்டு 'நல்லாருக்கு' என்பது போல என்னைப் பார்த்து தலையாட்டினார் கண்ணதாசன்.

அடுத்த அரைமணி நேரத்தில் சரணங்களை கொட்டிவிட்டார் கண்ணதாசன்.

மறுநாள் ஏவி.எம்.மில் உள்ள ஆர்.ஆர்.தியேட்டரில் பாடல் பதிவு.

நான் கதை சொல்லும்போது பாடியதைக் கேட்டு அழுத விநியோகஸ்தர் காதரும், (இன்று நடிகராக இருக்கும் ராஜ்கிரண்), உடந்தை மணாளனும் ரெக்கார்டிங் தியேட்டருக்கு வந்துவிட்டனர்.

ஏவி.எம்.ஸ்டுடியோவின் உள்ளே வேறொரு படப்பிடிப்பில் இருந்த ரஜினிகாந்த்தும் அந்தப் படக்குழுவிடம் அனுமதி வாங்கிக்கொண்டு ரெக்கார்டிங் தியேட்டருக்கு வருவதற்கும், டி.எம்.சௌந்தர்ராஜன் பாட ஆரம்பிப்பதற்கும் சரியாக இருந்தது.

முழுப்பாடலையும் கேட்ட ரஜினி, கண்கலங்கியபடி ரெக்கார்டிங் தியேட்டரை விட்டு வெளியே வந்தார்.

"டி.எம்.எஸ். எனக்குப் பாடுவாருன்னும், நான் ஹீரோவா நடிப்பேன்னும் நினைச்சுக்கூடப் பார்க்கல. ஸாங் ரொம்ப நல்லா இருக்கு"எனச் சொல்லிவிட்டுப் போனார்.

"அண்ணே... நீங்க எங்ககிட்ட கதை சொல்லும்போது அழுது பாடினீங்களே... அப்போ எங்களுக்கு அழுகை வந்தமாதிரி இப்போ டி.எம்.எஸ். பாடும்போது வரலயேண்ணே"என்றார்கள் ராஜ்கிரணும், உடந்தை மணாளனும்.

'இளையராஜா காதுல விழுந்தா என்னய கொன்னேப்புடுவாரு. முதல்ல கிளம்புங்க' எனச் சொல்லி அவர்கள் வந்த காரிலேயே அவர்களை அனுப்பிவைத்தேன்.

**1978** ஜனவரி **14...** பொங்கல் நாளில் கற்பகம் ஸ்டுடியோவில் வள்ளி வேலன் மூவீஸின் 'பைரவி' படபூஜை.

'ஏவி.எம். மாதிரி உங்க கம்பெனிக்கு பேரு வைக்கணும்' என எம்.பாஸ்கர் சொன்னதன் படி ஆங்கிலத்தில் வி.வி.எம். என வரும்படி 'வள்ளி வேலன் மூவீஸ்' என எனது தயாரிப்பு நிறுவனத்திற்குப் பெயர் வைத்தேன்.

சாண்டோ எம்.எம்.ஏ. சின்னப்ப தேவரான என் அன்பு அண்ணன் தேவர் குத்துவிளக்கேற்ற, நடிகர்திலகம் சிவாஜி கணேசன் கேமரா சுவிட்சை

இயக்கி வைக்க, டைரக்டர் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் ‘ஸ்டார்ட்’ சொல்ல… அமர்க்களமாக பூஜை நடந்தது.

பூஜைக்கு வந்த தயாரிப்பாளர் கிளப்பிய செண்டிமெண்ட் பீதி…

# ஆசியாவிலேயே சிறந்த நடிகை!

'பைரவி'' படபூஜை மிகச் சிறப்பாக நடந்தது. பூஜையைத் தொடர்ந்து வில்லன் ஸ்ரீகாந்த்தை ஹீரோ ரஜினி சாட்டையால் அடிக்கிற காட்சிகளுக்கான ஷூட்டிங் தொடங் கியது. முதன்முதலில் தயாரிப்பாளராகியிருக்கும் என்னை வாழ்த்துவதற்காக வந்த என் நண்பரும், தயாரிப்பாளருமான வேணுசெட்டியார், என்னைத் தனியாக அழைத்துக்கொண்டுபோய் சென்ட்டிமெண்ட் பீதியைக் கிளப்பினார்.

"ஹீரோவா ரஜினியைப் போடவேணாம்னு தேவரே சொல்லியும், நீ கேட்கலையாமே?"

"உங்களுக்கு யார் சொன்னது?"

"தூயவன் சொன்னாரு."

"இப்ப எதுக்கு அந்தப் பேச்சு?"

"இல்ல... மகேந்திரன் டைரக்ஷன்ல ரஜினிய ஹீரோவா போட்டு 'முள்ளும் மலரும்'னு ஒரு படம் எடுக்கப்போறேன். ஒன்னோட 'பைரவி' கதையில ரஜினிக்கு ஒருகால் இல்லைனு சொல்றாங்க. நான் எடுக்கப்போற "முள்ளும் மலரும்'ல ரஜினிக்கு ஒருகை இல்லைனு சொல்றாங்க. இந்த லட்சணத்துல தேவர் பேச்ச நீ புறக்கணிச்சிருக்க. அதான் சென்ட்டி மெண்ட்டா..."என இழுத்தார் வேணு செட்டியார்.

"அதெல்லாம் இப்பவே மறந்திருங்க. நாம ரெண்டுபேருமே சக்ஸஸ் பண்றோம். அந்த நினைப்போட பட வேலையைப் பார்க்கலாம்" என அவருக்கு சமாதானம் சொல்லி அனுப்பி வைத்தேன்.



"பூஜையன்னைக்கி வந்து இவரு வேற குழப்பிவிட்டுட்டுப் போறாரே''என எனக்குள் யோசனை ஓடியது. ஆனால் அதை யெல்லாம் புறந்தள்ளிவிட்டு பட வேலைகளில் தீவிரமானேன். தொடர்ந்து எட்டு நாட்கள் படப்பிடிப்பு நடந்தது. அதற்குள் கடும் போட்டி போட்டுக்கொண்டு "பைரவி'' படத்தின் மற்ற எல்லா ஏரியா உரிமைகளையும் விநியோகஸ்தர்கள் வாங்கிவிட்டனர்.

அடுத்தகட்ட படப்பிடிப்பை மேட்டுப்பாளையத்தில் நடத்த முடிவு செய்தோம். அங்கே ஆக்ஷன் காட்சிகளுடன் ஒரு பாடல் காட்சியையும் எடுக்க முடிவானது.

விநியோகஸ்தர் உடந்தை மணாளன் தனக்கு வேண்டப்பட்ட புலவர் சிதம்பரநாதனை என்னிடம் அறிமுகம் செய்துவைத்து "இவருக்கு ஒரு பாட்டெழுத வாய்ப்புக் கொடுங்க'' என்றார். நானும் அவரின் சிபாரிசை ஏற்று இளையராஜாவிடம் புலவரை அழைத்துச் சென்றேன்.

ஒரு காதல் பாடலுக்கான ட்யூனை இளையராஜா தந்தார். ஆனால் ட்யூனுக்குப் பாட்டெழுத திணறினார் புலவர். மெட்டுக்கு பாட்டெழுதுவதை ஈஸியாக புலவருக்கு புரிய வைப்பதற்காக நான் ஒரு ஐடியா பண்ணினேன்.

கிராமியப் பாடல் ஒன்றில் 'கட்டப்புள்ள குட்டப்புள்ள... கருகமணி போட்ட புள்ள' என்ற வரி வரும். அதை எடுத்துக்கொண்டேன். கதைப்படி ஸ்ரீப்ரியாவைப் பார்த்து ரஜினி பாடும் பாடல் இது. ஸ்ரீப்ரியா என்றாலே அவரின் கன்னக் குழியழகுதான் ஞாபகத்திற்கு வரும். அதை மனதில் வைத்து அடுத்த ரெண்டு வரிகளைப் போட்டு ஒரு பல்லவியை எழுதி இளையராஜாவிடம் கொடுத்தேன்.

'கட்டப்புள்ள குட்டப்புள்ள

கருகமணி போட்டபுள்ள

கன்னம் குழிவிழுந்த செல்லம்மா

ஒரு காரியமா வந்திருக்கேன் நில்லம்மா'

என நான் எழுதிய பல்லவியை இளையராஜா ஓ.கே. செய்தார். 'ஓ... இப்படித்தான் சினிமாவுக்கு எழுதணுமா?' என ரூட் பிடித்த புலவர் அள்ளித் தட்டிவிட்டார் சரணங்களை. பாடல் பதிவு செய்யப்பட்டது. இந்தப் பாடல் பெரும் ஹிட். அதன்பிறகு புலவர் சிதம்பரநாதன் பல படங்களில்

பல வெற்றிப் பாடல்களை எழுதினார். தமிழக அரசின் ‘சிறந்த பாடலாசிரியர்’ விருதையும் பெற்றார்.

'பைரவி’ மூலம் நான் டைரக்டராக அறிமுகப்படுத்தி யிருக்கும் எம்.பாஸ்கர், தன் நண்பரான போட்டோகிராபர் ரவி என்பவரை என்னிடம் அறிமுகம் செய்துவைத்து சிபாரிசும் செய்தார். ரவிக்கு மிகப்பெரிய திறமை இருந்தது. அதனால் அவரை 'பைரவி''படத்திற்கு ஸ்டில் போட்டோகிராபராக அறிமுகம் செய்தேன். அந்த ரவி, பாலசந்தர் உள்ளிட்ட வி.ஐ.பி.கள் பாராட்டும் நபராகி 'ஸ்டில்ஸ் ரவி''என இன்றளவும் புகழுடன் இருக்கிறார்.

தங்கை ‘பைரவி’ கதாபாத்திரம் கதைக்கு மிகமுக்கியம். இறந்துபோகும் தங்கையின் சிரித்த முகத்தை நினைத்து... நினைத்து அண்ணன் ரஜினி அழவேண்டும். அந்த அழுகை நியாயமானது என ரசிகர்கள் உணரவேண்டும். அப்படியென்றால் வசீகரிக்கிற அன்பான, புன்னகை தவழும் முகம் கொண்ட ஒரு பெண்ணைத்தானே தங்கை வேடத்திற்கு தேர்வு செய்யவேண்டும். நடிக்க வாய்ப்புக் கேட்டு ஏஜெண்ட் ஒருவர் மூலம் கொண்டு வரப்பட்ட பதினாறு வயது இளம்பெண்ணின் புகைப்படம் நான் கற்பனை செய்துவைத்திருந்த ‘பைரவி’ பாத்திரத்திற்கு மிகப்பொருத்தமானதாக இருந்தது. அந்தப்பெண்ணை நேரில் வரவழைத்தேன். பெங்களூரைச் சேர்ந்த தமிழ் பிராமணத்துப் பெண்ணான கீதாவை எந்தக் கேள்வியும் கேட்காமல் 'நீதாம்மா பைரவி’ எனச் சொல்லி ஒப்பந்தம் செய்தேன்.

பிரசாத் ஸ்டுடியோவில் செட்போட்டு ஸ்ரீகாந்த்-கீதா சம்பந்தப்பட்ட காட்சிகளை படமாக்க ஏற்பாடாகியிருந்தது. கீதாவுக்கு அன்றுதான் முதல்நாள் ஷூட்டிங். படப்பிடிப்பைத் தொடங்கி வைத்துவிட்டு விநியோகஸ்தர் காதரிடம் (ராஜ்கிரண்) பணம் வாங்கி வருவதற்காகச் சென்றுவிட்டேன்.

பணம் வாங்கிக்கொண்டு நான் திரும்பி வந்தபோது...

டைரக்டர் பாஸ்கர் செட்டுக்கு வெளியே உட்கார்ந்திருந்தார்.

"என்ன டைரக்டர் சார்?"

"ஷூட்டிங்கை கேன்ஸல் பண்ணீட்டேன்.’நாலுவரி வசனத்தைக்கூட அந்தப் பொண்ணால பேச முடியல. படத்துல மிக முக்கியமான கேரக்டர் அந்தப் பொண்ணுக்கு. அந்தப் பொண்ணு சரியாப் பேசல, நடிக்கலேன்னா படம் அடிபடும். அந்தப் பொண்ண தூக்கிட்டு வேற ஒரு பொண்ண ரெடி

பண்ணுங்க. நாளைக்கி ஷூட்டிங் வச்சுக்கலாம்''எனச் சொல்லிவிட்டார் டைரக்டர்.

நான் பதறிப்போய் செட்டுக்குள் போனேன். ஷூட்டிங் கேன்ஸலானது தெரியாமல் கீதாவும், ஸ்ரீகாந்த்தும் பேசிக் கொண்டிருந்தார்கள். என்னைப் பார்த்ததும் வணக்கம் தெரிவித்தார்கள். நான் அவர்கள் பக்கத்தில் சேரை போட்டு உட்கார்ந்தேன். கீதாவையே பார்த்தேன்.

''இவ்வளவு அழகான பொண்ண 'நீ வேணாம்மா'னு சொல்லி படத்துல இருந்து தூக்கினா அது மனசு என்ன பாடுபடும்?''என யோசித்தேன். ஒருசமயத்தில் நான் துணை நடிகராக நடிக்கவந்து அவமானப்பட்ட சம்பவம் என் கண்முன் நிழலாடியது.

ஏவி.எம்.தயாரித்த 'பெண்' படத்தில் நான்குவரிகள் வசனம் பேசும் ஸீன் ஒன்றை எனக்குக் கொடுத்தார் உதவி டைரக்டர் லட்சுமிநாராயணன். கேமரா ஓடத்தொடங்கியது. என்னால் அந்த வசனத்தைச் சொல்லி நடிக்க முடியவில்லை. கை, காலெல்லாம் உதறல் எடுத்தது. இரண்டாவது டேக்கிலும் அதே நிலமைதான்.

''சார்... எனக்குக் கொஞ்சம் டைம் கொடுங்க... நான் ரெடியாகிக்கிறேன்'' எனக் கேட்டேன்.

''நீ ஒண்ணும் ஹீரோ இல்லை. உனக்கு டைம் கொடுக்கணுமா? நீ இங்கிட்டு வா'' எனச் சொல்லி என்னை இழுத்த லட்சுமிநாராயணன் ரெடியாக இருந்த இன்னொரு துணை நடிகரை அந்த காட்சியில் நடிக்க வைத்தார்.

'நடிகனாகிவிடும் ஆசையில் இப்படி இடி விழுந்திருச்சே' என ஒருவித அவமானத்துடன் ஸ்டுடியோ சுவற்றில் சுயநினைவு இழந்து சாய்ந்துவிட்டேன். சுயநினைவு வந்து, நான் வெளியேற சுமார் இரண்டுமணி நேரம் ஆகிவிட்டது. அப்படி ஒரு மனச் சங்கடம் கீதாவுக்கு வரக்கூடாது என நினைத்தேன்.

கீதா மொத்தமாக பேச வேண்டிய நான்கு வரிகளை பிரித்து இரண்டுவரிகளை மட்டும் முதலில் மனப்பாடம் செய்யச் சொன்னேன். இடையில் 'அப்படியா?' என ஸ்ரீகாந்த்தை ஒரு வரி பேச வைத்தேன். பிறகு அடுத்த ரெண்டுவரியை கீதாவை மனப்பாடம் செய்ய வைத்தேன். இப்போது கீதா தடுமாற்றமில்லாமல் பேசிக் காட்டினார்.

''டைரக்டர் சார்... இப்ப ஓ.கே.'' என்றேன்.

"எல்லாம் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன். நீங்க புரொடியூஸர், ரைட்டர். என்ன வேணாலும் பண்ணலாம்" என சிரித்துக்கொண்டே சொன்ன டைரக்டர், அந்தக் காட்சிகளை படமாக்கினார்.

நான் அறிமுகம் செய்த கீதா 'பைரவி'’படத்திற்குப் பிறகு பல மொழிகளிலும் பல வெற்றிப் படங்களில் நடித்தார். இன்றும் அம்மா’ வேஷங்களில் நடித்துவருகிறார். மலையாளப் படம் ஒன்றிற்காக 'ஆசியாவிலேயே சிறந்த நடிகை’ என்கிற விருதையும், வெள்ளிக்கோப்பையையும் பெற்றிருக்கிறார் கீதா. அதைக் கேள்விப்பட்ட போது... என்னுடைய மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. கீதா ஒரு நல்ல குடும்பத் தலைவியாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவருக்கு அப்போது போலவே எப்போதும் என் ஆசி உண்டு.

அடுத்தகட்ட படப்பிடிப்பிற்காக மேட்டுப்பாளையம் சென்றோம்.

அங்கே... உச்சி வெயிலில் மொட்டப்பாறையில் ரஜினி படப்பிடிப்பிற்கு தயாராக நிற்க...

தொழிலாளர்களின் திடீர் ஸ்டிரைக்!

இளையராஜாவோடு சங்கடம்!

# உச்சி வெயிலில் ரஜினி!

'பைரவி''படத்தின் க்ளைமாக்ஸ் ஃபைட் மற்றும் பாடல் காட்சி படப்பிடிப்பிற்காக மேட்டுப்பாளையம் வந்து சேர்ந்தோம். ரயில்வே ஸ்டேஷன் எதிரில் உள்ள ஒரு ஹோட்டலில் ஒட்டுமொத்த யூனிட்டும் தங்கினோம். டைரக்டர் எம்.பாஸ்கர் லொகேஷன் பார்த்துவிட்டு வந்தார். மறுநாள் அங்கே போய்ச் சேர்ந்தோம்.

அந்த லொகேஷன் அச்சமும் பிரமிப்பும் ஊட்டுவதாக இருந்தது. மீனாட்சியம்மன், திருவண்ணாமலை கோயில் கோபுரங்களைப் போல நான்கு மடங்கு உயரமான ஒரு மொட்டப்பாறை. மேலே போக வழி கிடையாது. 110 டிகிரி வெயில் கொளுத்துகிறது. உச்சியில் வெயிலின் தாக்கம் இன்னும் அதிகமாக இருக்கும். ஒதுங்க ஒரு செடிகொடி கூட கிடையாது. கதைப்படி ரஜினிக்கு ஒரு கால் கிடையாது. அதனால் அவரின் காலை அவரின் முதுகுப்புறமாக வைத்து கட்டிவிட்டு, கட்டைக்காலால் தாங்கி நடிக்க வேண்டும். அதனால் ரஜினி செருப்பும் அணியக்கூடாது. அதுமட்டுமில்லை... ரஜினி உச்சியில் இருப்பார். அவர் இருக்கும் இடத்திற்குக் கீழே முந்நூறு அடியில் ஸ்ரீகாந்த் நிற்பார். உச்சியிலிருந்து ரஜினியின் கட்டைக்கால் நழுவி உருண்டு ஸ்ரீகாந்த் மீது விழும். இப்போது ரஜினிக்கு சுத்தமாக பிடிமானம் இல்லை என்பதால் 'மூக்கையா நீ ஒத்தக்கால வச்சுக்கிட்டு என்னை என்ன பண்ண முடியும்? இன்னையோட நீ குளோஸ்' என ஸ்ரீகாந்த் ஆர்ப்பரிக்க... உச்சியிலிருந்து ஸ்ரீகாந்த் மீது ரஜினி தாவி கட்டைக்காலால் அடித்துக் கொல்லவேண்டும். இப்படி ரிஸ்க்கான சண்டைக் காட்சிக்கு இப்படி ஒரு அபாயகரமான லொகேஷனை டைரக்டர் தேர்ந்தெடுத்திருக்கிறார். இதைக் கேட்டால் தேவையில்லாத பிரச்சினை வரும்.



வேறுவழியே இல்லாமல் ஒருவர் கையை ஒருவர் பற்றியபடி.... யூனிட் மேலே ஏறியது. ரஜினி மட்டும் உச்சிக்குச் சென்றார். அங்கே அவரின் ஒரு கால் கட்டப்பட்டது. வெயிலில், மொட்டப்பாறையில் செருப்பில்லாமல் நின்றபோதும் அதைப் பொறுத்துக்கொண்டார் ரஜினி.



வெயிலின் தாக்கம் பாறைமீது அதிகமாக இருந்ததால் எல்லோருக்கும் தாகம் எடுத்தது. நான் பொதுவாகவே படப்பிடிப்பு இடங்களில் கொஞ்சம் முன்னெச்சரிக்கையாக செயல்படுவேன். அதன்படி ஐம்பது இளநிகளும், குளுகோஸ் பாக்கெட்டுகளும் வாங்கி வைத்திருந்தேன். இளநியைச் சீவி... அதில் குளுகோஸை கலந்து கொடுக்கும் வேலைகளை பாறையின் அடிவாரத்தில் இருந்து நான் கவனித்துக்கொண்டிருந்தேன்.

இளநியை எடுத்துக்கொண்டு போன ஒரு புரொடக்ஷன் அஸிஸ்டெண்ட் இளைஞர் பிடிமானம் இல்லாமல் கால் தவறி நூறடி உயரத்திலிருந்து கீழே விழுந்துவிட்டார். உடனே மற்ற புரொடக்ஷன் அஸிஸ்டெண்ட்டுகள்

பதறிப்போய் அந்த இளைஞரைச் சூழ்ந்துகொண்டார்கள். அந்த இளைஞருக்கு அடி எதுவும் படவில்லை. இருப்பினும் ஒருவித பதட்டம் நிலவியது. இது எதுவும் தெரியாத... நூறடிக்கு மேலே இருந்த எனது உதவியாளர் பனசை மணியன், தாகத்தில் நா வறண்டு சைகையால் ''தண்ணீர்' என கேட்டுக்கொண்டிருந்தார். ஆனால் ஒருகட்டத்தில் கோபம் அதிகமாகி 'சில வார்த்தைகள' விட்டுவிட்டார். இதனால் ஆவேசமான புரொடக்ஷன் அஸிஸ்ட்டெண்டுகள் ''நீங்க எதுக்கு இங்க வந்தீங்களோ... அதுக்குத்தான் நாங்களும் வந்திருக்கோம்' 'எனச் சொல்- திடீர் என ஸ்டிரைக் அறிவித்துவிட்டனர்.

உச்சி வெயில்... வாடி நிற்கும் ரஜினிக்கு இந்தப் பிரச்சினைகள் எதுவுமே தெரியாமல் டைரக்டர் பார்த்துக்கொண்டார். பிரச்சனையை அறிந்த நான் நூறடிதூரம் ஏறி புரொடக்ஷன் அஸிஸ்டெண்டுகள் கூடியிருந்த இடத்திற்குப் போனேன்.

''பனசை மணியன் பேசியதற்காக நான் உங்ககிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன்'' என்றேன். அவர்களுக்கு லீடராக இருந்த சேகர் ''அண்ணன் மன்னிப்பு கேட்டுட்டார். அதனால் தொடர்ந்து வேலை செய்யலாம்'' எனச் சொன்னபிறகு ஷூட்டிங் நடந்தது.

க்ளைமாக்ஸ் எடுத்து முடிக்கப்பட்டதும் ரஜினி உள்ளிட்டவர்கள் கீழே இறங்கி வந்து அமர்ந்தனர். நான் ரஜினிக்கு குடை பிடித்தேன். என்னுடைய கொள்கைகளில் ஒன்று... படப்பிடிப்பின்போது டைரக்டரோ, தயாரிப்பாளரோ நட்சத்திரங்களின் மனம் நோகும்படி நடந்துகொள்ளக்கூடாது, கடும் வார்த்தைகளால் பேசிவிடக்கூடாது. அப்படிப் பேசினால் நட்சத்திரங்களுக்கு மனதில் சங்கடம் வரும். அந்த வருத்தத்துடன் நடிக்கும்போது திரையில் அவர்களின் முகம் வறட்சியாகத் தெரியும். நட்சத்திரங்களின் மனம் குளிர்ந்தால்தான் திரையில் காட்சி குளுமையாக வரும். அதனால்தான் மலைக்குக் கீழே ரஜினி வந்து அமர்ந்ததும் அவருக்கு குடை பிடித்தேன்.

இப்படி ஒரு கடும்வெளியில் மொட்டைப்பாறையில் ஷூட்டிங் வைத்ததற்காக ரஜினி வருத்தப்படுவாரோ என நான் நினைத்தேன். ஆனால் ரஜினி முகம் சுளிக்கவில்லை.'இப்படி ரிஸ்க் எடுத்து நடித்தால் நமக்குத்தானே புகழ் கிடைக்கும்' என ஈடுபாட்டுடன் நடித்துக் கொடுத்தார்.

படத்திற்கு பின்னணி இசையமைப்பு வேலையைத் தொடங்கினார் இளையராஜா.

"ரீ-ரெக்கார்டிங் ஒர்க் எத்தனை நாள்ல முடியும்?" என இளையராஜா உதவியாளரிடம் கேட்டேன்.

"நாலு நாள்ல முடிஞ்சிடும்னு சொல்லீருக்கார்."

"தயவுசெஞ்சு ராஜாகிட்ட சொல்லுங்க. மூணு நாளைக்குத் தேவையான பணம்தான் வச்சிருக்கேன். இதுக்குமேல என்னால பணம் புரட்ட முடியாது. அதனால மூணுநாள்ல முடிச்சிரணும்னு ராஜாகிட்ட சொல்லுங்க."

"நான் சொல்ல முடியாதுங்க. எரிஞ்சு விழுவார்"என்றார் உதவியாளர்.

ராஜா வேலை செய்துகொண்டிருக்கும்போது எதிரே பெத்த பிள்ளை வந்தாலும் அவருக்குத் தெரியாது. முழுக்க முழுக்க இசையிலேயே மூழ்கிவிடுவார். இசையாகவே மாறிவிடுவார். (அதனால்தான் ராஜா 'இசைஞானி' என பின்னாளில் அழைக்கப்பட்டார்.) ராஜாவின் இசைத்திறமை போற்றுதலுக்கு உரியதுதான்... என்றாலும் என்னிடம் பணம் இல்லையே.

நேரே ரெகார்டிங் ஸ்டுடியோவிற்குள் போனேன்.

"ராஜா... மூணுநாளுக்குத் தேவையான பணம்தான் என்கிட்ட இருக்கு. அதுக்குமேல போனா நான் ஒத்துக்கமாட்டேன்" என சத்தம் போட்டேன்.

எனது இந்தச் செயலால் ராஜா அப்செட். ஆர்க்கெஸ்ட்ரா வாசித்துக்கொண்டிருந்தவர்கள் நிறுத்திவிட்டனர். ஸ்டுடியோ நிசப்தமானது. நான் வெளியே வந்துவிட்டேன்.

ராஜாவும் வெளியே வந்தார்.

அமைதியான குரலில் சொன்னார். "அண்ணே, படம் பிரமாதமா வந்திருக்கு. நல்லபடியா ரீ-ரெக்கார்டிங் பண்ணினாத்தான் நல்லாருக்கும். ரெண்டு நாள்லகூட என்னால ரீ-ரெக்கார்டிங்கை முடிக்கமுடியும். ஆனா என்பேரும் கெட்டுப்போகும், உங்க பேரும் கெட்டுப்போகும். இருந்திருந்து இப்பதான் முதல் படம் எடுத்திருக்கீங்க. அதனாலதான் சொல்றேன்.""

"நீங்க சொல்றது உண்மைதான் தம்பி. ஆனா என்கிட்ட பணம் இல்லையே?"

"அண்ணே... எனக்கு நீங்க பாதி சம்பளம்தான் குடுத்திருக்கீங்க. என்னோட மீதிச் சம்பளம் எனக்கு வேணாம். அந்தப் பணத்தை நாலாவதுநாள் ரெக்கார்டிங் செலவுக்கு வச்சுக்கங்க"எனச் சொல்லிவிட்டு ஸ்டுடியோவிற்குள் போய்விட்டார் ராஜா.

இப்படி ஒரு சூழ்நிலை ஏன் வந்தது எனக்கு?

"பைரவி' படம் எனது முதல் தயாரிப்பு என்பதால் வியாபாரம் பண்ணத் தெரியாமல் எல்லா ஏரியாக்களையும் கம்மி விலைக்கு விற்றுவிட்டேன். அதுதான் சிக்கலுக்குக் காரணம்.

இளையராஜா சினிமாவுக்கு இசையமைக்க வருவதற்கு முன்பெல்லாம், ஒரு படம் ரிலீஸாகி ஆறு மாதம் ஆனால்கூட ஆர்க்கெஸ்ட்ரா கலைஞர்களுக்கு சம்பளத்தைத் தராமல் சில தயாரிப்பாளர்கள் இழுத்தடிப்பாங்க. அந்தமாதிரி கம்பெனிகளிலும் நான் வேலை செஞ்சிருக்கேன். தொழில் செய்தும் இசைக்கலைஞர்களின் குடும்பம் பசியிலும், பட்டினியிலும் கிடந்தது. இதனால் இசைக்கலைஞர்கள் சங்கம், 'ஆர்க்கெஸ்ட்ரா கலைஞர்கள் தினசரி வேலைசெய்து முடிந்ததும் சம்பளம் கொடுத்துவிட வேண்டும்' என தீர்மானம் போட்டது. அன்றிலிருந்து இந்த டெய்லி பேமண்ட் சிஸ்டம் அமலுக்கு வந்தது. நிலைமை இப்படியிருக்கும்போது நான் அவர்களுக்கு பாக்கி வைக்க முடியாதே?

நான்காவதுநாளும் ரெக்கார்டிங் என்பதில் ராஜா தெளிவாக இருந்தார். அதனால் பணம் புரட்டினேன். நான் படம் எடுத்துக்கொண்டிருப்பதால் எளிதாகப் பணம் கிடைத்தது.

இளையராஜா முகத்தில் விழிக்க சங்கடமாக இருந்தது எனக்கு. ஆனாலும் பணத்துடன் அவரைப் போய் பார்த்தேன்.

"அண்ணே நான் சொன்னது சொன்னதுதான். பணத்தை எடுத்துக்கிட்டுப் போங்க" என்றார்.

"ஒருத்தரோட உழைப்புக்கு ஒருபோதும் துரோகம் செய்யமாட்டேன். அன்னக்கி ஏதோ ஒரு கோபத்துல சொல்லீட்டேன். உங்க உடன்பிறந்த அண்ணனோட கோபமா அதை எடுத்துக்கங்க. பணத்தையும் எடுத்துக்கங்க" எனச் சொல்-விட்டுக் கிளம்பினேன்.

மௌனப் புன்னகையுடன் ஏற்றுக்கொண்டார் ராஜா.

இன்றளவும் நானும் இளையராஜாவும் சகோதரர்களாகப் பழகிவருகிறோம். ராஜாவின் நல்ல பண்புகளைச் சொல்வதற்கு ஏராளமான நிகழ்வுகள்

உண்டு. அதை அந்தந்த சந்தர்ப்பங்களில் சொல்கிறேன்.

சூப்பர் ஸ்டார் பட்டமும், ரஜினியின் பதட்டமும்...

# சூப்பர் ஸ்டாரா? பதறிய ரஜினி!

ரஜினியின் ஒத்துழைப்பு நூறு சதவிகிதம் இருந்ததால்தான் திட்ட மிட்டபடி ஐந்தே மாதத்தில் படம் முடிந்தது. 1978-ஆம் ஆண்டு ஜனவரி 14-ந் தேதி பூஜை போடப்பட்ட 'பைரவி'' படம் ஜூன் 2-ந் தேதியில் ரிலீஸ்.
சென்னை நகர உரிமையைப் பெற்றிருந்த தம்பி 'கலைப்புலி' எஸ்.தாணு செய்திருந்த விளம்பரம் பிரமாண்டமாக இருந்தது. எல்லோரும் அண்ணாந்து பார்த்து வியக்கும்படியாக பேனர், கட்-அவுட்களை வைத்து அதில் ரஜினியை 'சூப்பர் ஸ்டார்'' எனவும் குறிப்பிட்டிருந்தார்.

'' 'பைரவி'க்கு இவ்வளவு செலவில் விளம்பரம் செய்திருக்கிறாரே...' என வியந்துபோனேன் நான். (அதற்காக இன்றளவும் தாணுவை நான் மறக்கவில்லை. எப்போதும் அவருக்கு நன்றியுள்ளவனாகவே இருப்பேன்.)

விடிந்தால் படம் ரிலீஸ்.

நான், டைரக்டர் எம்.பாஸ்கர், ஹீரோ ரஜினி... மூவரும் தனித்தனியாக இரவு தியேட்டர் ரவுண்ட்ஸ் போனோம்.

ரஜினியும், பாஸ்கரும் பிளாஸா தியேட்டர் வாசலில் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அப்போது...

''எம்.ஜி.ஆர். சார், சிவாஜி சார்னு பெரியவங்க இருக்கும்போது எனக்கு இவ்வளவு பெரிய கட்-அவுட்டா?, அதோட 'சூப்பர் ஸ்டார்'னு வேற போட்டிருக்காங்க. டைரக்டர் சார்... எனக்கு இது பிடிக்கலை. இந்தமாதிரி பட்டமெல்லாம் வேணாம். அதை எடுக்கச் சொல்லுங்க''



என ரஜினி பதறிப்போய் சொல்ல...

''எம்.ஜி.ஆர்., சிவாஜி மீது நீங்க இவ்வளவு மரியாதை வச்சிருக்கிறதை வரவேற்கிறேன். ஆனா, பணம்போட்டு படம் வாங்கியிருக்க டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் மக்களைக் கவர இப்படி பப்ளிஸிடி செய்வாங்க. நாம அதுல தலையிட முடியாது. அந்த விஷயத்தில் நாம தலையிடுறது தப்பும்கூட. நீங்க நிம்மதியா போய்த் தூங்குங்க. நாளைக்கி ராஜகுமாரி தியேட்டர்ல முதல் ஷோ... மேட்னி ஷோ பார்க்கிறோம். (அப்போதெல்லாம் காலைக் காட்சி கிடையாது) அங்க வந்திடுங்க'' எனச் சொல்லியிருக்கிறார் பாஸ்கர்.

பிறகு இருவரும் தனித்தனியே வேறு பகுதிகளுக்கு ரவுண்ட்ஸ் போயிருக்கிறார்கள்.

மறுநாள்... படம் ரிலீஸ்.

நானும், டைரக்டர் எம்.பாஸ்கரும் ராஜகுமாரி தியேட்டரில் படம் பார்க்கிறோம். தியேட்டர் ஹவுஸ்ஃபுல். ரசிகர்களுக்கு படம் பிடித்துப்போய்விட்டது. பத்திரிகையாளர்களும் ரசித்து படம் பார்க்கிறார்கள்.

இடைவேளை விட்டதும்... ரஜினி தியேட்டருக்குள் வந்தார். பத்திரிகையாளர்கள் ரஜினியைச் சூழ்ந்துகொண்டு 'சூப்பர் ரஜினி' என பாராட்டுகிறார்கள்.

இடைவேளைக்குப் பிறகு படம் தொடங்கி முடிகிறது.

ரசிகர்களிடம் நல்ல படம் பார்த்த திருப்தி தெரிகிறது.

'தப்பிச்சிட்டம்டா' என எனக்கு நானே சத்தமாகச் சொல்லிக்கொண்டு சந்தோஷத்துடன் வீட்டிற்கு வந்தேன். பின்னாலேயே தேவரண்ணனின் கார் வந்து நின்றது.

''அண்ணே... உங்களை தேவரண்ணன் கையோட கூட்டிவரச் சொன்னார்'' என டிரைவர் விஸ்வநாதன் சொன்னார்.

காரில் ஏறினேன். 'என்ன சொல்லப் போறாரோ? அவர மீறி படம் எடுத்து ரிலீஸும் பண்ணீட்டமே. எதுக்கு கூப்பிடுறாரோ?' என குழப்பத்துடன் போனேன்.

மாடியேறி தேவரண்ணனின் அறைக்குள் போய் வணக்கம் போட்டேன்.

''டேய் கலைஞானம்... நீ ஜெயிச்சிட்டடா'' என்றார்.

'இப்பத்தான் முதல் ஷோவே முடிஞ்சிருக்கு. அதுக்குள்ள படம் ஜெயிச்சிருச்சுனு அண்ணன் சொல்றாரே... எப்படி?' என எனக்கு ஆச்சர்யமாக இருந்தது.

'முதல்ல உட்கார்ரா' என்றவர்... ''ஏலேய்... ராஜகுமாரி தியேட்டர்ல நீங்கள்லாம் படம் பார்த்தீங்கள்ல. அதே ஷோவில் நானும் படம் பார்த்தேண்டா.''

அதாவது... தன்னை யாரும் அடையாளம் கண்டுகொள்ளாதபடி மறைத்துக்கொண்டு வந்து படம் பார்த்திருக்கிறார் தேவர்.

''டேய் கலைஞானம்... ஒவ்வொருநாளும் நான் பூஜை ரூமில் உட்காரும்போதெல்லாம் உன்னைய நினைச்சபடியேதான் உட்கார்ந்தேன். எந்த அனுபவமும் இல்லாம, நம்ம பேச்சை மீறி படம் எடுக்குறானே... இவன் கதி என்னாகுமோனு பயம் ஒருபக்கம். அதனால் முருகன்கிட்ட என்ன கேட்டேன் தெரியுமா? ''முருகா... ஒருவேள கலைஞானம் தோத்துப் போயிட்டான்னா... அவனோட கடனையெல்லாம் அடைச்சிட்டு, அவனை என்கூடவே வச்சுக்கிறேண்டா முருகா'னு தினமும் கும்பிட்டேன். ஒனக்குத்தான் தெரியுமே? நம்ம மா.ரா. படம் எடுக்கப் போய் ஒண்ணேமுக்கால் லட்சரூபா கடன்பட்டது. அதை அடைச்சிட்டு அவனை நான் என்கூடவே வச்சிருக்கது தெரியுமே. அதுமாதிரி நீயும் நிச்சயமா என்கிட்ட வருவனு நினைச்சேன். ஆனா... முருகன் உன்பக்கமும் இருக்காண்டா. 'நீ கலைஞானத்தப் பத்தி தப்பா நினைச்சுக் கிட்டிருக்கியா?'னு அந்த முருகன் என் மண்டையில அடிச்சு புத்தியக் குடுத்திட்டாண்டா. நீ படம் தயாரிக்க ஆரம்பிச்சதிலருந்து தூயவன் மூலமா உன்னை வேவு பார்த்தேன். ஏன் தெரியுமா? 'பொம்பள, தண்ணீனு போறானா?'னு பாருடா'னுதான் வேவு பாக்கச் சொன்னேன். ஆனா... ''கலைஞானம் அண்ணன் உங்கள மாதிரியே எல்லா விஷயத்திலும் நேர்மையா இருக்கார்'னு சர்ட்டிபிகேட் குடுத்திட்டாண்டா. இப்பச் சொல்றண்டா... இனிமே நீ என் கம்பெனி டிஸ்கஷனுக்கு ஓய்வு கிடைச்சா மட்டும் வா. தொடர்ந்து நீ படம் எடு. இந்த ரஜினிய விட்றாத. எந்த ரஜினிய 'ஹீரோவாப் போடாதேனு சொன்னேனோ... அந்த ரஜினிய விடாத. அந்தப் பையனை வச்சு படம் பண்ணு. உனக்கு ஒருகோடி ரூவா வரையில குறைஞ்ச வட்டியில உமையாம்பிகை செட்டியார்கிட்டச் சொல்லி பணம் கொடுக்கச் சொல்றேன்'' என நெகிழ்வுடன் ஒளிவு மறைவின்றி பேசிய தேவர்... ''இப்ப நீ எனக்கொரு உதவி பண்ண ணும்ப்பா...''என்றார்.

''என்னண்ணே?''

''அந்த ரஜினிய, எனக்கு ரெண்டுபடம் நடிச்சுத் தரச் சொல்றா. எப்படா சொல்ற?''

''என்னண்ணே... இப்பவே நீங்க கூப்பிட்டா அலறிஅடிச்சுக்கிட்டு அரைமணி நேரத்துல உங்க முன்னாடி வந்து நிற்பாருண்ணே'' என தேவரிடம் சொல்லிவிட்டு, தேவர் ஃபிலிம்ஸ் புரொடக்ஷன் மேனேஜர் கணேசனிடம் ''இந்த நம்பருக்கு போன் பண்ணுங்க. இல்லேன்னா இந்த அட்ரஸுக்கு வண்டி அனுப்பி ரஜினிய வரச்சொல்லுங்க''என்றேன்.

வண்டியும் பறந்தது... போனும் பறந்தது.

சரியாக நாற்பது நிமிடங்களில் ரஜினி உள்ளே நுழைந்தார். தேவரின் காலைத் தொட்டு வணங்கிவிட்டு தேவரின் அருகில் கை கட்டியபடி நின்றார்.

''என்னப்பா ரஜினி... எப்படி நீ இந்தக் கதையில நடிச்சு ஹீரோவாகப் போறேனு நினைச்சேம்ப்பா. படம் பார்த்தேன். உன்னை எந்த அளவுக்கு வேணாலும் பாராட்டலாம்ப்பா. இனிமே எந்த கேரக்டர் கிடைச்சாலும் நடிக்க முடியும்னு நிரூபிச்சுக் காட்டீட்ட. அடேயப்பா... 'நண்டூறுது நரியூறுது' ஸாங்ல எங்கயோ போயிட்டியேப்பா. பிரமாதமப்பா. அட... நின்னுக்கிட்டேருக்க... உட்காரப்பா''’என்றார் தேவர்.

''பரவால்லங்கய்யா''எனச் சொல்லிவிட்டு ரஜினி நின்றுகொண்டே இருந்தார்.

''நீ ரொம்ப நல்லா வருவப்பா... மகராசனா... உனக்கு எந்தக் குறையுமில்லாம முருகன் பார்த்துக்குவான். இப்ப நீ எனக்கு ரெண்டு படத்துல நடிச்சுத் தருவியா?''

''தர்றேங்கய்யா.''

''எப்பப்பா கால்ஷீட் தருவ?''

''நீங்க சொல்லுங்கய்யா... நான் உடனே தர்றேன்.''

''சரிப்பா... 'பைரவி' படத்துக்கு என்னப்பா சம்பளம் வாங்குன?''”

''கலைஞானம் சார்கிட்ட கேட்டுக்கங்க''என்றார் ரஜினி.

உடனே நான் ''ஐம்பதாயிரம்''என்றேன்.

"ஐம்பதாயிரம் என்னப்பா? அதுக்கு மேலயே கொடுக்கலாம்ப்பா"என்ற தேவர் இண்டர்காம் மூலம் தனது தம்பி மாரியப்பனுக்கு சிக்னலாக ஒரு வார்த்தையைச் சொன்னார்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் ஒரு பணப் பண்டலுடன் வந்தார் மாரியப்பன்.

"நீயே ரஜினிகிட்ட குடுப்பா"என்றார் தேவர்.

பணத்தைப் பெற்றுக்கொண்ட ரஜினி... தேவரிடம் மீண்டும் ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டார்.

"மத்த விஷயங்களை... உனக்குத் தேவையானதை மாரியப்பன்கிட்ட பேசிக்க ரஜினி."

'சரிங்கய்யா' என்றார் ரஜினி. அவரை மாரியப்பன் கீழே அழைத்துச் சென்றார்.

"கலைஞானம்... உன் புண்ணியத்துல தேவர் ஃபிலிம்ஸுக்கு ஹீரோ இல்லைங்கிற கவலை இனி கிடையாதுடா. தொடர்ந்து வருஷத்துக்கு ரெண்டுபடம் ரஜினி குடுத்தாப் போதும். தூள் பண்ணீடுவேன்"என்றார்.

நான் தேவரிடம் விடைபெற்றுக்கொண்டபோது... "நாளைக்கு ரஜினிக்கி கதை பண்ணணும் வந்துரு"என்றார்.

சம்மதம் சொல்லிவிட்டு கிளம்பினேன்.

தேவருக்கு உண்டான மன உளைச்சல்!

# முருகனிடம் தேவர் வைத்த வேண்டுகோள்!

"நாளைலருந்து ரஜினிக்கி கதை பண்ணணும். ஆபீஸ் வந்துருடா"என தேவர் சொல்ல... நான் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு திரும்பினேன்.
"பைரவி" என்கிற வெற்றிப்படம் மூலம் நான் தயாரிப்பாளர் ஆனதைவிட, தேவரிடம் பாராட்டு வாங்கியது எனக்கு மன நிறைவைத் தந்தது. அந்த மகிழ்ச்சியுடன் வீட்டுக்கு வந்தேன். என்னை எதிர்பார்த்து காத்திருந்தார் வேணு செட்டியார்.

"பைரவி' படம் வெற்றியடையணும்னு சாமியக் கும்பிட்டேன். படம் பிரமாதமப்பா. உன் படம் வெற்றியானாத்தான் நான் நிம்மதியா தூங்கமுடியும்? தயாரிப்பாளரா ஜெயிச்சிட்ட. வாழ்த்துக்கள்" என்றார்.

"என்ன செட்டியாரே? "உன் கதையில ரஜினிக்கு கால் போகுது. என் கதையில (முள்ளும் மலரும்)'ரஜினிக்கு கை போகுது'னு சென்ட்டிமெண்ட்டா கவலைப்பட்டீங் களே?"

"அட என்னா போனா என்னப்பா? கால் போன படம் நல்லா போகுது. கை போன படம் போகாதா? என் படமும் ஜெயிக்கும்" எனச் சொல்லிவிட்டுப் போனார்.

இரவு...

பூஜையறையில் முருகனைப் பார்த் துக்கொண்டே பழைய நினைவுகளுக்குப் போய்விட்டேன்.



''ஊரில் டூரிங் டாக்கீஸில் சிறுவனாக முறுக்கு விற்றுக்கொண்டிருந்த என்னை பல எதிர்ப்புகள், தடைகளைத் தாண்டி சினிமா படமே எடுத்து வெற்றிபெற வைத்துவிட்டானே... என் தெய்வம் முருகன். எத்தனை ஜென்மம் எடுத்தாலும் முருகனுக்கு நன்றிக்கடன் தீர்க்க முடியாதே...' என கண்கலங்கினேன். அப்படியே உறங்கியும் விட்டேன்.

ரஜினிக்கு கதைபண்ண தேவர் அழைத்திருந்ததால் தேவரின் ஆபீஸுக்குப் போனேன்.

ஒரே நேரத்தில் தமிழில் ரஜினியை வைத்து 'தாய்மீது சத்தியம்' மோகன்பாபுவை வைத்து தெலுங்கில் ''கொண்ட ராமுடு'' என இரண்டு கதைகளுக்குமான டிஸ்கஷன் நடந்தது. அந்தச் சமயம் அமிதாப்பச்சனை வைத்து இந்தியில் 'தோ அவர் தோ பாஞ்ச்' (ரெண்டும் ரெண்டும் அஞ்சு) என்கிற படத்தை எடுத்துக்கொண்டிருந்தார் தேவர். வெகு சீக்கிரமே தமிழ்-தெலுங்கு படத்திற்கான கதையை ரெடி செய்து விட்டோம். ஆக... இந்த மூன்று படங்களும் ஒரே நேரத்தில் ஊட்டியில் ஷூட்டிங்கிற்கு ஏற்பாடானது. மூன்று படங்களுக்கும் ஃபைனான்ஸ் புரட்ட வேண்டியிருந்ததால் தேவர் நெருப்பாக இருந்தார்.

ஒருநாள்... தெலுங்குப்படத்தின் இயக்குநர் புல்லையாவின் அஸோஸியேட் ஆபீஸிற்கு வந்தார். அதாவது 'கொண்ட ராமுடு' பட வசனத்தை சரி பார்க்க வந்திருந்தார். அப்போது தேவர் சொல்லாத ஒரு வசனத்தை, தேவர் சொன்னதாக தமிழில் சொல்லி அதற்கு தெலுங்கு வசனகர்த்தாவிடம் எழுதி வாங்கி வந்திருந்தார் அந்த அஸோஸியேட். அதை அவர் வாசித்துக் காட்டியபோது...

''நான் சொல்லாத வசனத்தை நீ ஏண்டா சொல்லி எழுதி வாங்கி வந்த?'''என தேவர் கேட்டார்.

''அண்ணே... நீங்க அந்த வசனத்தைச் சொன்னீங்க''

''முருகன் மேல ஆணையா... நான் சொல்லலடா''

''நீங்கதான் சொன்னீங்க''என அசோஸியேட் பிடிவாதமாகச் சொல்ல... தேவர் உச்சகட்ட கோபத்தில் அவரைத் திட்டி.. ''அந்த வசனத்தை நான் சொல்லவே இல்லை. வேணும்னா என் துண்டைப் போட்டு தாண்டுறண்டா''என ஆவேசமாகச் சொன்னபடி தன் தோளில் கிடந்த துண்டை கீழேபோட்டுத் தாண்டினார்.

தேவரின் உடம்பெல்லாம் நடுங்கியது. நாங்கள் எல்லோரும் பயந்துபோனோம். ஜாடை மூலம் அந்த அஸோஸியேட்டை வெளியே போகச்சொன்னோம். அவர் போய்விட்டார்.

சிறிது நேரம் கழிந்தது.

தேவர் ரிலாக்ஸ் ஆகட்டும் என்பதால் ''அண்ணே... நாங்களும் கிளம்புறோம். நாளைக்கு வர்றோம்''எனச் சொன்னோம்.

''கலைஞானமும், தூயவனும் மட்டும் இருங்க. மத்தவங்க கிளம்புங்க''என்ற தேவர், மோர் குடித்து ஆசுவாசப்படுத்திக் கொண்டார்.

''என்னடா... பயந்துட்டீங்களா? அந்த முட்டாப்பய என்னய வம்புக்கிழுத்திட்டாண்டா'' என்ற தேவர், ''அதை விடுங்க. நம்ம வேலையைப் பார்ப்போம். ஆமாடா, உங்க வேலையைத்தான் சொல்றேன்''என்றார்.

நாங்கள் முழித்தோம்.

'' 'நடிகனுக்கு மட்டும் தூக்கித் தூக்கி குடுக்கிறீங்க. எங்களுக்கு எதுவுமே செய்யமாட்டேங்கிறீங்க''னு சொன்னீங்கள்ல. நம்ம கிருஷ்ணமூர்த்தி அய்யர்ட்ட (கோவை விநியோகஸ்தர்) உனக்கும், தூயவனுக்கும், மா.ரா.வுக்கும் வீடு பாக்கச் சொல்லீட்டேன். ஊட்டி ஷூட்டிங்குக்கு நான் போயிட்டு வந்ததும், ஒங்கபேர்ல ஆளுக்கொரு வீடு ரிஜிஸ்தர் பண்ணித் தர்றேன்''என்ற தேவர்... ''தூயவா... நீ கீழபோய் இரு. கலைஞானத்துகிட்ட ஒரு விஷயம் பேச வேண்டி யிருக்கு''என்றார்.

''ஏண்டா, என் சின்னமக ஜெகதீஸ்வரிக்கு மாப்பிள்ளை பார்க்கச் சொல்லீருந்தேனே.. என்னாச்சு?''"

''நான்தான் சொன்னேனே. என் தங்கச்சி மகன் வக்கீலுக்குப் படிச்ச நடராஜன்.. ஊருக்கே பண்ணையாரோட மகன்... அப்போ நான் போட்டோவுல காண்பிச்சத விட நேர்ல இன்னும் ஜம்முனு இருப்பான்னு சொன்னேனே''"

''ஊட்டி போயிட்டு வந்ததும் பேசி முடிச்சிரலாம். இப்ப நான் ஒங்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்லப் போறேன். என் பையன் தண்டபாணிய ஒரே பையனாச்சேனு வீட்டுக்குள்ளயே வச்சு கூண்டுக்கிளியா வளர்த்தது தப்பா போச்சுடா. ஏன்னா... என்னோட ஆபீஸ்ல ஒரு பெரிய சதித்திட்டம் நடந்தது இப்பத்தான் எனக்கு தெரியவந்துச்சு. என் ஆபீஸ்ல இருக்க எல்லாப்பயலும் என்னோட

ரெகுலர் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்கிட்ட 'கமிஷன்'ங்கிற பேர்ல லஞ்சம் வாங்கீருக்கானுங்க. அவங்களும் 'இவனுகளை பகைச்சுக்கிட்டா நம்ம வியாபாரத்த கெடுத்துப்புடுவானுக'னு தூக்கித் தூக்கி குடுத்திருக்காங்க.

அதுக்கு மேலயும் ஒண்ணு நடந்துருக்குடா. என்கிட்ட வேலை பார்க்குற ஒருத்தன் வெளியூர்ல ஒரு தியேட்டர் கட்டி ''உங்க கையால ரிப்பன் வெட்டி திறக்கணும்'னு சொன்னான். நானும் திறந்துவச்சேன். ‘''நீங்க குடுக்குற சம்பளம் குடும்பம் நடத்தவே பத்தல'னு அடிக்கடி புலம்புவானே... இவனுக்கு ஏது தியேட்டர் கட்ற அளவுக்குப் பணம்?’னு துப்பு துலங்க ஆரம்பிச்சேன். சண்டாளப்பய... அவன நம்பி எந்தெந்த பிசினஸ்ல பொறுப்பா விட்டேனோ... அங்கேயெல்லாம் லஞ்சம் வாங்கி பணத்தைச் சேர்த்திருக்கான். என் பணத்தைத் திருடி, தியேட்டர் கட்டி அதை என்கையாலயே திறக்க வச்சிருக்கான்னா அவன் எப்படிப்பட்ட கெட்டிக்காரன்? இனிமே அவனை நம்பி நான் தொழில் பண்ணமுடியுமா? நான் ஒண்ணு செஞ்சிருக்கணும். என் மகன் தண்டபாணிய சும்மாவாவது ஆபீசுக்கு வந்துபோகச் சொல்லீருக்கணும். அவன் வந்துபோனா, இந்த திருட்டுப் பயலுகளுக்கு ஒரு பயம் இருந்திருக்கும்ல. தப்புப் பண்ணீட்டேன். இனிமே என் பையனை ஆபீஸ்ல உட்கார வைக்க ஒரு ஐடியா பண்ணீட்டேன். அவுட்டோர் யூனிட்டை மேற்பார்வை பார்க்கச் சொல்லீட்டேன். நான் ஊட்டிக்குப் போயிட்டு வந்ததும்... எல்லாப் பவரையும் அவன் கைல கொடுக்கப் போறேன்''என்றார்.

''அண்ணே... இங்க திருட்டு நடக்குறது எங்களுக்கு முன்னாடியே தெரியும்ணே. ஆபீஸ்பாய் சொல்லுவான். உங்களச் சுத்தி உங்க சொந்த பந்தங்களும் இருக்காங்க. ஏதாவது வம்பாயிடுமேனு சொல்லாம இருந்திட்டோம்''என்றேன்.

''அதான் என் முருகன் இப்ப காட்டிக் குடுத்திட்டாண்டா. சரி வாடா... கீழ போகலாம்'' என்றார்.

படியிறங்கி கீழே வந்தோம்.

தன் தம்பி மாரியப்பனை அழைத்தார்.

''ஊட்டி அரேஞ்மெண்ட் எப்படி இருக்கு?''

''எல்லாருக்கும் ரூம் போட்டாச்சு. உங்களுக்கும் போட்டாச்சு''

''மா.ரா.வும், தூயவனும் என்கூட வர்றாங்க''

''அவங்களுக்கும் போட்டாச்சு''’என்றார் மாரியப்பன்.

உடனே என்பக்கம் திரும்பிய தேவர், "சரி கலைஞானம். ஊட்டி போயிட்டு வந்திடுறேன். அடுத்து உன்னோட ஐடியா என்ன?"

" "செல்லக்கிளி'னு ஒரு கதையை எடுக்கப்போறேன். நாளைலருந்து டிஸ்கஷன் தொடங்கப்போறேன்"

"மகராசனா செய்யப்பா"'எனச் சொல்லிவிட்டு வராண்டாவில் இருந்த ஆறடி உயர பாலமுருகன் படத்தைப் பார்த்த தேவர், "முருகா... இனிமேலும் நீ குடுக்கிற கஷ்டத்த என்னால தாங்க முடியாதுடா. சீக்கிரம் என்னைக் கூப்பிட்டுக்கடா. தயவு பண்றா..."'என தழுதழுத்த குரலில் வேண்டிக்கொண்டு, யாரையும் பார்க்காமல் அலுவலகத்தின் பின்புறமுள்ள தன் வீட்டை நோக்கி போய்க்கொண்டிருந்தார் தேவர்.

சட்டையணியாத மேனி, அதன் மேல் விழுந்து புரண்ட துண்டு, முழங்கால்வரை மடித்துக் கட்டிய வேஷ்டி, தளர்வான நடை... ஆயினும் குறையாத கம்பீரம்....

இப்படி தூரத்தில் போய்க்கொண்டிருந்த தேவரின் பின்புறத் தோற்றம்... இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் என் கண்ணிலேயே நிற்கிறது.

காரணம்... அதுதான் நான் கடைசியாகப் பார்த்த தேவரின் தோற்றம்.

# பாகம்-3ல் உள்ள சிறப்பம்சங்கள்!

சின்னப்ப தேவரின் மறைவு

தேவரின் சவ ஊர்வலத்தில் பல்லக்கில் ஏறி, கதறியழுத எம்.ஜி.ஆர்.

அ.இ.அ.தி.மு.க. கட்சியை எம்.ஜி.ஆர். ஏன் தொடங்கினார் என்கிற ரகசியம்.

தேவர் ஃபிலிம்ஸிற்கு ரஜினி காட்டிய நன்றி.

மன அமைதி இழந்த ரஜினி.

பாலுமகேந்திரா, சிலுக்கு ஸ்மிதா, ஜெயமா-னி உள்ளிட்டவர்களுடன் ஒரு தயாரிப்பாளராக எனது அனுபவம்.

கே.பி. சுந்தராம்பாளின் வாழ்க்கையும் அவர் என்னை மகனாக பாவித்த நிகழ்வுகளும். அத்துடன் தன் இறுதி காலத்தில் பில்லி சூனிய அவஸ்தையால் அவர் பட்ட துயரம்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆருடனான எனது அனுபவம்.

'இளஞ்ஜோடிகள்' பட அனுபவம்.

என் மீது பேரன்பு கொண்ட விஜயசாந்தி.

தேவர் மகளுக்கு ரஜினி செய்த உதவி.

நடிகர் திலகம் சிவாஜியுடனான எனது அனுபவம்.

... இப்படி பல வியப்பூட்டும், திகைப்பூட்டும் விஷயங்கள் மூன்றாம் பாகத்தில் உள்ளது.

வாசியுங்கள்... வரலாறை!

-கலைஞானம்